தமிழ்ப் பூந்துணர்

நான்காம் படிவம்—சிறப்புத் தமிழ்

தொகுப்பாளர்கள் :
வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்
தலைமைத் தமிழாசிரியர்,
தியாகராயர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
வித்துவான் க. சாமிநாதன்
தமிழாசிரியர், பி. எஸ். உயர்நிலைப் பள்ளி, சென்னை.

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

[விலை அணு 8

முதற் பதிப்பு—நவம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2099)

முகவுரை

தமிழ்ப் பூந்துணர் என்னும் இந்தப் புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக் கென்று 2-7-1952-இல் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப் பெற்றவை. இந்த வரிசையில் இது நான்காம் பாரம்—சிறப்புத் தமிழுக்குரியது. இதனுள் இலக்கியத் துக்கும் பொது அறிவுக்கும் ஏற்ற இடம் தக்காங்கு வழங்கப் பெற்றுள்ளது. செய்யுளடிகளும் உரைநடைப் பகுதியின் பக்கங்களும் துரைத்தனத்தார் வரையறையிட்டுள்ள அளவில் அமைந்துள்ளன.

இதில் சேர்க்கப் பெற்றுள்ள செய்யுட்பகுதி மாணவருக்கு உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தையும் ஊட்டக் கூடியதென்று எண்ணுகிறோம். இப்பகுதியிற் கண்ட குறிப் புரை முதலியன மாணவரின் இலக்கிய அறிவை வளர்க்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன. கட்டுரைகள் யாவும் அன்னார்க்குத் தமிழில் நல்ல பழக்கம் ஏற்படும் வகையில் தொகுக்கப் பெற்றுள்ளன.

இதனுள் கண்ட கட்டுரைகளை வெளியிட எங்களுக்கு அனுமதியளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பதிப்பாளருக்கும் எங்களுடைய மனமார்ந்த வணக்கத்தை நன்றியுடன் தெரி வித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
தொகுப்பாளர்கள்

தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை
சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே ! சகல
கலா வல்லியே ! (1)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்து
பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல் காய்உளம்
கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீபோ லமுதம்
தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே ! சகல
கலாவல்லியே ! (2)

குறிப்புரை

1. அளிக்கும் - உன்னால் அருளப் பெறும். ஆர்ந்து - நிறைய உண்டு. தெள்ளித் தெளிக்கும் பனுவல் - தெளிந்து செய்யும் கவிகள். கவி மழை : பண்புத்தொகை. கலாபம் - தோகை. கலைமகளை மயிலே என்றது உருவகம். மழை பெய்ய மயில் களித்தல் இயல்பு.

2. பயன் - அறம், பொருள், இன்பம், வீடு என்பன. உளங் கொண்டு தொண்டர் தீட்டும் கலைத்தமிழ். முன் கவியில் ‘ உளங்கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவற் புலவோர் ’ என்றார். பால் அமுதம் - பாலும் நீரும் ; உம்மைத் தொகை. ஓதிமம் - அன்னம். பாலையும் நீரையும் பிரிக்கும் இயல்பினது அன்னப் பறவை.

II. அறநெறி

காவிய நீதிகள்

பெறற்கு அருமை

தமிழ்க் காவியங்களில் ஆங்காங்கே காணப்படும் நீதிகளின் திரட்டு இது. அடியிற் கண்ட கவிகள் புறத்திரட்டு என்ற நூலிலிருந்து தேர்ந்தெடுத்தவை.

உயர்குடி நனியுட் டோன்றல்
ஊனமில் யாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித்
தன்மையால் வல்ல ராதல்
பெரிதுண ரறிவே யாதல்
பேரறங் கோட லென்றுங்
கரிதிவை பெறுத லேடா,
பெற்றவர் மக்க ளென்பார். (1)

—வளையாபதி

ஈகை

ஒருவன திரண்டி யாக்கை
யூன்பெய்து நரம்பு போர்த்த
இருவமும் புகழு மென்றுங்
கவற்றினுள் ஊழின் வந்து
மருவிய யாக்கை ஈங்கே
மாய்ந்துபோம் மற்ற யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச்
சிறந்துபின் நிற்கு மன்றே. (2)

—சூளாமணி

ஆய்ந்தநூ லறிஞர்க் கீந்த
அரும்பொரு ளென்ன மேன்மேல்
வேந்தர்கோன் பகழி யொன்று
கோடியாய் விளைந்த தெங்கும்

மாந்தர் கைக் கொடாத புல்லர்
வனப்பிலாச் செல்வம் போலத்
தேய்ந்தது வஞ்ச நெஞ்சத்
திறலுறைத் தனுசர் சேனை. (3)

—வில்லிபாரதம்

தெரிந்து செயல்வகை

வாள்வலித் தடக்கை மன்னர்
வையகம் வணக்கும் வாயில்
தோள்வலி சூழ்ச்சி யென்றுங்
கிருவகைத் தொகையிற் றுகும் ;
ஆள்வலித் தானை யார்கட்
ஆதிய தழகி தேனும்
கோள்வலிச் சீய மொய்ம்பிற்
சூழ்ச்சியே குணம தென்றுன். (4)

—சூளாமணி

இறை மாட்சி

கண்ணெனப் படுவ மூன்று
காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல ஓடும்
வெய்யவன் என்னும் பேர
எண்ணினுள் தலைக்கண் வைத்த
கண்ணது இல்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும்
வகைபிறி தில்லை மன்னே. (5)

—சூளாமணி

காலமும் இடமும் அறிதல்

இடத்தொடு பொழுது நாடி
எவ்வினைக் கண்ணு மஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும்
மதிவலார்க் கரிய துண்டே

கடத்திடைக் காக்கை யொன்றே
    ஆயிரங் கோடி கூகை
இடத்திடை இரங்கச் சென்றுங்
    கின்னுயிர் செகுத்த தன்றே. (6)

—சிந்தாமணி

அழிவையே நாடுவோர்

ஆவது கருதா னுகில்
    அமைச்சர்சொற் கேளா னுகில்
வீவது குறியா னுகில்
    விளைவது முணரா னுகில்
நாவது காவா னுகில்
    அவனுக்கா நடந்து போரிற்
சாவது பழுதென் றன்றே
    சகத்துளோர் சாற்று கின்றார். (7)

—வில்லிபாரதம்

செல்வச் செருக்கு

செல்வம் வத்துற்ற காலைத்
    தெய்வமும் சிறிது பேணர்
சொல்வன அறிந்து சொல்லார்
    சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால்
    வெம்பகை வலிதென் றெண்ணர்
வல்வினை விளைவு மோரார்
    மண்ணின்மேல் வாழு மாந்தர். (8)

—வில்லிபாரதம்

குறிப்புரை

1. வளையாபதி என்பது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று மற்றவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி என்பன.

நனி - மிகவும். உள்தோன்றல் - பிறத்தல். யாக்கை - உடல். மயர் அறு - மயக்கமற்ற. பிறிது - உலக இன்பங்களுக்குப் பிறிதாகிய மோட்

இன்பம். இவை பெறுதல் அரிது என்று கூட்டுக. ஏடா - நண்பனே. மக்கள் இன்னர் என்று இக் கவி கூறுகிறது.

2. சூளாமணி என்னும் நூலின் ஆசிரியர் தோலா மொழித் தேவர். இந்நூல் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. மற்றவை உதயண குமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீலகேசி என்பன. வறியோர்க்கு வழங்குவது ஈகை எனப்படும்.

இரண்டு யாக்கை - இரண்டு உடல்கள்; அவை வெற்றுடம்பு, புகழுடம்பு. ஊழின் - பண்டை வினைப்பயனால் புகழுடம்பே நிலைத்திருக்கும் என்றபடி.

3. நிவாத கவச கால கேயர்கள் என்ற அசுரருடன் அருச்சுனன் போர் புரியும் வருணனையுள் இக்கவி ஒன்று. நூல்களை ஆய்ந்த அறிஞருக்குக் கொடுத்த பொருள் வளரும். வேந்தர் கோன் - அருச்சுனன்; அரசர்க்கு அரசன் என்றபடி. பகழி - அம்பு. வனப்பு இலா - அழகற்ற. செல்வத்துக்கு அழகு பிறருக்குக் கொடுத்தல். திறலுடை தனுசர் - வலிமை மிக்க அசுரர்கள்.

4. வாள் வலித் தடக்கை - வாளாயுதத்தை ஏந்திய வலிமை பொருந்திய விசாலமான கைகள். வையகம் வணக்கும் வாயில் - பூமியில் உள்ளவர்களை வணங்கச் செய்யும் கருவிகள். வாயில்கள் இரண்டு: அவை தோள் வலி, சூழ்ச்சி என்பன. சூழ்ச்சி - மந்திராலோசனை. தொகை - கூட்டம். ஆள் - காலாட்படை. ஆதியது - முதலிற் கூறிய தோள் வலி. கோள் வலிச் சீயமொய்ம்பு - யாவரையும் பற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்த சிங்கம் போன்ற வலிமை.

5. இறை மாட்சி - அரசனுடைய நற்குண நற்செய்கைகள். பேர - பெயரையுடையன. எண்ணினுள் - இந்த மூன்று எண்களில். தலைக்கண் வைத்த கண் - முதலிலே கூறப்பட்ட அரசன். அரசன், கல்வி, சூரியன் என்னும் மூன்றும் உலகத்துக்குக் கண்கள் எனப்படும்.

6. சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்க தேவர். இந்நூல் சீவக சிந்தாமணி எனவும் வழங்கும். இடம் - தமக்கு ஏற்ற இடம். பொழுது - வெல்வதற்கு ஏற்ற சமயம். மடப்படல் இன்றி - அறிவீனமில்லாமல். சூழும் - ஆலோசனை செய்து ஆராயும். உண்டே - உண்டோ; ஏகாரம் வினா. கடத்திடை - காட்டில் காக்கை ஒன்று பல கோட்டான்களை வென்றதை இங்கே எடுத்துக்காட்டாக வந்துளது.

7. ஆவது - தனக்கு நன்மை பயக்கும் தகுந்த செயல். வீவது - இறந்து போவதை. குறியானாகில் - எண்ணாதவனானால். நாவது - நாக்கு. அது: பகுதிப் பொருள் விகுதி.

8. துணை - தமக்குத் துணையாக உள்ளவர்கள். வல்வினை - தீவினை.

III. வரலாறு

1. நைடதம்

சுயம்வரப் படலம்

நிடதநாட்டின் சரித்திரத்தைக் கூறும் நூல் நைடதம் எனப்படும். நிடதநாட்டை ஆண்ட நளனது சரித்திரத்தைக் கூறும் நூல் இது. வடமொழியில் உள்ள நைடதம் என்ற நூலைத்தழுவி அதிவீரராம பாண்டியர் என்பவர் இந்நூலை எழுதினர். இவ்வாசிரியர் எழுதிய வேறு நூல்கள் திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, காசிக்காண்டம், வெற்றிவேற்கை முதலியன. இவர் சமயம் சைவம். காலம் உத்தேசமாக முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு என்பர்.

படலம் என்பது நூலின் சிறு பிரிவு. ஒரு பெண் தானே கணவனைத் தேர்ந்தெடுக்கும் முறை சுயம்வரம் எனப்படும். அரசர்களுக்கு உரியது இது.

நளனைக் கண்ட அரசரின் தன்மை

தெரியல்சூழ் குலவுத் திண்டோள்
சிலைவலா னினிதி னெய்த
அரசவை யிருந்த செவ்வி
யரசிளங் குமர ரெல்லாம்
குரைகடல் முகட்டிற் றேன்றும்
குளிர்மதி காண்ட லோடும்
விரிகதிர் மழுங்கும் வானின்
மீனின மென்ன லானர். (1)

தேவர் முதலானவர் நாணல்

ஓவிய மெழுத வொண்ணு
உலம்பொரு வயிரத் திண்டோள்
வாவுமான் தடந்தே ரண்ணல்
வனப்பினை நேரா ராகித்
தேவரில் வையம் காக்கும்
அரசரிற் செவ்வி வாய்ந்த
காவலர் திருந்த நோக்கார்
கடைக்கணல் நோக்கி ஞரால். (2)

மன்மதன் வியப்பு

கொங்கவிழ் உருவப் பைந்தார்க்
குமரனை யினிது நோக்கி
இங்கிவன் வனப்புக் கொவ்வா
திழிவர லெய்தி டாமல்
ஐங்கணைக் கிழவன் வெய்ய
அழற்கணு லருவ மாக்கும்
திங்களங் கண்ணி முக்கட்
டேவினை வியக்கு மன்றே. (3)

தமயந்தி சுயம்வர மண்டபம் சேர்தல்

வரிவளைக் குலமும் வள்வார்
மங்கல முரசும் கன்னற்
பொருசிலை மதனன் வின்ஞண்
புடைப்பொடும் பொங்கி யார்ப்ப
விரிதிரைப் பரவை யீன்ற
விளங்கிழை யனைய நங்கை
திருமணி யிமைக்கும் செம்பொன்
மண்டபம் சென்று சேர்ந்தாள். (4)

அரசர் தமயந்தியின் அழகைப் பாராட்டுதல்

வஞ்சமொன் றின்றி வேறல்
அரிதென வதுவை நாட்டி
விஞ்சையின் புணர்ப்பாற் கூற்றை
விளங்கிழை வடிவ மாக்கி
யஞ்சலி லுலக மன்னர்
யாரையு மொருங்கு கொல்வான்
செஞ்சுடர் வயவாள் வேந்தன்
தீவினை யிழைத்த தென்பார். (5)

[அரசருடைய செயல் இங்ஙனமிருக்க வீமனது வேண்டுகோளின்படி கலைமகள் தோழிவடிவில் வந்து தமயந்திக்கு அச் சபையிலுள்ள மன்னரின் குலம், வளநாடு, பெயர் முதலியவற்றை விளக்கிக் கூறினாள்.]

என்னமற் றினைய வாறே
எரிமணி மாடஞ் சேர்ந்த
மன்னவர் குலமும் பேரும்
வரன்முறை வழாது கூறி
மின்னகு பருதி வைவேல்
நளனுருக் கொண்டு மேய
அன்னவர் தமையு மற்ற
நளனையு அறைய லுற்றாள். (6)

இந்திரன்

கலைவளர் திங்க ளென்னக்
கடிகமழ் கமலம் வாட்டும்
திலகவாண் முகத்தா யீங்கு
வைகிய சினவேற் காளை
வலனுடை வயிர வாளன்
கற்பக மலிந்த தோளான்
பலபகை வரைமுன் செற்ற
பகட்டெழின் மார்பி னனே. (7)

அக்கினி

நகைமதி முகத்தா யீங்கு
வைகிய நாம வேலான்
புகலரும் வெகுளி யுள்ளத்
தொருவினன் பொங்கி யார்த்த
பகையிருட் பிழம்பு சீக்கும்
பலசுட ருமிழும் வாளான்
தகைமைசால் புலவ ரேத்தும்
தாலமே முடைய கோவே. (8)

இயமன்

அஞ்சன மெழுத லாற்ரு
தம்மவோ என்று நையும்
வஞ்சிநுண் ணிடையா யீங்கு
வைகிய நாம வேலான்
எஞ்சலில் தருமன் தெண்ணீர்
இருங்கட லுலக மெல்லாம்
செஞ்சவே யோசை போய
தீதறு செங்கோல் வேந்தே. (9)

வருணன்

பாற்றிரை யமுத மூறும்
படரொளிப் பவளச் செவ்வாய்க்
கோற்ருெடி மடந்தை யீங்கு
வைகிய குவவுத் தோளான்
மாற்றரும் சிறப்பின் மிக்க
வளங்கெழு புவன வேந்தன்
நாற்றிசைப் பரப்பும் சூழ்போம்
நலங்கெழு நேமி வேந்தே. (10)

நளன்

போதரி நெடுங்கண் ணல்லாய்
பொருசிலே வேனி லானில்
கோதையர் மனமும் கண்ணும்
கூட்டுணும் குவவுத் தோளான்
தாதவிழ் கமலப் போது
மலர்ந்தபூம் தடங்க டோறும்
மாதர்மென் முகங்கள் காட்டும்
வளங்கெழு நிடத வேந்தே. (11)

தமயந்தி நளனே அறிந்தமை

எள்ளுற ஏனே யோரை
இரட்டுற மொழித லாலும்
வள்ளல்மார் பணிந்த தாரில்
வண்டுவீழ்ந் தரற்ற லானும்

உள்ளூறப் பிணித்த அன்பின்
ஊழ்வினைத் தொடர்பி னானும்
நள்ளிருள் பருகும் பைம்பூண்
நளனையே நளனென் றோர்ந்தாள். (12)

தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

இன்னரிச் சிலம்பு செம்பொற்
கிண்கிணி யார்ப்ப வேகி
மன்னவர் மனமுங் கண்ணும்
வண்டெனத் தொடர்ந்து வீழக்
கொன்னுனை வயிர வொள்வாள்
நிடதர்கோன் குலவுத் தோண்மேல்
பொன்னரி மாலை சூட்டிப்
பூங்கழல் வணங்கி நின்றாள். (13)

குறிப்புரை

1. தெரியல் - மாலை. குலவு - திரட்சி. சிலைவலான் - விற்போரில் வல்லவன்; நளன். இனிதின் எய்த - மகிழ்ச்சியுடன் அடைய. செவ்வி - அழகு. குரைகடல் - ஒலிக்கின்ற கடல்; வினைத்தொகை.

2. உலம் - குண்டுக்கல். வாவு - தாவுகின்ற. மான் - குதிரை. நேரா ராகி - ஒவ்வாதவராகி.

3. கொங்கு - தேன். உருவப் பைந்தார் - அழகிய பசுமையான மாலை. இழிவரல் - இழிவு. ஐங்கணைக் கிழவன் - ஐந்து பாணங்களுக்கு உரிய மன் மதன். தன்னை அங்கம் இல்லாதவனாக்கிய சிவபெருமானை மன்மதன் பாராட்டினான்.

4. வரிவளைக்குலம் - வரிகளையுடைய சங்கு சாதிகள். வள்வார் - தோலினாற் கட்டப்பட்ட. கன்னல் பொருசிலை - கரும்பாகிய போர் செய்யும் வில்லை. பரவை - கடல். நங்கை - திருமகள்; தமயந்தியைக் குறிக்கும்.

5. வெல் + தல் = வேறல் - வெல்லுதல். வதுவை - திருமணம். விஞ்சை யின் புணர்ப்பால் - மந்திரச் செய்கையினால். விளங்கிழை - தமயந்தி; அன் மொழித்தொகை. எஞ்சலில் - குறைவற்ற. கொல்வான் - கொல்லவேண்டி; வான் வினையெச்ச விகுதி. வயவாள் - வெற்றி பொருந்திய வாள். வேந் தன் - தமயந்தியின் தந்தையாகிய வீமன்.

6. இனையவாறு - இந்தவிதம். எரிமணி - ஒளியையுடைய மணிகள் வழாது - தவறாமல். மின் நகு பருதி வை வேல் - மின்னலை ஏளனம் செய் கின்ற சூரியனைப்போன்ற ஒளியையுடைய கூரிய வேல்.

7. இதுவும் அடுத்த மூன்று கவிகளும் சிலேடை.

கடி கமழ் - மணம் வீசுகின்ற. வாட்டும் - தாமரையைத் தோற்கடிக் கின்ற. இந்திரனுக்குக் கூறும்போது: வலனுடை வயிர வாளான்

வலாசுரன் தோற்றுப் போதற்குக் காரணமான வச்சிராயுதத்தை யுடைய வன். கற்பகம் மலிந்த - கற்பக மாலைகள் மிகுதியாக உள்ள. பல பகை வரை முன் செற்ற - பகையாகிய பல மலைகளை முன் கோபித்த ; வரை-மலை. இந்திரன் மலைகளின் சிறகுகளை வெட்டிய வரலாற்றைக் குறிப்பது இது. பகடு - பெருமை. நளனைக் குறிக்கும்போது : வலனுடை - வலிமை பொருந்திய. கல் பக மலிந்த தோள் - மலை தோற்கும்படி உயர்ந்து எழுந்த தோள். பகைவரை - விரோதிகளை.

8. நாமவேல் - அச்சம் தரும் வேல். அக்கினிதேவனுக்குக் கூறுங் கால் : புகலரும் - பிற அடைக்கலம் இல்லாத. வெகுளி - சினம். ஒருவி ஞன் - ஆட்டுக்கிடாயை யுடையவன். சீக்கும் - கோபிக்கும். வாளான் - ஒளி பொருந்தியவன். புலவர் - தேவர். தாலம் ஏழு - ஏழு நாக்குகளை ; அக்கினி தேவனுக்கு ஏழு நாக்குகள் உண்டென்பது மரபு. நளனுக்குக் கூறுங்கால் : வெகுளியை உள்ளத்தினின்றும் ஒருவினன் ; ஒருவுதல் - நீக்குதல். பகையிருள் - பகையாகிய இருளை. வாளான் - வாளையுடைய வன். புலவர் - புலவர்கள். தாலம் ஏழு - ஏழு நிலங்கள்.

9. அஞ்சனம் - மை. இடை மிகவும் நுட்பமாயிருத்தலின் தீட்டும் அஞ்சனத்தின் பளுவையும் தாங்காமல் அது வருந்தும் என்றபடி. வஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற. இயமனைக் குறிக்கும்போது : தருமன் - தருமன் என்ற பெயரையுடையவன். செஞ்சவே - செவ்விதாக. நளனைக் குறிக்கும் போது : தருமன் - அறநெறியை யுடையவன். ஓசை - புகழ். போய - பரவிய.

10. பால் + திரை. கோல் தொடி - திரண்ட வளையல்கள். வருணனைக் குறிக்கும்போது : புவனம் - தண்ணீர். சூழ்போய் - சூழ்ந்து. நேமி - கடல். நளனைக் குறிக்கும்போது : புவனம் - உலகம். நேமி - சக்கரம். நளனது ஆஞ்ஞா சக்கரம் நாலு திசைகளிலும் சுழன்று வரக்கூடியது என்றபடி.

11. வேனிலான் - மன்மதன். கூட்டுணும் - கொள்ளைகொள்ளும். தாது - மகரந்தம். தடங்கள் - குளங்கள். முகங்கள் காட்டும் - முகங்களை நிகர்க்கும்.

12. எள்ளுற - இகழ்ச்சி தோன்ற. இரட்டுற - இரண்டு பொருள் தோன் றும்படி. வள்ளல் - நளன். தேவர் அணியும் மாலையில் வண்டுகள் மொய்க்க மாட்டா. பைம்பூண் - தமயந்தி ; அன்மொழித்தொகை. பைம்பூண்களை அணிந்த நளன் என்று கொண்டு எழுவாய் தொக்கு நிற்கிறதாகக் கொள் ளினும் அமையும்.

13. இன் அரி - சிலம்பின் உள்ளீடாகிய இனிய பரல். சிலம்பும் கிண் கிணியும். கொல் + நுனை ; நுனை - கூர்மை. பொன்னரி மாலை - பொன்னு லான ஒருவகை மாலை.

2. திருவிளையாடற் புராணம்

மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

சோமசுந்தரக் கடவுள் மதுரைமாநகரிற் செய்த அறுபத்து நான்கு விளையாடல்களைக் கூறும் புராணம் இது. புராணம்—பழைய வரலாறு. இதன் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இவர் காலம் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்.

வழக்குரைத்த—நியாய சபையினருக்கு வழக்கை எடுத்துக் கூறிய, படலம்—நூலின் உட்பிரிவு.

தனபதியும் அவன் மனைவியும்

கன்னிநான் மாடக் கூடல்
　　கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோன் அன்னான்
　　தனபதி என்னும் பேரான்
மன்னினான் ; அனையான் கற்பின்
　　மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாள் முளரிச் சேக்கைப்
　　புண்ணியத் திருவின் அன்னாள். (1)

தனபதி தன் மருமகனைத் தத்துவாங்கிக் கொள்ளுதல்

எனயிவர் தமக்கு மைந்தர்
　　பேறின்றி யிரங்கு நாளில்
தனபதி மருகன் தன்னைத்
　　தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பால் நல்க,
　　மனைவியும் தொழுது வாங்கி
புனைவன புனைந்து போற்றிப்
　　பொலிவுற வளர்த்துக் கொண்டாள். (2

தங்கையுடன் மனத்தாபமும் அதன்விளைவும்

தனபதி மகப்பே றற்றான்
　　ஆயினும் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை
　　மயக்கினால் வருந்தி யீன்ற

தனையனை மகவாத் தந்த
தங்கைமேற் றீராப் பூசல்
வினைவிளைத் தொழுக, ஓர்நாள்
இளையளும் வெகுண்டு சொல்வாள் : (3)

" பெருமித முனக்கேன் பிள்ளைப்
பேறற்ற பாவி! நீயென்
அருமைநன் மகவா லன்றோ
இருமையு மடைவாய்'' என்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக்
காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவ னென்னுத்
தனபதி தவமேற் செல்வான். (4)

தனபதி சென்றபின் அவனுடைய தாயாதிகளின் செயல்

தன்பெரும் செல்வ மெல்லாம்
மருமகன் தனக்கே யாக்கி
அன்புகொள் மனைவி யோடும்
அருந்தவ நெறியிற் சென்றான்;
பின்பவன் வரவு தாழ்ப்ப
மருமகன் பெற்ற எல்லாம்
வன்பினுல் வழக்குப் பேசி
வெளவினுர் தாய மாக்கள். (5)

தாயாதிகளின் செயலைக்கண்ட திக்கற்றவள் வேண்டுகோள்

விளைநிலம் அடிமை பைம்பூண்
வெறுக்கைநன் பசுக்க ளேனை
வளனும்மாற் றவர்கைக் கொள்ள
வன்சிறை யிழந்த புட்போல்
தளர்வுறு மகனும் தாயும்
சார்பிலாத் தம்ம னேர்க்கோர்
களைகணுய் இருக்கும் கூடல்
கடவுளே சரண மென்னு. (6)

[சோமசுந்தரக் கடவுள் அந்தப் பெண்ணின் கனவில் வந்து "அநியாயக்காரரை நீ நியாய சபைக்கு அழைத்துச்செல்; அங்கே நாம் வந்து உனக்கு நியாயம் கிடைக்கும்படி செய்வோம்" என்று கூறினர். அதன்பின் அவள் தாயாதிகளிடம் சென்று பேசியவை பின்வருவது.]

"அட்டில்வாய் நெருப்பி டேல்ஓர்
அடியிடேல் அறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று
போகொட்டேன் பலரும் கேட்க
இட்டனன் அரசன் ஆணை
அறத்தவி சேறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட் டெங்கள்
உரிப்பொருள் தந்து போமின்" (7)

அவள் நியாயமன்றத்தில் முறையிடுதலும் வழக்கின் தொடக்கமும்

என்றனள் மறித்த லோடும்
இழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி
அடித்தனர் மைந்த னோடும்
சென்றனள் முறையோ என்னாத்
திருந்தறத் தவசி னோர்முன்
நின்றுரை யாடி னுள்கேட்
டறிந்தனர் நீதி நூலோர். (8

அறத்தவி சிருப்போ ரேவல்
ஆடவ ரோடும் போந்து
மறித்தவைக் களத்திற் கூட்டி
வந்தனள் வந்த எல்லை
அறக்கொடிப் பாகர் வெள்ளி
அம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே என்ன
திருவுருக் கொண்டு செல்வார். (

தனபதி வேடத்தில் வந்த சிவபெருமானின் செயல்

அரசனிங் கில்லை கொல்லோ
ஆன்றவர் இல்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல்
கொடியதோ கோதில் நூல்கள்
உரைசெயும் தெய்வம் தானும்
இல்லைகொல் உறுதி யான
தருமமெங் கொளித்த தோகொல்
என்றறத் தவிசிற் சார்வார். (10)

தாயாதிகளின் நடுக்கம்

தனபதி வரவு நோக்கி
வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி
விம்மித மெய்தி வெல்லும்
மனவலி இழந்து பண்டு
வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ள மச்ச
நாணினுல் விழுங்கப் பட்டார். (11)

மாமனாக வந்த சிவபெருமான்
மருகனையும் தங்கையையும் கண்டு வருந்துதல்

மாதுல ராகி வந்தோர்
மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை
தன்னெடும் தழீஇத் தன்கண்ட
மீதுல ராத சாம
வேதமார்ப் பவர்போல் வாய்விட்டு
ஆதுல ரானீ ரந்தோ !
ஐயவென் றழுது நைந்தார். (12)

குடங்கையின் நெடுங்க ணுளும்
குமரனும் வணிகர் தாளில்
தடங்கணீர் ஆட்ட வீழ்ந்தார்
தடக்கையா லெடுத்துப் புல்லி

மடங்கலே றனையார் தாமும்
மற்றவர் தமைத்தம் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக்
குமரனை நேர்ந்து நைவார் : (13)

'' ஐம்படை மார்பிற் காணேன்
சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன்
முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன்
வெற்றுடல் கண்டே னப்பா !
என்பெறு மென்று பிள்ளைப்
பணிகளும் கவர்ந்தார் '' என்று, (14)

அவர்களை அவர் தேற்றல்

அனைவரும் இரங்க வாய்விட்
டழுதவர் இளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித்
தடக்கையால் முதுகு தைவந்
தினையன்மின் என்முன் வேறென்
றெண்ணன்மின் என்று வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து
விடுவது காண்மின் என்று. (15

மாமனாக வந்தவர் நியாயசபையினரிடம் கூறல்

ஆவலித் தழுத கள்வர்
வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல்
கட்டிய தருமத் தட்டில்
நாவெனும் துலைநா விட்டெம்
வழக்கையும் நமராய் வந்த
மேவலர் வழக்கும் தூக்கித்
தெரிகென விதந்து சொன்னார். (1

வழக்கு நடைபெறல்

நரைமுது புலியன் ஞன்சொல்
கேட்டலு நடுங்கிச் சான்ருேர்
இருவர்சொல் வழக்கு மேற்கொண்
டநுவதித் திரண்டு நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி
வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள்
வலியரின் வேறு சொல்வார். (17)

தவலரும் சிறப்பின் ஆன்ற
தனபதி வணிக ரல்லர்
இவரென அவயம் கேட்ப
இருகையும் புடைத்து நக்குக்
கவளமான் உரித்துப் போர்த்த
கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டம்
காணிமற் றனைத்தும் கூற, (18)

வழக்கின் முடிவும் தாயாதிகளின் செயலும்

அனையது கேட்ட ஆன்ருேர்
அனைவரு நோக்கி அந்தத்
தனபதி வணிகர் தாமே
இவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம்
வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் தேரில்
தண்டிக்கு நம்மை என்று, (19)

இல்லினுக் கேகி மீள்வன்
யானென்றும், குளத்துக் கேகி
ஒல்லையில் வருவே னென்றும்
ஒவ்வொரு வார்த்தை யிட்டு

வல்லெழு வனைய தோளார்
அனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டம்
சிதைந்தனர் ஒளித்துப் போனர். (20)

சிவபெருமான் தம் மருகனுக்குச் சீட்டெழுதுவித்துக்
கொடுத்து மறைதல்

அனையவர் போக நின்ற
அறநவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த
தனமெலாம் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி
ஈந்தனர் ; ஈந்த வெல்லை
மனமொழி கடந்த நாய்கர்
மறைந்துதம் கோயில் புக்கார். (21)

குறிப்புரை

1. கன்னி - காவல் மிகுந்த. நான்மாடக்கூடல் என்பது மதுரையின் பெயர்களுள் ஒன்று. கடிநகர் - சிறப்பமைந்த நகரம் ; கடி - சிறப்பு. நிதிக் கோன் - குபேரன். பேரான் மன்னினன் - பெயரையுடையவன் பொருந்தி யுறைந்தான் ; பேரினல் பொருந்தியவன். மடவரல் - பெண் ; மனைவி முளரிச்சேக்கை - தாமரையாகிய இருப்பிடம்.

2. நல்க - மனைவியிடம் கொடுக்க. வாங்கி - அந்த மருகனை ஏற்று கொண்டு.

3. பூசல்வினை - சண்டை.

4. பெருமிதம் - தான் உயர்ந்தவன் என்ற கருவம். இருமை இம்மை மறுமை இன்பங்கள். மேலைக்கு - மறு பிறவியில். என்னு - என் எண்ணி.

5. தாயமாக்கள் வெளவினர் - தாயாதிகள் அபகரித்துக்கொண்டனர் எல்லாம் : செயப்படு பொருள். அபகரித்த பொருள்கள் அடுத்த கவியி கூறப்படும்.

6. அடிமை - அடிமைகள். வெறுக்கை - ரொக்கமாக உள்ள பண மாற்றலர் - எதிரிகள். வன்சிறை - வலிய சிறகுகள். களைகண் - ஆதரவு.

7. அட்டில்வாய் - சமயலறையில். இடேல் - இடாதீர்கள். அறத்தா அன்றி - நியாயவழியில் அல்லாமல். வழக்கு - விதண்டாவாதம். போகொ

டேன் - போக விடமாட்டேன். அறத்தவிசு - நியாயசபையிலுள்ள தருமாசனம். ஒட்டியபடி - நியாயம் கூறுகிற விதம்.

8. மறித்தல் - தடுத்தல். இழுக்குரையாடி - குற்றம் உள்ள சொற்களைப் பேசி. வன்திறல் - மிகுந்த வல்லமை. வலியார் - வலிமையுடைய தாயாதிகள்.

9. ஏவல் ஆடவர் - ஏவலாளர்கள். மறித்து - ஒரு வேலையும் செய்ய விடாமல் தாயாதிகளைத் தடுத்து. அவைக்களம் - பெரியோர் நிறைந்த நியாயசபை. எல்லை - சமயம். அறக்கொடி - உமையவள். வெள்ளி அம்பலவாணர் - வெள்ளி அம்பலம் என்னும் பெயரையுடைய கோயிலில் வீற்றிருப்பவர்; சிவபெருமான். தாமம் - மாலை. திறத் தனபதி - திறமை வாய்ந்த தனபதி என்னும் வணிகன்.

10. ஆன்றவர் - பெரியோர்கள். குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். அறத்தவிசு : நியாயசபைக்கு ஆகுபெயர்.

11. இனைவுறு - வருத்தமிக்க. விம்மிதம் - அச்சம். பண்டு - முன்பு.

12. மாதுலர் - தாயுடன் பிறந்த மாமனார். தம் பின் வந்த - தமக்குப் பின் பிறந்த தங்கையாகிய. தாது உலராத கோதை - பூந்தாதின் மணம் கெடாத கூந்தலையுடையாள்; 'தாது உலராத' என்ற அடை அவள் தன் கணவனோடு வாழ்ந்த காலத்துக் கூந்தலுக்குரியது. தழீஇ - தழுவி; உயிரளபெடை. கண்டம் - கழுத்து. சாமவேதம் சிவபெருமானிடமிருந்து தோன்றியது. ஆர்த்தல் - உரக்கச் சொல்லுதல். ஆதுலர் - வறியவர்.

13. குடங்கையின் நெடுங்கணாள் - உள்ளங்கையளவு பெரிய கண்களையுடையவள்; கண்ணின் பரப்புக்கு உள்ளங்கையின் பரப்பு உவமை. நடக்கை - விசாலமான கைகள். புல்லி - தழுவி. மடங்கலேறு - ஆண் சிங்கம். நேர்ந்து - எதிரில் வைத்துக்கொண்டு என்றபடி. நைவார் - வருந்துவார். வருத்த மொழிகள் அடுத்த கவியில் உள்ளன.

14. ஐம்படை - திருமாலின் ஐந்து ஆயுதங்களைச் சிறிய வடிவில் செய்து குழந்தைகளுக்கு அணியும் ஓர் அணி. அவை: சங்கு, சக்கரம், கதை, வில், வாள். மொய்ம்பு - தோள். மதாணி - பதக்கம்; தோளிலிருந்து மார்பில் தொங்கும் பதக்கம் எனக் கொள்க. முகத்து அசை சுட்டி - நெற்றியில் கட்டிக்கொள்ளும் சுட்டி என்று அணி. மின்படு - மின்னுகின்ற. குழை - கடுக்கன். என்பெறும் என்று - என்ன விலை மதிப்புடையன என்றண்ணி.

தனபதியின் மிகுதியான செல்வ அளவை நோக்கும்போது குழந்தையின் அணிகள் மிகவும் அற்பமானதாகும் என்று எண்ணி 'என்பெறும் என்று' கூறினார்.

15. தைவந்து - தடவி. இனையன்மின் - வருந்தாதீர். என்ன - என்று சொல்லி.

16. ஆவலித்து - அங்கலாய்த்து. கள்வர் - சிவபெருமான் ; எவரும் அறிந்துகொள்ளாதபடி மாறுவேடம் கொண்டு நடிப்பதனால் கள்வர் எனப் பட்டார் ; இது ஒருநயம். வஞ்சகர் - தாயாதிகள். செங்கோலே தராசின் கோலாகவும் தரும சாத்திரங்களே தராசின் நூலாகவும், தருமமே தட்டுக ளாகவும், ஆன்றோரின் நாவுகளே தராசின் நாவாகவும் சீர்தூக்கி; இங்ஙனம் கூறியது உருவக அணி. நமர் - நம் சுற்றத்தார். மேலவர் - எம்மோடு பொருந்தாதவர்கள். விதந்து - சிறப்பாக எடுத்து. வஞ்சரை நோக்கிய வண்ணம் ஆன்றோரிடம் சொன்னார்.

17. அநுவதித்து - மறுபடியும் சொல்லச் செய்து. தெரிவழி இழுக்கு - யாவரும் அறிகின்ற நியாய வழியினின்றும் தவறிய குற்றமுடையது. வலியரின் - வலிய தாயாதிகள் சண்டைக்கு வருவார்போல.

18. தவல் அரும் - கெடுதியில்லாத. என - என்று. அவயம் - நியாய மன்றத்தில் உள்ளவர்கள் ; ஆகுபெயர். கவளமான் - யானை.

19. நனைவழி வேம்பன் - தேன் வழியும் வேப்பமாலையை அணிந்த பாண்டியன். தீதை வேம்பன் தேரில் தண்டிக்கும்.

20. ஒல்லையில்-விரைவில். குளத்துக்கேகி வருவேன் : இடக்கரடக்கல் வல் எழு அனைய - வலிய தூண் போன்ற. வன் கால் - வலிமை பொருந்திய காற்று. எழு முகில் - ஏழு மேகங்கள். காற்றினால் மேகங்கள் அடித்துக் கொண்டு போவதுபோல் சிதைந்தனர்.

21. தத்தமைந்தர் - சுவீகார புத்திரன். மனை எழுதி - சீட்டெழுத வித்து. வாங்கி - எழுதுவோனிடமிருந்து பெற்று.

IV. வருணனை

1. மயில் மேகத்தைக் கண்டு ஆடுதல்

என்னை யூர்ந்தருள் சுடர்வடி இலையவேற் பெருமான்
தன்னை நன்மரு கெனப்படைத் தவன்தன தூர்தி
அன்ன தாமெனுங் கேண்மையா லளிமுகிற் குலத்தைக்
கன்னி மாமயில் காண்டொறும் களிசிறந் தகவும். (1)

—காஞ்சிப்புராணம்

2. நெற் பயிர்

புரையற உணர்ந்தோர் நூலின்
பொருளினுள் ளடங்கி அந்நூல்
வரையறை கருத்து மான
வளர்கருப் புறம்பு தோன்றிக்
கரையமை கல்வி சாலாக்
கவிஞர்போ லிறுமாந் தந்நூல்
உரையென விரிந்து கற்பின்
மகளிர்போல் ஒசிந்த தன்றே. (2)

—திருவிளையாடற்புராணம்

குறிப்புரை

1. சுடர் வடி இலையவேல் - ஒளிபொருந்திய கூர்மையான இலை ன்ற உறுப்பையுடைய வேல். வேலின் தலை 'இலை' யெனப்படும். வேற் ருமான் - முருகக் கடவுள். படைத்தவன் - மருகனைப் பெற்ற இந்திரன். ர்தி - வாகனம். இந்திரனுடைய ஊர்தி மேகம். அளி - குளிர்ச்சியுள்ள. ன்னி - இளமை பொருந்திய. களி - மகிழ்ச்சி.

2. புரை அற - குற்றம் நீங்க. புரையற உணர்தல் - கசடறக் கற்றல். ாருளின் உள் அடங்கி - அர்த்தத்தைப்போல், பொருள் புலப்படாதவாறு ளை வெளித் தோன்ருமல் விதையினுள் அடங்கி இருந்து. மான - ஒப்ப. ந - முளை. கரை அமை கல்வி - இவ்வளவென்று அளவிடப்பட்ட கல்வி. ல்விக் கடலின் கரை கண்டவன்' என்ற வழக்குநோக்கி இங்ஙனம் கூறப் டது. சாலா - நிரம்பாத. ஒசிந்தது - சாய்ந்தது. நெற் பயிர் என்பது ன்ரு எழுவாய்.

V. பல்சுவை

1. ஒரு துறவியின் வேட்கை

குமர குருபர சுவாமிகள் இளம் வயதிலேயே துறவு பூண்டவர். பற்று, அவாக்களை அறவே வெறுத்தவர். அவருடைய வரலாற்றைக் கடவுள் வாழ்த்து என்ற பகுதியில் காண்க: தமக்கு எளிய வாழ்க்கையே வேண்டு மென்று அவர் இறைவனை வேண்டுவது பின்னே உள்ள பகுதியாகும்.

வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்;
அதுவே, பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த ஒருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக; வறுமனைக்
கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்
கிடம்பிறி தில்லை யாக; கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையு ணல்லது
மற்றே ருண்டி வாய்விட் டரற்றினும்
ஈகுந ரில்லை யாக;நா ளுளும்
ஒழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக;இத்திறம்
உடல்நீங் களவும் உதவிக் கடவுள்நின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே.

குறிப்புரை

அருந்துணி பல தொடுத்திசைத்த ஒரு துணி - கந்தைகள் பலவற்றை ஒன்றுசேர்த்துத் தைத்த ஒரு துணி. முழந்தாள் அளவே வருதற்குரிய ஆடை ஆதல்பற்றித் துணி என்றார். துணி - பெரிய ஆடையினின்று துணிக்கப்பட்டது. வறுமனை - பாழ்வீடு. கிடக்கைக்கு - படுக்க. உப்பு இன்று அட்ட புற்கை - உப்பில்லாமல் சமைத்த சோற்றுப் பருக்கைகள். வைக - நான் தங்க. இரந்தனன் வேண்டினும் - யாசித்து வேண்டினாலும்.

2. ஆசிரியர் கொடுத்த சமுஸ்தி வைத்துப் பாடியது

சிவப்பிரகாச சுவாமிகள் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்; வீர சைவ மரபினர். இளமையிலேயே ஓரளவு கற்றபின் இலக்கணம் கற்க விரும்பி வெள்ளி அம்பலவாணத் தம்பிரான் என்ற ஆசிரியரை அடைந்த சமயம் அவர் "இலக்கணம் பயில ஆர்வம் இருக்குமேல் 'கு' என்று தொடங்கிக் 'கு' என்று முடியுமாறு 'ஊருடையான்' என்ற தொடரையும் அமைத்து ஒரு வெண்பாப் பாடுக" என்றனர். அப்போது சிவப்பிரகாசர் பாடிய பாட்டு இது.

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னம் அணிவாற்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்ப உலகு.

குறிப்புரை

குடக்கு ஓடுவான் - மேற்கே ஓடுகின்ற சூரியன். எயிறு - பல். தக்கனுடைய யாகத்தில் சூரியன் பல்லை வீரபத்திரரைக்கொண்டு சிவபெருமான் உடைத்த வரலாறு இது. கேழல் முடக்கோடு - ஆதிவராகத்தின் வளைந்த கொம்பு. வடக்கு ஓடுதேர் - தென்றற்காற்று; இது மன்மதனுக்குத் தேர். தெவ்வு - பகைவன். மன்மதனுடைய பகைவர் சிவபெருமான். ஊருடையான் என்பதை ஊர், உடை, ஆன் என்று மூன்று சொற்களாக்கித் 'தில்லையூர்', 'தோல் உடை', 'மேற்கொள்ளல் ஆன்' என்று கூட்டுக. ஆன்-எருது. இது நிரல் நிரையணி.

3. காளத்தியின் கொடை

கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன்
கறப்பவன் கொண்டுசென்றே
எல்லையிற் சேர்ப்பவன் பாலடு
வோனிவை யித்தனையும்
சொல்லையிற் பாவல ரோரோர்
கவிசொல்லச் சொல்லநல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வான
துந்தொண்டை மண்டலமே.

குறிப்புரை

வல்லைமாநகர் என்ற ஊரிலிருந்த காளத்தி முதலியார் என்ற பிரபுவின் மீது ஒரு புலவர் பாடியது இது. இந்தக் கவி தொண்டைமண்டல சதகம் என்ற நூலில் உள்ளது. தொண்டை மண்டலத்தைச் சிறப்பித்துக் கூறும் நூறு பாடல்கள் அடங்கிய நூல் தொண்டைமண்டல சதகம் எனப்படும்.

தம்மீது கவி சொல்லுவோர்க்குக் காளத்தி என்பவர் பசுவையும் அதனை மேய்ப்பதற்கும் பாலைக் கறப்பதற்கும் பிற தொழில்களுக்குமாக ஆள்களையும் சேர்த்துத் தானம் கொடுப்பர் என்பது கருத்து. கொல்லை - பசுக்கள் மேயும் காடு. மேய்ப்போன் வேறு, மேய்ச்சலுக்குக் கொண்டு போய் விட்டு மீள அழைத்துவருபவன் வேறு. பாலடுவோன் - பாலைக் காய்ச்சுவோன். நல்கும் - கொடுக்கின்ற. வல்லையில் - வல்லைமாநகர் என்ற ஊரில் உள்ள.

4. தமக்குப் பலவகைச் சிறப்புச் செய்த கறுப்பன் என்ற பிரபுவை ஒரு புலவர் பாடியது

கன்மாரி காத்தமுகிற் கத்தூரி யருண்மாவைக்
கறுப்ப னென்னும்
மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ் சபைகூட்டி
வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகம்பி தஞ்செய்து
சுருளும் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குச் சுமந்துமிகு
புகழ்பெற் றானே.

குறிப்புரை

கல்மாரி காத்த முகில் - கல்மாரியைத் தன்னிடத்தே கொண்ட மேக போன்ற கொடையையுடைய. மாவை - ஓர் ஊர். மின்மாரி - மின்னலோ கூடிய மழைபோன்றவன். கிளை - சுற்றத்தார். நான் சொல்மழை பொழி திட. சிரக்கம்பிதம் - மகிழ்ச்சியினால் தலை அசைத்தல். சுருள் - வெற்றிலை சுருள். ஏவல்களைப்போல் இத்தனையும் செய்தும் புகழ்பெற்றான். இ இகழ்ச்சியல்ல என்றபடி.

உரைநடைப் பகுதி

1. நின்னை வியத்தல் என்னே?

(எம். ஏ. துரை அரங்கசாமி, எம். ஏ., எம். ஓ. எல்.)

"வாருங்கள், வாருங்கள் புலவரே! நெடுநாட்களுக்குப் பின்னுவது என்னைப் பற்றிய நினைவு தங்களுக்கு ஏற்பட்டதே! அது குறித்து எல்லையில்லாத மகிழ்ச்சி அடைகின்றேன்" என்று கூறிக்கொண்டே, பணிவுடன், இன்முகம் காட்டி வரவேற்ருன் திருக்கிள்ளி, புலவரை.

"என்ன அப்பா! உன்னைப் பற்றி என்ருவது மறந்திருந்தால்தானே அது நீங்கிப் பின் நினைக்க வேண்டும்! உன்னை மறக்கவும், கூடுமோ! சோழனுடைய படைத் தலைவனுய் இருந்துகொண்டு, புலவர் பசி நோய்க்கு மருத்துவனுய் விளங்கும் உன்னை மறப்பின், என்னைப்போன்ற புலவர்கட்கு வேறு புகல் ஏது? அப்படியிருக்க உன்னை மறந்து, பின் நினைத்து வந்தேன் என்று கூறி என்னை நன்றி கொன்ற பாவத்தில் ஆழ்த்திவிட்டனையே! 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் வாய்மொழியைப் போற்றவில்லை யெனின், அதனைக் கற்றதனுல் ஆய பயன் என் கொல்?" என்று சிறிது வருத்தக்குறி முகத்தில் தோன்றப் புலவர் குமரனுர் மொழிந்தார்.

"நல்லது. புலவரே! இப்படி உட்காருங்கள்" என்று அவரை ஓர் இருக்கையில் உட்கார வைத்துத் தானும் அவர் பக்கத்தில் ஓர் இருக்கையில் உட்கார்ந்து, பின், "நான் சொன்னது தவருகுமானுல் என்னை அருள் கூர்ந்து மன்னித்து விடுங்கள். பிசிராந்தையார் வழி வந்தவர் தாங்கள் என்பதை நான் அறியாது கூறிவிட்டேன். பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரையில் உள்ள தாங்கள் என்னை மறவாமல் நினைந்துகொண்டே இருக்கின்றீர் என்பதைத் தங்கள் வாய் மொழியால் இன்று அறிந்தேன். தங்கள் எண்ணத்தை எண்ணியறியும் பாங்கு, கோப்பெருஞ்சோழன் போல் எனக்கு ஏற்படாதது என் தீவினையின் பயனே போலும்!

கோப்பெருஞ் சோழன் உள்ளத்தைப் பாண்டி நாட்டிலிருந்து கொண்டே பிசிராந்தையார் உணரவும், பிசிராந்தையார் உள் ளத்தைச் சோழ நாட்டிலிருந்துகொண்டே கோப்பெருஞ் சோழன் உணரவும், அவர்கள் பெற்ற பேறுபோல் யாரே பெறவல்லார்கள் ! நீங்களோ மதுரையிலிருந்தபடியே என்னை மறக்கவேயில்லை என்கிறீர்கள் ! நானோ இச் சோழ நாட்டி லிருந்தபடியே, தங்களைக் கண்டு நெடுநாட்கள் ஆயினவே ! என்றைக்குத் தங்களை மறுபடியும் காணப் போகின்றேன் என்று எண்ணியபடியே இருக்கின்றேன்.

“ பிசிராந்தையார் வரவேண்டும் என்று கோப்பெருஞ் சோழன் நினைத்தவுடனே, அவர் வந்து சேர்ந்தார். தங் களை நினைத்தவுடனே தாங்கள் அவர்போல் வந்திருக்க வேண்டுமே ! எத்தனையோ முறை நினைத்தும் தாங்கள் வர வில்லையே ! உண்மையில் நம்மிருவரிடத்தும் அன்பிற்கோ, நினைவிற்கோ குறைவே இல்லை என்பது உறுதியாகின்றது அப்படியிருக்கத் தாங்கள் வர இவ்வளவு நாட்கள் ஆவா னேன் ?” என்று கேட்டான் திருக்கிள்ளி.

“ புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான் நட் பாங் கிழமை தரும் ’ என்ற மறையின் பொருள் நூற்றுக்கு நூறு பிறழாத உண்மை. நீ என்னை இடைவிடாது நினை தனை என்பதற்கு நானே சான்று. ‘ உன்னைக் காண வேண் டும், காணவேண்டும் ’ என்ற எண்ணம் என் உள்ளத்தில் இடைவிடாமல் தோற்றிக் கொண்டே இருந்தது. உன் அல் போடுகூடிய நினைவின் கவர்ச்சி யாற்றலால்தான் என்பன நான் நன்கு உணர்வேன் ; அவ் வுணர்ச்சிக்கு அடிமையாக மல், உன்னை ஓடி வந்து காணவேண்டும் என்று உந்தி உள்ளத்தையும் அடக்கி, உறுதிகொண்ட படியால்தான் இ வளவு நாட்களாக உன்னைக் காண வரவில்லை” என்று புலவர்.

“ என்னைக் காணக்கூடாது என்று உறுதி கொண் தற்கு நான் செய்த பிழை யாது? அப்படித்தான் பிழை செ திருந்தாலும், அதை இன்னதென்று எடுத்துக் காட்டிப் பின் நீக்கி ஆட்கொள்வதன்றோ தங்களுக்குத் தக்கது ? தாங்க

என் போல்வாரையும், என் தலைவராய அரசர் போல்வாரையும் பிழை நீக்கி ஆட்கொள்ளப் பின் வாங்கினால், பின் யாங்கள் பிழையின்றி வாழ்தல் எங்ஙனம் கூடும்! புலவர்களை யல்லவோ நாங்கள் கண்களாக உடையோம்! புலவர்கள் துணை எங்களுக்கு இல்லையெனில், நாங்கள் பிறவிக் குருடர்களாக அல்லவோ தவிப்போம்! இவை யெல்லாம் தாங்கள் அறியாதன வல்லவே! அருள் கூர்ந்து என் பிழையைப் பொறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும்'' என்று புலவரிடம் கிள்ளி முறையிட்டான்.

''வருந்தாதே கிள்ளி! நீ ஒன்றும் பிழை செய்யவில்லை! சோழன் படைத் தலைவனாய், அவன் பொருட்டு இடைவிடாமல் போர்க்களத்திலேயே காலம் கழிக்கின்றாய்! இப்போது, நான் மதுரையில் இருக்கிறேன் என்றாலும் உன் தந்தை இருந்த காலத்தில், இச் சோழ நாட்டில்தான் இருந்தேன் என்பதை நீ அறியாய்போலும். இச்சோழநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றாய கோனாட்டில் எறிச்சலூரில்தான் பிறந்துவளர்ந்தேன். நீயும் சோழ நாட்டினன்; நானும் சோழ நாட்டினன். உன் இளமைதொட்டு உன்னை நான் நன்கு அறிவேன். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கேற்ப, நீ இளமையிலேயே வாள், வேல், அம்பு முதலியபடைகளை ஆளுவதில் மிக்க திறமை பெற்று விளங்கியதை நான் அறிவேன். படைத் தலைவர்களுள் சிறந்தவர்க்கே அளிக்கும் ஏனாதிப் பட்டம், அரசனால் உனக்கு வழங்கப் பட்டதும், நானடைந்த மகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவு என்று கூறவே முடியாததாயிற்று. அமர் என்றால் உனக்கு அமிழ்தம் என்பதை, நான் நன்கு உணர்வன். உன் படைகளுக்கு முன் நின்று, அவர்களுக்கு ஊக்கம் மிக வூட்டி, வழி காட்டிச் செலுத்திப் பகைவர்களைச் ...க்கு நூறுக்குவாய் என்பதும் நான் நன்கு அறிந்ததே. சோழ நாடு சோறுடைத்து. சோற்று வளம் இது மட்டுமா செய்யும்! இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்யும்! சோற்று வளம் மிக்குள்ள இந்நாட்டை விட்டு, நான் பாண்டி நாட்டு மதுரையை அடைந்ததற்குக் காரணம் உண்டு. நானோ அந்தணன்; மாடலர் பகுப்பைச் சேர்ந்தவன்;

கல்விகேள்வியிற் சிறந்து நின்று மற்றவர்க்கும் அறிவு மிகுதற்கு ஆவன செய்யவேண்டுவதே அந்தணர் கடமையாகும். சோற்று மாடுகளாக, வயிற்றைப்பெருக்குவதிலேயே காலங் கழித்து, ஓதுவதும் செய்யாது, ஓதிய வண்ணம் நிற்பதும் செய்யாது, வாழ்நாளை வீணாக்கும் அந்தணர், நிலத்திற்குச் சுமக்க மாட்டாத சுமையே ஆவர். இவற்றை உணர்ந்தே தமிழ்க் கூடல் என்னும் மதுரையை அடைந்து, புலவர்களோடு அளவளாவிக் கல்விநிறைவு பெற்றேன். மாடலர் பகுப்பில் தோன்றிய என்னை, என் கல்விச் சிறப்புப் பற்றி, என் இயற் பெயரால் அழைப்பதையும் விடுத்து மாடலர் பகுப்பில் சிறந்தவன் என்ற மதிப்பால், மாடலன் என்றே புலவர்களெல்லோரும் என்னை அழைக்கலாயினர். இவ்வளவும் நான் கூறுவதற்குக் காரணம் உன்னோடு எனக்கு எவ்வளவு தொடர்புண்டு என்பதைக் காட்டுதற்கும், சோழ நாட்டில் பிறந்தார் இயற்கைச் சோற்றுவளத்தாலும், செயற்கை அறிவு வளத்தாலும் முன்னேற்றத்திற்கு எவ்வளவு தகுதியுடையவர் என்பதைக் காட்டுதற்குமேயாகும். ஏனாதி திருக்கிள்ளி! நீ சிறந்தவன் என்பதை நான் நன்கு அறிவேன். இருந்தாலும் ஓர் ஐயம் எனக்கு ஏற்பட்டுள்ளது; நீ சண்டைக்குப் போகிறாய்; முன்நிற்கிறாய்; பகைவர்களைத் தாக்குகிறாய். உன் பகைவர்கள் எல்லாப் பக்கங்களிலும் இருந்து கொண்டு, உன்மீது கணக்கில்லாத படைகளைச் செலுத்துகிறார்கள். அவற்றைக் கண்டு நீ அஞ்சுகிறாயில்லை. பலப்பலவாக வாள்வெட்டுக்கள் உன் முகத்தில் காணப்படுகின்றன. அம்பு தொளைத்த வடுக்கள் உன் முகத்திலும் மார்பிலும் பலப்பலவாக உள்ளன. இளமையில் இருந்த அழகு, இப்போது உன்பால் இல்லை. கண்ணுக்கு, உன் காட்சி மிக்க அருவருப்பை விளைக்கின்றது. கண்ணுக்கு நீ இன்னாய். எவ்வளவுதான் தாக்கினாலும் உன்னைத் தோற்கடிப்பது என்பது பகைவரால் என்றுமே இயலாது. அதனால் உன் புகழ் மிகுந்து ஓங்குகின்றது. எனவே நீ கேள்விக்கு இனியாய். உன் பகைவரோ எனின், உன்னைத் தாக்குதலுக்கு அஞ்சி, முதுகு காட்டி ஓடத் தலைப்படுகின்றனர். ஓடுங்கால் அவர்கள் மீது படை ஏவுவது அறமாகாது

"நீயே, அமர் காணின் அமர் கடந்து அவர்
படைவிலக்கி எதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக்கு இனியை: கட்கு இன்னுயே ;
அவரே, நின்காணின் புறம் கொடுத்தலின்
ஊறு அறியா மெய் யாக்கையொடு
கண்ணுக்கு இனியர் ; செவிக்கு இன்னுரே ;
அதனுல், நீயும் ஒன்று இனியை ; அவரும் ஒன்று இனியர் ;
ஒவ்வா யாவுள மற்றே ! வெல்போர்க்
கழல்புனே திருந்தடிக் கடுமான் கிள்ளி !
நின்னே வியக்கும் இவ் வுலகம் ! அஃது
என்னே ? பெரும ! உரைத்திசின் எமக்கே !" (புறம். 167)

என்று ஏனுதி திருக்கிள்ளியைக் கோனுட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனுர் வியந்து பாடுகிருர்.

வினக்கள்

1. புலவர் குமரனுர் செய்ந் நன்றி உள்ளவர் என்பது எங்ஙனம் விளங்குகிறது ?

2. திருக்கிள்ளியை நீண்ட நாட்கள் கழித்துச் சந்திப்பதற்குப் புலவர் கூறும் காரணம் யாது ?

3. 'கோனுட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனுர்' என்ற பெயர்க் காரணத்தை விளக்குக.

4. உலகம் ஏனுதி திருக்கிள்ளியை வியக்கக் காரணம் என்ன ?

கட்டுரைப் பயிற்சி

'சங்கப் புலவரும் புரவலரும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. புலவரே !—இந்த விளியின் வேறு உருவம் யாது ?

2. இரு பொருள் கூறுக : புகல், அமர், படை, தொடர்பு, இன்னுய், உள்ளீர், கைம்மாறு.

3. சார்பு - ஒருசார்பு, இருக்கை - இறுக்கை, குரை - குறை - பொருள் வேறுபாடு யாது ?

4. என்னே நின் சிறப்பு இருந்தவாறு ! - இந்த வியப்பு வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக்குக.

2. கிராமப் பண்பாடு

(ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.)

பண்பாடு, நாகரிகம் என்பன அநேகமாக ஒரே பொருளைத்தரும் சொற்களாம். முற்காலத்தில் மக்கள் தங்கள் பிழைப்புக்காக அலைந்து திரியும் வாழ்க்கையை யுடையவர்களாக இருந்தனர். காலம் செல்லச் செல்ல அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வேளாண்மையைக் கைக்கொண்டார்கள். அலைவாழ்க்கை மறைந்து நிலைவாழ்க்கை ஏற்பட்டதற்கும் பண்ணைகளே காரணமாக இருந்தன. பண்ணைகளின் மூலமாகவே விவசாயம் ஓங்கி அந்த விவசாயத்தை யொட்டி, மற்ற தொழில்கள் பெருகின. மனப்பண்புக்கும் பண்பட்ட வாழ்க்கைக்கும் பண்ணைகளே காரணமாக இருப்பதால் நாகரிகத்தைத் தமிழர், 'பண்பாடு' என்பர். நகரங்கள் தோன்றி அவற்றின் வழியாக அரசியல், பாதுகாப்பு, அமைதி முதலியவை தோன்றியபின், மக்களின் வாழ்க்கை உயர்ந்ததை நினைத்து நகர சம்பந்தமாகத் தோன்றிய பண்பாட்டைச் சிலர் நாகரிகம் என்றனர்.

கிராமப்பண்பாடு நகரப்பண்பாடு இரண்டும் வேறு வேறு: தற்காலத்தில் நகரத்தில் காணப்படும் பண்பாட்டையும் புகைவண்டி மோட்டார் பாதைகளுக்குத் தொலைவிலுள்ள கிராமங்களின் பண்பாட்டையும் ஒருவர் சீர்தூக்கிப் பார்த்தால் அவை இரண்டும் வேறு வேறு என்பதை அறிவார்கள்.

கிராமங்களில் நடைபெறும் தொழில்களில் முக்கியமானது விவசாயம். மற்றக் குடிசைத் தொழில்களெல்லாம் அதற்கு ஆதாரமாகச் சிறிய அளவில் நடைபெறுவனவாகும். நகரங்களிலோ வியாபாரம், கைத்தொழில் பெருக்கம் இவைகளையே காணமுடியும்.

கிராமங்களில் நடைபெறும் காரியங்களில் எல்லாம் அந்த அந்த கிராம மக்களெல்லாம் கலந்துகொள்ளுவார்கள். கூட்

சென்னை மயிலாப்பூர் கிராமஜோதி நூலகத்தாரின் அனுமதி பெற்று அவர்கள் வெளியிட்டுள்ள பண்ணை வாழ்க்கை என்ற நூலிலிருந்து கொள்ளப்பெற்றது.

டுறவு முறையிலேயே முக்கியமான காரியங்களெல்லாம் அங்கே நடைபெறுகின்றன. எல்லோருடைய அபிப்பிராயமே கிராமங்களில் செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. நகரங்களிலோ மக்கள் தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டு போகிறவர்கள். தனிப்பட்ட அபிப்பிராயப் பண்பு நகரமக்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படுதல் இயல்பு. இவ்விதம் இரண்டாக உள்ள இயல்புகளை அறிஞர் ஜே. ஸி. குமரப்பா போன்றவர்கள் 'மந்தை வாழ்க்கை முறை' என்றும், 'ஓநாய் வாழ்க்கை முறை' யென்றும் கூறுவார்கள்.

கிராமங்கள் இயற்கை வாழ்வையுடையன. நகரங்கள் செயற்கை வாழ்வையுடையன. இவற்றின் காரணமாகக் கிராம மக்களைச் சுவாதீனமாக வாழ்கிறவர்கள், தத்தம் கைகளைக்கொண்டு பிழைப்பவர்கள் என்றும், நகர மக்களைப் பராதீனமாக வாழ்கிறவர்கள், பிறருடைய உழைப்பை எதிர் நோக்கிப் பிழைப்பவர்கள் என்றும் பொதுப்படக் கூறுவர் அறிஞர். சேவையும் உழைப்பும் கிராமப் பண்பாட்டின் இலட்சியங்கள். இலகுவான வாழ்க்கையில் விருப்பமும், விநோதப் பொழுதுபோக்கு வேட்கையும் நகரப்பண்பாட்டின் கூறுகள். இங்ஙனம் இவ்விரண்டு பண்பாடுகளும் தம்முள் வேறு வேருக உள்ளன.

வேற்றுமையில் ஒற்றுமை : இவை தம்முள் வேறுபட்டிருப்பினும் ஒன்றற்கொன்று நெருக்கமானவை. ஒன்றினால் மற்றென்று நலமடைகிறது.

கிராமத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள், பால், தயிர், மோர், முட்டை முதலியவை விலையாக வேண்டும் அல்லவா ? இவைகளுக்கு ஏற்ற சந்தைகளாக உள்ளவை நகரங்கள். நகரமக்கள் இவைகளுக்காகக் கிராமங்களை எதிர் பார்த்துப் பிழைக்கிருர்கள். கிராமங்களில் விளையும் பருத்தி முதலிய விளைபொருள்கள் நகரங்களில் இயந்திரங்களின் செய்பொருள்களாக மாற்றப்படுகின்றன. கிராமத்தார் விளைபொருள்களைக் கொடுத்துச் செய்பொருள்களை விலைக்கு வாங்கிக்கொள்கிருர்கள்.

இந்த மாற்றுமுறையைத் தவிர, கிராமங்களில் இருப்பவர்

எப்பொழுதாவது விநோத உல்லாசங்களில் கலந்துகொள்ள வேண்டுமானுல் நகரங்களில் உள்ள திரைப்படம், நாடகம், நடனம் முதலிய காட்சிகளுக்குச் சென்று சாந்தியைப்பெற்று வருகிருர்கள். நகர மக்கள் வாழ்க்கை போராட்டம், சந்தடி, அவசர வேலைகள், நிர்ப்பந்தம் முதலிய கட்டுகளிலிருந்து சில நாட்களாவது விடுதலை பெற்று, அமைதி, ஓய்வு, ஆரோக்கியம், இயற்கைக் காட்சி முதலியவற்றை அனுபவிக்க கிராமங்களை நாடுகிருர்கள்.

அரசாங்கத்துக்கு வரும் வரிப் பணத்தின் பெரும்பாகம் கிராம நிலங்களிலிருந்து வருவதாகும். இப்பெருந் தொகையிஞல் நகரங்களில் பெரிய பெரிய அலுவலகங்கள், விளையாடுமிடங்கள், பிரயாணிகள் தங்கும் கட்டிடங்கள், மருத்துவச் சாலைகள், நூல் நிலையங்கள், பிறவசதிகள் முதலியவை ஏற்படுத்தப்படுகின்றன. நாட்டு நலத்துக்கு ஆதாரமான கிராமங்கள் முன்னேற்றம் அடைவதற்காக நகரங்களில் பலர் கிளர்ச்சி செய்து விவசாயிகளின் நன்மைக்கு இன்றியமையாத காரியங்களாகிய மதுவிலக்கு, கடன் நிவாரணம் முதலியன வேலைகளில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்து வருகிருர்கள். விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள், விவசாயக் கல்லூரிகள் முதலியன நகரங்களிலேயே இருக்கின்றன.

கிராம நகரங்களுக்கிடையில் அமைந்துள்ள நெருங்கிய ஒற்றுமை மேற்கூறிய செய்திகளால் விளங்கும்.

மாறுபாடே இல்லாமல் வாழ்க்கை ஒரே போக்கில் செல்வதாஞல் அதில் சுவை இராது. எனவே, நமக்கு இந்த இரு வேறு வகையான பண்பாடுகளும் இன்றியமையாதனவே.

கிராமப் பண்பாடுடையது இந்தியா : இந்தியாவில் கிராமங்களே அதிகம். கிராம மக்களின் தொகை மொத்த ஜனத் தொகையில் நூற்றுக்கு எண்பது பங்குக்கு மேல் இருக்கிறது. எனவே, பெரும்பாலான கிராம மக்களின் வாழ்வே இந்தியாவின் வாழ்வாகும். வேளாண்மை வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி யாகும். கைத்தொழிலே முக்கியமாயுள்ள இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் நகரப் பண்பாடுடையுடையவை. அவைகள் கூட போர்

காலத்தில் விவசாயப் பண்பாட்டில் முக்கியமாகக் கருத்தைச் செலுத்தி வந்தன; இப்பொழுதும் செலுத்தி வருகின்றன. என்றால், நம்மவரின் முழுக்கவனமும் கிராமப் பண்பாட்டில் அமையவேண்டும் என்பது கூருமலே விளங்கும். இதனால் நமக்கு ஒன்று தெரிகிறது. நகரப் பண்பாடு உடைய நாடுகள் சில சமயங்களில் கிராமப் பண்பாட்டை மேற்கொள்கின்றன என்றால், கிராமப் பண்பாட்டினால் நகரப் பண்பாடு வளர்ச்சி யுறும் என்பது தெள்ளிதின் புலனாகிறது. ஆனால் நகரப் பண்பாடு என்று கிராமப் பண்பாட்டைக் குலைக்கத்தொடங்கு கிறதோ, அன்றே தேசம் வறுமையுற்றுக் கீழ்நிலை பெற்று அதன் காரணமாக இரு பண்பாடுகளும் அழிந்து போகும்.

இன்றைய இந்தியாவில் கிராமங்கள் தத்தம் பண்பாட்டை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன. இதன் விளைவு இப் பொழுதே தெரிகிறது. கிராமப் பண்பாடு மேலும் அழியாமற் பாதுகாப்பது இத்தேச மக்கள் ஒவ்வொருவருடைய கடமையு மாகும்.

அழிவின் அறிகுறிகள் : நகரங்களுக்கும் கிராமங் களுக்கும் போக்குவரவுச் சாதனங்களால் இப்பொழுது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. நகரங்களில் காணப்படும் பண்பாடுகளிற் பல, கிராமத்தாரிடை இன்று காணப்படுகின்றன. கிராமங்களில் உள்ள இளை ஞர்கள் படிப்பதற்காக நகரங்களுக்குச்சென்று படிப்பை முடித்துக்கொண்ட பிறகு, கிராம வாழ்க்கையை விரும்புவ தில்லை. கிராமங்களுக்கு மீண்டும் வரும் ஒருசிலர் நகரப் பழக்க வழக்கங்களை (ஆடம்பர வாழ்க்கைகளை) மேற்கொள்ளு கிறார்கள். அவர்களை மாதிரியாகக்கொண்டு மற்றவர்களும் தங்கள் சொந்தப் பண்பாட்டை இழந்து விடுகிறார்கள்.

பெரிய ஆலைகளில் நிகழும் வேலை நிறுத்த ஆர்ப்பாட் டங்களை நேரிலும் செய்தித்தாள்களின் மூலமும் அறிந்த குடியானவக் கூலிகள், வயல், தோட்டம் முதலியவைகளில் வேலை செய்பவர்கள் முதலியவர்கள் நிலச் சொந்தக்காரருக் குத் தொல்லைகள் தருகிறார்கள். நிலச்சொந்தக்காரரும் பழைய கால முறைகளைப் பின்பற்றுமல் ஆலை முதலாளிகளின்

முறைகளை மேற்கொள்ளப் பார்க்கிறார்கள். கிஸான் சச்சரவுகளுக்கு இவை காரணமாகின்றன.

கிராமங்களில் சில தனி ஆட்களின் ஆட்சியும் அதிகாரமும் தலையெடுத்து ஆடுவது உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய அதிகாரிகள் இரண்டொருவர் உண்டு. முன்பெல்லாம் இவர்களுடைய முன்னோர்கள் அதிகாரிகளாகவே இருந்தனர். ஆனால் அவர்களுடைய ஆட்சி சுயநலங்கருதாது தம்மைச் சேர்ந்தவர்களை ஆதரித்து வருவது. அடிக்கும் கைகளே அணைக்கும் கைகளாகவும் இருந்தன. எங்கும் சம உரிமை என்னும் கொள்கை பரவியிருக்கிற இக்காலத்தில் இரண்டொருவரின் அதிகாரம் செல்லுபடியாகாது. அதற்குப் பலருடைய எதிர்ப்பு இருந்தே தீரும். பலர் கிராமங்களை விட்டொழித்துச் சுயேச்சையாக வாழ நகரங்களுக்குச் சென்று விடுகிறார்கள். இந்தச் சச்சரவினால் கிராமப் பண்பாடு அழிகிறது.

நாம் செய்யவேண்டுவன : கிராமப் பண்பாட்டை நாம் காப்பாற்றவேண்டும். அரசாங்கம் இத்துறையில் ஆகவேண்டியதைச் செய்து வருகிறது. என்றாலும், மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

சொந்த நிலத்தையுடையவர் நகரங்களில் இருப்பார்களேயானால் அவர்கள் தங்கள் நிலங்களுக்குச் சென்று அங்கே வீடு கட்டிக்கொண்டு பண்ணை வாழ்க்கையை நடத்தவேண்டும். பணம் இருக்கிறவர்கள் சில ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கி அங்கே போய் கிராம வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும். இதற்குத் தியாகமும் உழைப்பும் அவசியம். பண்ணை வாழ்க்கை நிலைபெற்றுவிட்டால் பண்ணைக்காரர் பிறர்க்கு அடிமையாக இல்லாமல் சுதந்திரமுள்ளவர் ஆகிறார். செல்வம் பெருக்கும் வழி அவருக்குச் சொந்தமாகிறது. அவருடைய அலுவலகமும் வீடும் விநோதப்பொழுது போக்குக்கு ஏற்ற இடமும் தம்முடைய பண்ணையே ஆகிறது.

அமெரிக்க ஐக்கியநாடு தற்சமயத்தில் வேளாண்மையில் தலைசிறந்து விளங்குகின்றது. கிராமப் பண்பாட்டை அந்

நாட்டு அரசாங்கம் நிலைப்படுத்த பல வழிகளில் உழைத்து வருகிறது. அங்கே இப்பொழுது சுமார் அறுபது இலட்சம் பண்ணைகளுக்குமேல் இருக்கின்றன. பண்ணைக்காரர்களின் வாழ்க்கை மேலானதாக அங்கே திகழ்கிறது. அமெரிக்கர் போல் நம் நாட்டிலும் முடிகிறவர்கள் பண்ணை வாழ்க்கை முறையைக் கைக்கொள்ளவேண்டும். அதன் மூலம் கிராமப் பண்பாட்டை வளர்க்கவேண்டும். இவர்கள் வளர்க்காமலே கூட அந்தப் பண்பாடு அப்பொழுது தானாக வளர்ந்துவிடும்.

வினாக்கள்

1. நாகரிகத்தை ஏன் பண்பாடு என்பர்?
2. கிராமப் பண்பாடு, நகரப் பண்பாடுகள் எவை?
3. நகர மக்கள் ஏன் கிராமங்களை நாடுகின்றனர்?
4. கிராமப் பண்பாடுடையது இந்தியா என்பதை எடுத்துக் காட்டுக.
5. கிராமப் பண்பாட்டின் அழிவிற்கு அறிகுறிகள் எவை? (பதினைந்து வரியில் எழுதுக.)
6. சொந்த நிலமுள்ள நகரவாசிகள் யாது செய்யவேண்டும்?

கட்டுரைப் பயிற்சி

கிராமச் சீர்திருத்தம் என்னும் தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. பொருள் வேறுபாடு காண்க: பெரும் பாகம் - பெறும் பாகம்; கருத்து - கறுத்து; கூட்டுறவு - கூட்டுரவு.

2. பண்பாடு, நாகரிகம், கூட்டுறவு, மாற்றுமுறை.—சொல்லின்படி பொருள் கூறுக.

3. மாறுபாடே இல்லாமல் வாழ்க்கை ஒரே போக்கில் செல்வதனால் அதில் சுவை இராது.—என்ன வாக்கியம் இது? இதனை உணர்ச்சி வாக்கியம் ஆக்குக.

3. பொருளியல்

(ஓ. இரா. கிருட்டினசாமி, எம். ஏ., பி. காம்.)

பொருளியல் மனிதனின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியது. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" யென்ற வள்ளுவர் வாய்மொழி பொருளியலின் இன்றியமையா மைக்குச் சான்றாகத் திகழ்கின்றது. பொருள் தேடக் கருதி மனிதன் பல செயல்களில் ஈடுபடுகின்றான். உழவன் நிலத்தை உழுது பண்படுத்திப் பயிர் செய்கின்றான்; பல பொருள்களை விளைவிக்கின்றான். நெசவாளன் உடைகளுக்கு வேண்டிய துணிகளை நெய்கின்றான். தச்சுவேலை செய்பவன் உழவ னுக்கும் மற்றவனுக்கும் வேண்டிய கருவிகளைச் செய்து தருகின்றான். கட்டிடங்களைக் கட்டுகின்றான் ஒருவன். காரை ஓட்டுகின்றான் இன்னொருவன். இயந்திரங்களை இயக்குகின்றான் பொறிவல்லுநன். வரவு செலவுபற்றிய கணக்குகளை எழுதுகின்றான் கணக்கன். கணக்குகளைச் சரிபார்க்கின்றான் தணிக்கையாளன். பள்ளி மாணவர்களுக் குப் பாடம் சொல்லி அறிவைப் பேணுகின்றான் நல்லாசிரியன். இவ்வாறாக ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு செயலில் ஈடுபடு கின்றான். மனிதன் ஏன் செயலில் ஈடுபடுகின்றான்? மனிதன் செயலில் ஈடுபடுவது வாழும் வகை தேட. வாழ்க்கை பல தேவைகளைக் கொண்டது. உணவு, உடை, உறைவிடம், கலையுணர்வு என்பவைகளை யொட்டிய தேவைகள் எண் ணிறந்தன. அத்தகைய தேவைகளை நிறைவேற்றவே மனி தன் செயல்களில் ஈடுபடுகின்றான். ஆகவே, தேவையின் உணர்வே செயலின் ஈடுபாட்டிற்குத் தோற்றுவாய்.

உணரும் தேவைகளை நிறைவேற்றப் பொருள் தேவை உணரப்படும் தேவை வெறும் எண்ணத்தால் மட்டும் நிறை வேறாது. அதற்குத் தக்க செயல் வேண்டும். வேண்டிய பொருளை நுகரவேண்டும். தாகத்தைத் தணிக்கத் தண்ண ரைக் குடிக்கவேண்டும். பசியைப்போக்கப் பால் இல்லையென னும் கூழாவது வேண்டும். உறைவிடத் தேவைக்கு மாப

மாளிகை இல்லையெனினும் கூரைவேய்ந்த குடிசையாவது அவசியம். ஆகவே பொருள்களின் நுகர்வால் (Consumption) தேவை நிறைவேறுகின்றது.

ஆனால், மனிதன் உணரும் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றும் அளவிற்குப் போதுமான பொருள் வழிகள் (Resource) இல்லை. ஈண்டு "பொருள்" என்ற சொல் தனிப் பொருளில் வழங்கப்படுகிறது. உலக வழக்கியலில், கல்லும் பொருள்; மண்ணும் பொருள்; நீரும் பொருள்; கண்ணால் கண்டு மெய்யால் உணரக்கூடிய ஒவ்வொன்றும் பொருள்தான். ஆனால் பொருளியலில் 'பொரு'ளுக்குத் தனிப் பொருள் உண்டு. மனிதனின் தேவைக்குப் பற்றாக் குறையாகவுள்ளதைப் 'பொருள்' என்று சொல்கின்றோம் பொருளியலில். பொருளியலின்படி உலகின் தேவைகளுக்கு அதிகமாக ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ள நீர் 'பொருள்' எனப்படாது. அதை மனிதன் விலைகொடுத்து வாங்கவேண்டுவதில்லை என்ற காரணந்தான். ஆனால் சென்னைமாநகரின் வீட்டிலே நுகரும் நீர் 'பொருள்' எனப் படும். ஏனெனில் அது நீர் வரி யென்ற முறையிலே விலை கொடுத்து வாங்கப்படுகிறது. ஆகவே, மனிதனின் தேவையை நிறைவேற்றக்கூடிய இயல்பும் தேவையை யொட்டிப் பார்க்குமிடத்துப் பற்றாக் குறையாகவும் உள்ள ஒன்று 'பொருள்' எனப்படும் பொருளியலில்.

இத்தகைமைத்தாய பொருளும் அது பயன்படுவதற்குக் காரணமாகவுள்ள தேவையின் உணர்வும் (Want) பொருளியலின் இரு கண்கள் எனப்படும். தேவை உலகத்தை ஆட்டி அல்லல்படுத்தும் சக்திபெற்றது. அது பல்லியல் புடைத்து. அதனைத் தனித்து நோக்குமிடத்து தொடர்ந்து நிகழும் இயல்புடைத்து. தாகம், பசி முதலியன ஒரு தடவை ஏற்படுவதோடு நின்றுவிடுவதில்லை; தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தேவை பெருகும் இயல்புடைத்து. ஒன்றின் தேவை மற்றொன்றின் இன்றியமையாமையைத் தோற்றுவிக்கின்றது. மோட்டார் வண்டி வேண்டுமெனின் அதை இயக்குவதற்குரிய எண்ணெயும் வேண்டற்பாலது.

தேவை நாகரிகத்தின் அளவுகோல். அன்று காட்டிலே, குகைகளிலே குடியிருந்த பண்டை மனிதனின் தேவைகள் மிகச் சில. ஆனால் இன்று நாட்டிலே நகரத்தில் வாழும் இற்றை நாள் மனிதனின் தேவைகள் கணக்கில் அடங்கா. தேவையின் இயல்பு வளர வளர நாகரிகமும் முன்னேக்கி நகர்ந்து கொண்டே யிருக்கின்றது.

தேவையின் இயல்பு இவ்வாருயின், அதை நிறைவேற்றுவதற்கு வேண்டற்பாலதாய பொருளோவெனின் போதுமான அளவு இல்லை. பொருள் தேவையின் அளவிற்கு பற்றுக் குறையாக வுள்ளது (Limited in supply). போதுமான அளவு இல்லையென்ற அளவோடு பொருளின் இயல்பு நின்று விடவில்லை. மற்ருெரு தன்மையுமுண்டு அதற்கு. ஒரு பொருள் பல பயன்களையுடையதாக உள்ளது. நிலம் உழவிற்கும் பயன்படுகிறது; வீடுகட்டவும் பயன்படுகிறது. ஆகவே **எண்ணிறந்த தேவைகளைப் பற்றுக்குறையாகவுள்ள பொருள்களைக் கொண்டு எவ்வாறு நிறைவேற்றுவது, எப்பொருளை எப்பயனுக்கு உட்படுத்துவது என்பன மனித வாழ்க்கையின் அடிப்படைப் போராட்டமாக வுள்ளன.** தேவைக்கேற்ற அளவு பொருளில்லையே யென்பது உலகியலின் அடிப்படைச் சிக்கலாகும்.

இச் சிக்கலைப்பற்றி ஆய்வது 'பொருளியல்' எனப்படும் அறிவியலின் நோக்கம். "பொருளியல்" என்ருல் என்ன? பொருளியல் ஓர் அறிவியல் (Science); அறிவியல் மட்டுமன்று; கலையுமாகும். மனிதனின் தேவைக்கும் பொருளிற்குமுள்ள தொடர்பைப்பற்றி முறையாக ஆய்ந்து முடிவு காண முற்படுதல் என்ற முறையான் பொருளியல் ஒரு அறிவியல்; கண்டறிந்த உண்மைகளை மனித வாழ்க்கையின் பிரச்னைகளைக் களைவதற்குச் செயலில் பயன்படுதல் என்ற வகையான் அஃது ஒரு கலையாகவும் திகழ்கின்றது. பொருளியல், பாடம் என்ற முறையில் புதுமையாகத் தோன்றினும், வாழ்க்கை முறையிலே மனிதனை அண்டிக்கிடக்கும் அழியாத அறிவியல் என்பது உன்னற்பாற்று. **மார்சல்** என்ற பொருளியல் பேராசிரியர் கூறியபடி, "பொருளியல், மனிதனின்

அன்றாட வாழ்க்கைச் செயலைக் கற்பிக்கின்றது; மனித நலனுக்கு வேண்டற்பாலதாய பொருள்களைத் தேடுதலையும் பயன்படுத்தலையும் பற்றிய தனி மனிதனின் செயலையும் சமூகச் செயலையும் பரிசீலனை செய்கின்றது.''

பொருளியல் பொருளைப் பற்றியது; அதினினும் முக்கியமாக மனிதனின் செயலைப்பற்றியது. ரோச்சர் என்பவர் கூறியுள்ளபடி, "பொருளியலின் தொடக்கமும் மனிதன்; முடிவும் மனிதன்.'' மனிதன் எவ்வாற்ருன் பொருளைத் தேடுகின்ருன்; தேடியவற்றை எவ்வாறு பயன்படுத்துகின்ருன் என்பது பொருளியலின் பொருளாகும்.

எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற அளவு பொருளிருப்பின் மனிதவாழ்க்கை பேரின்ப வாழ்க்கையாக முடியும்; பொருள்பற்றிய போராட்டமும் பொச்சாவாமையும் இருந்திருக்கமாட்டா. அத்தகைய நிலை இல்லாமையினுல் மனிதன் பொருளை முயற்சியால் ஈட்டி வழியறிந்து அறிவொடு பயன்படுத்த வேண்டியுள்ளது. ஒருபக்கம் தேவைகளை நிறைவேற்றப் பயன்படும் பொருள்; மறுபக்கம் நிறைவேற்றப்படவேண்டிய தேவைகள். இவைகளிடையே 'பொறுக்குத் தேர்வு' (Selection) நடத்தவேண்டியுள்ளது. எண்ணற்ற தேவைகளில் இன்றியமையாதவைகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, மற்றவைகளை விட்டுவிடுகின்ருன் மனிதன். அவற்றிற்குரிய வழிகளில் கிடைக்கும் சிறு பொருளைப் பயன்படுத்தித் தேவைகளை நிறைவேற்றுகின்ருன். ஒரு பொருளை ஒருபோழ்து ஒரு வழியில்தான் பயன்படுத்த முடியும். ஒருவனுக்கு வீடும் கட்டவேண்டும், உழவும் செய்யவேண்டும் என்ற தேவையிருந்தால், இரண்டையும் ஒன்ருக நிறைவேற்றுதல் இயலாது. நிலத்தை வீடு கட்டப் பயன்படுத்தின் உழவிற்கு அது கிடைக்காது. ஆகவே பல்பயனுடைத்தாய பொருளைக் குறிப்பிட்ட ஒரு பயன்கருதிப் பயன்படுத்தி மனிதன் தனக்கு இன்றியமையாதனவெனக் கருதும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ருன். 'பண மதிப்பு' (Money value) என்ற கருவியின் துணையான் பொருள்கள் மதிப்பிடப்பட்டு அவைகளின் தராதர இன்றி

யமையாமை வரையறுக்கப்படுகின்றது. இதுவே பொருளியலின் நுட்பம்.

பொருளியலின் நோக்கம்

மார்சல் என்ற அறிஞர் கூறியபடி பொருளியல் உண்மைக்காக என்ற அளவில் மதிப்புடைத்தன்று; அது பண்பியலின் பணிப்பெண்ணுகவும், செயலின் வேலேயாளாகவும் திகழ்கின்றது. பொருளியல் பலநோக்குடையது: எவ்வாறு பொருள்கள் பெறப்படுகின்றன, பெறப்பட்டவை எவ்வகையான் விநியோகம் செய்யப்பட்டு நுகரப்படுகின்றன என்ற பொருளியலின் செயல்களேயும் உண்மைகளேயும் கற்பது பொருளியலின் நோக்கங்களில் ஒன்று. ஆனுல் பொருளியல் எல்லாச் செயல்களேயும், எல்லா உண்மைகளேயும் கற்க முற்படுவதில்லே; பணம் என்ற கருவியால் அளவிடப்படும் செயல்களேயும் வாய்மைகளேயும் மட்டுந்தான் கற்கின்றது. சமூகப் பொருளியற் செயல்களில் செயல்முறையில் வழி காட்டுகின்றது. மேலும் இப்பொழுதுள்ள உண்மைகள் எவ்விதம் மேலும் நன்முறையான் மாற்றப்படலாம் என்பதையும் ஆய்கின்றது.

பொருளியற் கல்வியின் நோக்கத்தில், பொருளியல் முடக்கம், வேலேயின்மை, ஏழ்மை, உற்பத்திக்குறைவு முதலியவைகளின் காரணங்களேப்பற்றிக் கற்றலும் அடங்கும். உள்நாட்டுத் திறநிலேயும், உலக அமைதியும் வாழ்க்கைக் குறைகளேக் களேந்து, முழு வேலேயும் உயர்ந்த வாழ்க்கைத்தரமும் அமைவதே பொருத்தமாகும். இத்தகைய நோக்கங்களே எவ்வகையில் நிறைவேற்றப் பெறுவதென்பது பொருளியலின் சீரிய பணியாகும்.

பொருளியல் முறையின் செயல்கள்

ஒவ்வொரு சமூக அமைப்பிலும் பொருளியல்பற்றிய சிக்கல்கள் பலவுள. சமூக நடப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் அச் சிக்கல்களின் விடுவிப்பு இன்றியமையாதது. அவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. 'நோக்கங்கள் (Objectives)' பற்றிய சிக்கல்கள். எந்தெந்தப் பொருள்களும் பணிகளும் எவ்வளவில் தோற்று விக்கப்படவேண்டும் என்பதைச் சமூகம் முடிவுசெய்ய வேண்டும்.

2. இயற்கைப் பொருள்களை வகைப்படுத்தல் அடுத்த சிக்கலாகும். உற்பத்திக்கு வேண்டற்பால பொருள்கள் மிக்க பயன் கிடைக்கும்படியாகப் பல்வகை உற்பத்தித் தொழில் களில் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

3. 'நுகர்வுப் பங்கீடு (Rationing of consumption)' அடுத்த சிக்கலாகும். தேவைக்குக் குறைவாகவுள்ள நுகர்வுப் பொருள்களை மக்களிடையே நியாயமாகப் பிரித்து வழங்க வேண்டும்.

4. இறுதியாக, 'பேணுதலும் பெருக்கமும் (Maintenance and expansion)'' பற்றிய சிக்கல். உற்பத்திப் பொருள்களின் இற்றைக் குணத்தை நிலைக்கச் செய்யவும், இயலுமேல் உயரச்செய்யவும் வழிவகைகள் செய்யற்பாலன. சுருங்கக்கூறின், எதை, எப்பொழுது, எவ்வாறு, யாருக்காக உற்பத்தி செய்வதென்பதே பொருளியல் முறையின் செய லாகும்.

வினுக்கள்

1. தேவையின் உணர்வே செயலின் ஈடுபாட்டிற்குத் தோற்றுவாய்—விளக்குக.
2. பொருளியல் என்பது யாது?
3. பொருளியலின் இரு கண்கள் எவை?
4. மார்சல் என்பவர் பொருளியலைப்பற்றிக் கூறுவது யாது?
5. பொருளியலின் சீரிய பணிகள் எவை?

கட்டுரைப் பயிற்சி

தேவைகளும் மனிதனும்—என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. கீழ்வரும் சொற்களின் தமிழ் வடிவங்கள் யாவை?
   இயந்திரம், அவசியம்.
2. எதிர்மொழி கூறுக :—தோற்றுவாய், பற்றுக்குறை, போராட்டம்.
3. சிறிய - சீரிய—பொருள் வேறுபாடு தோன்ற வாக்கியம் அமைக்க.
4. பொருளியல் ஓர் அறிவியல்; அறிவியல் மட்டுமன்று, கலையு மாகும்—இதனைக் கலவை வாக்கிய மாக்குக.

4. சேதுபதியின் மோதிரம்

(கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.)

கையை அசைத்துத் தொட்டிலை ஆட்டிக்கொண்டே நாவையும் அசைத்துப் பாடிக்கொண்டிருந்தாள், அந்தப் பெண்மணி. முகத்திலே பொலிவின்றி, உடம்பிலே உரமின்றிக் கழுத்திலே மங்கலமின்றி நின்றிருந்த அந்த மடந்தைக்கு நாவிலே மாத்திரம் இனிமையும் வன்மையும் இருந்தன. தொட்டிலிலே கிடந்த சின்னஞ் சிறு குழந்தையை ஆர்வம் பொங்கப் பார்த்தபடியே அவள் தாலாட்டிக்கொண்டிருந்தாள்.

அவள் உள்ளத்தில் என்ன என்ன நினைவுகள் ஓடினவோ, யார் கண்டார்கள்! இடையிடையே ஒரு பெருமூச்சு, சிறிது நேரம் மௌனம், சிறிது முகத்திலே புன்சிரிப்பு, பிறகு சோக ரேகை, அப்பால் இரு கண்ணீர்த்துளிகள்—இப்படியாக அவள் உள்ளக் கற்பனைக்குப் புறத்தே சின்னங்கள் தோன்றின. அவற்றைக் கொண்டு அந்தக் கற்பனையை உருவாக்கினால் கவலையும் சோகமும் இனிமையும் கலந்த கதையாக ஆகலாம்.

இப்பொழுது அவள் கணவனை இழந்த மங்கை; தன் வாழ்வுக்குத் தனிப்பற்றுக் கோடாக இதோ தொட்டிலில் கிடத்தியிருக்கிறாளே இந்தக்குழந்தையைத்தான் நம்பியிருக்கிறாள். பழங்காலக் கதையிலே உள்ளம் ஊடுருவிச் செல்லும்போது அவள் தன்னை மறக்கிறாள்; இப்போது நிற்கும்நிலை நினைவுக்கு வருகையில் அவள் சோகந் தேங்கும் கண், நீர்த்துளிகளைத் துளிக்கின்றது. அந்தச் சின்னஞ் சிறு குழந்தையின் இளங்கையிலே சிக்குண்ட எதிர்காலத்தை நினைக்கையில் ஒன்றும் தெரியாமல் பெருமூச்செறிகிறாள்.

சேதுபதி மன்னருடைய ஆதரவு அவளுக்கு எப்போதும் போலிருக்கிறது. ஆனாலும் அந்த ஆதரவு இரக்கத்தின் விளைவாக எழுந்ததுதானே? அவளுடைய கணவர் அமிர்த கவிராயர் வாழ்ந்த காலத்தில் அவள் பெற்ற இன்பவாழ்வு என்ன? இப்போது அவள் நிர்க்கதியாக நிற்கவில்லையே தவிர நாள்தோறும் அமிர்த கவிராயருடைய அமுதக் கவியிலே உ

ளம் பறிகொடுத்த உற்சாகத்தில் சேதுபதி தந்த சன்மானங்களைப் பெற்று வாழ்ந்த வாழ்வு ஆகுமா ?

அந்தக் காலம் இனிமேல் வருமா ? ஒருதுறைக் கோவையென்று புலவர் உலகத்திலே பேச்சு வந்தால் அது ரகுநாத சேதுபதியின் ஒருதுறைக் கோவையைத்தானே இன்றும் குறிக்கிறது ! புலவர் ஆளுக்கோர் ஒருதுறைக்கோவை பாடினுலும் இதற்குச் சமானம் ஆகுமா ?

அவள் நினைத்துப் பார்க்கிருள் நானூறு பாட்டுக்கும் சேதுபதி மகாராஜா நானூறு பொன் தேங்காயை உருட்டி விட்டாரே ! இதைக் கதையிலேகூடக் கேட்டதில்லையே ! இடையே ஒரு பாட்டைச் சொல்லும்போது, " இதை நன்ருக உடைத்துப் பார்த்து ரசிக்க வேண்டும் ; மற்றப் பாட்டுக்களைப் போல எண்ணக்கூடாது என்று கவிராயர் சொன்னர். சுவையறியும் செம்மலாகிய அரசர் சொன்னதுதான் மிகமிக ஆச்சரியம் ; " தெரியும், நமக்கு இதன் அருமை தெரியும் என்பதையும், இந்தப் பாட்டை உடைத்துப் பார்த்து இது மாணிக்கம் போன்ற பொருளையுடையதென்று உணர்ந்ததையும் இப்போது உருட்டிய தேங்காய் சொல்லும் ; அதை உடைத்துப் பார்த்தால் தெரியும் " என்று மன்னர் சொன்னர். தேங்காயை உடனே உடைத்துப் பார்த்தால், உள்ளெல்லாம் மாணிக்கக் கற்கள் ! அந்த மாதிரி நிகழ்ச்சி உலகத்திலே சில காலங்களில்தான் நிகழக்கூடும்.

அந்தக் கவிராயரைப் பிரிந்து அவள் வாழ்வது கிடக்கட்டும். " பாட்டுக் கிசைந்த ரகுநாத சேதுபதி " எப்படி வாழ்கிருர் ? சேது சமஸ்தானத்தில் கவிராயர் பலர் உண்டு ; வெளியூரிலிருந்தும் வருவார்கள். ஆனுல் அமிர்தகவியின் அமுத கவி இருந்தால்தான் அரசருக்கு இன்பம் நிறைவடையும்.

இந்தப் பழங்கதையெல்லாம் அவள் நினைத்துப் பார்த்தாள். அந்த நினைவுலகத்திலிருந்து உண்மை உலகத்துக்கு இறங்கி வருகையில் நிலைகுலைந்து பெருமூச்சு விடுகிருள். வேறு என்ன செய்வாள் பாவம் !

கவிராயர் மனைவியை ரகுநாத சேதுபதி அருமையாகப் பாதுகாத்து வந்தார். கவிராயர் இல்லாத குறையைத் தவிர

அந்தப் பெண்மணிக்கு வேறு ஒன்றும் குறைவைக்கவில்லை. அந்த அம்மைக்குத் தன் குழந்தையிடம் இருந்த அன்பு பெரிதுதான்; ஆனாலும் அமிர்த கவிராயர் கான்முளை வருங் காலத்தில் அவர் பெயரைக் காப்பாற்றுவான், சமஸ்தானத் துக்குப் புகழ் உண்டாக்குவான் என்ற ஆர்வத்தோடு சேது பதி அந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தாரே. அது மாத்திரம் சாமானியமான அன்பா ?

அரண்மனைக்கு அருகில் அந்த வீடு இருந்தது. கவிராய ருடைய மனைவி ஒரு கிழவியோடு வாழ்ந்து வந்தாள்; கூடத் திலே தொட்டிலைக்கட்டி அதிலே குழந்தையை விட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். கூடத்துச் சுவரின் சாளரத்து வழியே பார்த்தால் அரண்மனையின் மேற்பகுதி தெரியும். பழைய ஞாபகத்திலே தோய்ந்தெழுந்த உள்ளத்தில் உற் சாகம் பிறக்கும்; உடனே தன்னையும் அறியாமல் உச்ச ஸ்தாயியிலே அவள் தாலாட்டைப் பாடுவாள்.

அத்தகைய உற்சாகம் இன்றும் அவளைத் தலைகொண் டது. அப்போது அவள் கண்களில் திடீரென்று ஒரு மருட்சி தோன்றியது. தொட்டிலின்மேல் அவள் கண் ஓடியது; அப் பால் சுவரிலே பாய்ந்தது; சாளரத்திலே சென்றது; அத னூடே கூர்ந்து கவனித்தது. சாளரத்தின் வழியே வந்த ஒரு பிரகாசந்தான் அவளை அப்படிப் பார்க்கச் செய்தது. ஒளிக்கதிர் தொட்டிலின்மேலே விழுந்ததை அவள் கண்டாள்; சாளரத்தின் வழியே அந்தக் கதிர் வந்தது. எங்கிருந்து வந்த தென்று ஆராய்ந்தாள்.

அரண்மனையின் மேல்மாடியிலே ரகுநாத சேதுபதி கைபிடிச் சுவரின்மேலே சாய்ந்து கொண்டு தாலாட்டுப் பாட் டைக்கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். கைபிடியின் மேல் வைத்த கையில் மிக உயர்ந்த கல்கட்டு மோதிரம் அணிந்திருந் தார். எதிரே வீசிய சூரியனது கதிர் அதிலே பட்டுப் பள பளத்தது. அதிலிருந்து கிளம்பிய கதிர் அவர் உள்ளத்தைப் போலச் சாளரத்தின் வழியே புகுந்து தொட்டிலிலே படர்ந்தது.

கவிராயரின் மனைவி உண்மையை உணர்ந்தாள். ஆனலும் அதைத் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. பழைய ஞாபகங்களைச் சற்று மறந்து பாட்டிலே நிலைகொண்டாள். பழைய பாட்டோடு புதிய பாட்டையும் இணைத்துப் பாடினுள். கவிராயர் மனைவி அல்லவா ?

அதுவரையில் தம்மை மறந்து கவனித்துக்கொண்டிருந்த மன்னர் திடீரென்று உடம்பு குலுங்க நிமிர்ந்து நின்ருர். அவரைப் பாட்டின் ஒரு கண்ணி அப்படிச் செய்துவிட்டது. ஆம், அதை அந்தப் பெண்மணி இதோ மூன்ரும் முறையாகப் பாடுகிருள் :

“ திக்கெட்டும் போற்றிசெயும்
சேதுபதி ராஜேந்திரன்
கற்கட்டு மோதிரத்தைக்
கண்டாசைப் பட்டாயோ !”

என்ற கண்ணி இப்போது தெளிவாக அவர் காதில் விழுந்தது. ஒவ்வொரு சொல்லும் மணி மணியாக அந்தப் பெண்ணின் வாயிலிருந்து உதிர்ந்தது ; அப்போது அரசருடைய கண்ணிலிருந்து இரண்டு துளி நீர் உதிர்ந்தது.

“கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்” என்ற பழமொழி அவர் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். விறுவிறென்று இறங்கினுர் கீழே போய் ஓர் அழகிய தட்டில் பணமும் ஆடையும் வைத்தார் ; தம் கையிலே இருந்த மோதிரத்தைக் கழற்றி அவற்றின் நடுவிலே வைத்தார். தக்க மனிதர் ஒருவரை அழைத்து, “இந்தாரும் ; கவிராயர் மனைவியாரிடம் கொண்டுபோய்க் கொடும். கற்கட்டு மோதிரத்தைக் கண்டு ஆசைப்பட்ட குழந்தைக்கு மகாராஜா சம்மானம் செய்திருக்கிருர் என்று சொல்லும்” என்று தழுதழுத்த குரலிலே கூறி அனுப்பினுர்.

“மகாராஜா உங்கள் குழந்தைக்குச் சம்மானம் இது வென்று சொல்லி அனுப்பியிருக்கிருர்” என்ற வார்த்தைகளோடு அந்த முதியவர் கவிராயர் மனைவியின் முன்னே நின்ருர். அவள் இதை எதிர்ப்பார்த்தவள் அல்லவே ! மகா

ராஜா இருப்பதைத் தெரிந்துகொண்ட குறிப்பையல்லவா அவள் வெளியிட்டாள்? 'ஆனால், மகாராஜா, தமிழருமை தெரிந்த சேதுபதி, இப்படியா செய்து விட்டார்!'

அவருக்கு நன்றியுரைகூற வாய் எழும்பவில்லை. தட்டோடு வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டாள். அந்தக் கற்கட்டு மோதிரத்தைத் தனியே எடுத்து ஒத்திக்கொண்டாள். அது அவள் கண்ணீரினால் நனைந்து போயிற்று. எதிரே நின்ற கிழவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

வினாக்கள்

1. ஒரு துறைக் கோவையை யார் யார்மேல் பாடினார்? அதன் அரங்கேற்றத்தின் போது நடந்த நிகழ்ச்சி யாது?

2. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் பழமொழி கவிராயரின் மனைவியாருக்குப் பொருத்தமானது எவ்வாறு?

3. சேதுபதி தமிழருமை அறிந்தவர் என்பது எதனால் புலனாகின்றது?

கட்டுரைப் பயிற்சி

இப்பாடத்து நிகழ்ச்சியைக் கவிராயரின் மனைவி தன் தோழிக்குக் கூறுவது போல் எழுதுக.

மொழிப் பயிற்சி

1. 'கையை அசைத்துத் தொட்டிலை ஆட்டிக்கொண்டே நாவையும் அசைத்துப் பாடிக்கொண்டிருந்தான்'—இதனை ஒரு சொல்லாற் கூறுக.

2. பெண்ணைக் குறிக்கும் ஒரு பொருட் பன்மொழிகளை இப்பாடத்திலிருந்து குறிக்க.

3. 'அவள் உள்ளத்தில்......யார் கண்டார்கள்!'—இது என்ன வாக்கியம்? பொருள்கெடாமல் இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றுக?

4. ஆதரவு - இதன் எதிர்மொழி யாது?

5. உற்சாகம், ரசித்தல், ஆச்சரியம், மகாராஜா—இவற்றின் தமிழ் உருவங்கள் யாவை?

6. பெருமூச்சு விடுகிறாள், வேறு என்ன செய்வாள்—இதனை ஒரு வாக்கியம் ஆக்குக.

5. போப் ஐயர் *

(எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.)

நமது நாட்டில் போப் ஐயர் என்ற பெயருடன் புகழ்ந் தேத்தப்பெறும் ஜி. யு. போப் அவர்கள், வட அமெரிக்காவி லுள்ள நோவாஸ்கோஷியா என்னும் மாகாணத்தில் வணி கத்தில் ஈடுபட்டிருந்த ஓர் ஆங்கில வர்த்தகருடைய அருமை மைந்தனூர் ஆவர்.

இவர் பிறந்தது 1820-ம் ஆண்டில். "இருவேறு உல கத்து இயற்கை, திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு" என்ற வள்ளுவர் வாக்கால் பொருளும் அறிவும் பொருந்தி அமைதலின் அருமையை உணர்கின்ரேம். அருமையை உணர்கின்ரேமேயன்றி அது அமையாததொன்று என்று கொள்கின்ரேமில்லை. பொருளும் அறிவும் பொருந்த வாழ்ந்த பெருந்தகையாரைக்காணில் பெருமகிழ்வு கொள்கின்ரேம். அவர்கள் தனிச் சிறப்பிற்குரியவராய்த் திகழ்கின்றனர். அத்தகையோரில் ஒருவரே ஜி. யு. போப்.

இளைஞர் போப்பிடம் பொருட் செல்வத்தோடு கலைச் செல்வமும் கர்த்தன் அருட் செல்வமும் பொருந்தியிருந்தன. 19-ஆம் ஆண்டுவரையில் ஹாக்ஸ்டன் கல்லூரிப் படிப்பில் திளைத்து அதில் தேர்ச்சியுற்று வெளிப்போந்தபின், போப்பின் மனம் தம் தந்தையின் தொழிலை நாடவில்லை. விவலிய நூற்கழகத்தைச் சார்ந்து கிறிஸ்துவ சமயப்பணி செய்ய வேண்டுமெனத் தேர்ந்து, தாம் பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு 1839-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்கு வந்தார்.

போப் ஐயர் தமிழ்நாட்டில் பணிசெய்ய வந்து வசித்த இடம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சாயர்புரம் என்ற பதியாகும். சாயர் என்ற போர்த்துக்கீசிய வணிகரால் நிறுவப்பெற்ற காரணத்தால் இவ்வூர் இப்பெயர் பெற்றதென் பர். இங்கு போப் ஐயர் தம் மதச் சேவையோடு கல்விச் சாலைகளை ஏற்படுத்திக் கலைப்பணியையும் கருத்துடனும் ஆர்வத்துடனும் புரிந்துவந்தார்.

* (வானொலிப் பேச்சு)

தமிழ் மக்கள் நடுவில் சேவை செய்வதற்கு அவர் தமிழ் மொழி அறிவு தேவை என்பதை போப் ஐயர் உணர்ந்திருந்தார். அக்காலத்தில் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த வேத போதகர்களில் போதக முறையில் இருதிறக் கொள்கை உடையவராயிருந்தனர். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியை நிறுவிய ஆன்டர்சனையுள்ளிட்ட சில அறிஞர்கள் சமய அறிவை ஆங்கில மொழி வாயிலாகவே பரப்பக்கூடும் என்ற கருத்துடையவர்கள். போப்பையரும் பிறரும் அவ்வந்நாட்டு மொழி வாயிலாகவே சமய அறிவைத் தருதல் தகவுடையது என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள்.

இதனால் ஐயர் ஆங்கிலக் கல்வி நலன்களை அங்கீகரிக்க மறுத்தார் என்பதற்கில்லை. மேல்நாட்டுக் கல்வியைப் பெறத் தகும் நிலையில் இருந்த மக்கட்கெல்லாம் ஆங்கிலக் கல்வியைத் தாராளமாய் வழங்கினர். என்றாலும், அவரது குன்றாத ஊக்கத்துடன் கூடிய உழைப்பு தமிழேயறிந்த தமிழர்களையே பற்றி நின்றதாகலின் அத்தகைய தமிழ் மக்களின் உயர்வுக்குத் தமிழ் மொழிக் கல்வி இன்றியமையாததெனத் துணிந்து முதன்மையாகத் தாம் தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கினர். இவருக்குத் தமிழறிவுறுத்திய பெருமகனார் ஆரியங்காவுப் பிள்ளை என்ற புலவர். இந்நல்லாசிரியரிடத்தும் மகாவித்வான் இராமானுஜக் கவிராயரிடத்தும் இலக்கண இலக்கிய சமய நூற்களை முறையாகப் பாடங் கேட்டனர். நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களிலும், புறநானூறு, குறள் போன்ற சங்க நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற பெருங்காப்பியங்களிலும், திருவாசகம், திருக்கோவையார் போன்ற பக்திப் பாடல்களிலும் ஐயரவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. குறிப்பாக ஏலாதி, திரிகடுகம், மூதுரை, வாக்குண்டாம், நான்மணிக்கடிகை, நன்னெறி, நல்வழி நீதிநெறி விளக்கம் போன்ற நீதி நூல்களிடத்துப் பெருமதிப்புக்கொண்டு அவற்றைப் பலகாலும் பயின்று வந்தார் பயிலும்படி பிறரைத் தூண்டினர்.

பெரும் புலவர் வாயிலாகத் தாம் கொண்ட சமய அறிவை

சாயர்புரத்தில் வதிந்த காலத்து நன்கு வளர்த்துக்கொண்டார் நம் போப்பையர். அங்குள்ள இளைஞர்களுக்குக் கற்றுக் கொடுப்பதிலேயே இவர்தம் தமிழ்க் கல்வி வளர்ந்தது. "கற்ப தற்குச் சிறந்த வழி படிப்பது; அதைவிடச் சிறந்த வழி கேட்பது. அதனினும் சிறந்த வழி கற்பிப்பது" என்பது ஆன்றோர் வாக்கு. போப்பையரும் தம் தமிழறிவை வளர்த்தற்கு இங்குப் பேசப்பெற்ற சிறந்த உயர்வழி யையே பற்றினர். அவர் கற்றுக் கொடுக்கக் கொடுக்க அவர் தம் தமிழறிவு தொட்டனைத் தூறும் மணற் கேணிபோல் சுரப்பதாயிற்று. சமயப் பணியில் மக்களோடு நெருங்கிப் பழகிய காரணமாக நூல் வழக்கோடு பேச்சு வழக்கையும் நன்கறிந்தனர். இது அவர் தமிழ் நூற்களைத் துருவிப் பயில் வதற்கும் அந்நூற்களின் உண்மைப் பொருளை உணர்ச்சி குன்றாத வகையில் மொழி பெயர்ப்பதற்கும் பெருந்துணை செய்தது.

1849-ஆம் ஆண்டு ஐயர் இங்கிலாந்திற்குத் தற்காலிக மாகச் சென்ற காலத்து முதல் முதன் ஆக்ஸ்போர்டுடன் தொடர்பு கொண்டார். ஓய்வுக்கென அவர் அங்கு உறைந்த ஓராண்டும் தமிழ்த் தொண்டினை மறக்கவில்லை. 'ராயல் ஏசியாட்டிக் குவார்ட்டெர்லி, இந்தியன் ஆண்டிக்குவரி, இந்தி யன் மாகசின்' போன்ற பிரபல சஞ்சிகைகட்குத் தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்த னர். "தமிழ்நாட்டுப் புலவர்கள்", "புறநானூறு", "புறப் பொருள் வெண்பா மாலைப் பகுதிகள்", "தமிழ்ப் புனிதர் வரலாறு" ஆகிய இவைகள் இக்கட்டுரைகளில் குறிப்பிடத் தகுந்தவை.

1851ஆ-ம் ஆண்டு போப்பையர் தமிழ் நாட்டிற்குத் திரும் பினர். சாயர்புரத்திலிருந்து மாற்றப் பெற்றுத் தஞ்சாவூ ருக்கு வந்தனர். சாயர்புரம் அவருடைய உழைப்பால் வேத விளக்க சங்கத்தாரின் கல்வி ஸ்தாபனங்களின் கேந்திர ஸ்தானமாக விளங்கிற்று. தஞ்சையிலும் ஐயரது கல்விப் பணி தழைத்தது. அங்குப் புனித பீட்டர் கல்லூரியை ஏற்படுத்தினர். அக்கல்லூரி 1906-ஆம் ஆண்டுவரை பி. ஏ.

பட்டத்திற்கு ஏற்றவரையில் கல்வி அளித்தது; தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தொடர்ந்து சேவை செய்கின்றது.

போப்பையர் கல்விப் பணியால் சாயர்புரமும் தஞ்சையும் பெற்ற பேற்றினை உதகமண்டலமும் பங்களூரும் அடுத் தடுத்துப் பெற்றன. ஐயர் இவ்விரு ஊர்களிலுமிருந்த கல்விச் சாலைகளில் தலைமை ஆசிரியராக விருந்து அருந் தொண்டு ஆற்றி வந்தனர்.

1880-ஆம் ஆண்டு போப் ஐயர் இங்கிலாந்திற்குத் திரும்பு கின்ற காலத்து 40-ஆண்டுகள் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் செய்த நிறைந்த சேவையோடு திரும்பினர். தமிழ் நாட்டை விட்டும் ஐயர்தம் தமிழ்ச் சேவை அவரை விட வில்லை. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் ஐயருடைய நுண்மாண் நுழைபுலத்தை மெச்சியும், கல்விச் சேவையைப் பாராட்டியும் எம். ஏ. பட்டம் அளித்தது. அங்கே அவர் இந்தியன் சிவில் ஸெர்விஸ் என்ற இலாகாவில் தென் இந்தியாவில் அரசியல் உத்யோகங்களுக்கு வரும் ஆங்கிலேயர்களுக்குத் தமிழும் தெலுங்கும் கற்றுக்கொடுத் தார்; இதன்றித் தமிழில் பாடப் புத்தகங்கள் எழுதினர்.

போப் ஐயர் தொகுத்த "தமிழ்ச்செய்யுட் கலம்பகம்" உயர்ந்த காப்பியங்கள் நீதி நூற்கள் ஆகியவற்றிலிருந்து திரட்டப்பெற்ற 612 செய்யுட்களைக் கொண்டது. நட்பு, சின மின்மை, பொறுமை என்ற இத்தகு தலைப்புகளிலே அறநெறிக் கருத்துகள் அடங்கிய இனிய செய்யுட்களைத் தன்னகத்தே யுடையது. ஒவ்வொரு செய்யுட்கும் ஆங்கில சூசகம் உண்டு. சந்தி பிரித்து விளக்கங்கள் கூறியிருக்கின்றனர்.

போப்பையர் செய்தருளிய நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையிலிருந்து செய்த நிலைபேறுற்ற பெரும்பணியாகும். அதன் முன்னுரையில் ஐயர் தொன்மை வாய்ந்த தமிழ்ப் பெரு நூற்களோடு பரிச் சியம் பெறுதல் மட்டும் அவர் கருத்தென்று தமிழர்களுட் சிலர் ஆங்கிலத்திலே விளங்கா நிற்றற்கான பெருமுயற்சியும் பேரூக்கமும் கொண்டவர்களாக இருப்பவும், தமது வியத்தகு மொழியில் அலட்சியம் கொண்டவராயிருப்பது குறித்து

வருந்தி அவர் தமக்கும் இத்தகைய மொழி பெயர்ப்பு நூற்கள் உதவுவன என்ற நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றார்.

தமிழில் வழங்குகின்ற தொன்மை வாய்ந்த இலக்கணங் களும் அதிலுள்ள வனப்பமைந்த யாப்பு அமைப்பும் நம் மொழியின் பன்னெடுங்காலப் பண்பாட்டினைக் குறிப்பன என்பது போப்பையர் கருத்து. நூலின் நடைக்கும், நூல் நுவல் பொருளுக்கும் ஏற்றபடியெல்லாம் இயைகின்றதான உள்ளது சிறத்தல் என்ற சாத்திரமுறையில் செல்லும், வளர்ச்சியைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்து, இடைச்செருக லாக ஏற்பட்ட போலி நூற்கள் பெரும்புலவர்களுடைய பெயரோடு பொருத்தப் பெறுவதை வன்மையுடன் கண்டிக் கிறார்.

"தமிழ் எண்ணங்களை ஆங்கில மாணவர்களுக்கு அறி முகப்படுத்தி வைப்பதே தமது மொழிபெயர்ப்பின் நோக்கம்" என்று முன்னுரையின் முடிவுரையாகக் கூறுமிடத்து தமிழ் மொழியறிவின் நோக்கத்தை அழகுறத் தெரிவிக்கின்றார். அவர் சொல்கிறார்: "இனிய தமிழினை அறிந்து அன்பு செலுத்துவோர் அதனைப் பேணுவோரை அறியவும், அவ ரிடத்து அன்பு செலுத்தவும் கூடும். அதனால் அந்நூலால் அறியப் பெறுதலும் அன்பு செலுத்தப் பெறுதலும் கைகூடும்.

சிவஞான போதம் போன்ற சாத்திர நூற்களையும் கூர்ந்து படித்துத் தெரிந்து அதன் காரணமாய்ச் சிவஞான போதத்தையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தாம் கொண்டி ருந்த கருத்தை வெளியிடுங்கால் "சைவ சித்தாந்தத் தத்துவம் திராவிட அறிவின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பக்குவப்பொருள்" என்று பாராட்டிப் பேசுவர்.

தமிழ் இலக்கணத்திற்குப் போப்பையர் செய்த சேவை மகத்தானதாகும். நூற்பாக்களில், சூத்திரங்களில் அமைந்த இலக்கண நூல்கள் மாணவர் பயிற்சிக்கு எளிதாக அமை யாதன. முதன் முதல் உரைநடையில் பள்ளிப் பாலரும் படித்தறியும் பான்மையில் இலக்கணம் எழுதிய பெருமை போப்பையர் அவர்களையே சாரும்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் புதிய ஆராய்ச்சியோடு கூடிய நன்னூல், குறள், நாலடியார், திருவாசக வெளியீடு களால் தமிழுக்குத் தன்னாலியன்ற சேவை செய்துள்ளதென் பதையும் உலக இலக்கிய வட்டாரத்தில் மேற்குறித்த நூற் களைப் புகவிடும் நவமான பணியை நல்ல முறையில் செய் துள்ள தென்பதையும் குறிப்பிடுகின்றார். தமிழ் சிலரிடம் அகப்பட்டு அவர்களால் மட்டும் பூசிக்கப் படுதல் போதாது. நாட்டின் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகிய ஒவ்வொருவரின் இதயத்தில் எண்ணத்தில் நுழைந்துளதா? நுழையக்கூடுமா? இதுதான் போப்பையருடைய பொருத்த மான கேள்வி.

ஆங்கில உலகிற்குத் தமிழ்ப்பெரும் இலக்கியங்களை அறி முகப் படுத்தும் வரிசையில் திருக்குறளை மொழி பெயர்த்த திறன் பாராட்டுக்கு உரியதொன்று. சுவாமி வீரமாமுனிவர் அறத்துப்பாலையும் பொருட்பாலையுமே இலத்தீனில் மொழி பெயர்த்துள்ளார். முனிவர் காமத்துப்பாலை மொழி பெயர்க்க வில்லை. போப் ஐயர் 1330 அருங்குறளையும் மொழி பெயர்த் திருக்கிறார். உரிய இடங்களில் தமக்கு முன்னர் முறையே இலத்தீனிலும் ஆங்கிலத்திலும் திருக்குறளை மொழிபெயர்த் துள்ள வீரமா முனிவர், எல்லிஸ் துரையவர்கள் ஆகிய இன் னாரது மொழி பெயர்ப்புக்களை மேற்கோளாகக் காட்டுகிறார். பல இடங்களில் தம்மிருவருடைய மொழி பெயர்ப்புக்களைக் காட்டிலும் வீரமா முனிவரது மொழிபெயர்ப்பு சிறந்து விளங்குவதை உதார சிந்தையோடு எடுத்துரைக்கின்றார்.

திருக்குறளைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் ஐயர் கூறும் பாராட்டுரையை நாம் ஆழ்ந்து படித்தல் வேண்டும். அவர் கூறுகின்றார்: தாழ்மை, அன்பு, மன்னிப்பு இவை மூன்றும் திறக்குறளில் ஆசிரியரால் வலியுறுத்தி உரைக்கப் படுகின்றன. சிறந்த நீதியைக் கொண்டுள்ள மக்கள் வாழும் நாட்டில்தான் திருக்குறள் போன்ற ஒழுக்க நூல்கள் எழுதப் பெறும். தமிழ் பேசும் மக்கள் ஒழுக்கம் உடையவர்கள் என்பதே என் கூற்று. தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுவோர் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

40 ஆண்டுகள் தமிழ் நாட்டில் வளர்ந்து தமிழ்ச் சேவை செய்த போப்பையர் நம் நாட்டை விட்டு இங்கிலாந்து சென்ற காலத்தும் இடையருது செய்து வந்தது அப்பணியே. அவர் இறப்பதற்குமுன் ஓர் அன்பர் "தங்கள் கடைசி விருப்பம் எது?" என்று கேட்டாராம். அதற்கு ஐயர் "என் கல்லறையின் மீது ஒரு தமிழ் மாணவன் என்று எழுதுங்கள்" என்ருராம்! ஐயரவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தமிழ் ஆர்வத்தைச் சொற்களால் அளவிட்டுச் சொல்வது இயலுவதன்று.

விளுக்கள்

1. திரிகடுகம், நான்மணிக்கடிகை, நல்வழி, நீதிநெறிவிளக்கம்—குறிப்பு வரைக.

2. போப்பையர் 1849-ல் இங்கிலாந்திற்குச் சென்றபோது செய்த தமிழ்ப்பணி யாது?

3. தமிழிலக்கணத்திற்குப் போப்பையர் செய்த சேவையினைக் குறிப்பிடுக.

4. திருக்குறளைப் பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும், வீரமாமுனிவர் எங்ஙனம் பாராட்டுகின்ருர்?

கட்டுரைப் பயிற்சி

தமிழ்த்தொண்டு செய்த வேற்றுமொழியாளர் ஒருவரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. 'இருவேறு......' என்ற வள்ளுவர் வாக்கால் பொருளும் அறிவும் பொருந்தி அமைதலின் அருமையை உணர்கின்ருேம்.—வேறு மேற்கோள் ஒன்றைப் பெய்து இந்த மாதிரியில் ஒரு கலவை வாக்கியம் எழுதுக.

2. தமது தந்தை—தம் தந்தை: இவற்றுள் எது சரி, எது தப்பு? எக்காரணத்தால்?

6. தமிழர் கண்ட அரசு

(வித்துவான். வெ. வா. நடராசன்)

ஒரு நாட்டின் அரசியல் மக்களின் வாழ்க்கையை வளம் படுத்துவதாக அமைய வேண்டும். அங்ஙனம் அமையப் பெருத நாடு சீர்கேடுறும். நம் தமிழகத்தில் அக்காலத்தில் பேரரசர்களும் சிற்றரசர்களும் அரசியல் நடாத்தியதைப் பழந் தமிழ் நூல்களின் மூலம் அறியலாம்.

குடிமக்களின் நன்மையில் கண்ணும் கருத்தும் கொண்ட நீதிவழுவாத அரசியலே "செங்கோல் ஆட்சி எனப்பட்டது. முறைசெய்து காப்பாற்றும் மன்னவனை மக்கள் தெய்வமாகக் கொண்டனர். அஞ்சாமை ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய இந்நான்கிலும் எஞ்சாதிருத்தலே வேந்தர்க்கு இயல்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

வேந்தன் ஒருவன் மட்டும் நல்லியல்பும் நல்லொழுக்கமும் பெற்றிருத்தல் அமையாது. அவனைச் சூழ்ந்துள்ளவரும் அறிவும் ஆற்றலும் பெற்றவராயிருத்தல் வேண்டும். விசும் பிலிருந்து விழும் மழைநீர் எந்நிலத்தில் சேருகின்றதோ அந் நிலத்தின் பண்பைப் பெற்றுக் கொள்ளும். அதைப் போல மன்னவனது மனப்பண்பும் சார்ந்துள்ளவரது இயல்பால் மாறுதல் அடைந்துவிடும். ஆகையினுல் நல்லோரைத் துணைக்கொண்டு நன்னெறியில் அரசியலை நடத்தவேண்டும் இதுவே தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கை. பழந்தமிழ் அரசர்களை ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும் சூழ்ந்திருந்தனவென்று பெருங்கதை சிலப்பதி காரம் முதலிய நூல்களால் அறிகிறோம். அமைச்சர், காலக் கணிதர், சேனுபதியர், தூதுவர், ஒற்றர் ஆகியோரின் கூட்டம் ஐம்பெருங்குழுவாகும். கரணத்தியலர், கருமகாரர் கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர் யானைவீரர், குதிரைவீரர் ஆகியோரின் கூட்டம் எண்பேராய மாகும்.

அரசன் செய்வது தவருக இருக்குங்கால் தயங்காம

எடுத்துரைக்கும் வன்மையும், நுண்ணறிவோடு நூலறிவும், சொல்வன்மையும் அமைந்த அமைச்சர் பலர் இருந்தனர்.

"தம்முயிர்க்குறுதி எண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்"

என்று கம்பர் அமைச்சரைப்பற்றிக் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

உதயணனின் மந்திரியாகிய யூகி அமைச்சர்க்குரிய ஆற்றல் மிக்கவனென்று பெருங்கதை சொல்லுகிறது. தக்க இடங்களில் உதவி அரசியலை நிலைபெறச் செய்தான். இவ்வண்ணம் அமைச்சர் பலரைப் பழந்தமிழக அரசியல் பெற்றிருந்தது. அரசன் போர் தொடங்குமுன் காலத்தை அமைத்துக் கொடுக்க 'காலக்கணிதர்' பயன்பட்டனர். பழங் காலத்தே நல்லவேளை பார்த்துப் போர்முனைக்குச் செல்லும் பழக்கம் இருந்தது. வாளும், குடையும், முரசும் நன்முகுத்தத்தில் செலுத்திப் பின்னர் படைத்திரட்டிச் சென்றனர். செங்குட்டுவன் போர்தொடங்குமுன் காலக்கணிதரைக் கலந்து பின் கிளம்பினுன்.

சேனைத் தலைவர்களைக் கொண்டு இராணுவப் பயிற்சி ஒழுங்காக அமைக்கப்பட்டது. கடமை மிகுந்த தானைத்தலைவர்க்குச் சிறப்பான பெயர்களைச் சேர சோழ பாண்டியர் அளித்திருக்கின்றனர்.

அறிவு, ஆராய்ச்சி, குடிப்பிறப்பு இன்சொல் ஆகிய நான்கு பண்பும் மிகுந்த தூதுவர் பலர் இருந்தனர். காலமும் இடமும் அறிந்தும், மொழியுங் காலத்துத் தொகுத்தும் வகுத்தும் இயம்பினர். இம்முறையில் ஒளவைப் பிராட்டியார் அதிகமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றதே சான்றாகும். அதிகமானைப் பழிப்பது போலப் புகழ்ந்தும், தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும் உரைத்தார். அறிவில் சிறந்த ஒளவை தூது மொழிந்தாள் என்பது பெண் ணறிவைப் பெருமைப் படுத்துவதாகும்.

அரசியலுக்கு ஒற்றரும் அவசியமானவர். வினை செய்பவர், சுற்றத்தார், பகைவர் ஆகியவரையும் ஆராய்ந்தறியும் பான்மை ஒற்றரைச்சாரும். ஒற்றன் ஒருவனை

நம்பாமல் அப்பொருளேயே ஆராய மற்றும் பலரைக் கொண்டு அரசன் ஆராய்ந்தான். ஒற்றரை மற்ருெரு ஒற்றரால் உற்று நோக்குவதை

"ஒற்றர் தங்களே ஒற்றரின் ஆய்தலும்"

என்ற அடியால் திருத்தக்க தேவர் விளக்குகிருர். இவர்கள் மாறுவேடம் பூண்டு ஒற்றி அறிந்து வந்து அரசனுக்குரைத்து அரசியலேச் செம்மைப்படுத்தினர்.

ஓர் அரசன், ஒற்றரைக் கண்ணுக உலகை ஆள்வதால் அவன், உறங்குவாளுயினும் அவனுடைய ஒளி வையத்தைக் காப்பாற்றும் என்றும் சொல்லப்படுகின்றது. முறையால் காக்கின்ற வேந்தனேத் தெய்வத்தோடு ஒப்ப வைத்துக் கூறுவர்.

போர் புரிதல் அரசற்குரிய முறையாக நூல்கள் கூறு கின்றன. நம் முன்னேர் அறப்போர் என்றும் மறப்போர் என்றும் போரை இருவகையாகப் பிரித்திருந்தனர். அறப் போரில் பெற்ற பொருளே ஆட்சியைச் செம்மைப்படுத்தும் என்றும், மறப்போரில் பெற்ற பொருள் பசுமட் கலத்தில் நிறைத்து வைத்த நீர் போலாகும் என்றும் வள்ளுவர் சொல்லுகிருர்.

அறப்போரில் இறந்த வீரர்க்கு அரசன் சிறப்பு செய்திருக் கின்ருன். நாட்டின் நன்மைக்குப் பாடுபட்டிறந்த வீரருக்குக் கல்லெடுத்து நீர்ப்படுத்திக் குறித்த இடத்தில் நட்டுப் பீடும் பெயரும் எழுதிப் பெருமைப்படுத்துவது பண்டைய வழக்க மாகும். இந்நிலே தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலுள்ளும் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, பண்டைத்தமிழர் கண்ட அரசு யாவராலும் போற்றத்தக்கதாயும் பெருமைபடக்கூடியதாகவும் அமைந் திருந்தது என்றறியலாம்.

வினுக்கள்

1. அரசனுக்கு அமைய வேண்டிய குணங்கள் எவை?

2. ஐம்பெருங்குழு, எண்பேராயம்—இவற்றைச் சார்ந்தவர் முறையே யார் யார்?

3. அமைச்சர் அரசருக்குத் துணையாயிருந்தமைக்கு இரண்டு உதாரணங் காட்டுக.

4. காலக்கணிதரின் தொழில் யாது?

கட்டுரைப் பயிற்சி

ஒற்றர்களும் அரசியலும்—என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. எதிர்மொழி தருக: அஞ்சாமை, ஈகை, ஊக்கம்.

2. விசும்பிலிருந்து விழும் மழைநீர் எந்நிலத்தில் சேருகின்றதோ அந்நிலத்தின் பண்பைப் பெற்றுக் கொள்ளும்—என்ன வாக்கியம் இது? இதனைத் தனி வாக்கியம் ஆக்குக.

3. உள்ளக்கிடக்கை—இப்பொருளில் வரும் வேறு சொற்கள் யாவை?

தமிழ்ப் பூந்துணர்

நான்காம் படிவம்—பொதுத் தமிழ்

தொகுப்பாளர்கள் :
வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்
தலைமைத் தமிழாசிரியர்,
தியாகராயர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
வித்துவான் க. சாமிநாதன்
தமிழாசிரியர், பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, சென்னை.

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

 [விலை ரூபாய் 1

முதற் பதிப்பு—டிசம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2101)

முகவுரை

தமிழ்ப் பூந்துணர் என்னும் இந்தப் புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக் கென்று 2-7-1952-இல் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப் பெற்றவை. இந்த வரிசையில் இது நான்காம் பாரம்—பொதுத் தமிழுக்குரியது. இதனுள் இலக்கியத் துக்கும் பொது அறிவுக்கும் ஏற்ற இடம் தக்காங்கு வழங்கப்பெற்றுள்ளது. செய்யுளடிகளும் உரைநடைப் பகுதியின் பக்கங்களும் துரைத்தனத்தார் வரையறை யிட்டுள்ள அளவில் அமைந்துள்ளன.

இதில் சேர்க்கப்பெற்றுள்ள செய்யுட்பகுதி மாண வருக்கு உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தை யும் ஊட்டக்கூடியதென்று எண்ணுகிறோம். இப்பகுதியிற் கண்ட குறிப்புரை முதலியன மாணவரின் இலக்கிய அறிவை வளர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. கட்டுரைகள் யாவும் அன்னோர்க்குத் தமிழில் நல்ல பழக்கம் ஏற்படும் வகையில் தொகுக்கப் பெற்றுள்ளன.

இதனுள் கண்ட கட்டுரைகளை வெளியிட எங்களுக்கு அனுமதியளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பதிப்பாளருக் கும் எங்களுடைய மனமார்ந்த வணக்கத்தை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

தொகுப்பாளர்கள்

பொருள் அடக்கம்

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

தமிழ்ப் பூந்துணர்

நான்காம் படிவம்—பொதுத் தமிழ்

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி லுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான்காற்றி லுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. (1)

—அப்பர்

திருமால்

இரும்பனன் றுண்ட நீர்போல்
எம்பெரு மானுக் கென்றன்
அரும்பெற லன்பு புக்கிட்
டடிமைபூண் டுய்ந்து போனேன்
வரும்புயல் வண்ண னாரை
மருவியென் மனத்து வைத்துக்
கரும்பினின் சாறு போலப்
பருகினேற் கினிய வாறே. (2

—திருமங்கையாழ்வா

பொது

கதிரவன் கிரணக் கையாற் கடவுளைத்
தொழுவான் புட்கள்
கதியொடும் ஆடிப் பாடித் துதிசெயத்
தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும் பூதந்தந்
தொழில்செய் தேத்தும்
அதிர்கட லொலியால் வாழ்த்தும்
அகமேநீ வாழ்த்தா தென்னே. (3)

—வேதநாயகம் பிள்ளை

குறிப்புரை

1. போது - மலர். பொருப்பு - மலை. கனம் - மேகம். சிவபெருமான் மனமொழி மெய்களிலும் பஞ்ச பூதங்களிலும் பிறவிடங்களிலும் உள்ளவன் என்றபடி. இது தேவாரம் என்ற நூலில் உள்ளது.

2. இந்தச் செய்யுள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் உள்ளது. அனன்று - சூட்டினால் கனிந்து.

3. வேதநாயகம் பிள்ளை யென்பவர் நூறு ஆண்டுகளுக்குமுன் மாயூரத்தில் சிறிய நியாயாதிபதியாக வேலைபார்த்து வந்தவர். கிறிஸ்துவர் ஆயினும் சமரசக் கொள்கையினர். இவர் பெண்மதிமாலை, நீதிநூல், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி முதலிய நூல்களை எழுதியவர். சுதி - சுருதி. தருக்கள் - மரங்கள். பொதியலர் - கட்டமைந்த மலர். பூதம் - நிலம் நீர் முதலிய பஞ்சபூதங்கள்.

II. அறநெறி

1. நாலடியார்

நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகிய நூல் நாலடியார் எனப்படும்; ஆர் என்பது சிறப்புப் பொருள்தரும் விகுதி. இந்நூல் நானூறு வெண்பாக்களையுடையது; அதனால் நாலடி நானூறு என்றும் வழங்கும். இதற்கு வேளாண் வேதம் என்ற வேறு பெயரும் உண்டு. இந்த நூலின் ஒவ்வொரு கவியையும் ஒவ்வொரு சமண முனிவர் எழுதினர் என்பர். பிற்காலத்தில் பதுமனர் என்பவர் இந்நூலை நாற்பது அதிகாரங்களாகப் பிரித்து முறைப்படுத்தி இதற்கு ஓர் உரையும் எழுதினர். நாலடியார் திருக்குறளோடு சேர்த்து எண்ணப்படும் சிறப்புடையது. ‘நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’, ‘பழகு தமிழருமை நாலிரண்டிற் காணலாம்’ என்பன ஆன்றோர் வாக்கு. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார் ஒன்று.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. (1)
இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேன் கல்விபோல்
மம்ம ரறுக்கும் மருந்து. (2)
களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். (3)
வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின் வல்லார்
எச்ச மெனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. (4)
கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. (5)

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செல்வன்நேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந்தார். (6)
இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமா பிழைப் பெய்த கோல். (7)
அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். (8)
அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். (9)
நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம். (10)

குறிப்புரை

1. குஞ்சி - ஆண் மக்களின் தலைமயிர். கொடுந்தானை - வளைவாக உடுத்திக்கொள்ளும் ஆடை. கோடு - கறை. நடுவு நிலைமை - பட்சபாத மில்லாத செம்மை நெறி. நடுவுநிலைமை என்ற குணத்தை அளிப்பதனால் கல்வியே ஒருவற்கு அழகாகும்.

2. ஆல் - அசை. தாம் உளரா - தாம் இறந்தும் இவ்வுலகில் உள்ள வராக இருப்பதனால். எம்மை உலகத்தும் - எந்த உலகத்திலும். மம்மர் - மயக்கம். அறுக்கும் - தீர்க்கும். கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்தை எம்மை உலகத்தும் யாம் காணேன்.

3. களர்நிலம் - ஒன்றும் விளையாத உபயோகமற்ற நிலம்; உப்பு மண் நிலம் இது. விழுமிதா - மேலானதாக. கடைநிலம் - தலைநிலம் என்பன, கீழ்ச்சாதி, மேற்சாதிகளை உணர்த்தும். வைக்க படும் - வைப் பதனால் அவரது சாதியின் இழிவு அழியும். இக்கவி எடுத்துக்காட்டுவமை அணி.

4. வைப்புழி - சேர்த்துவைக்கும் இடத்தில் ; 'சேர்த்துவைக்குமிடம் மனம். கோட்படா - பிறரால் வஞ்சித்துக்கொள்ளப் படமாட்டா. வாய்த்து - கிடைக்கப்பெற்று. கேடில்லை - அழிவதில்லை. செறின் - கோபித்தால். எச்சமென - தனக்குப்பின் எஞ்சியிருப்பவை என. விச்சை - வித்தைகள்: பலவிதக் கல்விகள். பிறஅல்ல. கோட்படுவனவும், கெடுவனவும், வெளவப் படுவனவும், செல்வப் பொருள்களே என்பது குறிப்பு.

5. புது + ஓடு = புத்தோடு—புதிய பானையின் ஓடு. பாதிரிப் பூவைப்போட்டு வைப்பதனுல் பானைக்கு மணமுண்டாகி அந்த மணம் தண்ணீருக்கும் சேரும். பானை கல்லாதவருக்கும் பாதிரிப்பூ கற்ருருக்கும் உவமை. தான் பயந்தாங்கு - மணத்தை அந்த ஓடு கொடுத்தாற்போல. இது உவமையணி.

6. அம்கண் - அழகிய இடத்தையுடைய. மா - பெரிய. ஞாலம் - பூமி. செல்லாமை - வறுமை. செவ்வன் - செம்மையாக. நேர்நிற்பினும் - எதிர்த்து நின்ருலும். ஒப்புரவு - பலருக்கும் உபகாரியாக இருக்கும் தன்மை. ஒல்கார் - தளரமாட்டார்.

7. இசையும் எனினும் - முடியும் என்ருலும். வசைதீர எண்ணுத லாவது, பிறர் பழிக்காதபடி உயர்ந்த செயல்களையே நினைப்பது. நரிமா- நரி என்ற விலங்கு. அரிமா - சிங்கம். பிழைப்பு எய்தகோல் - பிழைத்துப் போம்படி எய்த அம்பு. ' பிழைப்ப எய்தகோல் விசையின் உளம் கிழித்த அம்பினில் தீதோ ?' என்று கூட்டுக.

8. மிகைமக்கள் - மேன்மக்கள். கைஅறியா - ஒழுக்கம் இன்ன தென்று உணராத. கீழ்மைக் குணமுடையவர்களை மாக்கள் என்ருர். இழிப்பு - தூஷணை. எடுத்தெடுத்து - புகழ்ச்சியுரை. வையார் - ஒரு பொருளாக எண்ணுர்.

9. கூற்றம் - எமன். எமனை - அஞ்சுவதாவது, 'என்ருயினும் எமன் வந்துவிடுவானே அவன் வருமுன் அறம்செய்து உய்யவேண்டுமே நாம் சும்மா இருப்பது சரியா !'' என்று அஞ்சுதல். போற்றுமின் - செய் யாது ஒழியுங்கள். எஞ்ஞான்றும் - எந்நாளும் ; இச்சொல்லை அறிமின் அஞ்சுமின் முதலியவற்ருேடும் கூட்டுக.

10. ஒண்பொருள் - பிரகாசமான பொருள் என்றது செல்வம். ஆ வினை - விடா முயற்சி. குலத்தின் உயர்வு பொருளாலும், தவத்தாலும் கல்வியாலும் முயற்சியினுலும் ஆகும்.

2. நான்மணிக் கடிகை

நான்மணிக் கடிகை என்பதற்கு நான்கு இரத்தினத் துண்டுகள் என்பது பொருள். ஒவ்வொரு செய்யுளிலும் இரத்தினம் போல் அரிய நீதிகள் நான்கு கூறப்படும் நூல் நான்மணிக்கடிகை எனப்பட்டது. இதன் ஆசிரியர் விளம்பிநாகனுர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

எள்ளற்க என்றும் எளியரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. (1)
இன்னுமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னெடு
செல்வது வேண்டின் அறம்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (2)
மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. (3)
திருவிற் றிறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னுத தில்லை இலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். (4)
இரும்பின் இரும்பிடை போழ்ப பெரும்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப—தேரின்
அரிய அரியவற்ருற் கொள்வ பெரிய
பெரியரான் எய்தப் படும். (5)
திரியழற் காணிற் ரெழுப விறகின்
எரியழற் காணின் இகழ்ப—ஒரு குடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றுன்
இளமைபா ராட்டு முலகு. (6)
சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்
தாவாத இல்லை வலிகளும்—மூவா
இளமை இசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்ருரு மில். (7)

நல்லார்க்குத் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்கும் தம்மூரென் றூரில்லை—அல்லாக்
கடைகட்கும் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரும் ஊர். (8)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலாற்
றள்ளாமை வேண்டும் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டும் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. (9)

எல்லா விடத்தும் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடல்தீது—நல்லார்
நலம்தீது நாணற்று நிற்பிற் குலம்தீது
கொள்கை அழிந்தக் கடை. (10)

குறிப்புரை

1. எள்ளற்க - வையாதொழிக. கொள்ளார்கை - ஒன்றை ஏற்றுக் கொள்ளத் தகாதவர்களுடைய கைகள். சிற்றில் பிறந்தோர் - இழிந்த குடிப் பிறப்புடையவர். கூறல்ல வற்றை - கூறத் தகாதவைகளை.

2. இன்னுமை - துன்பம். இரவு எழுக - யாசிக்கத் தொடங்குங்கள். மன்னுதல் - தாம் இறந்த பின்னும் நிலை பெற்றிருத்தல். இசை - புகழ். வெகுளி - சினம். விடல் - நீக்குக.

3. வாணுதல் - மனைவி ; அன்மொழித் தொகை. கற்ற+அறிவு= கற்றறிவு ; தொகுத்தல் விகாரம்.

4. திருவில் - செல்வத்தைப் போல். இன்மையின் - வறுமையைப் போல். இலம் - ஒன்றும் இல்லாதவர்கள் யாம். வன்மையின் - கொடுமை யைப் போல.

5. இரும்பின் - இரும்பினுல் ; அரம் முதலிய கருவிகளுக்கு ஆகு பெயர். போழ்வ - பிளப்பார்கள்.

6. திரியழல் - விளக்கு.

7. தாவாத - கெடாதவை. வலிகள் - பலவித வலிமைகள் ; அவை யௌவனம், கல்வி, செல்வம், அதிகாரம் என்பவற்ருல் ஆனவை. மூவா - மூப்பினை அடையாத. இசைந்தாரும் - பொருந்தினவர்களும்.

8. கைத்து - செல்வம்.

9. கடிய - வெறுக்கத்தக்கவை. பலவகை அச்சங்கள். தள்ளாமை புறக்கணித்து நீக்கிவிடாமை. நள்ளாமை - நட்புக் கொள்ளாமை.

10. மக்களை - புதல்வரை. நல்லார் - பெண்கள். நாணம் என்பது மாதர்க்கு அணிகலம் ஆதல் பற்றி இங்ஙனம் கூறினர்.

3. திருக்குறள்

குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் குறள் எனப் பெற்றது. திரு என்பது நூலுக்கு அடை. திருக்குறள் 1330 குறட்பாக்களையும் அதிகாரத்துக்கு 10 பாக்கள் வீதம் 133 அதிகாரங்களையும் கொண்டது. அறத்துப் பால், பொருட் பால், காமத்துப்பால் என்ற மூவகையாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால் இது முப்பால் என்றும் வழங்கும். இதற்கு வேறு பல பெயர்களும் உண்டு. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இதுவும் ஒன்று. குறட்பாக்களையோ அவற்றின் கருத்தையோ தம் நூல்களில் எடுத்தாளாத புலவர் இலர். பலர் இந் நூலுக்கு உரை எழுதியிருக்கிறார்கள். உலகத்தின் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார், தேவர் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன. இவருடைய சாதி, மதம், தொழில் முதலிய விவரங்கள் நன்கு தெரியவில்லை. கர்ண பரம்பரைச் செய்திகள் பலவாறாக உள்ளன.

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாம் தலை. (1)

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை. (2)

வலி அறிதல்

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை. (3)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (4)

ஊக்க முடைமை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (5)

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (6)

ஆள்வினை யுடைமை

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (7)

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி. (8)

இடுக்கண் அழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத் தூர்வ தஃதொப்ப தில். (9)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுத லிலன். (10)

குறிப்புரை

1. தமரா - சுற்றமாக. தலை - மேலானது.

2. மதலையாம் - பற்றுக் கோடாகிய சார்பு - உதவி.

3. ஆகு ஆறு - பணம் வரும் வழி. இட்டிது - சிறியது. போகு ஆறு - செலவாகும் வழி. அகலாக்கடை - விரிவடையாத சமயம்.

4. தோன்று - இருந்தமைக்கேற்ற அடையாளமும் தோன்றுமல்.

5. ஆக்கம் - செல்வம். அதர் வினய் - வழியைக் கேட்டுக்கொண்டு. அசைவிலா - தளர்ச்சியற்ற. உழை : ஏழாம் வேற்றுமை உருபு.

6. பரியது - பருத்த உருவமுடையது. கூர்ங்கோட்டது - கூரிய தந்தங்களை யுடையது. வெரூஉம் - அஞ்சும்; உயிரளபெடை. ஊக்க மில்லாதவன் எத்தனை வசதிகளைப் பெற்றிருப்பினும் அழிவான் என்பது கருத்து. இது பிறிது மொழிதல் அணி.

7. ஆள்வினை - இடைவிடாத முயற்சி. விழையான் - விரும்பாதவனாய். வினை - செய்யும் தொழிலை. கேளிர் - சுற்றத்தார்.

8. பொறியின்மை - பயனைத் தருவதாகிய விதியில்லாமை. அறிவு அறிந்து - அறிய வேண்டுவனவற்றை அறிந்து. ஆள்வினை யின்மை - வினை செய்யாமை.

9. இடுக்கண் அழியாமை - தெய்வத்தாலும், வறுமையாலும், மெய் வருத்தத்தாலும் தனக்குத் துன்பம் வந்தபோது அதற்கு மனம் கலங்காமை. இடுக்கண் - துன்பம். நகுக - மகிழ்க. அடுத்து ஊர்வது அந்தத் துன்பத்தை மேலும் மேலும் தாக்கவல்லது. அஃது ஒப்பது இல் அந்த மகிழ்ச்சி போல்வது பிறிதொன்றில்லை.

10. இடும்பை - துன்பம்.

III. வரலாறு

1. மணிமேகலை

உலக அறவி புக்க காதை

மணிமேகலை என்பது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மற்றவை சிலப்பதிகாரம், சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. இது மணிமேகலை என்பவளின் வரலாற்றை விவரிப்பது. கோவலனுக்கு மாதவியினிடமாகப் பிறந்தவள் மணிமேகலை. அவள் இளமையில் துறந்து புத்த மதத் துறவியானாள்.

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். இவர் வணிக மரபினர்; புத்த சமயத்தினர்; சேரன் செங்குட்டுவன் காலமாகிய கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இளங்கோவடிகள் இவர் காலத்தவர்.

உலக அறவி என்பது காவிரிப்பூம்பட்டினத்தில் அக்காலத்தில் இருந்த ஓர் அறச்சாலை. மணிமேகலை உலக அறவியில் புகுந்ததும் அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் இந்தப் பகுதியில் கூறப்படும். காதை - கதை அமைந்த பாட்டு.

காய சண்டிகை மணிமேகலையின்
பாத்திர மகிமை அறிந்து அவளை வேண்டுதல்

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்றொலை வில்லாத் தகைமை நோக்கி
யானைத் தீநோ யகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனும் காரிகை வணங்கி,
“ நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறு புக்காங்
கிட்ட தாற்றுக் கட்டழற் கடும்பசிப்
பட்டே னென்றன் பழவினைப் பயத்தால்

அன்னே கேணீ யாருயிர் மருத்துவி
துன்னிய வென்ஞேய் துடைப்பாய் " என்றலும்

காய சண்டிகை பசி நீங்கித் தன் வரலாற்றைக் கூறுதல்

எடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயர நீங்கித் தொழுதன ளுரைக்கும்
" மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநக ருள்ளேன் ;
விஞ்சையன் றன்ஞெடென் வெவ்வினை யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன் ;
கடுவர லருவிக் கடும்புனல் கொழித்த
இடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தோன் ;
புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மரவுரி யுடையவன் விருச்சிக னென்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்குலை யனையதோர்
இருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேஞறு பரப்பிற்
பூக்கமழ் பொய்கை யாடச் சென்ருேன் ;
தீவினை யுறுத்தலிற் செருக்கொடு சென்றேன் ;
காலா லந்தக் கருங்கனிச் சிதைத்தேன் ;
உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டன னென்னைக் கருங்கனிச் சிதைவுடன்
' சீர்திகழ் நாவலிற் றிப்பிய மான
தீரா ருண்டி லொருகனி தருவ
தக்கனி யுண்டோ ராறீ ராண்டு
மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்,
பன்னீ ராண்டி லொருநா ளல்ல
துண்ணு நோன்பினேன் உண்கனிச் சிதைத்தாய்,
அந்தரம் செல்லும் மந்தரம் இழந்து
முந்நா ளாண்டில் முதிர்கனி நானீங்
குண்ணும் நாளுன் ஞறுபசி களை'கென

அந்நா ளாங்கவ னிட்ட சாபம்
இந்நாள் போலும் இளங்கொடி, கெடுத்தனே.

அவள் மணிமேகலையை உலக அறவிக்குச் செல்லும்படி கூறுதல்

பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி யொன்றுண் டதனிடை
யூரு ராங்க ணுறுபசி யுழந்தோர்,
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்ருேர்,
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால் ;
வடுவாழ் கூந்தல், அதன்பாற் போ''கென்

மணிமேகலே உலக அறவிக்குச் சென்று
யாவர்க்கும் உணவு வழங்குதல்

ருங்கவள் போகிய பின்ன ராயிழை
ஓங்கிய வீதியின் ஒருபுடை யொதுங்கி
வலமுறை மும்முறை வந்தனே செய்தவ்
வுலக வறவியின் ஒருதனி யேறி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி
" ஆபுத் திரன்கை யமுத சுரபியிஃ
தியாவரும் வருக ஏற்போர் தா''மென
வூஞெலி யரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூ ரம்பல மருங்கென்.

குறிப்புரை

1. பத்தினிப் பெண்டிர் - ஆதிரை என்பவள். பாத்து ஊண் - பகுத்துக் கொடுத்த உணவு.

2. பிச்சைப் பாத்திரம் - அமுதசுரபி என்ற பாத்திரம். பெருஞ்சோற்று அமலே - பலருக்குச் சோறு வழங்கும்போது ஏற்பட்ட பேரொலி.

3-4. அறத்தின் ஈட்டிய...செய்கைபோல - தரும வழியில் தேடிய பொருள் அறமுடையாருக்கு ஈயப்படின் ஒன்று நூருகப் பெருகும்.

6. தான் தொலேவில்லாத் தகைமை - பாத்திரம் அள்ள அள்ள என்றும் குறையாத மேன்மை.

7. யானைத் தீ நோய் - பெரிய அளவில் உண்ணவும் பசி நீங்காத நோய். அகவயிற்று - வயிற்றினிடத்து.

8. காரிகை - பெண் ; இவள் விஞ்சை மகள்.

9. நெடியோன் மயங்கி நிலமிசை தோன்றி - திருமால் இராமனாக இவ்வுலகில் அவதரித்து.

10. அடல் அரும் முந்நீர் அடைத்த ஞான்று - அடைத்தற்கு அரிய கடலை மலைகளால் அடைத்த நாளில்.

12. அணங்கு - அச்சம். அளக்கர் - கடல்.

13. கட்டழல் - மிகுந்த தீ.

15. கேள் + நீ - கேணீ ஆர்உயிர் மருத்துவ - உண்பித்து அரிய உயிரைக் கொடுக்கும் மருத்துவ மகளே.

18. அவள் கை - காயசண்டிகையின் கையில்.

21. சேடி என்பது விஞ்சையர் வாழும் ஒரு மலை.

23. உருப்ப - தோற்ற, அழல.

24. காணிய - காண.

25. கடுவரல் - விரைந்து பாய்கின்ற.

26. கான் + யாறு - கானியாறு.

29. பெருங்குலைப் பெண்ணை - பெரிய குலையை உடைய பனைமரம்.

37. திப்பியம் ஆனது - திவ்வியமானது ; தெய்வலோகத்திலிருந்து உண்டானது.

42. உண்ணு நோன்பினேன் - பட்டினி விரதமிருக்கும் என்னுடைய.

47. இளங்கொடி - மணிமேகலையைக் குறிக்கும் ; அன்மொழித் தொகை.

48. பகுவாய் - சுவரை இரண்டாகப் பகுத்துச் செய்யப்பட்ட இடத்தையுடைய.

50. உறுபசி - மிக்க பசி ; உறு : உரிச்சொல்.

52. தேர்ந்து - எவரென்று கேட்டு.

53. வடுவாழ் கூந்தல் - இரண்டாக வகிர்ந்த கூந்தலையுடையாய் ; வடு - வகிர்.

54. ஆயிழை - மணிமேகலை.

58. வேய் கரி கானத்து - மூங்கில்கள் கரிந்துபோன பாலை நிலத்தில்.

60. பைதல் மாக்கள் - துன்பப்படும் மனிதர்.

64. ஊண் ஒலி அரவம் - பலர் சேர்ந்து உண்பதனால் ஏற்படும் ஓசை. ஒலி அரவம் - ஒலிக்கின்ற ஓசை.

65. யாணர் - புதிய வருவாயையுடைய.

2. நளவெண்பா

கலியால் விளைந்த கொடுமை

நளன் என்ற அரசனுடைய சரித்திரத்தை வெண்பாவிற் கூறும் நூல் நளவெண்பா எனப்படும். இது சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூவகைப்படும். இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை மண்டலத்தில் பொன்விளைந்த களத்தூரில் வேளாண் மரபில் பிறந்தவர். சைவத்தில் வெறுப்பில்லாத வைணவ மதத்தைச் சேர்ந்தவர். இவரை ஆதரித்தவன் மள்ளுவ நாட்டின் அரசனாகிய சந்திரன் சுவர்க்கி என்பவன். புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் சில இடங்களில் இவனைப் புகழ்ந்து தம்செய்ந்நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சனியினால் நளனுக்கு விளைந்த தீமைகள் பல இப்பகுதியில் குறிக்கப் பெறுகின்றன.

நலனுடைய பொழுதுபோக்கு

பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுட
னீறிரண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ. (1)

நளனுடைய நீதிநெறியால் கலி அணுகாமை

ஆண்டிரண்டா றெல்லை யளவுந் திரிந்தேயுங்
காண்டகைய வெங்கலியுங் காண்கிலா—னீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோ னிலவேந்தன்
நன்னெறியால் வேறோர் தவறு. (2)

சனி நளனைப் பற்றிக்கொள்ளல்

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையெலாந்
றன்வயமே யாக்கித் தனைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பன் புகைந்து. (3)

நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சார்ந்தான் கலி. (4)

மந்திரிகள் நளனுக்குக் கூறிய அறிவுரை

காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்மொழித
லீதல் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. (5)
அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றூர் தெரிந்து. (6)

நளனுடைய மறுமொழி

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலீர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று. (7)

[சூதாட்டத்தில் தன் நாட்டை நளன் இழந்து அதைப் புட்கரனுக்குக் கொடுத்துவிட்டுத் தமயந்தினிடம் வந்து கீழ்வருமாறு கூறினான்.]

இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூது வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனலுடன் பொன்மகளே
நாம்போது மென்றா னளன். (8)

நளன் நாட்டைவிட்டு நீங்குதல்

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகங் கொள்ளத்தான் போனாற்போற்—றன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினா னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. (9)

கவிக் கூற்று

கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்ன—னடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி. (10

நகரமக்களின் வருத்தம்

ஆருயிரின் ருயே யறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்ருர் தங்கண்ணி
னீர்வார்த்துக் கால்கழுவா நின்று. (11)

நளன் நகரமக்களுக்கு உரைத்தல்

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தாற்—சீல
மொழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
யழிவரோ செங்கோ லவர். (12)

நளன் நகரவாசலைக் கடத்தல்

தன்வாயின் மென்மொழியே தாங்கிஞ ஞேங்குநகர்ப்
பொன்வாயில் பின்ஞகப் போயிஞன்—முன்ஞளிற்
பூமகளைப் பாரினெடும் புல்லிஞன் தன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. (13)

நளனைப் பிரிந்த நகரின் நிலை

கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்று
மிழவு படுமாபோ லில்லங்க டோறுங்
குழவிபா லுண்டிலவே கொண்டு. (14)

நளனுடைய குழந்தைகளுடைய விஞ

சந்தக் கழற்ரு மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—யெந்தாய்
வடந்தோய் களிற்ருய் வழியான வெல்லாங்
கடந்தோமோ வென்ருர் கலுழ்ந்து. (15)

மக்கள் கூறியதைக் கேட்ட நளனது நிலை

தூயதன் மக்க டுயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதுந்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து. (16)

நளன் ஒரு அந்தணனை நோக்கிக் கூறியது

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன் — றாதைக்குக்
காட்டுநீ யென்றான் கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. (17)

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காலிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான் — ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம். (18)

குறிப்புரை

1. பொய்கை - மனிதன் உண்டாக்காத நீர்நிலை. வாசப்பொழில் - வாசனையுடைய சோலை. செய்குன்றம் - பொழுது போக்கு விளையாட்டின் பொருட்டு மனிதர்கள் கற்களைக் கொண்டு செய்த குன்று. ஆடி - விளையாடி. தையல் - தமயந்தி. அடையலர் - பகைவர். கோ - அரசன்; நளன்.

2. காண்டகைய - அழகுமிக்க; குற்றங்களைக் கண்டுபிடிக்கத் தகுந்த. வெங்கலி - கொடிய சனி பகவான். நன்னெறியால் - நல்ல ஒழுக்கத்தின் காரணமாக. கலியும் வேந்தன் மேல் வேறோர் தவறு காண்கிலான். வேறோர் தவறு என்றதனால் அவன் ஓர் தவற்றைக் கண்டமை அடுத்த கவியிற் கூறப்படும்.

3. சந்தி - சந்தியா வந்தனம். செய - செய்யும் பொருட்டு, தாள் விளக்க - கால்களைக் கழுவ. மறு - அழுக்கு. கழுவின தாளில் மறுபோகாமையைச் சனி பார்த்து. புந்தி - புத்தி. தமையன் - நளனுக்குத் தாயாதி முறையில் அண்ணனாகிய புட்கரன். பொன் அசல மார்பன் புகைந்து - மேருமலை போன்ற மார்பையுடைய நளனைக் கோபித்து.

4. இக்கவியினால் புகழேந்திப் புலவரின் மதம் வைணவம் எனத் தெரிகிறது.

5. கவறாடல் - சூதாடல். ஈதல் மறுத்தல் - எளியோர்க்கு ஒருவர் கொடுப்பதைத் தடுத்தல். போதில் - தாமரை மலரில். செம்மை நினையாமை பூண்டார் நெறி - நல்ல எண்ணங்களை நினையாமலிருத்தலை மேற்கொண்டவர்களது வழி. கண்டாய் : அசை. இவை பூண்டாருடைய நெறி என்று கூட்டுக.

6. வேர் கல்லும் - வேரோடு பறித்து எடுத்து விடும். அருநரகு - கொடிய நரகம். திறம் - வலிமை. மறம் - பாவம்.

7. சூதுபொர - சூது ஆட; யானை, குதிரை, தேர், காய்களை வைத்துக் கொண்டு ஆடுவதால் சூது, போர் எனப்பட்டது. மேதி - எருமை

கள். கலக்கு அலை நீர்நாடன் - கலக்குகின்ற அலைகளையுடைய நீர் வளப்பம் மிக்க நிடத நாட்டின் மன்னனாகிய நளன்.

8. இனவண்டு - ஒன்றுக்கொண்டு உறவாகிய வண்டுகள். கிண்டிக் கனிச்சு ஊது - மனம் கனிந்து மலர்களைக் குடைந்து ஊதுகின்ற. வார் பொழில் - நீண்டசோலை. பனிசூத பூம்போது - குளிர்ந்த மாமரத்தின் அழகிய மலர்கள். அவிழ்க்கும் - மலரும். போதும் - போவோம். முன்னிரண்டடிகள் திரிபு.

9. முன்னிரண்டடிகள் உவமானம். பொடியாட - புழுதிபடிய. கொடியான் - கொடியவனாகிய புட்கரன்; காக்கையைப் போன்ற புட்கரன்; கொடி-காக்கை. பார் - இராச்சியம்.

10. கடப்பார் - கடந்து செல்லுகின்றவர். கடுவினை - தீவினை. வனத்து நடப்பான் - காட்டிலே நடந்து செல்வான்; இறந்த காலத்தை எதிர்காலத்தாற் கூறியது இது. செலப் பணித்து - செல்லும்படியாக நளனை ஏவி. சூழ்ந்தது - சூழ்ந்து கொண்டது; வஞ்சனையாக எண்ணியது. அனைத்தே - அவ்வளவா?. கடப்பவரெவரே கடுவினையை விதியின் வலி அனைத்தே - இது பொதுப் பொருள். மற்றவை சிறப்புப் பொருள்.

11. காக்க - காக்கும்படி. கால்கழுவாநின்று - நளனுடைய கால்களைக் கழுவி; நளனது அடியிற் வீழ்ந்து அழுதார்கள் என்றபடி.

12. வேலை - கடல். ஞாலம் முழுதும் - பூமியில் உள்ளவர்கள் அனைவரும். நடு - நடுநிலைமை. சீலம் - ஒழுக்கம். உரை திறம்பாச் செய்கை-சொன்ன சொல் தவறாத செயலை. புட்கரனுக்குக் கொடுத்த வாக்கை மீறி நடவேன் என்றான் நளன்.

13. முன் நாளிற் - அந்த நாளில். பூமகள் - இலக்குமி. பார் - மண்மகள். தாங்கினான் : எழுவாய்.

14. கொற்றவன்பால் - நளனிடத்து. கொல்வான் - கொல்ல வேண்டி. குழவி - குழந்தைகள்.

15. சந்தம் - அழகு. கழலை அணிந்த தாமரை என்றது ஆண்மகவின் பாதங்களை. சதங்கையணி பைந்தளிர் என்றது பெண் குழந்தையின் பாதங்களை. எந்தாய் - எம்முடைய தந்தையே. வடம் தோய் களிற்றாய் - வடக் கயிறுகளால் கட்டப்பெற்ற ஆண் யானைகளை யுடையவனே. கலுழ்ந்து - அழுது.

16. சூழ்கின்ற - தன்னைச் சூழ்ந்து வருகின்ற; சூழ்ச்சி செய்கின்ற. செம்மை புரிவான் - நல்லவற்றையே செய்வான்; புரிதல் இடைவிடாது நினைத்தலுமாம்.

17. பேதை - தமயந்தி. பிரிய - குழந்தைகளினின்றும் வேறாகப் பிரிந்து விடும்படி. பிரியாத - நீங்காத. காதலவர் - புதல்வன், புதல்வி. காதலிதன் தாதை - வீமன். உள்ளத்தை வாட்டுகின்ற நீரைக் கண்களிலே கொண்டு நீ காதலரைக் கொண்டு போய் தாதைக்கு காட்டு என்றான்.

18. சேலுற்ற - சேல் மீன்கள் பொருந்திய. வாவி - குளம். காலிற் போய் - நடந்துபோய். ஞாலம் - உலகம். வேகத்து - வேகத்தையுடைய. அரவின்கண் மணிகள் - பாம்புகளிடத்திலுள்ள மாணிக்கங்கள். சுரம் - பாலைவனம். கள்ளியும் மணிகளும் வேகும் சுரம் கண்ணுற்றான்.

3. குசேலோபாக்கியானம்

குசேலர் கண்ணனைக் காணுதல்

உபாக்கியானம் – கிளைக்கதை. இந்நூலை இயற்றியவர் வல்லூர்த் தேவராசபிள்ளை என்பர். தேவராச பிள்ளையின் ஆசிரியராகிய திரிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இதனை இயற்றிக்கொடுத்தார் என்று தெரிகிறது. நூற்றைம்பது ஆண்டுகட்குள் தோன்றிய நூல் இது. எளிய நடையில் பொருட்சுவை, சொல்நயம் முதலியவற்றோடு இந்நூல் அமைந்துள்ளது.

தம் வறுமை நீங்க பொருள் வேண்டி வருமாறு சுசீலை தன் கணவராகிய குசேலரைக் கண்ணனிடம் அனுப்பினாள். குசேலரும் கண்ணனும் ஒருசாலை மாணவராகப் பயின்ற நண்பர்கள்; ஆயினும் குசேலர் கண்ணனைத் தெய்வமாக மதித்து அன்பு பூண்டு ஒழுகிவந்தார். அவரது அன்பும் கண்ணனது நட்பும் இப்பகுதியால் ஒருவாறு விளங்கும்.

வாயில் காப்போர் குசேலரிடம் கூறியன

நின்னுடை வரவு ரைத்தேம்
நிருபனுக் கப்போழ் துற்ற
பன்னருங் களிப்பை யாமோ
பகர்ந்திட வல்லோ மையா!
முன்னமங் கிருந்த வின்பம்
முழுவதும் மறந்து நின்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார்
நட்பினிற் சிறந்த துண்டோ! (1)

தாயது வருகை கேட்ட
தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி
நெஞ்சினு ளுவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே
எனவிரை பொருளிற் சொற்றான். (2)

இலக்கண மின்மை நோக்கி
இதற்குமேல் சொற்று னல்லன்
மலக்குறும் பறுத்துயர்ந்த
மாதவத் தலைவ ரேறே!

பலப்பல சொல்லி யென்னை
பாணித்தல் கரும மன்று
நலக்கணீ விரைவி னெய்தா
விடினவன் நண்ணு மிங்ஙன். (3)

குசேலர் புறப்படல்

ஆதலி னெம்பி ராணுக்
ககத்துமிக் குவகை யுய்ப்ப
ஏதமின் முனிவ ரேறே
எழுந்தரு ளுகவென் றங்கைப்
போதகங் கூப்பி ஞர்கள்
பொருக்கென வெழுந்து செம்மை
வேதமுற் றுணர்ந்த வையன்
விரைதர நடக்க லுற்ருன். (4)

குசேலர் கண்ணனை நேரிற் காணுதல்

வருந்துமோர் மிடியன் சேம
வைப்பெதிர் கண்டாற் போலும்
மருந்துண விழைந்தோன் விண்ணேர்
அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற்
பகமெதிர் கண்டாற் போலும்
சரிந்தபற் றினன்மெய் யாசான்
றனையெதிர் கண்டாற் போலும். (5)

எண்ணனைக் கிலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான். (6)

ஒருவர்மேல் மற்றவருக்குள்ள அன்பின் மிகுதி

காண்டலு முவகை பூத்துக்
கால்விசை கொடுந டந்தான்
ஆண்டகை யவனுங் கண்ணுற்
றணையுடைத் தெழுநீத் தம்போதல்
நீண்டபூம் பள்ளி நீத்து
நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
பொன்னடி வணங்கி னுனல். (7)

குறிப்புரை

1. நிருபனுக்கு - அரசனுகிய கண்ணனுக்கு. பன்னரும் - சொல்ல முடியாத. அங்கு இருந்த இன்பம் - அரண்மனையிலே அப்போது அவன் பெற்றிருந்த மகிழ்ச்சி, நீரார் - குணங்களையுடையாருடைய.

2. குழவி - குழந்தை. நேயம் - நட்பு. போய் அழைத்திடும் இன்னே என்ற இத்தொடர் மூன்றடுக்கி வந்தது. விரை பொருளில் : அடுக்குத் தொடர் விரைவைக்காட்ட வரும்போது மூன்றடுக்கி வரும்.

3. இலக்கணம் இன்மை நோக்கி - மூன்று முறைக்குமேல் சொல்லலாம் என்பதற்கு இலக்கணம் இடம் தராததால். சொற்றுனல்லன் - அவன் கூறவில்லை. மலக்குறும்பு - குற்றங்களாகிய சிற்றரசுகளை. குசேலரைப் பேரரசனுகவும், மனத்துள் தோன்றும் குற்றங்களைச் சிற்றரசாகவும் உருவகப்படுத்தியிருக்கிறுர். ஏறு - ஆண் சிங்கம் போன்றவன். பாணித்தல் - காலம் நீட்டித்தல். நலக்கண் - நலத்தின் கண் உள்ள. நண்ணும் : செய்யுமென் வினைமுற்று.

4. ஏதம் - குற்றம். செங்கைப் போதகம் - செம்மையான கைகளாகிய தாமரை.

5. மிடியன் - வறியவன். சேமவைப்பு - புதையல். பரிந்து வெப்பு உழலுவோன் - வருந்தி வெப்பத்தினுல் பீடிக்கப்பட்டவன். சரிந்த பற்றினன் - தளர்ந்த ஆசையையுடையவன் ; என்றது ஆசைகள் அற்றுவரும் ஒருவன் என்றபடி. மெய் ஆசான் - உண்மைக் குரு.

6. எண் அனைக்கு - எவராலும் மதிக்கப்பெற்ற அன்னையாகிய திருமகளுக்கு. இலங்கு - விளங்குகின்ற. திகிரி - சக்கரம். திகிரி வலத்திலும் சங்கு இடத்திலும் பொருந்தக்கொண்டவன் : நிரல் நிரை யணி. புரக்கும் - பாதுகாக்கும் கள் + நனை + துளபத் தாமம் - தேனையும் இளந் தளிரையுமுடைய துளசி மாலை. இத்தனை நாள் மனத்திற் கண்டு களித்து வந்தவன் இன்று கண்ணிற் கண்டான்.

7. ஆண்டகை அவனும் - சிறந்தோனுகிய கண்ணனும் எழுநீத்தம் - பெருகும் வெள்ளம். பள்ளி நீத்து - படுக்கையை விட்டெழுந்து. நிலவு - தன்னிடம் நிலைபெற்றுள்ள.

IV. வருணனை

சூரியோதய வருணனை

சூரியன் காலையில் உதிப்பதை வருணிக்கும் பகுதி இது. கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் இது காணப்படுகிறது. கைகேசி தசரதனிடம் இருவரங்களையும் கொண்டபின் மன்னன் தன் நினைவிழந்து கீழே கிடந்தான். அப்பொழுது இரவு நீங்கிக் காலை நேரம் தொடங்கியது. அங்ஙனம் தொடங்கிய காலை நேரத்தின் வருணனை இது.

இரவு நீங்குதல்

சேணுலாவிய நாளெலாம் உயிரொன்றுபோல்வன செய்துபின்
ஏணுலாவிய தோளினன்இட ரெய்தஒன்றும் இரங்கிலா
வாணிலாநகை மாதராள்செயல் கண்டுமைந்தர் முனிற்கவும்
நாணினளென ஏகினள்நளிர் கங்குலாகிய நங்கையே. (1)

கோழி கூவுதல்

எண்டரும்கடை சென்றயாமம் இயம்புகின்றன ஏழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன் மயங்கிவிம்மிய வாறெலாம்
கண்டுநெஞ்சு கலங்கியஞ்சிறை யானகாமர் துணைக்கரம்
கொண்டுதம்வயிற் றெற்றியெற்றி விளிப்பபோன்றன
கோழியே. (2)

பறவைகள் ஒலித்தல்

தோய்கயத்து மரத்துமென்சிறை துள்ளிமீதெழு புள்ளெலாம்
தேய்கையொத்த மருங்குல்மாதர் சிலம்பினின்று சிலம்புவ
கேகயத்தர சன்பயந்தவி டத்தைஇன்னதொர் கேடுசூழ்
மாகயத்தியை உட்கொதித்து மனத்துள்வைவன போன்றவே.

நட்சத்திரங்கள் மறைதல்

சிரித்தபங்கய மொத்தசெங்கணி ராமனைத்திரு மாலையக்
கரிக்கரம்பொரு கைத்தலத்துயர் காப்புநாணணி தற்குமுன்
வரித்ததண்கதிர் முத்ததாகியிம் மண்ணனைத்து நிழற்றமேல்
விரித்தபந்தர் பிரித்ததாமென மீனொளித்தன வானமே. (4)

விளக்குகள் ஒளி மழுங்குதல்

வையமேழுமோ ரேழுமாருயி ரோடுகூட வழங்குமம்
மெய்யன்வீரருள் வீரன்மாமகன் மேல்விளைந்ததோர் காதலால்
நையநைய நலம்புலன்கள் அவிந்தடங்கி நடுங்குவான்
தெய்வமேனி படைத்தசேயொளி போன்மழுங்கின தீபமே.(5)

குறிப்புரை

1. சேண் உலாவிய நாள் - முன்னே உள்ள நாட்கள்; கழிந்த பல ஆண்டுகள். உயிர் ஒன்று போல்வன - தன் உயிரும் தசரதனது உயிரும் ஒன்று என்று கருதும்படியான காரியங்களை. ஏண் உலாவிய - பெருமை பொருந்திய. இடர் - துன்பம். வாள் நிலா நகைமாதராள் - ஒளி பொருந்திய நிலாவைப்போல் வெள்ளிய பற்களையுடைய கைகேசி. மைந்தர் - ஆண் மக்கள். கங்குல் - இரவு. இரவைப் பெண்ணாகக் கூறியது உருவகம். இச் செய்யுள் தற்குறிப் பேற்ற வணி. பிறவும் இவ்வணியே.

2. எண் - மதிப்பு. கடையாமம் - இரவின் கடையிலுள்ள வைகறைப் பொழுது. இயம்புகின்றன - கூவுகின்றவை. ஏழையாள் - அறிவற்றவள். தொங்கல் - மாலை. காமர் - அழகிய. துணைக் கரம் - இரு கைகள். இயம்புகின்றனவாகிய கோழிகள் கண்டு கலங்கி எற்றி எற்றி விளிப்பன போன்றன.

3. தோய் கயம் - குளிக்கின்ற குளம். சிறை - சிறகுகள். தேய்கை ஒத்த மருங்குல் - நுட்பமான இடை என்றபடி. சிலம்பின் - காற்சிலம்புகளின் ஓசையைப்போல். சிலம்புவ - ஒலிக்கின்றவை. விடத்தை - விடம் போன்ற கைகேசியை. கயத்தி - கீழ்மைக்குண முடையவள். சிலம்புவவைவன போன்ற.

4. சிரித்த - அலர்ந்த. கரிக்காம் பொரு கை - யானையின் துதிக்கை போன்ற கைகள். காப்பு நாண் - கங்கணக் கயிறு. முத்ததாகி - முத்துக்களையுடையதாகி.

5. ஏழும் ஒரேழும் - பதினான்கும். பதினான்கு உலகங்களையும் தன்னுயிரையும் சேர்த்துக் கைகேசிக்கும் வழங்கும். மெய்யன் - சத்தியத்தையுடையவன். வீரன் - தசரதன். மாமகன் - மூத்தமகனாகிய இராமன். நல்+ஐம்புலன்கள். தசரதனது தெய்வமேனி பெற்றிருந்த செம்மையான ஒளி மழுங்கியதுபோல் விளக்குகள் ஒளி மழுங்கின.

V. சிறு நூல்கள்

1. மீனாட்சியம்மை குறம்

மதுரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சியம்மை விஷயமாகப் பாடப் பெற்ற குறம் இது; குறம் என்பது குறத்தி ஒருத்தி குறி சொல்வதாகப் பாடப்படும் நூல். குறத்தி ஒரு பெண்ணுக்கு குறி கூறுவது போல் இந்தக் குறம் அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் குமர குருபர சுவாமிகள்.

குறவரின் தொழில்

கொழுங்கொடியில் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண், அம்மே!

குறிப்புரை

விழுந்த - தோன்றிய. கல்லி - பறித்து. தேறல் - தேன். தழை ...ன்பது ஒருவித உடை. விருந்து - விருந்தினர்.

2. நால்வர் நான்மணிமாலை

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் இவர்கள் நால்வர் எனப் பெறுவார்கள். நான்கு இரத்தின மணிகளை வரிசைப்பட ஒழுங்காகக் கோத்த மாலையைப் போல் வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நான்கு பாக்கள் முறையே அமைய நாற்பது கவிகளால் அந்தாதித் தொடையில் தொடுக்கும் நூல் நான்மணிமாலை எனப்படும். அந்தாதித் தொடையாவது ஒரு செய்யுளின் ஈற்றினுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடுத்த செய்யுளின் தொடக்கத்தில் வரப் பாடுவது. நால்வர் விஷயமாகச் செய்த நான்மணிமாலை இது. இதனை இயற்றியவர் துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள்.

சம்பந்தர்

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையும் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. (1)

திருநாவுக்கரசர்

தாயிலி யாகும் சிவபெரு மானைத் தானெனுமோர்
கோயிலின் ஆரறி வாகிய நாமுன் கொண்டிருந்த
வாயிலின் ஆணவ மாகும் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே. (2)

சுந்தரர்

நோக்குறு நுதலோன் நின்னிடை விருப்பால்
நூற்பக வன்னநுண் மருங்குல்
மாக்கருங் குழல்சேர் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றனன் என்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றுநா வலனே. (3)

மாணிக்கவாசகர்

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசகன் எனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகின் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளமெனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே. (4)

குறிப்புரை

1. நெகிழ்ச்சி மலர்ச்சந்தை - கேட்போரின் உள்ளம் நெகிழ்கின்ற வேதம். இரையும் - ஒலிக்கின்ற. புகலி - சீர்காழி என்னும் ஊர். தாய் - உமையவள். தாய்க்கு மகிழ்ச்சி மிக உண்டுபோலும்.

2. தாயிலி - தனக்கு ஒரு தாயை இல்லாதவன். தானெனுமோர் கோயிலில் - அன்பரை கோயிலாக உருவகப்படுத்தியது இது. ஆணவம் - செருக்கு. கபாடம் - கதவு. மன்திறந்து - நிலைபெறும்படியாகத் திறந்து, மறைக்கதவை வேதாரண்யத்தில் திறந்ததும் அல்லாமல் ஆணவக் கதவையும் திறந்து. சொல்லிறை - திருநாவுக்கரசு. இறைஞ்சுவாரது ஆணவத்தை நீக்கி அவர் உள்ளமாகிய கோயிலில் சிவபெருமானைக் காட்டுவன்.

3. நோக்குறு நுதலோன் - நெற்றிக் கண்ணையுடையவன். நூற்பகவன்ன மருங்குல் - நூலின் பிளவு போன்ற நுண்ணிய இடை. மகளிர்—பரவை நாச்சியாரை. கோ கலிக்காமன் - சிறந்த கலிக்காமர் என்ற நாயனார். குத்திக் கொண்டது என்றது அவரது பொறுமையைக் காட்ட நின்றது. கலிக்காமர் தம் உயிரை மாய்த்துக் கொள்ள வாளால் தம் வயிற்றைக் குத்திக்கொண்டதைப் பொறுமை காரணமாக அங்ஙனம் செய்தார் என்று கூறியது நயம். மதலை - குழந்தை. கான்றிட - கக்கிட. நாவலன் - சுந்தரமூர்த்தி நாயனார்.

4. கருணைக் கடல் - சிவபெருமான். மழை - மேகம். சிவபெருமானுக்குக் கடலும், மாணிக்கவாசகருக்கு மேகமும் உவமை. செல்லா - சென்று, இச்செய்யுள் உருவகம்.

3. சீட்டுக்கவி

பாட்டாக எழுதி அனுப்பும் கடிதம் சீட்டுக்கவி எனப்படும். இச் சீட்டுக்கவியின் ஆசிரியர் அந்தகக் கவி வீராகவ முதலியார். இவர் குருடர். இவருடைய கவிகளில் சொல் நயம், பொருள் நயம் மிகுதியாகக் காணப்படும்.

இந்நா ளிருந்தபேர் புதியபா கம்பண்
டிருந்தபேர் பழயபாகம் ;
இருபாக மும்வலவி லக்கணக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை
அன்னாதி தானப்ர வாகன்ப்ர சங்கத்
தனந்தசே டாவதாரன்
அகிலப்ர காசன்திம் மய்யவப் பையன்
அகமகிழ்ந் தினிதுகாண்க ;
தன்னாளும் ஓலையும் வரக்கண்டு நாம்வேத
சைலப்பு ராணத்தையித்
தனிநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது
தான்வந் தலாமலில்லை
நன்னாவ லோருட னிதைக்கேட் டெனைச்சோழ
நாட்டுக் கனுப்பவேண்டும்
நவிலோலை தள்ளாம லேசுக்ர வாரத்து
நாளிங்கு வரவேண்டுமே.

குறிப்புரை

1. புதியபாகம் - புதிய பிரிவைச் சேர்ந்தது ; புதியதான பக்குவத்தை யுடையது. அன்னாதி தானப்ரவாகன் - சோறு முதலிய தானங்களை மிகுதி யாகச் செய்பவன். ப்ரவாகம் - வெள்ளம். அனந்தசேட அவதாரன் - ஆதிசேஷன் அவதரித்தது போன்றவன் ; கல்வியிற் சிறந்தவன் என்றபடி. தன் ஆளும் - தான்விடுத்த ஏவலாளும்.

4. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

சேக்கிழார் என்பவர் பெரிய புராணத்தை அருளிச் செய்தவர். இவ[ர்] மீது பாடிய பிள்ளைத் தமிழ் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் எனப்படும். பிள்ளைத் தமிழாவது, பாட்டுடைத் தலைவனைப் பிள்ளையாகப் பாவித்து அப்பிள்ளையின் பிராயத்தைப் பத்துப் பருவங்களாக்கிக் கொண்டு ஒவ்வொரு பருவத்தையும் பப்பத்துக் கவிகளால் வருணிப்பது. பத்துப் பருவ[ங்]

களாவன ; காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில் சிறு தேர், என்பன. இங்ஙனம் வருவது ஆண்பாற் பிள்ளைத் தமிழ். பெண்பாற் பிள்ளைத் தமிழில் சிறுபறை, சிற்றில், சிறு தேர் இவற்றிற்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் எனபன வரும். இம்மூன்றில் கழங்குக்குப் பதிலாக நீராடலைக் கூறுவோறும் உளர்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

சிற்றில் பருவத்தில் ஒரு செய்யுள் இங்கே பாடமாக வந்துள்ளது. பெண்கள் மணலிற் கட்டிய சிறு வீடுகளை பாட்டுடைத் தலைவனாகிய குழந்தை சிதைக்க வருவதைத் தடுத்து அப்பெண்கள் அக்குழந்தையை வேண்டுவதாகச் செய்யப்படுவது இது.

தாங்கும் வளவன் அனபாயன்
தன்கண் மணியாய் அவனமைச்சர்
தங்கள் சூளாமணி யாயுத்
தமச்சோ ழப்பல் லவனெனும்பேர்
ஓங்கும் படிகொள் விண்மணியாய்
உவக்கு மடியார் சரித்திரமுற்
றுரைசெய் தருள்சிந் தாமணியாய்
உயர்வு பூணின் இளம்பருவ
வாங்கும் பிறைநன் நுதலார்செய்
வண்டல் சிதைக்க வேண்டுவதோ ?
வாழைக் குருத்து மதிநடுப்போய்
மாரன் குடைக்கோர் காம்பாகித்
தேங்குந் திருத்தண் டகநாடா !
சிறியேம் சிற்றில் சிதையேலே ;
செல்வம் செருக்குக் குன்றையருள்
செல்வா ! சிற்றில் சிதையேலே.

குறிப்புரை

வளவன் - சோழன். உத்தமச் சோழப் பல்லவன் என்பது சேக்கிழாருக்குரிய பட்டப் பெயர். விண்மணி - சூரியன். அடியார் சரித்திரம் - திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம். வாங்கும் - வளைந்த. பிறைநன் நுதலார் - பிறை போன்ற நல்ல நெற்றியையுடைய பெண்கள். வண்டல் - மணற்சிற்றில். மாரன் - மன்மதன். தண்டகநாடு - தொண்டை மண்டலம். குன்றை - குன்றத்தூர் ; இது சென்னைக்கு அருகில் உள்ளது. கண்மணியாய், சூளாமணியாய், விண்மணியாய், சிந்தாமணியாய் உயர்வைப் பூண்டால், வண்டலைச் சிதைக்க விரும்புவதோ.

VI. பல் சுவை

1. காவிரிப் பெருக்கடங்கப் பாடியது

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனளென் — றிந்நீர்
உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (1)

2. கம்பர் பேரில் கையறம்

இன்ரேநம் கம்பன் இறந்தநாள் இப்புவியில்
இன்ரேநம் புன்கவிகட் கேற்றநாள் — இன்ரேதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள். (2)

3. பாதிபாடிப் பலநாள் கழித்துப்பிற்பாதியை முடித்தது

வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமென்
வீட்டில் வரும்
எறும்புக்கு மார்பத மில்லைகண் டாயென்
னிருங்கவியின்
குறும்பைத் துரத்தும் குடிதாங் கியைச்சென்று
கூடியபின்
தெறும்புட்கொள் யானை கவளம்கொள் ளாமைத்
தெவிட்டியதே. (3)

4. நசையும் இசையும் தோன்றப் பாடியது

குழற்கால் அரவிந்தம் கூம்பக் குமுதம்
பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் ருேநின் திருக்குலம்
நீயவன்றன்

அழற்கால் அவிர்சடை மீதே இருந்துமவ்
வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக்
கைதவனே. (4)

5. விண்ணப்பம்

பாலைவனம் சோலைவன மாக வேண்டும் ;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும் ;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும் ;
சவைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும் ;
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும் ;
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும் ;
வேலையிலாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும் ;
வெற்றியின்மேல் வெற்றிஎமக் கெய்த வேண்டும். (5)

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும் ;
பயிர்களெலாம் செழித்தோங்கி வளர வேண்டும் ;
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும் ;
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும் ;
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும் ;
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும் ;
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும் ;
காந்திமதி ! நின்னடிகள் வாழ்த்தினேனே. (6)

குறிப்புரை

1. இது கம்பர் வாக்கு. கன்னி - குமரி யாறு. அழிந்தனள் என்றது அந்த ஆறு கடலால் கொள்ளப்பட்டதை. திறம்பினள் என்றது, விண்ணிலிருந்து (பகீரதன் வேண்ட) மண்ணுலகக்கு வந்ததை. அழிந்தனள், திறம்பினள் என்றமை அவர்கள் தம் பண்பு கெட்டமையைத் தொனியாகக் கூறியபடி. இந்நீர் உரை — இத்தன்மைத்தாகிய பேச்சு. உலகு - சோழநாடு.

2. இச் செய்யுள் தமிழ் நாவலர் சரிதை என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. புன்கவிகட்கு - அற்பமாகிய பாடல்களுக்கு. பூமடந்தை - திருமகள். நூல் - தாலிக் கயிறு.

3. இந்தக் கவியைப் பாடியவர் சத்திமுற்றப் புலவர் என்பவர். சத்திமுற்றம் என்பது சோழநாட்டில் தாராசுரம் என்ற ஊருக்கு அருகிலிருந்த ஓர் ஊர். வறுமையால் வருந்திய புலவர் பாண்டியநாடு சென்று பாண்டியனைக் கண்டு, தம் வறுமை நிலையைத் தெரிவித்துக் கொள்ள ஒரு கவியைப் பாடத் தொடங்கினர். பாதிவரை கவி பாடும்போது மன்னன் அவரை நிறுத்தும்படி வேண்டினன். பிறகு பாண்டியன் அவரைத் தம் அவைக்களத்தில் சில நாள் வைத்திருந்து பரிசில் கொடாது சும்மா அனுப்பி விட்டான். அவன் அங்ஙனம் செய்யினும் புலவர் அறியாமல் சத்திமுற்றத்தில் அவருக்கு வேண்டிய வசதிகளை அமைத்துக் கொடுத்தான். தம் ஊர் சென்ற புலவர் தம் செல்வ நிலையை அறிந்து கொண்டு பாண்டியனுக்குத் தம் நன்றியைச் செலுத்த வேண்டி மீண்டும் மதுரை வந்து முன்னுளில் என்று தொடங்கி மற்றப் பாதியையும் முடித்தார்.

புற்கை - பருக்கை. கிள்ளை சோரும் - கிளி உணவின்றிச் சோர்வடையும். ஆர்பதம் - உணவு. இருங்கலியின் - கொடிய வறுமையின். குடிதாங்கி என்பது பாண்டியனுக்குரிய பட்டம்; குடிகளைத் தாங்குபவன் என்பது பொருள். கவளம் - யானையின் உணவு.

4. இதன் ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர். பாண்டியனை நெடுநாள் காணப் பெருமல் கோவிலிலிருந்து கொண்டு அவனை வசையாகப் பாடத் தொடங்கிப் பாடுங்கால் தற்செயலாகப் பாண்டியன் கோவிலுக்கு வந்து சோமசுந்தரக் கடவுளைத் தொழுவது கண்டு அவனைப் புகழ்ந்து ஏனைய இரண்டடிகளைப் பாடி முடித்தார்.

குழல்கால் அரவிந்தம் - குழல் போன்ற காம்பையுடைய தாமரை. நிழல் கால் - ஒளியை வீசுகின்ற. மதியானது சிறந்த மலராகிய தாமரை குவியவும் சிறப்பில்லாத குமுதம் விரியவும் செய்வது போலப் பாண்டியன் சிறந்த புலவர்களைப் புறக்கணித்துப் போலிப் புலவர்களை ஆதரிக்கின்றவன் என்ற குறிப்பைத் தருவதால் முன்னிரண்டடிகள் பாண்டியனுக்கு நசை ஆயிற்று; நசை - குற்றம். பின்னிரண்டடிகளின் புகழ்ச்சி வெளிப்படையாக உள்ளது.

5. இந்தக் கவியை எழுதியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்பவர். இவர் கவி பாடுவதில் மிகவும் சமர்த்தர். இவர் நாஞ்சில் நாட்டில் நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள புத்தேரி என்ற ஊரினர்.

சாலைகள் - தொழிற்சாலைகள்.

6. காந்திமதி - திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் உமையவள்

உரைநடைப் பகுதி

1. வித்துவான் தியாகராச செட்டியார்*

(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

சென்னைப் பிரயாணம்

தியாகராச செட்டியாருக்கு வரவரக் கண் ஒளி குறைந்து வந்தமையால் நூல்களைப் படித்து இன்புற இயலாமல் போயிற்று. தக்க வைத்தியரிடம் காட்டலாமென்று சில அன்பர்கள் யோசனை கூறினார்கள். சென்னையில் கண் வைத்தியத்தில் சிறந்தவர்கள் உள்ளார்களென்றும், அங்கே சென்று பார்ப்பதே நலமென்றும், வேறு இடங்களில் பார்த்தால் பின்னும் துன்பம் உண்டாகுமென்றும் சிலர் கூறினர். அதன்பின் செட்டியார் சென்னைக்கே போய்வருவதாக நிச்சயித்தனர்.

1885-ஆம் வருஷம் மே மாதம் செட்டியார் தம் குடும்பத்தினர் சிலருடன் சென்னைக்குப் பிரயாணமானார். சென்னை வந்து சேலம் இராமசாமி முதலியார் பங்களாவில் அவர் விரும்பியபடி சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு திருமயிலை (மயிலாப்பூர்) அரிசிக்காரத் தெருவில் இருந்தவரும் ஸர்வ கலாசாலைப் புத்தகசாலைப் பாதுகாப்பாளருமாகிய வைத்தியநாத சாஸ்திரியாரின் உதவியைக் கொண்டு மயிலாப்பூரிலே சிலநாள் இருந்தார். அப்பால் எழும்பூரில் சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார் வீட்டிற்கு அருகில் ஒரு ஜாகை வைத்துக்கொண்டு அதில் இருந்து வந்தார்.

செட்டியாரிடம் படித்தவர்கள் பலர் அக்காலத்தில் சென்னையில் வேலையில் இருந்தார்கள். அவர்கள் மூலமாகவும் வேறு வழியாகவும் இவருடைய புலமையைப் பலர் உணர்ந்திருந்தனர். செட்டியார் சென்னைக்கு வந்திருப்பதை அறிந்த

* திருவல்லிக்கேணி தியாகராச விலாசத்தாரின் அநுமதியுடன் சேர்த்துக் கொள்ளப் பெற்றது.

அவ்வன்பர்கள் மிக்க ஆவலோடு வந்து இவரைக் கண்டு பேசி இன்புற்றுச் சென்றனர். சிலர் தங்கள் தங்கள் விடுதிகளுக்கு அழைத்துச் சென்று உபசரித்தனர். பூண்டி அரங்கநாத முதலியார், பம்மல் விஜயரங்க முதலியார் முதலிய கனவான்கள் செட்டியாரைச் சந்தித்து ஸல்லாபம் செய்து பாராட்டினர். 'காஸ்மோபாலிடன் கிளப்' பிற்கு அழைத்துச் சென்று தம்முடைய நண்பர்களைப் பழக்கம் செய்து வைத்தனர். அவர்களோடு பேசிப் பழகும்போதெல்லாம் செட்டியார், தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லியும், காலேஜ் அனுபவங்களை எடுத்துரைத்தும், பிள்ளையவர்களைப் பற்றிப் பேசியும் பொழுது போக்கினார். நீதிநெறி விளக்கம், குசேலோபாக்கியானம், கம்பராமாயணம், முதலிய நூல்களை இவரிடம் காலேஜில் பாடங் கேட்ட அன்பர்கள், "ஐயாவை இப்போது சந்தித்தது எங்கள் பாக்கியம். காலேஜில் வசித்த காலம் ஞாபகத்துக்கு வருகிறது. தாங்கள் அந்த நூல்களிலிருந்து சில பாடல்களைச் சொல்லிப் பொருள் கூறவேண்டும்; கேட்க ஆவலாக இருக்கிறது" என்று மிக்க விருப்பத்தோடு கேட்கவே செட்டியார் அங்ஙனமே தமக்கு இயல்பான குரலில் அச்செய்யுட்களைச் சொல்லிக் காட்டினார். பொருளையும் விளக்கிச் சொன்னார்.

அரிசிக்காரத் தெருவில் இவர் தங்கியிருந்த வீட்டிற்கு எதிரே ஒரு வீட்டுத் திண்ணையில் ஒருவர் பள்ளிக்கூடம் வைத்திருந்தார். 'இந்தப் பட்டணத்தில் கூடத் திண்ணைப் பள்ளிக்கூடம் இருக்கிறதா?' என்று இவர் ஆச்சரியமுற்றார். அந்தப் பள்ளிக்கூட உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு மூதுரை, திருவேங்கட சதகம், குமரேச சதகம், திருவரங்கக் கலம்பகம், அருணைக் கலம்பகம், பாரதத்தில் கிருஷ்ணன் தூது முதலியவற்றை அவர்கள் தகுதிக்கேற்றபடி இசையோடு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். மாணாக்கர்கள் பயபக்தியுடன் பாடம் கற்றுக்கொண்டதன்றிப் பாடல்களை இசையோடு சொல்லிவந்தார்கள். இவற்றைக் கண்ட செட்டியார்க்கு அளவற்ற திருப்தி உண்டாயிற்று.

அக்காலத்தில் நான் "மத்தியார்ஜுன மான்மியம்"

என்னும் புத்தகத்தை அச்சிடும் பொருட்டுச் சென்னைக்கு வந்திருந்தேன். செட்டியாரைப் பார்த்து அவருடன் இருந்து வரலானேன். ஒருநாள் எதிரிலே இருந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில் திருவரங்கக் கலம்பகம் பாடம் நடந்துவந்தது. பிள்ளைகள் இசையோடு பாடல்களை ஒப்பித்தார்கள். செட்டியார் என்னைப் பார்த்து, "கிராமங்களில் கூட இந்த வழக்கம் இப்போது குறைந்து வருகிறது. பாடல்களை இசையோடு சொல்வதும், ஒப்பிப்பதுமாகிய வழக்கங்களை இங்கே கண்டு மிக்க ஆனந்தமடைந்தேன். காலேஜில் தமிழ்ப் பாடம் நடக்கிறதே; அதனால் என்ன பயன்? இப்படி இரண்டு வருஷங்கள் படித்தால் போதுமே; உள்ளத்துக்குள்ளே தமிழ் ஊறிவிடுமே" என்றார். இவர் கூறியவற்றை நானும் ஒப்புக்கொண்டேன். நாங்கள் இருவரும் அப் பள்ளிக்கூடத்துக்குச் சென்று உபாத்தியாயரோடு பேசி அவரைப் பாராட்டிவிட்டு வந்தோம்.

"சென்னை வாழ்க்கை எப்படி இருக்கிறது?" என்று இவரைக் கேட்டேன்.

எனக்கு இவ்விடம் திருப்திகரமாகவே இருக்கிறது. ஜனங்கள் சாதுக்களாகவும் தமிழருமை தெரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் பாடல்கள் சொல்லுகிறார்கள். என்னையும் சொல்லச் செய்து கேட்கிறார்கள். பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் மரியாதையாக இருக்கிறார்கள். சோம்பேறிகளே பெரும்பாலும் இங்கே இல்லை. நான் ஆரம்பத்தில் வந்தபோது சில வார்த்தைகளுக்குப் பொருள் விளங்காமல் திகைத்தேன். பிறகு தெரிந்துகொண்டேன்".

"எந்த வார்த்தைகள்?" என்று கேட்டேன்.

"தமிழ்தான்; ஆனாலும் நம் பக்கத்தில் கேட்ட வழக்கமில்லை. 'என்னாங்க' என்று ஒருவகையான ஸ்வரத்துடன் பீடிகை போட்டுக்கொண்டு பேச ஆரம்பிக்கிறார்கள். அண்ணாத்தை, அப்பேன், இஸ்துக்கினு முதலிய பல புதிய வார்த்தைகளை இந்த நகரத்திலேதான் கேட்டேன். ஒருவர், 'இன்றைக்குச் சனிக்கிழமை; ஸ்நானம் பண்ணினேன்' என்றார். 'இதென்ன வேடிக்கையாக இருக்கிறதே! வாரத்

துக்கு ஒரு முறைதான் ஸ்நானம் செய்வாரா என்ன ? என்று முதலில் யோசித்தேன். பிறகுதான் எண்ணெய் தேய்த்து நீராடுவதை ஸ்நானம் செய்ததாகச் சொல்வது இவ்வூர் வழக்கென்று தெரியவந்தது. 'நம் வீட்டில் பிரயோசனம் என்று ஒருவர் அழைத்தார். அவர் அழைப்பு எனக்கு விளங்குவதற்கு இரண்டு நாட்களாயின. எங்கே போனாலும் செங்கல்வராயன் என்ற பெயரைக் கேட்டுக் கேட்டுச் சலிப்பு உண்டாகிவிட்டது. அந்தப் பெயர் திருத்தணிகை ஆண்டவன் பெயரென்று தெரிந்த பிறகுதான் அந்தப் பெயரின்மேல் இருந்த வெறுப்பு நீங்கிற்று.''

இவ்வாறு சென்னையில் வழங்கும் வார்த்தைகளைக் குறித்து அவர் ஓர் அத்தியாயம் ரஸமாகச் சொன்னார்.

கண் வைத்தியம் செய்பவர்களைப் பற்றிச் செட்டியார் விசாரித்துப் பெரியமேட்டில் இருந்த அச்சிறுபாக்கம் குமாரசாமி முதலியார் என்ற வைத்தியரிடம் சென்று கண்ணைக் காட்டினார். அவர் பரிசோதித்து விட்டு, ''ரத்தம் குறைந்துகொண்டு வருகிறது. கண்நோய் நீங்காது. ஊருக்குப் போய்ச் சௌக்கியமாய் இருங்கள்'' என்று சொன்னார். அப்பால் பிராக்மன் என்னும் ஆங்கிலேய டாக்டரிடம் காண்பித்தார். அவர் ரெவரெண்டு ஜி. யூ. போப்பின் மருகர். இவர் சிறந்த தமிழ்ப் புலவரென்பதை அறிந்து சிரத்தையோடு அவர் பரீட்சை பண்ணிப் பார்த்தார். ''இனிமேல் இதற்குச் சிகிச்சை இல்லை'' என்று அவரும் சொல்லிவிட்டார். செட்டியாருக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று. சென்னைக்கு வந்த காரியம் அநுகூலமாகாவிட்டாலும் பல பழைய நண்பர்களைப் பார்த்ததும் புதிய அன்பர்களது பழக்கம் ஏற்பட்டதும் இவருக்கு ஓரளவு ஆறுதலை உண்டாக்கின. சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருவாவடுதுறை வந்து சேர்ந்தார்.

திருவாவடுதுறை நிகழ்ச்சிகள்

திருவாவடுதுறையில் அக்காலத்தில் மேலகரம் சுப்ரமணிய தேசிகர் தமக்குப்பின் ஆதீனத் தலைமைப்பதவியை

வகித்து நடத்துவதற்காக ஒருவரைச் சின்னப் பட்டத்தில் நியமித்திருந்தார். அம்பலவான தேசிகரென்னும் அவர், தக்க பண்டிதர்களிடத்தில் தமிழும் ஸம்ஸ்கிருதமும் பாடங் கேட்டு வந்தார்.

செட்டியார் ஆதீனகர்த்தரைத் தரிசித்தபோது, அவர் "நீங்கள் நல்ல சமயத்தில் வந்தீர்கள். சின்னப் பட்டத்திற்கு ஒருவரை நியமித்திருக்கிறோம். அவருக்குத் தமிழ் இலக்கண இலக்கியப் பாடங்களைச் சொல்லிக்கொண்டு இங்கே சௌக்கியமாக இருக்கலாம்" என்றார். செட்டியார் அவ்வாறே அங்கே தங்கிப் பாடம் சொல்லலானார். ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குக் கொடுத்திருந்த விடுதியையே செட்டியாருக்கு அளித்துத் தவசிப்பிள்ளை ஒருவனை நியமித்து ஆகாரத்திற்கு வேண்டிய சௌகரியங்களையும் தேசிகர் செய்வித்தார்.

செட்டியார் பாடம் சொல்வதை அறிந்த பல கனவான்கள் ஆதீனகர்த்தரைத் தரிசிக்கும் போதெல்லாம் அப்படியே செட்டியாரையும் பார்த்துப் பேசி இன்புற்றுச் செல்வார்கள். செட்டியார் பாடம் சொல்லும்போது உடனிருந்து பலர் கேட்டு மகிழ்வார்கள். "செட்டியாரவர்கள் இங்கே வந்திருப்பது மடத்திற்குக் கௌரமாக இருக்கிறது" என்று சுப்ரமணிய தேசிகர் இவரைப் பாராட்டினார்.

அக்காலத்தில் மாயூரம் தாசில்தாராக இருந்த நாதமுனி கிருஷ்ணையங்கார் என்பவர் திருவாவடுதுறையில் முகாம் போட்டுச் சில கிராமங்களைப் பார்வையிட எண்ணினார். தாம் தங்குவதற்குரிய விடுதி முதலியவற்றை அமைப்பதற்காக முன்னால் ஒரு சேவகனை அனுப்பினார். அந்தச் சேவகன் மடத்தின் முக்கியமான அதிகாரி ஒருவரைக் கண்டு விஷயத்தைச் சொன்னபோது, "இங்கே பல விடுதிகள் இருக்கின்றன. எது தாசில்தாரவர்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்று பார்த்துச் சொன்னால் அதை ஒழுங்கு செய்யச் சொல்லலாம்" என்றார் அவர். அவன் மடத்தைச் சார்ந்த விடுதிகளைப் பார்த்தான். செட்டியார் தங்கியிருந்த இடம் நன்றாயிருப்பதை அறிந்து அதைத் திட்டம்செய்யும்படி அதிகாரியிடம் சொன்னான்.

"அதில் செட்டியாரவர்கள் இருக்கிறார்கள். வேறு எதையாவது சொல்லும்" என்றார் அதிகாரி.

"செட்டியார் இருந்தால் என்ன? அவரை வேறு இடத்திற்குப் போகச் சொல்லிவிடுங்கள். தாசில்தாரைவிடச் செட்டியார் பெரியவரா?" என்றான் சேவகன்.

"அதிகாரி அவன் அறியாமையைக் கண்டு சிரித்தார்; அவரைப் போகச் சொல்வதென்பது முடியாத காரியம்" என்று சொல்லிவிட்டார்.

"உங்களுக்குப் பயமாக இருந்தால் நானே போய் அவரைக் கிளப்பிவிடுகிறேன்" என்று கூறிவிட்டுச் சேவகன் வெகு வேகமாகச் செட்டியார் இருந்த ஜாகையை அடைந்தான். செட்டியாரிடம், "உடனே இந்த இடத்தைவிட்டு வேறு இடம் போகவேண்டும். எசமான் வரப்போகிறார்கள்" என்று சொல்லி நின்றான்.

செட்டியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை; "யாரப்பா உங்கள் எசமான்?" என்று கேட்டார்.

"தாசில்தாரையா வருகிறார்கள். அவர்களுக்கு இந்த இடந்தான் பிடித்திருக்கிறது. இதைக் காலி செய்துவிடுங்கள்".

இவ்வாறு சேவகன் சொல்லிக் கொண்டிருக்கும்போது மடத்து அதிகாரி அங்கே வந்து அவனை மெல்ல அழைத்துக் கொண்டு அக்கிரகாரத்திற்குப் போனார். அங்கே ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவருடைய விடுதியைக் காட்டி, அவனை ஒப்புக் கொள்ளும்படிசெய்து பந்தல் முதலியவை போட்டு எவ்வளவு சௌகரியம் செய்விக்க வேண்டுமோ அவ்வளவும் செய்வித்து அவனை அனுப்பிவிட்டார். அவனும் திருப்தியடைந்து போய்விட்டான். தாசில்தார் அந்த வீட்டில் வந்து இறங்கினார்.

திருவாவடுதுறையில் இருந்த ஒருவர் தம்மைச் சேர்ந்த ஒருவருக்குக் கர்ணம் வேலை செய்விக்கும்படி தாசில்தாரிடம் சிபார்சு செய்யவேண்டுமென்று தியாகராச செட்டியாரிடம் சொன்னார். "தாசில்தார் எனக்குப் பழக்கமானவராக இருந்தால் சொல்கிறேன். அவர் பெயர் என்ன? என்று

செட்டியார் கேட்டுக்கொண்டு, "தாசில்தார் ஓய்வாக இருக்கும் சமயம் தெரிந்து வந்துசொன்னால் போய்ப் பார்க்கலாம்" என்றார்.

ஒருநாள் பகல் பதினொரு மணிக்கு அந்த அன்பருடன் புறப்பட்டுத் தாசில்தாரைப் பார்க்கச் செட்டியார் சென்றார். தம் வரவைத் தாசில்தாருக்கு ஒருவரும் தெரிவிக்க வேண்டாமென்று இவர் சொல்லியிருந்தார்.

தாசில்தார் அப்போது ஜாகையின் திண்ணையில் வீற்றிருந்தார். பல செல்வர்கள் அவருக்குமுன் மிகவும் பணிவாக அமர்ந்திருந்தனர். வேறு சிலர் கையைக் கட்டிக்கொண்டு திண்ணையின் கீழே நின்றார்கள். பக்கத்து ஊர்களிலிருந்து வந்த கிராம உத்தியோகஸ்தர்கள் சிலரும் அங்கே நின்றார்கள். செட்டியாருடைய மதிப்பையும் புலமையையும் அறியாமல் அலட்சியமாக எண்ணும் இயல்பினர் சிலரும் அங்கே இருந்தனர். அவர்கள் இவர் வரவைக் கண்டு, இந்தக் கர்நாடகம் இங்கே எதற்கு வருகிறது?'' என்று தமக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.

செட்டியார் வருவதைக் கண்ட தாசில்தார் திடீரென்று திண்ணையினின்று கீழே குதித்து, "ஐயா, வெயிலில் எங்கே நடந்து போகிறீர்கள்? இங்கே எப்போது வந்தீர்கள்? சௌக்கியமாக இருக்கிறீர்களா?'' என்று கேள்வி கேட்டபடியே அவரை அணுகினார். தாசில்தார் கீழே குதிக்கவே திண்ணையில் உட்கார்ந்திருந்த கனவான்களெல்லாம் தடதடவென்று குதித்தார்கள்.

"நீங்கள் யார் தெரியவில்லையே? நான் இங்கே வந்திருக்கும் தாசில்தாரைப் பார்க்கப் போகிறேன்" என்றார் செட்டியார்.

"நான்தான் தாசில்தார், தங்களுடைய சிஷ்யன். நாதமுனி கிருஷ்ணையங்காரென்பது என் பெயர். ஞாபகம் இல்லையா? பால்யத்தில் நீங்கள் எவ்வளவு அன்போடு பாடம் சொல்லிக் கொடுத்தீர்கள்" என்று சொல்லிச் செட்டியாரை அழைத்து வந்து திண்ணையில் அமரச் செய்தார்.

செட்டியார், "எனக்குப் பார்வை சரியாக இல்லாமை

யால் உடனே உம்மைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. உம்மை நான் மறப்பதற்கு நியாயமில்லையே'' என்ருர்.

"நீங்கள் ஒருகால் மறந்து போனுலும் நான் மறக்க மாட்டேன். உங்கள் அன்பின் பலனுகத்தான் நான் இப் போது நல்ல பதவியில் இருக்கிறேன்'' என்று சொல்லித் தாசில்தார் அருகில் இருந்த கனவான்களைப் பார்த்து, "இவர்கள் மிகப் பெரிய தமிழ் வித்வானென்பது உங்களுக் குத் தெரிந்திருக்கும். இவர்கள் என் குரு. இவர்களிடம் ஸ்ரீரங்கத்தில் நான் படித்தேன். அதற்குப் பிறகு பல இடங் களில் படித்தாலும் இவர்களுடைய அன்பையும் கற்பிக்கும் அழகையும் நான் மறக்கவேயில்லை. ஆஹா! எவ்வளவு நன்ருகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள்! இவர்களிடம் கேட்ட பாடம் இன்னும் ஞாபகத்திலேயே இருக்கிறது'' என்று பாராட்டிப் பேசலானுர்.

செட்டியார், "நான் சொல்லிக்கொடுத்த பாடம் ஞாப கத்தில் இருக்கிறதென்று சொல்லுகிறீர்களே; இப்போது ஏதாவது ஒரு பாடல் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

"ஒரு பாடல் என்ன? நான் படித்த அவ்வளவு பாடல் களையும் சொல்லுகிறேன், கேளுங்கள். நன்னூற் சூத்தி ரங்களை வேண்டுமானுலும் ஒப்பிக்கிறேன்'' என்று சொல்லிச் சில செய்யுட்களைச் சொன்னுர்.

"நன்ருயிருக்கிறது. உங்களுடைய விசுவாசத்தை நான் பாராட்டுகிறேன். எனக்கு இப்பொழுது வயசாகிவிட்டது. கண் ஒளி குறைந்து போயிற்று. உங்களைப் போன்றவர்க ளுடைய விசுவாசம் இந்தத் தளர்ந்த நிலையில் எவ்வளவோ ஆறுதலை அளிக்கிறது'' என்று செட்டியார் சொல்லவே உடனிருந்தவர்கள் பலர் மனம் உருகினர்.

"ஐயா அவர்களைப் பார்த்து எவ்வளவோ வருஷங்க ளாகிவிட்டன. இப்பொழுதாவது சந்திக்க நேர்ந்தது என் பாக்கியந்தான். இன்றைக்கு எனக்கு உண்டான சந்தோஷத் திற்கு அளவே இல்லை. உங்களிடம் பாடம் கேட்ட அந்தப் பால்ய தசையே வந்துவிட்டதுபோல இருக்கிறது'' என்று தாசில்தார் கூறிக் குதூகலித்தார்.

இந்தக் காட்சிகளைச் செட்டியாருடன் சென்றிருந்த நான் கவனித்து வந்தேன்.

செட்டியார் தாசில்தாரைப் பார்த்து "உங்கள் சேவகன் இருக்கிருனு?" என்று கேட்டார்.

"எந்தச் சேவகன்?"

"இங்கே ஜாகை பார்க்கும்பொருட்டு அனுப்பினீர்களே, அந்தச் சேவகனைத்தான் கேட்கிறேன். இங்கே இப்போது வந்திருக்கிருனு?"

இவர் வந்ததையும் தாசில்தார் இவரிடம் மரியாதையாக நடந்துகொள்வதையும் பார்த்து அவன் அடங்கி ஒடுங்கி ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான். 'நல்ல வேளையில் இவர் புறப்பட்டுப் போகவேண்டும்' என்று அவன் அஞ்சிப் பதைபதைத்துக்கொண்டு நின்றுன். செட்டியார் அவனைப் பற்றி விசாரித்தவுடனே அவனுக்கு இடி விழுந்ததுபோல் ஆயிற்று.

"ஏன் அவனைத் தேடுகிறீர்கள்?" என்று தாசில்தார் செட்டியாரைக் கேட்டார்.

தாசில்தார் சேவகன் இருந்த பக்கத்தில் தம் பார்வையை திருப்பினதுதான் தாமதம்; அவன் ஓட்டமாக ஓடிவந்து செட்டியாருடைய காலில் விழுந்து, "உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை, சாமி! மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிச் செட்டியார் காலிலும் தாசில்தார் காலிலும் விழுந்தான்.

தாசில்தாருக்கு விஷயம் விளங்கவில்லை. "என்ன சமாசாரம்?" என்று கேட்டார்.

செட்டியார் சேவகனைப் பார்த்து, "என்னப்பா, உன் னுடைய எசமான் என்னிடத்தில் எவ்வளவு பிரியமாக இருக் கிருர் பார்த்தாயா? ஜாகையை விட்டு உடனே வேறு இடம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நீ கடுமையாக என்னிடம் சொல்லவில்லையா? இப்போது வந்து காலில் விழுகிருயே! உன் எசமான் எவ்வளவு பணிவாக இருக்கிருர்! உன் எசமான் அதிகாரத்துக்குமேல் உன் அதிகாரம் இருக்கிறதே! இனியாவது மற்றவர்களிடம் ஜாக்ரதையாக நடந்துகொள்ளப்

பழகிக்கொள்'' என்று சொல்லிவிட்டு முன் நிகழ்ந்ததை அங்கே இருந்தவர்களிடம் கூறினர். எல்லாரும் கேட்டு நகைத்தனர்.

"இப்படித்தான் தலைவர்களுக்குக் கெட்ட பெயர் வாங்கி வைக்கும் பேர்வழிகள் உயர்ந்த இடங்களிலும் உத்தியோக சாலைகளிலும் இருக்கிறார்கள்'' என்று தாசில்தார் சொன்னர்.

"நீங்கள் நல்ல பெயரையே வாங்கி வைக்கிறீர்கள். என்னுடைய அதிருஷ்டம் இது'' என்று செட்டியார் கூறி மேலே தாம் வந்த விஷயத்தைச் சொல்லி அநுகூலமாக முடித்துக் கொண்டார்.

வினக்கள்

1. செட்டியார், ஐயரவர்களிடம் திண்ணைப் பள்ளிக்கூடத்தைப் பற்றிக் கூறியது யாது?

2. சென்னைத் தமிழைப் பற்றிச் செட்டியார் யாது கூறினர்?

3. மடத்து அதிகாரி, தாசில்தார் தங்குவதற்கு எத்தகைய ஏற்பாடு செய்தார்?

4. செட்டியார் வருவதைக் கண்ட தாசில்தார், அவரை எவ்வாறு அணுகினர்?

5. "இந்தக் கர்நாடகம் இங்கே எதற்கு வருகிறது?''—இடஞ் சுட்டிக் காட்டுக.

கட்டுரைப் பயிற்சி

உமது பிரயாணத்திற் கண்ட அனுபவங்களைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. வைத்தியர், பரீக்ஷை, ஸ்நானம், கிராமம், ஞாபகம்—இவ் வட மொழிகட்குத் தமிழ் மொழி எழுதுக.

2. மதிப்பையும், செட்டியாருக்கு, புலவர், பள்ளிக்கூடத்தில்—இவற்றிலுள்ள வேற்றுமை உருபுகளைத் தனித்தனியாக எழுதி, இன்ன இன்ன வேற்றுமை என்றும் குறிப்பிடுக.

2. இலக்கியமும் விஞ்ஞானமும்

(மோ. ஸ்ரீ. செல்லம், எம். ஏ., எல். டி.)

மனிதன் தோன்றிய நாள்முதல் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்துக்குக் காரணம், உலகிடைக்காணப்படும் பொருள்களின் தன்மைகளை அவன் அறிந்துள்ள அறிவே என்று கூறலாம். இந்த அறிவைக்கொண்டு தான்காணும் பொருள்கள் அனைத்தையும் அவன் ஏதாவதொரு வகையில் தனக்குப் பயன்படுத்திக்கொள்ள முயல்கின்றான். இப்படிப் பார்க்கையில் அவனுக்குப் பயன்படாத பொருளே உலகில் இல்லை என்று துணிந்து கூறலாம். அவ்விதம் அப்பொருள்களைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்ள இயலச் செய்யும் அவனது அறிவை இலக்கியப் பகுதியென்றும் விஞ்ஞானப் பகுதியென்றும் இருபெருங் கூறுகளாகச் சொல்லலாகும். இலக்கியம் வெளிப் பொருள்களின் தன்மைகளை விடுத்து மனிதனது மனத்தையும் வாழ்க்கை லட்சியங்களையும் உருவாக்கவே பெரும்பாலும் முயல்கிறது. ஆகவே அது காலதேச வேறுபாட்டிற் கிணங்கவும், ஆங்காங்குள்ள சமுதாய வாழ்க்கைக்கொப்பவும் வேறுபட்டிருக்கும். ஆனால் விஞ்ஞானமோ, பொருள்களின் தன்மைகளை உள்ளது உள்ளவாறு உரைத்தலையே கொண்டிருக்கிறது. ஆகவே அந்நன்மைகள் காலதேச வேறுபாட்டினாலாவது, சமூக வேறுபாட்டினாலாவது பாதிக்கப்படாமல் எங்கும் எப்பொழுதும் ஒரே சீராய் இருக்கின்றன. இவ்விரண்டினால் ஏற்படும் உபயோகத்தின் தராதரத்தைக் கடவுளாலும் கூறமுடியாது. அந்த அந்தக் காலத்திற்கேற்பவும், அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளுக்குப் பொருத்தமாகவும் அவைகளின் உபயோகத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றுகின்றன.

இலக்கிய விஞ்ஞான அறிவின் சக்திகளை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்த இயலாது. அவைகள் எல்லையற்ற சக்திகள் பொருந்தியவை. இரண்டின் தன்மைகளும் வெவ்வேறானவை. அச்சக்திகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. அவை கடலிலும் ஆழமுடையன;

இமயத்தினும் உயர்ந்துள்ளன ; வான வெளியினும் மிகுந்த பரப்பையுடையன. இவ்விரு பகுதிகளையும் துருவி உள் நோக்கின் அவைகளுள் கோடிக்கணக்கான பல துறைகள் தோன்றுகின்றன.

இன்று மனித வாழ்க்கையைச் சற்றே கவனித்தோமானால், பஞ்ச பூதங்களையும் மனிதன் தன் விஞ்ஞான அறிவின் மூலம் அடிமையாக்கி, அவைகளை எந்த எந்த வகையில் தனக்கு ஊழியம் புரியச் செய்துகொண்டிருக்கிறானென்பது தெளிவாகும். விடியுமுன் எழுப்பக் கடிகாரம் முதல், பிரயாணம் செய்ய மோட்டார், ரயில், ஆகாய விமானம், கப்பல் வசதிகளும், தொலைவிலுள்ள செய்திகளை உடனுடன் கேட்க வானொலியும், தொலைப் பொருளைக் காண இயலச் செய்யும் கருவிகளும், ஏனைய பிறவும் விஞ்ஞான அறிவால் ஏற்பட்ட வசதிகளே அல்லவா ! விஞ்ஞான அறிவு இழக்கப்படின் மனித ஜீவ யாத்திரையே நடவாது போலவே தோன்றுகிறது. ஆனால் இதனோடு இன்னொரு கேள்வியும் எழ இடமில்லாமலில்லை. இந்த விஞ்ஞான அறிவின் பயனால் அன்றோ மனித சமூகம் தன்னை அழித்துக்கொள்ளப் புதுப் புது நாசகாரிகளையும் கொலைக்கருவிகளையுங்கூட, கண்டு பிடித்துத் தன் அழிவை நோக்கி விரைகின்றதென்றும் கேட்க முடியும். ஆனால் யோசித்துப் பார்த்தால் இந்நிலைக்கு விஞ்ஞான அறிவு காரணமன்று என்பது விளங்காமற் போகாது. மித மிஞ்சிப் புசித்த உணவு நஞ்சாகிப் புசித்தவனைக் கொல்வதுபோல, தேவைக்கு அதிகமாகவும், வகைமுறையின்றியும் கொள்ளப்படும் விஞ்ஞான அறிவினால் ஏற்படும் தீமைகளே அவை. பயன்படுத்துவோரின் பிழையால் அமுதும் நஞ்சாகலாம். ஆகவே விஞ்ஞான அறிவை உயர் வகைகளில் உபயோகிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப் போதுமான மனப் பண்பு ஏற்படின் அக் குறைபாடு நீங்கும். அவ்வகை மனப் பண்பு, இலக்கிய அறிவுப் பெருக்கத்தால்தான் ஏற்பட முடியும்.

மனித சமுதாயத்தின் அழிவை நாடாமல் நாம் முன்னேற வேண்டுமானால் இலக்கிய அறிவுப் பெருக்கத்தில் அக்

கறை கொள்வது அவசியமாகும். இம் மண்ணுலகுக்கு இறைவன் அளித்தருளிய அமிர்தமென்றே இலக்கியத்தைக் கூறலாம். உலக படைப்பின் தத்துவமே இலக்கிய படைப் பில் பிரதிபலிக்கிறது. உலக படைப்பின் தத்துவத்தின் 'பிரதிபிம்ப' மென்றே இலக்கிய படைப்புத் தத்துவத்தைக் கூறல் வேண்டும். இலக்கியத்துக்கு மூப்பில்லை, அழிவில்லை. அது என்றும் இளமைகொண்டு இலங்குகின்றது. இலக்கியச் சுவை கண்டோர் அதை எவ்வளவு பருகினும் தெவிட்டாது. மனிதனை மனிதனுக்குவது இலக்கிய அறிவே. வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை மனிதன் பரிகரித்துக்கொள்ள உதவி புரிவது இலக்கிய அறிவே. தம்முள் இயங்கும் ஆசை, பாசம், பகை, சினம், பொருமை, புறங்கூறல், முதலிய தீவிசை களால் தம் மனது அலைக்கப்படுதலை உணராதார் உளரோ? அப்போது வாழ்க்கையாகிய செடி வாடத் தொடங்குகிறது. அச் செடிக்கு மலர்ச்சியைத் தருவது எது? இலக்கிய அறிவே. அஃதின்றேல் மனிதன் விலங்காகிருன்; இருளால் சூழப்படு கிருன். அதன்முன் அவன் ஒளியை இழக்கிருன். அவ்வறிவே அப்போது அவனுக்கு உறு துணையாகி ஆறுதலையும், மனப் பண்பையும் தருகிறது. இவ்விதம் மனிதனின் உளம் வளம் பெற்று வராவிடில் நாளடைவில் மனிதனின் இலட்சியம் கீழ் நோக்கிச் செல்லுமாதலால் மனிதக் கூட்டம் விலங்குக் கூட்ட மாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

மனித சமுதாயம் முன்னேறி நல்வாழ்வில் இலங்க வேண்டுமானுல் இலக்கியம் விஞ்ஞானமாகிய இவ்விரண்டின் அறிவும் சமமாக முன்னேறி வருதல் இன்றியமையாததாகும். இவை இரண்டும் தொடர்பற்றவையல்ல. சிறிது கவனித்தால் இவைகளில் எது குறைவுபடினும் அதனுல் சமுதாயம் பாதிக் கப்படுவது தெரியும்.

இவை இரண்டும் ஒன்றற்கொன்று தொடர்புடையன என்பது எங்ஙனமெனில், விஞ்ஞான அறிவைப் பிறர்க்கு அளிக்கும் முறை இலக்கிய ஒழுங்கைச் சார்வதாகும். விஞ் ஞானமே இலக்கியத்துக்கு விஷயமாகின்றது. வேறு வகை யாகக் கூறின் ஒன்றில்லையேல் மற்றதும் இல்லை. ஆகவே

இவ்விரண்டு அறிவுத் துறைகளும் சமுதாயத்துக்கு இரண்டு கண்கள் எனத்தகும். இவ்விரண்டு கண்களும் எவ்வித ஊனமுமின்றி எப்பொழுது பாதுகாக்கப்படுகின்றனவோ அப்பொழுதே மனித சமுதாயம் அமைதியில் நிலவும் என்று கூறுவது உயர்வு நவிற்சியாகாது.

வினாக்கள்

1. இலக்கியம் என்பது யாது? அது காலதேச நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபாட்டிருப்பதேன்?
2. விஞ்ஞான அறிவால் ஏற்பட்டுள்ள வசதிகள் யாவை?
3. விஞ்ஞானத்தினால் ஏற்படும் தீமைகளை மனிதன் எதனைக் கொண்டு அழித்தற் கூடும்?
4. இலக்கியத்தின் நன்மைகள் யாவை?
5. இலக்கியமும் விஞ்ஞானமும் சமுதாயத்தின் இரு கண்கள்—இதனை விளக்குக.

கட்டுரைப் பயிற்சி

தற்கால விஞ்ஞானப் புதுமைகள் என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப்பயிற்சி

1. பொருள் விளங்குமாறு பின்வருவனவற்றை வாக்கியங்களில் அமைக்க. தராதரம், ஜீவயாத்திரை, பிரதிபிம்பம், அக்கறை, உடனுடன், உயர்வு நவிற்சி, ஏற்றத் தாழ்வு.
2. இதற்கு விஞ்ஞான அறிவு காரணமன்று என்பது விளங்காமற் போகாது - இதனைப் பொருள் கெடாது உடன்பாடாக மாற்றுக.
3. உணராதார் உளரோ?—இது என்ன வாக்கியம்? வினாக் குறியை எடுத்துவிட்டுப் பொருள் கெடாமல் வாக்கியத்தை மாற்றுக.

3. சிறு கதை *

(பூ. ஆலால சுந்தரம் செட்டியார், எம். ஏ.)

பல நூற்றாண்டுகட்கு முன்னர் மக்கள் விலங்குகளைக் கொன்று அவைகளின் பச்சை ஊனினைப்பதம் பண்ணத் தெரியாது புசித்து வந்தனர். தம் ஊன் பெருக்கற்குத் தாம் பிறிதூனுண்ணும் மக்கள் இறைச்சியினை அவித்தல், வறுத்தல் முதலிய இன்னோரன்ன முறைகளை உணர்ந்தாரில்லை. ஊனைச் சமைக்கும் வகையினை மாந்தர் எவ்வாறு அறிந்து கொண்டனர் என்பதை அடியிற்கண்ட கதையால் விளக்குவாம்.

சீன தேசத்தில் பெகின் என்ற சிற்றூரில் ஆதிரையன் என்பான் ஒரு சிறிய குடிசையில் வசித்து வந்தான். அவன் அநேக நாட்களாக வறுமைவாய்ப்பட்டு வருந்தினன். பன்றிக் குட்டிகளை மேய்த்து வருவதே அவனது தொழிலாகும். ஆதிரையனுக்குப் பத்து வயதுள்ள பகவன் என்ற ஒரு மைந்தன் உண்டு. பகவன் கூரிய அறிவும் சீரிய உணர்ச்சியும் வாய்ந்தவன். ஆனால் குறும்புத்தனத்தில் அவனினும் ஒப்பாரும் மிக்காருமில்லை என்று கூறுவது புனைந்துரையாகாது. பஞ்ச பூதங்களில் பகவனுக்கு நெருப்பைக் காண்பதில் விருப்பம் அதிகம். அவன் சில சமயங்களில் குச்சிகளையும் குப்பைகளையும் கொளுத்தி அதனால் உண்டாகும் தீயின் தன்மையினைக் கண்டு இன்புறுவான்.

ஒரு நாள் ஆதிரையன் தன் பன்றிக் குட்டிகளுக்கு உணவு கொண்டு வருவதற்காக வீட்டைத் தன் மகன் பகவன் வசம் ஒப்புவித்து ஒன்பது பன்றிக் குட்டிகளையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லித் தான் காட்டிற்குச் சென்றனன். தந்தை காட்டிற்குச் சென்றதைக் கண்ட மைந்தன் கழிபேர் உவகை கொண்டு சில குச்சிகளையும் வைக்கோலினையும் ஒன்று சேர்த்து அவைகளைக் கொளுத்தி அதனால் உண்டாகும் தீயின் ஒளியினைக் கண்டு களித்தான்.

* கட்டுரை விருந்து என்னும் நூலிலிருந்து சேர்க்கப்பெற்றது இது.

அதுபோழ்து அத்தீயின் ஒரு சிறு பொறியானது குடிசையிற் புக, குடிசை முழுதும் பற்றி எறிந்தது. குடிசையில் தீப் புகுந்ததைக் கண்டு பகவன் வெளியே வந்து விட்டான். சிறிது நேரத்திற்குள் குடிசை சாம்பலாய் விட்டது. இதைக் கண்ட பகவன் மிகவும் வருந்தினுன். அவன் குடிசையை இழந்ததற்கு வருந்தவில்லை. ஏனெனில், அவன் இதற்குமுன் தன் குறும்புத்தனத்தால் இரண்டு குடிசைகளைத் தீவாய்ப் படுத்தி யுள்ளான். ஆனுல் அவன் " அந்தோ, பன்றிக்குட்டி களைப் பறி கொடுத்தேனே!" என்று கதறினுன். தன் தந்தையின் வெகுளியினைக் கணமேனும் காத்தலரிது என் றுணர்ந்த மைந்தன், " அந்தோ, பால் மனமாருத இளம்பன் றிக் குட்டிகளை இழந்தேனே! எந்தை என்னை ஒறுப்பரே; யான் யாது செய்வேன்!" என்று வருந்தினுன்.

அது போழ்து அவன் அக்குடிசையின் பக்கத்தில் ஒரு நறுமணம் வீசக்கண்டான். அந்த நறுமணம் எக்காரணத் தாலாயது என்றும் எப்பக்கக்தினின்று வீசுசின்ற தென்றும் பகவன் உணர்ந்தானில்லை. அவன் அக்குடிசையின் நாற் புறமும் சுற்றிப் பார்த்தான். பார்த்தும் பயனில்லை. தான் பிறந்தது முதல் இதுவரையில் பகவன் இவ்வித நறுமணத் தைக் கண்டானில்லை. அச் சிற்றூர்க்கு அது ஒரு புத்தம் புதிய நறுமணமாகத் திகழ்ந்தது.

பிறகு பகவன் பன்றிக்குட்டிகளின் அருகே சென்று, அவைகளின் ஆவி அகத்ததோ புறத்ததோ என்பதை உணர வேண்டி அவைகளின் உடலைச் சிறிது தொட்டான். தொட்ட வுடன் தீப்பற்றிய குடிசையிலிருந்த பன்றிகளின் உடல் நன் ருக வெந்திருந்தபடியால் அவைகளின் கொழுப்பும் தசையும் பகவன் கையில் ஒட்டிக்கொண்டன. சுட்ட ஊனின் வெப் பத்தைத் தாங்கமாட்டாத பகவன் விரல்களை உடனே வாயில் வைத்துக்கொண்டான். உடனே அவன் சுட்ட ஊனின் சுவையினை உணர்ந்தான். இதுகாறும் அக்குடிசையில் வீசிய நறுமணம் சுட்ட பன்றியிறைச்சியின் பாற்பட்டது என் பதை அறிந்து கொண்டான். இது வரையில் அச்சிற்றூரில் வெந்த ஊனினைக் கண்ட மக்கள் ஒருவருமில்லை. முதல்

முதல் அச் சிற்றூரில் சுட்ட பன்றியின் சுவையை யுணர்ந்த பகவன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவன் குதித்தான், ஆடினன். "நாடினேன், நாடி நான் கண்டு கொண்டேன் சுடுபன்றி இறைச்சியின் மாட்சி!'' என்று பாடினன். பிறகு அப்பன்றியின் ஊனை உண்டு களித்தான்.

காட்டிற்குச் சென்ற ஆதிரையன் வீட்டிற்குத் திரும்பி வந்து குடிசை சாம்பலாகிய நிலையினையும், பன்றியின் ஊனுண்ணும் கழிபேர் இரையனாகிய மைந்தனையும் கண்டு வெகுண்டு, அவனைத் தடியால் நையப் புடைத்தனன். அவன் அடித்த அடி சுட்ட பன்றி ஊனில் திளைத்திருக்கும் பகவனுக்கு ஈ மொய்த்தது போன்றிருந்தது. அவன் தன் தந்தை வந்ததையும் கண்டானில்லை.

ஆதிரையன் : அடே, விலங்கே! அங்கே என்ன செய்கின்றாய்? இதுகாறும் மூன்று குடிசைகளை அழித்தது போதாதென்று கருதியோ இக்குடிசையினையும் தீவாய்ப்படுத்தினை.

பகவன் : என் அருமைத் தந்தையே! ஆ ஆ! என்ன அருமை! என்ன அருமை! இப்பன்றிகளின் அமிழ்தினுமினிய சுட்ட இறைச்சியினை யான் என்னவென்று கூறுவேன்! தயவு செய்து தாங்களும் இச் சுட்ட ஊனினை சாப்பிடுங்கள்.

ஆதிரையனுக்கு அடங்கா கோபம் பொங்கி வந்தது. அவன் மறுபடியும் தன் மைந்தனின் அரக்கத்தன்மைக்கு வருந்தி அவனை மீண்டும் வைதான். தான் பெற்ற இன்பம் தன் தந்தையும் பெறுதல் வேண்டுமென்ற பேரவாக்கொண்ட மைந்தன் மிக்க சூடாக உள்ள அப்பன்றி ஊனினை விரைவுடன் தன் தந்தையின் கையில் வைத்தான். ஆதிரையன் உடனே திடுக்கிட்டு அவ்வூனைக்கொண்ட விரலின் சூட்டைத் தாங்கமாட்டாது யாதுசெய்வதென்று தெரியாது வருந்தினன். பிறகு அவனுக்கு ஒரு யுக்தி பிறந்தது. அவன் விரல்களைக் குளிர்ச்சி செய்யும் வண்ணம் வாயில் வைத்துக்கொண்டான். இதுகாறும் பன்றியின் வெந்த ஊனின் தன்மையைக் கனவிலும் கண்டும் கேட்டு மறியாத ஆதிரையன் கொண்ட உவகைக்கு அளவே யில்லை. அவன் தன்னை மறந்தான்.

தன் உடலையும் மறந்தான். சுருங்கக் கூறுமிடத்து இவ்வுல கத்தையும் மறந்தான். பிறகு மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனும் அவன் மைந்தனும் பன்றியின் சுட்ட ஊனினைச் சுவைபட உண்டு களித்தனர்.

அக்காலத்தில் அச் சிற்றூரிலுள்ள மக்கள் அனைவரும் பச்சை ஊனினைப் புசித்து வந்தனர். அந்நிலையிலுள்ள மாந்தர் வெந்த ஊனின் மணத்தையும் தன்மையையும் உண ரார். ஆகவே 'ஆதிரையனும் அவன் மகனும் பன்றியைச் சுடும் வகையைச் சிற்றூரிலுள்ள மற்ற மக்களுக்கு உணர்த் தினரில்லை. தீப்பற்றிய வீட்டினுல்தான் பன்றி இறைச்சி யைச் சுட்டுத் தின்னலாம் என்று கண்ட தந்தையும் மைந்த னும் அடிக்கடி தங்கள் குடிசையில் பன்றிக்குட்டிகளை உள்ளே அடைத்துக் குடிசையைக் கொளுத்தி விட்டு வெளியே வந்து குடிசை முற்றும் எரிந்தபின் உள்ளே சென்று பன்றிகளின் வெந்த ஊனினைத் தின்று மகிழ்ந்து வந்தனர் இவ்வாருக அவர்கள் தாங்கள் குடியிருந்த குடிசையில் பன்றியை உள்ளே விட்டு அக்குடிசையினைச் சிலமுறை பகலிலும் பலமுறை இரவிலும் தீவாய்ப் படுத்தி அதனு உண்டான பயனைப் பெற்றனர். வீடு பற்றி எரிந்தால்தான் பன்றியின் ஊன் பதமாகும் என்றதொரு புதிய முடிவை அவர்கள் கண்டு பிடித்தனர்.

இவர்கள் குடிசை இவ்வாறு பலமுறையும் தீவாய்ப் படு தைக் கண்ட மற்ற மக்கள் ஆதிரையனும் அவன் மகனு செய்து வந்த காரியத்தை ஒரு நாள் கண்டுபிடித்து விட்டனர் உடனே அவர்கள் ஆதிரையன் செய்யும் காரியம் அடா என்று கூறி அவனையும் அவன் மகனையும் நீதி மன்றத்தி கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அன்று ஊரிலுள்ள மக்கள் அனைவரும் வேடிக்கை பார்ப்பதற்காக நீதி மன்றத்தில் வந்து நிறைந்தனர். குறித் நேரத்தில் நீதிபதியும் தம் இடத்தில் வந்து அமர்ந்தார் நீதிப தாம் தீர்ப்புச் சொல்லும் முன்னர் ஆதிரையன் குற் வாளியோ அல்லனே என்பதைப்பற்றி அங்குள்ள நடுவு நி யாளரின் (ஜூரிகளின்) கருத்தினைக் கேட்டார். அங்குள்

நடுவு நிலையாளருள் ஒருவர் அச் சுட்ட பன்றியின் ஊனினைப் பார்த்து அதிலுள்ள குற்றத்தைக் கண்ட பின்னரே தீர்ப்புச் சொல்வது சாலச்சிறந்தது என்றார். அவ்வாறே நடுவு நிலையாளர் அனைவரும் பன்றியின் சுட்ட ஊனினைத் தொட அச் சூட்டினைத் தாங்கமாட்டாத அவர்களும் தங்கள் விரலினைக் குளிர்ச்சி செய்யும் வண்ணம் வாயில் வைத்துக்கொண்டனர். அவர்களும் சுட்ட இறைச்சியின் மாட்சியை உணர்ந்தனர். அதனால் உடனே அவர்கள் ஆதிரையன் குற்றமற்றவன் என்று நீதிபதியிடம் கூற அவரும் 'அவ்வாறே தீர்ப்புக் கூறினார்.

நடுவு நிலையாளர் அனைவரும் ஆதிரையன் குற்றமற்றவன் என்று ஒரு மனப்பட்டுச்சொல்வதற்கு ஏதாவதுகாரணம் இருக்கவேண்டுமென்று நீதிபதி யூகித்து அறிந்துகொண்டார். பிறகு அவர் ஒரு தனியிடத்தில் சென்று அந்தச் சுட்ட இறைச்சியினைத் தாமும் தொட அச் சூட்டினைப் பொறுக்க மாட்டாது தாமும் தம் விரல்களைக் குளிர்ச்சி செய்யும் வண்ணம் வாயில் வைத்துக்கொண்டார். உடனே அவரும் சுட்ட ஊனின் உண்மையையும் தன்மையையும் அறிந்து வீட்டை எரித்தால் தான் பன்றியின் ஊனைச் சுட்டுத் தின்னலாம் என்ற முடிவை அறிந்து கொண்டார். மறு நாள் நீதிபதி வீட்டிலும் தீப்பற்றி எரிந்தது. அவரும் தம் வீட்டில் பன்றியை உள்ளே வைத்து வீட்டைக் கொளுத்தி அதனாலுண்டாகிய சுட்ட பன்றி இறைச்சியை உண்டு உவந்தனர். வீட்டைச் சுட்டால்தான் பன்றியின் வெந்த ஊனினைத் தின்னலாம் என்பதை அச்சிற்றூரிலுள்ள மக்கள் அனைவரும் அறிந்து கொண்டனர். அன்று முதற்கொண்டு அவ்வூரில் ஒவ்வொரு வீடும் பற்றி எரிந்தது. விறகின் விலையும் பன்றிக்குட்டிகளின் விலையும் உயர்ந்து விட்டன. ஒவ்வொரு நாளும் சுமார் ஐம்பது வீடுகள் தீவாய்ப்பட்டன.

பிறகு கொஞ்ச நாட்கள் சென்றவுடன் வேற்றூரிலுள்ள ஒருவர் அச் சிற்றூருக்கு வந்து சேர்ந்தார். அம் மக்களின் அறியாமையைக் கண்ட அவர் அவ்வூரிலுள்ள மக்களுக்குப் பன்றியின் இறைச்சியையும் மற்ற விலங்குகளின் இறைச்சி

யினையும் சுடும் விதத்தினை எடுத்து விளக்கினர். பன்றி இறைச்சியினைப் பதம் செய்வதற்கு வீட்டை முழுதும் எரிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும், அடுப்பில் வைத்து ஊனைச் சுடலாமென்றும் கூறி அம்மக்களுக்கு அறிவுறுத்தினர். பின்னர் நாகரிகம் முற்றியவுடன் எல்லா மக்களும் பன்றி இறைச்சியினையும் மற்ற விலங்குகளின் இறைச்சியினையும் எம்முறையில் வேக வைத்தல், வறுத்தல், சமைத்தல் என்பன யோன்ற முறைகளை உணர்ந்து கொண்டனர்.

பன்றிக் குட்டிகளின் அழகே அழகு! அவைகளுக்குப் பொய் சொல்லத் தெரியாது. புறங்கூறத் தெரியாது. அவைகள் யானைக் குட்டிகள் போல் நடக்கும் நடையினை வியவாதார் உளரோ! இக்கட்டுரை (Charles Lamb) சார்லஸ் லாம்ப் என்ற ஆங்கில ஆசிரியர் ஆங்கிலத்தில் எழுதிப்போந்த (A dissertation upon yoast pig) "சுட்ட பன்றி" என்ற கட்டுரையினைத் தழுவிய தாகும்.

வினாக்கள்

1. பகவன் என்பானின் குறும்புத்தனத்தைக் குறிப்பிடுக.
2. குடிசையின் பக்கத்தில் நறுமணம் வீசக் காரணம் யாது?
3. ஆதிரையன். "இக்குடிசையினையும் தீவாய்ப் படுத்தினை" என்றதற்குப் பகவன் யாது கூறினன்?
4. நடுவுநிலையாளர் ஆதிரையன் குற்ற மற்றவன் என்று ஏன் கூறினர்?

கட்டுரைப் பயிற்சி

மக்கள் உப்பினை உபயோகிக்கத் தெரிந்துகொண்டதைப்பற்றி ஒரு கற்பனைக் கதை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. பெயர்களைக் கூறுக.
   உண்ணுவது, பொருவது, அழிப்பது, விடுப்பது.
2. பொருள் வேற்றுமை காண்க.
   பொறி - பொரி, எரிந்த - எறிந்த, ஊன் - ஊண்.

4. தென் கன்னடம்

(கடிதம்)

(ந. வெங்கடராமன், பி. ஏ.)

மங்களூர்.
நாள் 20–10–52.

அனுப்பல் : செங்குட்டுவன்,
அம்பன்கட்டா, மங்களூர்.

அன்புமிக்க நெடுஞ்செழியனுக்கு,
நண்ப,

நலம். வணக்கம் பல. நான் தென் கன்னட மாவட்டத் தலைநகராகிய இம் மங்களூருக்கு வந்து ஒரு திங்களுக்கு மேலாகியும், இன்றுதான் உனக்கு முடங்கல் எழுத ஒய்ந்தது. அதுவும் நன்மையேயாயிற்று. ஏனெனில் இம் மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்து நான் பெற்ற அறிவை உனக்கும் ஊட்டலாமல்லவா ?

தென் கன்னடம் ஒரு நீண்ட மாவட்டம். தென் மலையாள நாடும், வடபால் வட கன்னடமும் (பம்பாய் மாநிலம்) அமைய, மேலைக்கடல் மேற்கே தழுவ, மேலைத் தொடர்மலை கிழக்கே எல்லை வகுக்க, மலையாறு பல நிலைபெற்றதாய் விளங்குவதுதான் இந்த மாவட்டம். மேலை மலையில் இம் மாவட்டத்திற்கு அணித்தாக உள்ளவை மைசூரும் குடகும். கன்னித் தமிழகம் கண்ட வறட்சியும், வளக் குறைவும், கன்னடம் காணுதவையாக இருப்பது இவ்வமைப்பினுல் என்ருல் மிகையாகாது.

ஒருநாள் நான் மங்களூரைவிட்டு வடபாலுள்ள உடுப்பி என்ற கடற்கரைப் பேரூருக்குச் செல்லவேண்டியதாயிற்று. கடலோரமாகச் சென்ருல் சுமார் முப்பது கல். ஆனல் ஆறுகள் கடந்தாகவேண்டும். பஸ் (Bus) ஆற்றைக் கடக்க முடியாது. இக்கரையில் இறங்கிப் படகில் சென்ருல் அக்கரையில் மற்ருெரு பஸ் காத்திருக்கும். இத் தொல்லையைப் போக்க வேறு வழி உண்டு. அதுதான் மங்களூர் - மூடுபத்ரி-கார்கல் - உடுப்பி வழி. சுமார் அறுபது கல் தொலைவு.

அறுபது கல்லென்ன, அறுநூறு கல்லும் செல்லலாம் இத் தகைய செல்வழி கிட்டினுல்! நெய்தலில் நெகிழ்ச்சிகொண்ட மனம் இவ் வழிகாணும் குறிஞ்சியில், மருதத்தில், முல்லையில் முறுவல் கொள்ளும். இத்தகைய நீண்ட வழி உடுப்பிக் கப்பாலுள்ள குந்தாப்பூருக்கும் உண்டு. ஒருமுறை அவ்வழி சென்ற நான் 'சோமேச்வர்' என்ற மலையடிவாரச் சிற்றூரை யடைந்தேன். அம்ம! அடுத்தோங்கி வளர்ந்த மைசூர் மலையடுக்கத்தைக் கண்டேன்; சிறு நடுக்கங் கொண்டேன்.

"மந்த மாருதத்தில் வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லு மங்குன்
செம்மை தோன்று மன்றே!"

என்ற அமரகவியின் அருள் வாக்கினை எண்ணி அகந் தெளிந்தேன்.

மற்ருெருமுறை 'விட்டல்' என்ற ஊருக்குச் சென்றேன். "பன்மலையடுக்கம்" என்ற தமிழ்த் தொடரின் உண்மைப் பொருளைக் கண்டேன். அங்குப் பள்ளத்தாக்கிலெல்லாம் பாக்கைப் பயிரிடுவார் பட்டர்களே. அவர்கள் வேளாண்மை புரிவதை, அதுவும் தாமே ஏர் பிடித்து ஏற்றம் கொண்டதை வேறெங்கும் நான் கண்டதில்லை. பலாவும் முந்திரியும் அங்கே பரந்த விளைவு.

இந்த மாவட்டத்துக்கு மேகங்கள் தாம் நல்குவது தவரு தாகையால் நீரும் நெல்லும் நிலையாகக் கிடைக்கும்; தென்னை செழித்து வாழும். உழைத்து உணவளிப்போர் மிகுதியும் துளுமொழி பேசும் தொன்மையாளர். சொத்து முறையில் "மருமக்கள் வழி"யைக் கைக்கொள்ளுவோர் "பண்ட்" (Bund) என்ற தொன்மைத் துளுவினராவர். இம் மாவட் டத்துக்கு இலக்கிய மொழி கன்னடமேயாலுைம், கன்னடப் பேசக்கூடத் தெரியாத பல்லாயிரம்பேர் தொலைச் சிற்றூர் களில் இன்றும் வாழ்கின்ருர்கள்.

கொங்கணி என்ற மொழியைப் பேசுவோர் இந்நாட்டின் பழங்குடிகளாக இருக்க முடியாது. அவர்தம் மொழி தோற்றம் முதலியவற்ருல் இவ்வுண்மை விளங்கும். மேலும்

5. பசுவும் பாரதமும்*

(ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.)

பசு வளர்ப்புக்குத் தாயகம் இந்தியா. பசுக்கலை இங்கிருந்தே உலகின் பல்வேறு பாகங்களுக்குப் பரவியிருக்கிறது. வேறு நாட்டவர் பசுவை ஒரு செல்வப்பொருளாகவே கருதி வருகிறார்கள். இந்துக்களுக்கு இது செல்வப்பொருள் மட்டும் அன்று; இது வகிக்கும் ஸ்தானம் தர்மத்தோடு ஒன்றியது, மதச்சார்பு பெற்றது.

தெய்வத் தன்மை: காலையில் எழுந்து கோதரிசனம் செய்வது புண்ணியமாகும். பசுவின் வாலில் திருமகள் இருக்கிறாள் கோ பூஜை விசேஷ பலனைத் தரத்தக்கது. சுப காரியங்களிலாயினும் சரி, அசுப காரியங்களிலாயினும் சரி, பசுவை பூஜித்துவிட்டு அதனைத் தகுதிவாய்ந்தவர்க்குத் தானம் செய்யவேண்டுமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. நம்மவர் தூங்கி யெழுந்ததும் பசுவைக் கட்டியிருக்கும் கொட்டிலுக்குச் சென்று அதனைத் தொழுது வந்தார்கள். தொழும் இடம் தொழுவம் என்று பெயர் பெற்றது. சிலர் ஆவணி மாதத்தில் பௌர்ணமியின் முன் வெள்ளிக்கிழமை யன்று வரலக்ஷிமி விரதத்தைச் செய்வதுண்டு. மாடுகள் மேய்ச்சல் நிலத்திலிருந்து வீடுதிரும்பும் அந்தி நேரத்தில் அதனைச் செய்யவேண்டுமென்று விரத கல்பம் என்ற நூல் கூறும். அந்தி நோத்தில் மாடுகளோடு திருமகள் வீட்டுக்கு வருகிறாள் என்பது நம்பிக்கை. கோ பூஜை, பசுக்களை மேய்த்தல் முதலியவற்றின் உயர்வைக் காட்டப் புராணங்களிலும், காவியங்களிலும் பல கதைகள் உள்ளன. திலீபன், விசார சருமர் என்னும் சண்டேசர் முதலியவர்கள் பசுக்களின் வாயிலாகவே பேறு பெற்றிருக்கிறார்கள். சாந்தத்துக்கும் தாயின் அன்புக்கும் நம்மவர் பசுவையே எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

பசு ஓர் இன்றியமையாத பொருள்: இந்துக்களுடைய ஒழுக்கங்கள் எல்லாம் உடல் நலத்தையும் பொருளா

* மயிலாப்பூர் கிராம ஜோதி நூலகத்தாரின் அநுமதியுடன் கறவைமாடு என்ற நூலிலிருந்து சேர்த்துக்கொள்ளப் பெற்றது.

தாரத்தையும் மதத்தையும் ஒட்டியமைந்துள்ளன. அவற்றின் உட்பொருளை யறியாதவர்கள், "இந்த ஒழுக்கங்கள் வீண்" என்று கருதக்கூடும். ஆராய்ச்சி இல்லாத அபிப்பிராயங்கள் தள்ளற்பாலன. ஒவ்வொரு குடும்பத்தாரும் பசுவை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நம் பெரியோர் சில ஏற்பாடுகளை அமைத்திருக்கிறார்கள். காலையில் எழுந்து வீடுகளைச் சாணத்தினால் சுத்தம் செய்தல் அவற்றுள் ஒன்று. பால், தயிர், மோர், நெய் இவை இந்துக்களின் உணவில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. நெய்யில்லையேல் சோறு பாழாம், 'நெய்யில்லா உண்டி பாழ்' என்பர் நம்மவர். விபூதி எங்கேயிருந்து உண்டாகின்றது? அதன் பெருமை யாது? இவ்வளவும் பசு வளர்ப்பைச் சூழ்ந்துள்ள ஒழுக்க நியதிகள்.

பொருள் நிலை: நாணய மாற்றப் பழமையானது அன்று. பண்டைக் காலத்தில் பண்டமாற்றே எங்கும் இருந்தது. அக்காலத்தில் பசுக்களே செல்வமாகக் கருதப்பட்டு வந்தன. பசு என்ற செல்வப் பொருளைக் குறிக்கும். தமிழில் பொன்னுக்கு மாடு என்ற பெயர் உண்டு. தெலுங்கில் சொம்முலு என்ற செல்வத்தைக் குறிக்கும் சொல் பசு என்ற பொருளிலும் நூல்களில் வழங்கும். வடமொழியிலும் இப்படியே. நினைத்தவற்றைத் தரத்தக்கவைகளுள் காமதேனு (தெய்வப் பசு) ஒன்று என்பர்.

ஒரு நாட்டின் செல்வநிலை உயர்வதற்குக் காரணமாக உள்ளவை பசுக்களும் அறிவுமே. எந்தத் தேசத்தில் பசுக்கள் சிறக்கின்றனவோ, அறிவை வளர்க்கும் வகுப்பார் தம் தொழில்களை நேரிய முறையில் செய்கிறார்களோ, அந்தத் தேசம் செல்வ நிலையில் உயர்ந்ததாகும் என்று நம் முன்னோர் கருதி வந்தனர். அவர்களுடைய வாழ்த்துக்களில் பசுவின் வாழ்த்தும் அறிவின் வாழ்த்தும் சேர்த்துக் கூறப்படும் 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்பது தேவாரம். இங்கே அந்தணர் என்ற சொல் அக்காலத்து அறிவை வளர்த்துப் பெருக்கி வந்த ஒரு வகுப்பாரைக் குறிக்கும். ஆவினம் என்றது பசுக்கூட்டங்களை. 'ஆக்கள்' என்னுது 'ஆவினம்' என்றமையால் பசுக்கள் பெருகுவதற்கேற்ற காளைகளும்

அடங்கும். இதே கருத்துடன் ஐங்குறுநூறு என்னும் நூலில், ‘பால் பல ஊறுக பகடுபல சிறக்க’ என்ற தொடர் ஒன்று இல்லக் கிழத்தியின் வாழ்த்தாகக் காணப்படுகிறது. “அரச னுடைய செங்கோலின் கீழ் ஆக்களும் அறிவும் பெருகும். அரசன் இவற்றையே முதலிற் பாதுகாக்க வேண்டும்” என்று நூல்கள் கூறுகின்றன.

“ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்”

என்பது வள்ளுவர் வாக்கு.

தமிழரும் பசுக்களும் : தமிழ் நூல்கள் பசுக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற நிலம் காடும் அதனைச் சார்ந்த இடமும் என்று கூறும். இது முல்லை நிலம் எனப்படும். பசு வளர்ப்பில் கைதேர்ந்தவர்கள் ஆயர், எனப்படுவர். இவர்கள் முல்லைநில மக்கள். பாலை மிகுதியாகத் தருவதனால் எருமைகளும் பசுக் களைப்போலவே ஆயர்களால் மதிக்கப்பெற்று வந்தன. ஆயர் கள் தங்கள் பெண்களுக்கு மணம் செய்யும் நாளில் எருமைக் கொம்பைத் தெய்வமாகக் கொண்டு போற்றி வந்தார்கள் என்ற செய்தி கலித்தொகை என்ற நூலில் கூறப்படுகிறது.

“தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி
எருமைப் பெடையொடு எமரிங் கயரும்
பெருமணம்”

என்ற கலி (114-12-14) அடிகளையும் அதற்கு நச்சினார்க் கினியர் என்ற பழைய உரையாசிரியர் ‘கொண்டுவந்து குவித்த மணலைத் தங்கப் பரப்பி, இல்லைச் செம்மண்ணைப் பூசி, தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம் போடே எம்முடைய சுற்றத்தார் நடத்தும் பெண் பிள்ளைக் கலியாணம்’ என்றெழுதும் உரையையும் காண்க. மாடு என்ற சொல் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் பொதுவான சொல்லே யன்றோ?

ஓர் அரசன் தன் பகை நாட்டின் மேல் போர் தொடங்கு வதற்கு முன் அந்நாட்டில் உள்ள பசுக்களுக்குப் போரினால் துன்பம் நேராதபடி அவற்றை முதலில் கவர்ந்து சென்று விடுவது தமிழ் மரபாகும். அவர்கள் அவற்றைக் கவரும்

முறையும், அவைகளுக்கு வழி நடைக் களைப்புத் தோன் றுதபடி அவைகளை நிதானமாக ஓட்டிச் செல்லும் விவரமும் பிறவும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் அழகாகக் கூறப்படுகின்றன.

பல பசுக்களை வைத்திருப்பவர் அவைகளிடம் நல்ல சந்ததிகள் தோன்றுவதற்காக ஒரு பொலிகாளையையும் வைத் திருந்தனர். 'விடை யுடை இனநிறை,' 'இனத்திடை ஏறனையான்', 'ஆனிறை இனத்து அலங்கல் ஏறனுன்' என்ற தொடர்கள் இதனை வலியுறுத்தும்.

மாட்டுப் பொங்கல் தமிழ் மக்களுக்கு முக்கியமானது. ஆயர்கள் ஒரு காலத்தில் இதனைக் கார்காலத்தில் செய்து வந் தார்கள். பசுக்களைக் காப்பாற்றும் கடவுள் இந்திரன் என்று கொண்டு அவனை அவர்கள் கார்காலத்தில் வழிபட்டு வந்தமை பாகவதத்தால் தெரிகின்றது.

பழங்காலத்தில் ஊர்தோறும் மாடுகள் மேய்வதற்கேற்ற பொதுநிலம் இருந்தது. அது '**மந்தை வெளி**' என்றும், '**குறை**' என்றும், '**நத்தம்**' என்றும், '**கற்ருப்புல்**' என்றும் வழங்கும்.

பாலின் மிகுதி : இக் காலத்தில் நாம் ஆஸ்திரேலியா மாடுகளைப் பற்றியும், இங்கிலீஷ் மாடுகளைப்பற்றியும் சுவை தரும் பாலின் அளவை உத்தேசித்துப் புகழ்ந்து பேசுகிறோம். நம் தென்னுட்டில் பசுக்கள் ஒரு காலத்தில் குடம் நிறையப் பால் கொடுத்து வந்தன என்பதைக் கேட்டால் அதில் பல ருக்கு நம்பிக்கை இராது.

மாடுகளுக்குத் தமிழில் குடம் சுட்டு என்ற பெயர் வழங்கி வந்ததுண்டு. அதாவது ஒரு மாட்டைக் குறிப்பிடும் காலத்தில் 'ஒரு குடம் மாடு' 'இரண்டு குடம் மாடு' என்று அது தரும் பாலின் அளவைக் கொண்டே அதைக் குறித்தார்கள்.

பசுக்களை வருணிக்கும்போது புலவர்கள் அதன் மடி யைத்தான் அதிகமாகக் குறிப்பிடுவார்கள். பாலின் சுரப்பு அவைகளுக்கு இயல்பாக அமைந்திருந்தது. கறக்கும் நேரம் வந்துவிட்டால் பாலின் நிறையைப் பசுக்கள் பொறுமல்

கன்றுகளை எண்ணித் தாமாகவே பாலைத் தரையில் சுரந்து விடுமாம்.

வளர்ப்புக் குன்றிய வரலாறு: ஆவோம்பலுக்குத் தெய்விகத்தை இணைத்து வந்த நம் நாட்டில் அன்னியர் பிறரும் வந்து குடியேறினர். வந்தபின் பசுக்களின் தெய்விகத் தன்மை பாதிக்கப்பட்டது. இவருள் பலர் ஊனின்பொருட்டுப் பசுக்களைக் கொன்றனர். இந்துக்களும் தோலின் பொருட்டு மாடுகளை விற்கவும் துணிந்தனர்.

நம் தமிழ் நூல்களிலாயினும் சரி, வடமொழி நூல்களிலாயினும் சரி பசுக்களின் நோய்களைப் பற்றிய பிரஸ்தாபம்—கடுமையான நோய்களைப் பற்றிய குறிப்பு—காணப்படாது. பசு வாகடத்திலும் (பசுக்களைப் பற்றிய வைத்திய நூல் இது) இப்பேச்சு இல்லை. இந்த நோய்கள் புதியனவாக இக்காலத்து வந்தவை.

கால் நடைகளின் நோய்களை எளிதில் பச்சிலை முதலிய வற்றால் தீர்க்கும் வைத்தியர் பலர் நம் நாட்டில் இருந்தார்கள். ஆங்கிலேயர் பிராணி வளர்ப்பு இலாகாவை இங்கே அமைத்து மேல் நாட்டு வைத்திய முறையில் பயிற்சி கொடுத்து மிருக வைத்தியர்களை உண்டு பண்ணினார்கள். அவர்களின் வளர்ச்சியினால் நாட்டு வைத்தியம் பலம் குன்றி விட்டது. பிராணி வைத்தியர்கள் ஊசிபோடும் முறைகளைப் புதியன புதியனவாகக் கண்டுபிடித்து வருகிறார்கள். நோய்களும் இவர்களுடைய ஆராய்ச்சிகளுடன் போட்டியிட்டுக் கொண்டு முளைத்து வருகின்றன.

நம் நாட்டு மாட்டு வைத்தியம் ஒடுங்கிவிட்ட போதிலும் அதற்கு இன்னும் குற்றுயிர் இருக்கிறது. அதை உயிர்ப்பித்தல் பெரிய காரியம் அன்று. அரசாங்கம் ஊக்கம் காட்டி இந்த மேல் நாட்டு வைத்தியர்களை, நம் நாட்டு வைத்திய முறையையும் ஆராயச் செய்தால் நமக்கு எத்தனையோ நன்மைகள் ஏற்படக் கூடும். சுதந்தர நாட்டில் சொந்த ஆராய்ச்சிகள் பெருகவேண்டும்.

வினாக்கள்

1. பசு தெய்வத்தன்மை யுடையது என்பது எங்ஙனம்?

2. பொருள்நிலைக்குப் பசுக்கள் இன்றியமையாதன என்பதை விளக்குக.

3. பழந்தமிழர் பசுக்களை எவ்வாறு போற்றி வந்தனர்?

4. பழங்காலத்தில் நம் நாட்டில் பசுக்கள் மிகுதியான பாலை கொடுத்தன என்பது எங்ஙனம்?

5. ஆவோம்பல் பிற்காலத்தில் குன்றக் காரணம் யாது?

கட்டுரைப் பயிற்சி

பசுக் காத்தல் என்பது பற்றி ஒரு கட்டுரைவரைக.

மொழிப் பயிற்சி

1. வாக்கியத்தில் அமைக்க: மரபு, வழிநடை.

2. பெயர்க் காரணம் கூறுக: தொழுவம், மந்தைவெளி, கற்றுப்புல்.

3. இளைப்பு - களைப்பு, முறை, குறை - இவற்றின் வேறுபாடு யாது?

6. பல நாட்டு மக்களின் பழக்கவழக்கங்கள்*

(சோம. லெ. இலக்குமணஞ் செட்டியார், பி. ஏ.)

"புதிதாக ஒரு நாட்டுக்குப் போகுமுன் அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை நன்ருகக் கேட்டுத் தெரிந்து கொள்" என்பது கன்ப்யூசியஸ் என்ற சீனப் பெரியார் வாக்கு. "ரோமர்களைப் போலவே ரோமாபுரியில் நடந்து கொள்" என்ற பழமொழியும் இவ்வாக்கைத் தழுவியதே. ஆயினும் நான் புதிய நாடுகளுக்குச் சென்ற பின்னரே அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை அறிய நேர்ந்தது. அவைகளையே இக்கட்டுரையில் குறிப்பிடுவேன்.

ஒரு நாட்டு மக்களைப்பற்றி பொதுவாகச் சொல்லுவது சரியன்று. ஒருநாள், லண்டனில் ஸ்ட்ராண்டு சாலையில், ஸ்காட்லாந்துக்காரர் இருவர் என்னைப் பார்த்து, நான் இந்தியன் என்பதை அறிந்துகொண்டு, மகாத்மா காந்தியடிகளின் மரணத்தைப்பற்றி என்னிடம் துக்கம் விசாரித்தனர். பேசிக்கொண்டே சிறிதுதூரம் நடந்தோம். அது பகல் உணவு நேரமாக இருந்ததால், அருகிலிருந்த ஓர் உணவு சாலைக்குச் சென்றேன். அவர்களும் என்னைப் பின்தொடர்ந்தனர். ஒரே மேசையருகிலேயே என்னுடன் அவர்களும் அமர்ந்தனர். இவ்விருவருமே நான் முதன்முதலாகக் கண்ட ஸ்காட்சுக்காரர் ஆவர். ஸ்காட்லாந்துக்கு நான் போனதில்லை. ஸ்காட்சுக்காரர் கணக்கில் வல்லுநர் என்றும், மிகச் சிக்கனமானவர் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அந்த ஸ்காட்சுக்காரரைக் கண்டவுடன் பல ஆண்டுகளுக்குமுன் நான் படித்த பின்வரும் பத்திரிகைக் குறிப்பு என் நினைவுக்கு வந்தது. அதாவது "ஓர் ஆங்கிலேயருடைய தலை வழுக்கையாயிற்று :—திரும்பவும் மயிர் வளரும்படி செய்ய அவர் பெரும் பொருள் செலவுசெய்தார்; ஒரு ஸ்காட்சுக்காரரின் தலை வழுக்கை ஆயிற்று; அவர் உடனே சீப்பை விற்று

* இக்கட்டுரை ஆசிரியர் அநுமதியுடன் அவரெழுதிய 'நான்கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்' என்னும் நூலிலிருந்து கொள்ளப்பெற்றது.

விட்டார்!" என்பதாகும். அதனால் நானே அந்த ஸ்காட்சுக் காரர்களுக்குச் சேர்த்து பணம்கொடுக்க முற்பட்டேன். ஆனால் அவர்கள் எனக்கும் சேர்த்துத் தாமே பணம் செலுத்தினர். விருந்தினரைப் பேணும் பண்பு நம் நாட்டவரின் தனி உரிமை அன்று; எல்லா நாட்டினருக்கும் பொதுவான பழக்கம் என்பதைச் சொல்லவே இந்நிகழ்ச்சியைப்பற்றி இங்கு விரிவாகக் குறிப்பிட்டேன்.

விருந்தோம்பும் முறை :

"உண்டிக்கழகு விருந்தோடுண்டல்" என்ற நமது பழமொழியைப் போல "வீட்டில் ஒரு விருந்தினர் இருப்பது வீட்டில் ஒரு கடவுள் இருப்பது போலாகும்" (guest in the home is God in the home) என்று 'செக்' மொழியில் ஒரு பழமொழி இருப்பதாகப் பிராட்டிஸ் லாவா நகரில் ஒரு நண்பர் கூறி, அவருடைய பங்கீட்டுச் சீட்டுக்குரிய பொருள்களை எனக்குத் தரலாம் என்று நான் தங்கியிருந்த உணவு விடுதி அதிகாரிக்குத் தெரிவித்தனர்.

ஆனால் மேனாட்டவர்கள் விருந்தினர் எத்தனைபேர் என்பதையும், யார் யார் என்பதையும், எப்பொழுது வருவார்கள், எவ்வளவு நாட்கள் தங்குவார்கள் என்பதையும் முன்பே அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். முன் அறிவிப்பின்றி விருந்தினர் வருவதால் தம் திட்டங்கள் சீர்குலைந்து போகும் என்பதே அவர்கள் கருத்தாகும். மேலும் அது தனிப்பட்டவரின் உரிமையைக் கட்டுப்படுத்துவதாகும் என்றும் மேலைநாட்டவர் எண்ணுகின்றனர்.

உரிமையைப் பேணுதல் :

ரயில் பிரயாணம் செய்யும்போது, டிக்கட் சோதிப்பவர், உறங்குபவரைத் தட்டி எழுப்பினால் அது அவருடைய உரிமையில் தலையிட்டதாகும் என்று நினைக்கும் அமெரிக்கர் தம் நாட்டு ரயில்களில், ஒவ்வொரு பிரயாணியின் இடத்துக்கு எதிரிலும், டிக்கட்டைப் பிடித்துக்கொள்ளக்கூடிய ஒரு கைப்பிடியை வைத்திருக்கிறார்கள். பிரயாணிகள் ரயிலில் ஏறிய

வுடன், டிக்கட்டை அவ்விடத்தில் செருகி விடுகிறார்கள். டிக்கட் சோதிப்பவர் டிக்கெட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சரிபார்த்து, அவற்றில் துளை யிட்டுவிட்டு, மீண்டும் அங்கேயே வைத்து விடுகிறார்.

இந்த உரிமை மனப்பான்மையால் மேல்நாடுகளில் ஒருவர் செயலில் மற்றொருவர் தலையிடுவதில்லை. மகன் திருமணத்தை முடிவு செய்வதில் அவன் பெற்றோர் தலையிடுவ தில்லை. எந்தச் செயலிலும் ஒருவனுடைய திட்டத்தில் அவன் நண்பர்கள் குறிக்கிடுவதில்லை. கணவனுக்கு வரும் கடிதத்தை மனைவி பிரிப்பதில்லை. மனைவிக்கு வரும் கடிதத் தைக் கணவனும் பிரிப்பதில்லை.

குழந்தைகட்கு மேனாட்டார் கொடுக்கும் உரிமை எல்லை யற்றது. "அமெரிக்காவைப்பற்றி எனக்கு வியப்பைத் தருவது, அங்கே பெற்றோர்கள் தம் குழந்தைகட்குக் கீழ்ப் படிந்து நடக்கும் முறையே யாகும்" என்று வின்ஸ்டர் கோமான் ஒருமுறை விளையாட்டாகச் சொன்னார். பிரயா ணத்தின்போது, குழந்தைகள் துன்பப்படாமல் இருப்பதற் காகப் பிரிட்டனில் அவர்களைச் சிறு பிரம்புக் கட்டிலில் போட்டு அக்கட்டிலைக் கணவனும் மனைவியுமாகப் பிடித்துக் கொண்டு செல்லுவர்.

தொழிற் சிறப்பு :

சில குறிப்பிட்ட தொழில்களைச் செய்வது இழிவு என்ற கேடு தரத்தக்க மனப்பான்மை வேறு நாடுகளில் இல்லை. வேலை செய்வதில் உயர்வு தாழ்வு கிடையாது; எல்லா வேலை யும் கடவுளின் தொண்டு; அது மக்களை உயர்த்துவது என்பதே அவர்கள் கருத்தாகும். பற்பல நாகரிக முன்னேற் றங்கள் இருந்தும், துணிதுவைத்தல், வீடு சுத்தம் செய்தல், பற்றுத் தேய்த்தல், அசுத்தங்களை அகற்றுதல் ஆகிய வேலை களைப் பிறர் உதவி இன்றி ஒவ்வோர் அமெரிக்கனும் தானே செய்கிறான்.

ஜெர்மானியரும் அமெரிக்கரும் 'தம் வேலையைத் தளராத ஊக்கத்தோடும் நல்ல மன நிலையோடும் செய்கின்றனர்.

ஹிரோசீமாவில் அமெரிக்கர் போட்ட அணுகுண்டிலிருந்து சிதறிய சிறுசிறு சில்லிகளை, ஒரு சில்லி 5 டாலர் (ரூ. 23-12-0) விகிதம் அமெரிக்கருக்கே விற்றனராம். இதுவரை அமெரிக்கர் தாம் போட்ட அணுக்குண்டையே 5 லக்ஷம் டாலருக்கு வாங்கிக் கொண்டிருப்பதாக ஒரு பத்திரிகை கேலியாக எழுதியிருந்தது.

புது வழக்கம் :

பிறந்த நாள் விழா, திருமண ஆண்டு விழா, நண்பர்களை முதன் முதலிற்கண்ட நாள் விழா, இவற்றையெல்லாம், வாழ்த்துச் செய்திகள் அன்பளிப்புகள் அனுப்பியும் விருந்துகள் நடத்தியும் கொண்டாடுவது பல நாடுகளில் இப்பொழுது புது வழக்கம் ஆகிவிட்டது.

பிறர்க்கு உதவி செய்தல் :

வாழ்க்கையில் தம்மைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் நம்மைப்போல எல்லா நாட்டினருக்கும் உண்டு. ஆனால் அவர்கள் தனித்தனியாக அறம் செய்யாமல் பொது நிலையங்கள் வாயிலாக இயக்க முறையில், பெருமளவில் திட்டமிட்டுச் சமூக நன்மைக்கான பணிகள் செய்கிறார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறலாம். சுவீடன், சுவிஸ் மக்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்குப் பெரும் பொருள் கொடுத்திருக்கிறார்கள். போரால் தஞ்சம் என்று அவர்கள் நாட்டுக்கு வந்த பல நூறாயிரம் ஜெர்மனியருக்கும் பிற நாட்டவருக்கும் அவர்கள் எல்லா உதவிகளையும் செய்தனர். அமெரிக்கர் ஞாயிற்றுக்கிழமை தோறும், கிருத்துவக் கோயில்களில் பொருள் சேர்த்து நூறாயிரக்கணக்கான உணவுப் பார்சல்களைப் பாழடைந்த ஜெர்மனிக்கு ஆகாய விமானத்தின் மூலம் கொடையாக அனுப்புகிறார்கள். அமெரிக்க நாட்டு கோடாதிபதிகள் பற்பல கல்லூரிகளை உலகெங்கும் நிறுவியுள்ளனர், ஒய். எம். சி. ஏ. என்னும் கிருத்துவ இளைஞர் சங்கம் போன்ற பல இயக்கங்கள் வாயிலாகவும் பெருந்தொண்டு செய்கின்றனர்.

பிறரை இகழாமை :

நான் சென்ற நாடுகளில், எக்காரணத்தாலாவது ஒருவருக்கு உடலில் ஒருபகுதி-கால், கை, அல்லது வேறு உறுப்புப் போய் விட்டால் அதற்காக அவரைப் பிறர் நேரிலோ மறைவிலோ இகழ்வதில்லை. அவர் ஊக்கமிழந்து விடும்படியாக அவரிடம் ஒருவரும் நடந்து கொள்வதில்லை. அவருடைய இழந்துபோன உடலுறுப்பைப் பற்றி ஒன்றும் பேசாமல் மற்ற செய்திகள் பற்றியே அவரிடம் பேசுவார்கள். "ஐயோ! உனக்குக் கை போய்விட்டதே!" என்று அவரிடம் அழுவதில்லை. போரில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புக்களை இழந்த பல நூறுயிரம் பேர், எல்லாவுறுப்புக்களும் உடையவர்கள் செய்யும் வேலைகள் அனைத்தையும் விஞ்ஞான உதவியால் மகிழ்ச்சியுடனும் திறமையுடனும் செய்வதை ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஒவ்வொரு நாளும் கண்டேன்.

பெண்கள் நிலை :

ஆடவர் செய்யும் எந்த வேலையையும் பெண்டிரும் செய்கின்றனர். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் பெண்களுக்குத் தக்க மதிப்புக் கொடுக்கப் படுகின்றது. பெருஞ்செல்வர்களும் தமது அலுவலகத்திலுள்ள பெண்களையும் மதிப்பாகவே நடத்துகின்றனர். மனம் ஒத்தாலன்றி செல்வம், பதவி இவை காரணமாக அங்கே திருமணம் நடைபெறுவதில்லை. அம்மகளிர் வாழக்கை முறை பற்றிய நூல்களைக் கற்பதோடு, பலவிடங்களுக்கும் சென்று பொது அறிவையும் வளர்த்துக் கொள்ளுகிறார்கள்.

குறைந்த உறக்கம் :

ஆண், பெண் என்ற வேறுபாடுகளை வெளி நாட்டார் ஏற்றுக் கொள்ளாதது போலவே இரவு, பகல் என்ற கடவுளின் வரையறையையும் அமெரிக்கரும், பிரெஞ்சுக்காரரும் ஏற்றுக் கொள்ளவில்லை. பகலில்தான் செய்யவேண்டுமென்றோ, அல்லது பகலில் செய்யக் கூடாத இரவு வேலை அன்றோ எந்த வேலைக்கும் வரையறை கிடையாது. "மணி நேரம் என்பது

மக்களின் கற்பனை ; இரவும் பகலும் ஈசனுக்கொன்றே '' என்பது அவர்கள் கோட்பாடு. இதனால் பிறநாட்டவர்களில் பெரும்பான்மையோர் நம்மைவிட குறைவாகவே உறங்குகின்றனர்.

உறங்கும் முறை :

உறக்கத்தைப் பற்றி மற்றொன்று குறிப்பிட வேண்டும். உறங்கும் சிறிது நேரத்தில், பிறர் தொல்லையின்றி மேல்நாட்டார் உறங்குகின்றார்கள். நியூயார்க் நகரின் ஒரு பகுதியாகிய குயின்சில் முப்பதாவது மாடியிலிருக்கும் ஒரு நண்பர் வீட்டுக்கு நான் சென்றிருந்த போது அவருடைய ஆறுமாதக் குழந்தை தனிப் படுக்கையறையில் உறங்கியது எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

கூட்டம் நடக்கும் முறை :

அமெரிக்காவில் கூட்டங்கள் நடக்கும் முறையும், குறிப்பிடத்தக்கது. மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் தொடங்குவதாக இருந்தால், சரியாக 6 மணிக்கு அந்தக் கூட்டம் நடக்கும் இடத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கதவுகளெல்லாம் மூடப்பட்டுவிடும். கூட்டம் முடிந்த பின்னரே அவை மீண்டும் திறக்கப்படும். இதனால் கூட்டத்துக்கு யாரும் காலம் தாழ்த்து வருவதோ அல்லது கூட்டம் முடியுமுன் சிலர் எழுந்து செல்வதோ அங்கே நிகழாதனவாகும்.

பேசும் முறை :

மூன்று நான்கு பேர்கள் சந்திக்கும்போது, ஒருவர் பேசுங்கால் மற்றொருவர் குறிக்கிட்டுப் பேசுவது நாகரிகமற்றதாகக் கருதப்படுகின்றது. ஒருவர் பேசி முடிந்த பின்னரே அடுத்தவர் பேசுவார். அல்லது, இன்றியமையாமையால் உடனே கூறவேண்டியதிருப்பின், பேசிக்கொண்டிருப்பவரின் உடன்பாட்டைக் கேட்பது வழக்கம்.

கல்வியில் ஆர்வம் :

கல்வியில் அமெரிக்கருக்கு உள்ள ஆர்வத்துக்குச் சான்றாகப் பின்வரும் இரண்டு நிகழ்ச்சிகளையும் கூறலாம். தம்

முன்னுள் ஆசிரியர் கல்லூரியினின்றும் ஓய்வுபெறும் நாளில் அவர்கள் கல்லூரிக்குச் சென்று அந்த ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவர். ஹார்வர்டு, கொலம்பியா பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தம் உயிலில் (will) அப்பல்கலைக் கழகங்களுக்காக ஒரு தொகையை ஒதுக்கி வைக்கிருர்களாம்.

பொதுவாக எல்லா மக்களும் கலையில் விருப்பமுடையவர்கள். அண்மையில் மற்றத் துறைகளில் முன்னேறியுள்ள அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் கலையுணர்ச்சி மிக விரைவாக உருவாகிக் கொண்டு வருகிறது.

நாணய வழக்கு :

நாணயங்களுக்குப் பெயரிடுவதில் நம்மைப் போன்ற வழக்கம் பிறநாட்டவரிடமும் உண்டு. இரண்டணு நாணயத்தைத் தமிழ் நாட்டின் சிலபகுதிகளில் பணம் என்கிறோம். 100 ரூபாய் நோட்டைப் பச்சை நோட்டு என்கிறோம். இதே போல் ஆஸ்திரேலியர் 3 பென்சை த்ரம் என்றும், 5 பவுன் நோட்டை பைவர் என்றும், 100 பவுன் நோட்டை செஞ்சரி என்றும் கூறுவர். அமெரிக்கர், 5 சதத்தை நிக்கல் என்றும், 10 சதத்தை டைம் என்றும் சொல்லுகிருர்கள். நாணயமே இல்லாத 4 பைசாவை நாம் துட்டு என்பது போல், நாணயமே இல்லாத 21 சில்லிங்கை ஆங்கிலேயர் கினி என்பர்.

உல்லாசப் பிரயாணம் :

மேலை நாடுகளில் உள்ள மற்ருெரு பழக்கம் ஆண்டுக்கு ஒரு முறையாவது, தத்தம் நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு உல்லாசமாய்ப் பிரயாணம் செய்வதாகும். பலவாரங்கட்கு முன்பே இப்பிரயாணத்தைத் திட்டமிட்டு, அதன் செலவுக்காகச் சிறிது சிறிதாகப் பொருள் சேர்த்து அதனைத் தனியே வைத்திருப்பதும் வழக்கம். மிகுதியானவர்களை ஒரு மலைக்காவது, தீவுக்காவது குறைந்த செலவில் குழுவாக அழைத்துச் செல்லும் நிலையங்களும் உள்ளன.

மற்றும் சில வழக்கங்கள் :

ஜெர்மனியில் சாலைகள் சந்திக்கும் இடங்களில் ஒவ்வொரு சாலையிலும் அந்தச் சந்திப்பதிலிருந்து எந்த எந்தத் திக்குகளில், எந்த எண் முதல் எந்த எண் வரை உள்ள கட்டிடங்கள் இருக்கின்றன என்ற விளக்கமானது பெயரைத் தெரிவிக்கும் அறிவிப்பு பலகையிலேயே கொடுக்கப்பட்டிருக்கும். மேலும் சாலையில் ஒற்றைப்படையுள்ள எண்ணுள்ள கட்டிடங்கள் ஒருபுறமும் இரட்டைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் எதிர் வரிசையிலும் இருக்கும்.

அமெரிக்கர் மாதத்தின் எண்ணை முதலிற் குறித்து, அதன் பின்னரே தேதியின் எண்ணை எழுதுவர். உதாரணமாக 1947 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ஆம் நாள் என்பதற்கு 10-27-1949 என்றுதான் எழுதுவர்.

பிரெஞ்சுக்காரர், ஜெர்மானியர் தவிர உலக மக்கள் எல்லோரும் கடவுளன்புடையவர்களாக இருக்கின்றனர்.

வினாக்கள்

1. ஸ்காட்சுக்காரரைக் கண்டவுடன் ஆசிரியருக்கு வந்த நினைவு யாது?
2. அமெரிக்காவில் இரயில் பிரயாணத்தில் டிக்கட்டுச் சோதிக்கும் தன்மையை எடுத்துக் காட்டுக.
3. ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலான இடங்களிளெல்லாம் எவ்வாறு பொழுது போக்குகின்றனர்?
4. பலநாடுகளில் இப்பொழுதுள்ள புது வழக்கங்கள் எவை?
5. இப்பாடத்தில் வந்துள்ள மேனாட்டுப் பழமொழிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
6. ஜெர்மனியில் கட்டிடங்களின் எண்கள் எவ்வாறு அறிவிக்கப் படுகிறது?

கட்டுரைப் பயிற்சி

மேனாட்டாரின் தொழிற் சிறப்பைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. பொருள் வேறுபாடு காண்க.
   அரம், அறம், அரிந்து, அறிந்து.
2. பிரப்புக்கட்டில், பற்றுத் தேய்த்தல், நம் நாடு—என்ன தொகைகள்?

7. வழிமுறைப் பரிணமம்

(என். எஸ். பத்மாவதி, பி. எஸ்ஸி. (ஆனர்ஸ்)

படைப்பைப் பற்றி ஆராயும் பொழுது, முதலில் மனத்தைக் கவரும் புரியாத புதிர்கள் இரண்டு தான். அவைவுயிரின் தொடக்கமும், உயிரினங்களின் தொடக்கமும். எத்தனையோ தலைமுறைகளாக மக்கள் இனத்தின் ஆராய்ச்சிக் களத்தில் அடிபட்டு வருகின்றன இவை இரண்டும். இன்னும் இவற்றின் தொடக்கத்தைப் பற்றி முடிவு காணவில்லை நாம்.

உயிரினங்கள் தோன்றிய முறையை விளக்குவதான கொள்கைகள் பல. அவற்றிலே முக்கியமான தொன்று சிருஷ்டி முறைக் கொள்கை. உலகில் இருக்கும் கோடிக் கணக்கான உயிர்களையும் இறைவன் படைத்தான் என்பதும் அவ்வாறு படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் அன்று முதல் இன்றுவரை ஒரே மாதிரியாக இருந்து வாழ்ந்து வருகின்றன என்பதும் இக் கொள்கையின் தத்துவம்.

இந்தக் கொள்கையை நிராகரிக்கலாம் என்ற எண்ணம் கூட வெகு நாள் வரையில் ஒருவருக்கும் தோன்றவில்லை. ஆனல் பதினெட்டாம் நூற்ருண்டில் நிலத்தில் புதைந்து கிடந்த பழங்கால விலங்குகளின் சுண்ணும்பு பிரதிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சியாளர்கள், அந்த விலங்குகள் எல்லாம் அழிந்துவிட்டன என்றும் அவற்றின் சந்ததிகள் உதாரணத்திற்கு ஒன்று கூட இக்காலத்தில் இல்லை என்றும் முடிவுக்கு வந்தனர். யோசித்து இந்த உலகத்தை உண்டாக்கிய கடவுள் அழிவதெற்கென்றே சில இனங்களை உண்டாக்கி யிருப்பாரா என்ற கேள்வி அதன் பின் பிறந்தது. காரியம் இல்லாமல் கடவுள் அழிவதற்கென்றே சில உயிரினங்களைப் படைத்தார் என்று ஒப்புக் கொள்ள விரும்பாத சில உயிர் நூல் புலவர்கள், சிறிது வேறுபட்ட ஒரு கொள்கையை ஏற்படுத்திக் கொண்டார்கள். கடவுள் முதலில் படைத்த உயிர்கள் அனைத்தும் பிரளயத்தில் அழிந்துவிட்டன என்பதும் பிரளயத்தில் அழிவுற்ற உலகத்தில் மீண்டும் உயிர்கள் படைக்கப்பட்டன என்பதும் புதிய

கொள்கையாரின் நம்பிக்கை. இவ்விதம் இருபத்தேழு முறை பிரளயம் வந்ததாகக் கணக்கிட்டுள்ளார்கள்!

இந்தக் கொள்கைகளை எல்லாம் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்வதில்லை. இவர்களது கொள்கையைத்தான் வழிமுறைப் பரிணாமம் (organic evolution) என்கிறோம். இன்றைய உலகில் காண்கின்ற உயிர்கள் எல்லாம் மிகச் சிக்கலான (complex) உடலமைப்பைப் பெற்றுள்ளன. இந்தச் சிக்கலான உடலமைப்புள்ள உயிர்கள் எல்லாம், திட்டப்படுத்தப் படாத ஓர் எளிய நிலை (un-organised) யிலிருந்து படிப்படியாக வளர்ந்தவை. கூர்ந்து கவனித்தால், முதலில் இருந்த நிலையிருந்து வந்தது தான் இன்றைய நிலை என்று நம்பமுடியாதபடி, மொட்டவிழ்ந்து மலராவதுபோல் படிப்படியாகப் பிரிகிறது இந்த வளர்ச்சி.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தான் பரிணுமக்கொள்கை கண்டு பிடிக்கப்பட்டது என்பது பலர் எண்ணம். ஆனுல் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலேயே கிரேக்கர்கள் பரிணுமக் கொள்கையைப் பற்றி ஆலோசித்து இருக்கிருர்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. என்ருலும் வழிமுறைப் பரிணுமம் என்றவுடன் மனத்தில் உடனே சார்லஸ் டார்வின், லமார்க் என்ற இருவர்களின் பெயர்கள் தோன்றுகின்றன.

டார்வினின் கொள்கையின் சுருக்கம் வருமாறு:

உலகத்தில் எவ்வளவோ வகையான உயிர்கள் இருக்கின்றன. இவை எல்லாம் இனப்பெருக்கம் அடைகின்ற விரைவு வியக்கத்தக்கதாக இருக்கிறது. ஒரே ஒரு சிப்பியின் குழந்தைகள் எல்லாம் வாழ்ந்து, அவை எல்லாம் உற்பத்திப் பெருக்கம் அடைந்தால், பத்துத் தலை முறைகளுக்குள் 66,000, 000, 000, 000, 000, 000, 000, 000, 000, 000, 000, சிப்பிகள் இருக்குமாம். ஆனுல் இந்தச் சந்ததிகளில் அநேகம் அழிந்து போகின்றன என்பது நாம் கண்கூடாகப் பார்க்கும் உண்மை. இது இயற்கை அன்னை விதித்திருக்கும் தடையின் விளைவு. எண்ணற்ற சூழ்நிலைகளையும், எத்தனையோ வித வசதிகளையும் அளித்திருக்கும் அவள், தகுதி

உள்ளவர்கள் மட்டுமே அவற்றைப் பயன் படுத்தலாம் என்று விதித்திருப்பது வியப்பாக இல்லை. தகுதியைச் சோதிப்பதற்காக இயற்கை அன்னை வைத்திருக்கும் போட்டியைத்தான் வாழ்வுக்குப் போராட்டம் அல்லது எஞ்சுவதற்காகப் போராட்டம் (struggle for existence) என்கிறோம். இதில் வெற்றி அடைபவைகளை மட்டுமே இயற்கை அன்னை வாழ அனுமதிக்கிறாள். தோல்வியுற்ற உயிர்கள் விரைவிலே அழிந்து போகின்றன. இங்ஙனம் இயற்கையன்னை தகுதி உள்ளவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்வதைத்தான் இயற்கைப் பொறுக்குதல் (natural selection) என்கிறோம்.

எல்லா உயிரினங்களிலும் இருவகைப் போராட்டங்கள் இருக்கின்றன. ஒன்று ஒரு சூழ் நிலைக்குள் உயிரினம் முழுவதற்கும் நடப்பது; மற்றது ஒரே உயிரினத்திற்குள்ளேயே ஒன்றுக்கொன்று இட்டுக்கொள்ளும் போராட்டம். முதல் போராட்டத்தில் எஞ்சுபவை சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தி இருக்கும் இனங்கள் மட்டுமே. இரண்டாவதாகிய, சமமற்ற போராட்டத்தில், இனத்திற்குள் ஆற்றல் படைத்தவை மட்டுமே எஞ்சுகின்றன. முடிவில் எஞ்சுபவை சூழ்நிலைக்கு மிகப் பொருந்தியவையாயும் ஆற்றல் படைத்தவையாயும் இருக்கும். ஆகவே, வாழ்க்கைப் போராட்டத்தில் எஞ்சுபவை தகுதி உள்ளவை மட்டுமே.

சில இனங்களில் சில சமயங்கள், வழக்கத்திற்கு வேறுபட்ட சில இலக்கணங்கள் தோன்றுகின்றன. இந்த வேறுபாடுகள் சூழ்நிலைக்குப் பொருந்தாதவையாக இருந்தால், அவைகளைப் பெற்றுள்ள உயிர்கள் விரைவில் அழிந்து போகின்றன. ஆனால் இந்த இலக்கணங்கள் (characters) வாழ்க்கைப் போராட்டத்தில் உபயோக முள்ளவையாயிருந்தால் அவை யெல்லாம் பாரம்பரிய குணங்களாகச் சந்ததிகளுக்கும் நிகழ்கின்றன. இவ்விதம் இந்த வேறுபாடுகள் நிலைபெற்று விடுவதால், இரண்டாம் தலைமுறை புதிய இனமாகத் தோன்றுகிறது. இப்படித்தான் புதிய இனங்கள் தாயினத்திலிருந்து பிரிகின்றன என்பது டார்வினின் கொள்கை.

சுருங்கச் சொன்னால் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடு பட்டிருக்கும் உயிரினங்களில், சூழ்நிலைகளுக்குப் பொருத்த மான வேறுபாடு உள்ளவைகள் மட்டுமே, எஞ்சி இனப் பெருக்கம் அடைகின்றன. மற்றவை எல்லாம் அழிகின் றன. அவ்வேறுபாடுகள் பின் சந்ததிகளில் நிகழ்வதால் புதிய இனங்கள் ஏற்படுகின்றன.

லமார்க்கின் கொள்கையில் வாழ்க்கைப் போராட்டம், தகுதியுள்ள இனம் எஞ்சுதல், இயற்கைப் பொறுக்குதல் இவற்றுள் ஏதும் இடம் பெறவில்லை. அவரது கொள்கை யின் அடிப்படையே வேறு. அவர் காட்டும் வேறுபாடுகளில் இருவகை உண்டு. பிறவி வேறுபாடுகள் அல்லது பரம்பரைத் தொடர்பு பெற்ற வேறுபாடுகள் (congenital or hereditary variations) என்பன முதல் வகையைச் சேர்ந்தவை. மற் றொரு வகையைச் சேர்ந்தவை உயிரினது வாழ்நாளின் இடை யில் சூழ்நிலைக்குப் பொருந்துவதற்காக அந்த உயிர் தானகவே 'ஏற்றுக்கொண்ட வேறுபாடுகள் (Acquired variaitons).

இந்த ஏற்றுக்கொண்ட வேறுபாடுகளே லமார்க்கின் கொள்கையில் முதன்மை பெற்றிருக்கின்றன.

லமார்க்கின் கொள்கைப்படி உலகங்களின் வளர்ச்சி விகிதம் சூழ்நிலையின் அவசியங்களால் கட்டுப்படுத்தப் படு கிறது. அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் அங்கம் இயற் கையாகவே நல்ல வளர்ச்சி அடைகிறது. உபயோகத்திலே இல்லாத அங்கம் விரைவில் சூம்பிப் போகிறது. விறகு வெட்டி, கருமான் இவர்களின் கைத்தசைகள் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அவ்விதமே எல்லா உயிரினங்களி லும் உபயோகத்தினல் அங்கங்களில் வேறுபாடுகள் ஏற்படு கின்றன. அவசியமில்லாத அங்கங்கள் சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைந்து விடுகின்றன. இவ்வாறு ஏற்படும் வேறு பாடுகள் சூழ்நிலைக்குப் பொருந்தியிருப்பதால் அவை பரம் பரைத் தொடர்பாக சந்ததிகளிலும் உண்டாகின்றன. இத னல் இரண்டாம் தலைமுறை தாயினத்தை விடச் சூழ் நிலைக்கு அதிகப் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. இதே

முறையில் சில தலைமுறைகளில் சூழ்நிலைக்கு முற்றும் பொருந்திய ஒரு புதிய இனம் தோன்றிவிடுகிறது.

லமார்க்கின் பல உதாரணங்களில் முக்கியமானவை ஒட்டச்சிவிங்கியும் பாம்புமே.

ஒட்டச்சிவிங்கிக்கு ஆதியில் கழுத்து மிகச் சிறியதாகத் தான் இருந்ததாம். பிறகு உயரமான மரத்தில் இருக்கும் தழைகளைத் தின்பதற்காகக் கழுத்தை நீட்டி நீட்டி கழுத்து நீண்டுவிட்டதாம். இப்படி நீண்ட கழுத்து சந்ததிகளுக்கும் வந்து ஒவ்வொரு தலைமுறையிலும் சிறிது அதிகரித்துக் கடைசியில் இன்றைய நிலையை அடைந்திருக்கிறதாம்.

பாம்புகள் முதலில் பல்லிகளைப் போலக் கால்களைப் பெற்றிருந்தன. பிறகு, தரையில் ஊரத் தொடங்கவே கால்கள் உபயோகமில்லாமற் போய்விட்டன. அவை சிறிது சிறிதாகத் தேய்ந்து சில தலைமுறைகளில் மறைந்து விட்டன என்பது லமார்க்கின் விளக்கம்.

இன்றைய ஆராய்ச்சியாளர்களில் பலர் லமார்க்கின் கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை. ஏன் எனில் ஏற்றுக் கொண்ட வேறுபாடுகள் பரம்பரைத் தொடர்பாகச் சந்ததி களில் நேர்வதில்லை என்பது பல ஆசிரியர்களின் கருத்து.

கருமானின் கைத்தசைகள் எவ்வளவுதான் வலுவடைந் திருந்தாலும் அவனுடைய குழந்தை, மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் வளர்ச்சி யடைந்த தசைகளுடன் பிறப்பதில்லை.

எண்ணற்ற தலைமுறைகளாகச் சீனப் பெண்கள் தங்கள் கால்களைக் கட்டிக் குறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று பிறக்கும் சீனப் பெண்களின் கால்கள் வேறு நாட்டுக் குழந்தைகளின் கால்களை விடச் சிறியனவையாக இல்லை.

மேலும் எத்தனையோ எடுத்துக் காட்டுகள் லமார்க்கின் கொள்கைக்கு மாறாக இருக்கின்றன. ஆனால் அதன் சார் பாக இருப்பவை மிகக் குறைவு.

உயிரினங்களின் தொடக்கத்தை விளக்க லமார்க்கின் கொள்கை போதாது. காரணத்தைப் பேராசிரியர் ஜூலியன் ஹக்ஸ்லி சுருக்கமாக, "லமார்க்கின் கொள்கை முன்னுக் குப்பின் முரண்பாடுடையது. முடிவில்லாமல் பரந்து கிடக்

கும் சென்ற காலம் (past) இன்றைய நிகழ் காலத்தை உருவாக்கச் சக்தியற்றது என்று கூறும் அதே கொள்கை, நிகழ்காலத்தின் சுருங்கிய சரித்திரம் வருங்காலத்தை உருவகப் படுத்த முடியும் என்கிறது'' என்று கூறுகிருர்.

விஞக்கள்

1. எல்லா உயிர்களின் இடையில் காணப்படும் இருவகைப் போராட்டங்கள் எவை?

2. புதிய இனங்கள் தாயினத்திலிருந்து பிரிவது எப்படி என்று டார்வின் விளக்குகிருர்?

3. 'தகுதியுள்ள இனம் எஞ்சுதல்', 'இருவகைப் பொறுக்குதல்'— இவற்றை விளக்குக.

4. பரிணுமத்தைப் பற்றி லமார்க்கின் கொள்கை யாது? இன்றைய ஆராய்ச்சியாளர் அதை ஏன் ஏற்றுக்கொள்வதில்லை?

கட்டுரைப் பயிற்சி

உயிரினங்களுக்குள் காணப்படும் வாழ்க்கைப் போராட்டம் என்பது பற்றி ஒன்றரைப் பக்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. ஒப்புக்கொள்—ஒத்துக்கொள்: இவற்றுள் எது சரி, எது தப்பு?

2. கீழ்வரும் வாக்கியங்களேக் கேட்டபடி மாற்றுக:

(அ) இந்தப் பரிணுமக் கொள்கை பத்தொன்பதாம் நூற்ருண்டிலே தான் கண்டுபிடிக்கப்பட்டது என்பது பலருடைய எண்ணம்.—எண்ணம் என்ற பெயரை விஜனமுற்ருக்குக.

(ஆ) என்பது பல ஆசிரியரின் கருத்து.—'என்பது' என்ற சொல்லே 'என்று' என்று மாற்றுக.

(இ) சூழ்நிலேக்குப் பொருந்தாத வேறுபாடுகளேப் பெற்றுள்ள உயிர்கள் விரைவில் அழிந்து போகின்றன.—உயிர்கள் என்ற சொல்லே நான்காம் வேற்றுமையாக மாற்றி வாக்கியத்தைத் திருத்துக.

8. கலிங்கம் எறிந்த கருணுகரன்*

(எஸ். வி. வரதராஜ அய்யங்கார், எம். ஏ., எம். ஓ. எல்.)

வரலாற்றுச் செய்திகள் :

கருணுகரன் என்பது இராமபிரானுக்கு வழங்கிய நாமங்களில் ஒன்று. அத் திருப்பெயரே கொண்ட தொண்டைமாஞன தமிழ்நாட்டுத் தலைவன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இலங்கை எறிந்த கருணுகரனைப்போலவே, கலிங்கம் எறிந்தவன் இக் கருணுகரன். இவனது வீரச் சிறப்பையும் வெற்றிப் புகழையும் சயங்கொண்டார் என்ற புலவர் வாக்கால் நாம் அறிகின்ருேம். வரலாற்றுத் தொடர்புள்ள இவனது சரித்திரம் நம்மனேர் தெரிந்து இன்புறுதற்கு உரியதாகும்.

சோழர் பேரரசை உயர்நிலையில் நிறுவிய பிற்காலச் சோழ வேந்தருள் முதற் குலோத்துங்கன் ஒருவனுவான். இவனுக்கு அபயன் என்னும் பெயரும் வழங்கியது. இவன் கி. பி. 1070 முதல் 1118 வரை நாற்பத்தெட்டு ஆண்டுகள் கொண்ட நீண்டகாலம் சோழர் பேரரசைத் தாங்கி ஆட்சி புரிந்தவன் என்று வரலாற்று நூலோர் கூறுவர். இக்காலத்தில் இவனடைந்த அளவற்ற புகழுக்கு முக்கிய காரணமானவர் இவனிடம் தானைத் தலைமை பூண்டிருந்த வீரர்களேயாவர். இவர்கள் எல்லோரும் சோழர் பேரரசின்கீழ் சிற்றரசர்களாக இருந்தவர்கள் ; அபயன் ஆணையை நிறைவேற்றுவதில் ஈடற்றவர்கள் ; எட்டுத் திசைகளிலும் படை கொண்டு சென்று வெற்றியே பெற்று அபயனுக்கு வாகைமாலை சூடியவர்கள். இவர்களுள் முதலிடம் பெற்றவன் கருணுகரத் தொண்டைமான் ஆவான்.

கருணுகரன் குலோத்துங்கனது பெரும் படையைத் தானே நடத்திச்சென்று, கலிங்கரோடு கடும்போர் விளைத்துத் தன் தலைவனுக்கு வெற்றியை அளித்ததோடு, அக் கலிங்க வேந்தனைச் சிறைப்பிடித்துவந்து அபயன் முன்னே நிறுத்தினன் ; இந்த அருஞ்செயலால் அபயனது அவைக்களட்

* ஆசிரியர் அநுமதியுடன் அவரெழுதிய 'செந்தமிழ் இன்பம்' என்னும் நூலிலிருந்து கொள்ளப் பெற்றது.

புலவரான சயங்கொண்டார் தாம் பாடிய கலித்துப் பரணியில் பலவிடத்தும் சிறப்பித்துப் பாடும் பேறு பெற்ருன்.

“இலங்கை யெறிந்த கருணு கரன்தன்
இகல்வெஞ் சிலேயின் வலிகேட்பீர்
கலிங்கம் எறிந்த கருணு கரன்தன்
களப்போர் பாடத் திறமினே”

என இராமபிரானது வெற்றியையும் இவனது வெற்றியினே யும் நிகராக்கிச் சயங்கொண்டார் பாடுதல் காண்க. இவனது வரலாற்றினேக் கலிங்கத்துப்பரணி, வரலாற்று நூல், கல் வெட்டு ஆகியவற்றில் காணப்படும் செய்திகளேக்கொண்டு கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக் கருணுகரன் வண்டை நகரை ஆண்டுவந்த தலேவ ணுவான். “சுடர்க் கதிர்வாள் அபயனடி அருளிஞேடும் சூடிஞன் வண்டை நகர் தொண்டைமானே” என்னும் சயங்கொண்டார் வாக்கால் இதனே அறியலாம். இவன் பல்லவ வமிசத்தில் தோன்றியவன் என்பதும், தொண்டை மான் என்னும் சிறப்புப் பெயர் அடைந்தவன் என்பதும், “பல்லவர் தோன்றலேப் பாடீரே” (520) “வண்டைமன், தொண்டைமான்” (314) என்று பரணியில் வரும் தொடர் களால் அறியப்படும் செய்திகளாகும்.

பிற்காலச் சோழரின் ஆட்சி தமிழகத்தில் ஓங்கி வளர்ந்த காலத்தில் பல்லவ அரசர்கள் வலிகுன்றி அச் சோழவேந்தர் ஆட்சிக்குட்பட்ட குறுநிலத் தலேவர்களாகி வாழ நேர்ந்தது. தொண்டை நாட்டிற்கு உரியவராயிருந்த அப் பல்லவ மன் னர்கள் தம் நாட்டிலும் சோழநாட்டிலுமுள்ள பற்பல ஊர் களுக்குத் தலேவராகி ஆட்சி நடத்தினர். அத்தகைய பல்லவ வேந்தருள் ஒருவனே கருணுகரத் தொண்டைமான். இவன் சோழ நாட்டிலுள்ள வண்டாழஞ்சேரி என்னும் ஊர்க்குத் தலேமை பூண்டவன். இவ்வூர் திருநறையூர் நாட்டைச் சார்ந்தது என்றும் வண்டை என இலக்கிய வழக்குப் பெற்றது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்! இவனது மனேவியின் பெயர் அழகிய மணவாளனி மண்டையாழ்வார் என்பது. இந்தத் தலேவனுக்குப் பல்லவர்க்கரசு என்னும் பெயருள்ள

தமையன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் அபயனது தானைத் தலைவருள் ஒருவனுக இருந்தான் என்றும் சயங் கொண்டார் கூறுகின்ருர். இவன் அபயனது அரசியல் அதிகாரியாகவும் விளங்கினுன்.

கலிங்கப் போர் :

கருணுகரத் தொண்டைமான் அபயன் ஆணையைச் சிரமேற்கொண்டு கலிங்கப்போரை நடத்தி வெற்றியுடன் மீண்ட வரலாற்றைச் சுருக்கிக் கூறுவோம்.

சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கியவற்றுள் கங்கை கொண்ட சோழபுரம் என்பதும் ஒன்று. முதல் இராசேந்திரன் பெண் வயிற்றுப் பேரனும், சாளுக்கிய முதல் இராசராசன் மகனுமான விசயதரன் என்பவன், சோழ வமிசத்திற்கு நேரான சந்ததி இல்லாததால் அந்த வமிசத்துக்கு உரியவனுக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கங்கைகொண்ட சோழனது தேவி யான அவன் பாட்டியாரால் வளர்க்கப்பட்டுவந்தான். இவ னது தாய் மாமனுகிய வீரராசேந்திரன் தலைமையில் சோணுட்டின் ஆட்சி நடைபெற்றுவந்தது. விசயதரன் தக்க வயதடைந்து கல்வி கேள்விகளிலும் போர்ப் பயிற்சியிலும் வல்லவனுகி உத்தம அரசர்க்குரிய அருங்குணஞ் செயல்கள் யாவும் பொருந்தியவனுக விளங்கினுன். இக்காலத்தில் வடநாட்டரசனுன சக்கரக் கோட்டத்துத் தாராவர்ஷன் என்பவன்மேல் படையெடுக்க நேர்ந்தது. இந்த அரச காரியத்தை வாலிபப்பருவ மெய்தியிருந்த விசயதரன் தானே மேற் கொண்டு வடநாடு சென்ருன். சென்றவன், போர் வென்று வாகைசூடிய சமயத்தில், கங்கைகொண்ட சோழபுரத்தில் இவனது தாய் மாமனுன வீரராசேந்திரன் இறந்தான். இவன் தலைநகரில் இல்லாதிருப்பதை ஏற்ற வாய்ப்பாகக் கொண்டு சோழ வமிசத்தைச் சேர்ந்த வேறு சிலர் அரசுரிமையை அடையும்பொருட்டுக் கலகம் விளைத்தனர். நாட்டில் குழப்பம் உண்டாயிற்று.

வடநாட்டிலிருந்த விசயதரனுக்கு இச்செய்தி எட்டியது. உடனே இவன் விரைந்துவந்து தலைநகரையடைந்த

கலகத்தையடக்கியும், குழப்பத்திற்குக் காரணமானவரை ஒறுத்தும் அமைதியை நிலைநாட்டிச் சிங்காதனம் ஏறினன். இவனுக்கு இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன் என்னும் வேறு பெயர்களும் வழங்கலாயின. நீதி தவருத இவன் ஆட்சியில் சோழநாடு வளங் கொழித்தது. இவனது வல்லமையைக் கண்ட பகையரசர் அடங்கியொடுங்கி வாழ்ந்ததுடன், திறையளந்தும் வந்தார்கள்.

இக்காலத்தில், அபயன் வேட்டையில் விருப்புற்று வெளியேறிப் பல இடங்களை அடைந்து காஞ்சியை எய்தினன். அந்நகரின் தென்மேற்கு மூலையில் விளங்கிய பொன் மயமான சித்திர மண்டபத்தில் இவன் வீற்றிருந்ததாகச் சயங்கொண்டார் கூறுகின்றுர்.

"அம்பொன் மேருவ துகொலி துகொலென்
 ருயிரங்கதிர் வெய்யவ ஊையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினிற்
 செய்த சித்திர மண்டபந் தன்னிலே"

வீற்றிருந்தபோது, இவனைச் சூதர் மாகதர் முதலியோர் புகழ்ந்து பாடலாயினர். அரசர்க்குரிய சிறப்புக்களுடன் இவன் அரியாசனத்தில் விளங்க, சிற்றரசர்கள் வந்து பணிந்து திறை செலுத்தினர். அரசன் ஆணைப்படி அவன் கட்டளைகளை யெழுதி அவைகளை நிறைவேற்றுபவனை திருமந்திர வோலையாள் அங்கு அபயன் முன்னிருந்து, அப்பொழுது திறையளந்த அரசர்கள் இன்னுரென்றும், அவர் செலுத்திய திறைப் பொருள்கள் இன்னவென்றும் கணக்கிட்டுவந்தான். இதன்பின் "இதுகாறும் திறை செலுத்தாத அரசர்களும் உளரோ?" என்று அபயன் வினவ, 'வட கலிங்க நாட்டரசன் இரண்டுமுறை திறை செலுத்தத் தவறினன்." எனத் திருமந்திர வோலையாள் விண்ணப்பஞ் செய்தான். இதுகேட்ட அபயன் முகத்தில் கோபக் குறி சிறிதும் காணப்படவில்லை. அவன் சிறிது புன்னகை புரிந்தான்; தன்னவையை அலங்கரித்திருந்த தானைத் தலைவரை நோக்கி,

எளிய னென்றிடினும் வலிய குன்றரணம்
இடிய நம்படைஞர் கடிது சென்(று)
அளிய லம்புமத மலைகள் கொண்டணைமின்
அவனை யுங்கொணர்மின்..."

என்று ஆணையிட்டான். அதனைக் கேட்டதும் எழுந்தனன் கருணாகரத் தொண்டைமான்.

"இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
எறிவ னென்றுகழல் தொழுதனன்
மறைமொ ழிந்தபதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே"

என்று சயங் கொண்டார் பாடுகின்றார். கருணாகரன் தலைமையில் படைகள் திரண்டெழுந்தன. பல்லவர்க்கரசு, வாண கோவரையன், முடிகொண்ட சோழன் ஆகியோர் தானைகளை நடத்த, பல்லவர்கோனும், வண்டை நகர்த் தலைவனுமான கருணாகரன் 'இரை வேட்டபெரும் புலிபோல்' இகல் வேட்டு களிற்றின்மீது ஏறிச் சென்றான். அப்பெரும் படை பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணை, வயலாறு, பேராறு, கோதாவரி, கம்பை, சந்தநதி, கோதமையாறு ஆகிய யாறுகளைக் கடந்து கலிங்க நாட்டிற் புக்குச் சூறையாடியும் தீயிட்டும் வழியிலுள்ள ஊர்களைப் பாழ் படுத்திய வண்ணம் தலைநகரை நோக்கிச் சென்றது. பகையின் கொடுமைக்கு ஆற்றாத குடிமக்கள் அல்லோலமிட்டு அலறியோடித் தம்மரசனை அனந்தபதுமன் என்பவனை அத்தாணி மண்டபத்திற் கண்டு முறையிட்டனர். அவர்களது அலங்கோலமான நிலையைச் சயங் கொண்டார் உருக்கமாகச் சித்திரிக்கின்றார்

உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறையிட்டே
அறையிற் றுகில்விழ வடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே

குடிகளின் முறையீட்டைக் கேட்ட வேந்தன் வெகுண்டெழு[ந்]தான். வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து நோக்[கி]னான்; தன் வீரத்தைப் பாராட்டிப் பேசினான்; வந்துள்[ள] படையின் வலியை ஆராயாது சீற்றங்கொண்டு போரு

கெழலானுன். அப்பொழுது அவனருகிலிருந்த அமைச்சஞன எங்கராயன் எழுந்து பணிந்து,

" அரசர் சீறுவ ரேனும டியவர்
உரைசெ யாதொழி யார்களு றுதியே "

என்றுரைத்து," பஞ்ச பாண்டியர், சேரர், வத்தவ மன்னன், ஆரும் விக்கிரமாதித்தன் முதலான பெரு வேந்தரை நிலை குலேந்து ஓடச் செய்தது இப்பொழுது இங்கு வந்துள்ள படை தான். இதுவே, சேரரது கடற்றுறையைக் கைப்பற்றி விழிஞம் என்னும் ஊரை அழித்தது; காந்தளூர்ச் சாலை என்னுமிடத்தில் சேரரது மரக்கலங்களை யழித்துச் சேர மன்னன் கடற்படை வன்மையைச் சிதைத்தது. இவைகளை நோக்கும்போது நாம் இப்படைக்கு எம்மாத்திரம்? ஆதலின், மாற்ருன் வலியும் தன் வலியும் நோக்கி போருக்கெழுவதே சீரிது. நீ இப்பொழுது கொண்ட சீற்றந் தவிர்ந்து, அபயனுக்கு இடுதற்குரிய திறையைக் கொடுத்து விடுதலே ஏற்றது" என அறிவுரை கூறினன்.

" அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் "

என்ற முதுமொழிக்கிணங்க அமைச்சன் அறிவுறுத்தினுயினும், அனந்த பதுமன் சீற்றந் தணியாது வீரந் தூண்டப் போருக்கெழுந்தான்.

கலிங்கர் படையும் சோழ வேந்தனது படையும் கைகலந்தன. பெரும் போர் மூண்டது. கருணுகரன் களிற்றின் மீது இவர்ந்து பொருகளத்தில் நுழைந்தான். சோழர் படைஞர் ஊக்கமுடன் போரிட்டுக் கலிங்கச் சேனையைச் சிதற வடித்தனர். அபயன் படையின் தாக்குதலுக்கு ஆற்ருத பகைப் படை நிலேகுலேந்து தோற்ருேடியது. தோற்ற வீரர் பலர் உயிர்தப்பும் பொருட்டு மாறு வேடம் பூண்டு மறைவாக நீங்கினர். கருணுகரன் கலிங்கரது களிறு, குதிரை, தேர், ஒட்டகம், நிதிக்குவை முதலான செல்வமெல்லாம் கைப்பற்றினன். கலிங்கர் வேந்தன் உயிர் தப்பியோடி ஒளிந்தனன். இவ்வாறு பெருவெற்றி பெற்ற வண்டையர் கோன் ஒற்றர் வாயிலாகக் கலிங்க அரசன் ஒளிந்திருந்த

இடத்தை யறிந்து, அவனைச் சிறைப்பிடித்துவரச் செய்தான். "கலிங்கன் வலிய குன்றரணம் இடிய, களிறுகளைக் கைப் பற்றி அவனையும் சிறைப்பிடித்துக் கொணர்மின்" என்ற அபயன் ஆணையை அணுவளவும் குறைவின்றி நிறை வேற்றிய கருணாகரன் வாகை சூடித் திரும்பலாயினன்.

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளினேடும்
சூடினன் வண்டையர்கோன் தொண்டைமானே"

என்று இவனது கலிங்கப் போர் வெற்றியைச் சயங் கொண்டார் கொண்டாடலானார்.

கருணாகரனைப் பற்றி இங்கே கூறிய செய்திகள் கவியாகிய சயங்கொண்டார் புவியைச் சயங்கொண்டவனை முதற் குலோத்துங்கனது கலிங்கப் போரைப் பற்றிப் பாடியுள்ள கலிங்கத்துப்பரணியாலும் ஆராய்ச்சியாளர் உணர்த்தியுள்ள முடிவுகளாலும் அறியப்பட்டவை. வீரச் செயல்களை விரித்துரைக்கும் இப்பரணி, சோழ வேந்தனின் தண்ட நாயகனை கருணாகரனுக்கு அளித்துள்ள பெருமை பாராட்டத்தக்கது.

வினாக்கள்

1. "பல்லவர் தோன்றலைப் பாடீரோ"—என்பதனால் அறியப் படுவது யாது?
2. எப்போது சோணாட்டில் குழப்பமும் கலகமும் உண்டாயின?
3. "இரை வேட்ட பெரும் புலிபோல்"—உவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.
4. எங்கராயன் என்னும் அமைச்சன் அரசனுக்கு யாது கூறினான்?

கட்டுரைப் பயிற்சி

கலிங்கப் போரைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. இந்தத் தலைவனுக்குப் பல்லவர்க்கரசு என்னும் தமையன் ஒருவன் இருந்தான் என்றும் அவன் அபயனது தானைத் தலைவருள் ஒருவனாக இருந்தான் என்றும் சயங்கொண்டார் கூறுகின்றார்—இதனை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.
2. பொருள் வேறுபாடு காண்க : சிறை—சிரை, அறியலாம்—அரியலாம், இறை - இரை, திரை - திரை, கலம் - களம், வால் - வாள், வலம் - வளம், மூலை - மூளை.
3. புன்னகை, அருங்குணம்—இத்தொகைகளை விரித்து எழுதுக.

9. புயலும் அமைதியும்

(த. நா. சேனாபதி, எம்.ஏ.)

ஊர்க்கோடியில் இருந்தது ஜினதேவர் கோயில், அது ஜைனர்களின் முக்கிய க்ஷேத்திரம். ஏழெட்டு ஜைனக் குடும்பங்களே அங்கே இருந்தன. அவர்களும் வேளாண்மையில் ஈடுபட்டு வெளியே ஜீவனம் நடத்துகிறவர்களே. வெகு நாளாகப் பழுது பார்க்காமல் அந்தப் பழைய கோயிலின் சுவர் பிளந்து காரை பெயர்ந்து கிடந்தது.

மாணிக்கத்துக்குப் பழைய சிற்பம் என்றால் மிகவும் ஆசை. கல்லூரியில் பண்டைச் சரித்திரத்தை இஷ்ட பாடமாக எடுத்துக் கொண்டிருந்தான். இந்தப் பழங் கோயிலைப் பார்க்க வேண்டுமென்று இவனுக்கு வெகு நாளாக ஆவல்.

ஆறு வறண்டு கிடந்தது. அதைத் தாண்டினதும் சந்தடியற்ற இந்த ஊர். பொழுது சாயும் வேளை. எல்லாம் சேர்ந்து அவன் மனத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டது. கோயில் திறந்திருந்தது. உள்ளே கருப்பக் கிருகத்தில் ஒரே இருட்டாக இருந்தது. அதே சமயம் அருச்சகர் தீவட்டியோடு அங்கே வந்தார். இந்த மாதிரி வேடிக்கைப் பார்த்துவிட்டுப் போகிறவர் வருகிறவர்களோடு பழகியிருப்பதால் அவர் அந்தக் கோயிலின் அருமை பெருமைகளை நெட்டுருப் போட்டது போல் கட கடவென்று ஒப்பிக்கத் தொடங்கி விட்டார். சந்நிதியின் அகல் விளக்கில் எண்ணெயும் திரியும் இட்டு அதை ஏற்றிக் கொண்டே, "இவர் தாம் மகா வீரர்" என்று சொல்லிய போது சற்று வெளிச்சம் உண்டாயிற்று. அந்த ஒளியில் மிகப் பெரிய காரைச் சிலை ஒன்று—ஜினதேவரின் திருவுருவம்—காட்சியளித்தது. மாணிக்கத்துக்கு மெய் சிலிர்த்தது. பக்தியோடு கை கூப்பினான். அருச்சகர் பின்னும் உற்சாகத்துடன், "1600 ஆண்டுகளுக்கு முன் பல்லவ அரசன் கட்டின கோயில். இந்தக் காலத்திலே ஜைனத்தை யார் மதிக்கிறார்கள்? ஆனால் வேறு மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் உங்களைப்போல் 'பவ்விய ஜீவன்'கள் அடிக்கடிவந்து பார்த்து விட்டு ஏதாவது

ஒன்று அரை கொடுத்து விட்டுப் போகிறுர்கள்......கருப்பூர ஆரத்தி செய்யலாமா?'' என்ருர்.

மாணிக்கம் வேறு நினைவாகச் சிலையையே கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தான். கடைந்தெடுத்தது போல் தங்க அமைப்பு உள்ள சிலை அது. அதைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஆசையாக இருந்தது. அருச்சகர் கடைசியிற் சொன்னது அரை குறையாகக் காதில் விழுந்ததும் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தவன் போல், "செய்யுங்களேர், இந்தாருங்கள்'' என்று ஒரு முழு ரூபா நாணயத்தை அவரிடம் நீட்டினுன். அது விளக்கு வெளிச்சத்தில் பளிச்சென்றது. அருச்சகரின் கண்களும் அதைப் போலவே பளபளத்தன. ஒரு பெரிய கருப்பூரக் கட்டியாகப் பார்த்து மடியிலிருந்து எடுத்து, கருப்பூர ஆரத்தி காட்டினுர். மாணிக்கம் சற்று நேரம் அங்கே இருந்து விட்டுச் சுற்றுப் பிரகாரத்தையும் கல்வெட்டுக்களையும் பார்க்கப் புறப்பட்டான்.

அதற்குள் இருட்டத் தொடங்கியது. வெளிப் பிரகாரச் சுவரில் சற்றுத் தொலைவுக்கு ஒன்ருக 24 மாடங்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு தீர்த்தங்கரரின் சிலை வடிவம் இருந்திருக்க வேண்டும். ஆனுல் இப்போது ஏழெட்டுச் சிலை வடிவங்களே அங்கே இருந்தன. அவைகளிலும் சில தலை போயும் முகம் தேய்ந்தும் கை ஒடிந்தும் காட்சியளித்தன. மேற்குப் பக்கமாக இருக்கும் கடைசி மாடத்தண்டை வரும் போது வெள்ளை வெளேர் என்று ஒரு சின்னஞ் சிறு சலவைக் கற் சிலை தெரிந்தது. மாணிக்கம் நெருங்கி வந்து கவனித்தான். அது ஜினதேவரின் உருவம். அதைத் தொட்டுப் பார்த்தான். மழு மழுவென்று இருந்தது. அந்த அந்தி மங்கலிலும் அதன் முகத்திற் பால் வடிவது போன்ற தோற்றம் இருந்தது.

மாணிக்கத்தின் மனத்திலே திடீரென ஓர் எண்ணம் உதித்தது. அவன் சுற்று முற்றும் பார்த்தான். எவரும் அங்கே இல்லை. அந்தச் சிலை மேலோடு புதைத்திருந்தது. அதை ஓர் ஆட்டு ஆட்டினுன். சிலை இடம் பெயர்ந்து வந்துவிட்டது. திக்குத் திக்கென்று மாணிக்கத்தின் இதயம்

அடித்துக்கொண்டது. இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு அந்தச் சிலையைத் தன் கையிலிருந்த பையில் போட்டு மெதுவாக இருட்டிலே கோயிலுக்கு வெளியே நழுவினான்.

ஊரைத் தாண்டும் வரையில் அவனுக்கு வாயிலும் பல்லிலும் ஈரம் இல்லை. இத்தனைக்கும் ஒரு நாய்கூட அவனைத் துரத்திக்கொண்டு வரவில்லை. பிறகு, "அப்பாடா!" என்று ஒரு பெரு மூச்சு விட்டான். உடம்பெல்லாம் வேர்த்தது. ஆற்று மணலைக் கடக்கும்போது மாணிக்கத்தின் மனத்தில் இருந்த உற்சாகத்தைச் சொல்லி முடியாது. 'நாம் செய்தது நல்லதுதான். இங்கே காற்றும் மழையும் பட்டு இந்த அருமையான சிற்பம் பாழாய்த்தானே போகும்? நாம் இதை வீட்டிலே கொண்டு போய் நம் அறையில் வைத்துக் கொள்ளலாம்" என்று சொல்லிக் கொண்டே போனான்.

அன்று இரவு இரயில் வண்டிக்கே சென்னைக்குப் புறப்பட்டு விட்டான் மாணிக்கம். கையிலுள்ள அரிய கலைப் பொருளை மடியில் வைத்துக் கொண்டு சென்றான். நடுவில் ஒரு நிலையத்தில் வண்டி வந்து நின்றது. போலீஸ் அதிகாரி ஒருவர் இரண்டு மூன்று சேவகர்களோடு அவன் இருக்கும் பெட்டியை நோக்கி வருவது தெரிந்தது. மாணிக்கத்துக்குப் பகீர் என்றது. அவன் முகம் வெளுத்தது. 'தெரிந்து விட்டது போல் இருக்கிறது. நம்மைப் பிடிக்கத்தான் வருகிறார்களோ' என்று எண்ணினான். போலீஸ் அதிகாரி நேராக அவன் இருக்கும் பெட்டியில் நுழைந்தார். மாணிக்கத்தின் கால்கள் நடுங்கத் தொடங்கின. இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொள்ள ஒரு கனைப்புத் கனைத்துக் கொண்டான். சுற்றிலும் பார்த்தான். போலீஸ் அதிகாரி தன்னைத் தாண்டிச் சென்ற பிறகுதான் அவர் வந்த காரணம் மாணிக்கத்துக்கு விளங்கியது. அதே பெட்டியில் மூலைக்கு ஒருவராகச் சில கிராமவாசிகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் காலடியில் பலகையின் கீழ் இரண்டு மூன்று மூட்டைகள் காட்சியளித்தன. அது உணவுக் கட்டுப்பாடு கண்டிப்பாக இருந்த காலம். அவர்களை நெருங்கிப் போலீஸ்

அதிகாரி, "என்ன அரிசி தானே?" என்ருர். கிராம வாசிகள், "தெரியாது!" என்ருர்கள். அவர், "பின்னே உங்களைச் சேர்ந்த மூட்டை இல்லையா?" என்ருர். "ஆம் ......இல்லை" என்று அவர்கள் தயங்கிக்கொண்டே பதில் அளித்தார்கள். இதிலிருந்தே அதிகாரிக்கு மூட்டைகள் அவர்களுடையவைதாம் என்பது விளங்கி விட்டது. அவர் களை ஒரு விதமாகப் பார்த்துக் கொண்டே சேவகர்களை விட்டு அவற்றைக் கீழே இறக்கி எடுத்துக் கொண்டு போய் விட்டார். பிறகு கிராமவாசிகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். 'அப்பாடா! கடைசியில் இதற்கா பயந்து செத்தோம்!' என்று மாணிக்கம் பெரு மூச்சு விட் டான்.

* * *

மாணிக்கம் தன் அறையின் மேசையில் ஜினதேவரின் வெள்ளைச் சலவைக் கற்சிலையை வைத்திருந்தான். அதைச் சற்றுத் தொலைவிலிருந்து நின்றபடி பார்த்தான். அந்த அறைக்கே அது ஒரு புதிய ஒளியைத் தந்ததுபோல் அவ னுக்குத் தோன்றியது. பிறகு வாயிலுக்கு வந்தான். தெருக் கோடியில் இருந்த கடையில் தமிழ்ச் செய்தித் தாள்களின் முக்கிய விவரம் அடங்கிய சுவரொட்டிக் காகிதங்கள் தொங் கிக் கொண்டிருப்பதைக் கண்டான். புதுச் செய்தி ஏதாவது இருக்கிறதா என்று அறிய ஆவலுடன் அங்கே சென்ருன்.

இதென்ன! 'கோயிலில் களவு' என்று போட்டிருக்கி றதே! மாணிக்கம் அதே இடத்தில் நிலைத்து நின்ருன். 'சரி; கண்டு பிடித்து விட்டார்கள் போல் இருக்கிறது! அந்த அருச்சகன் அடையாளம் சொல்லியிருப்பான்; நம்மைக் கண்டிப்பாகப் பின் தொடர்ந்து பிடித்து விடத்தான் போகி ருர்கள்! இப்போது என்ன செய்வது?' என்று எண்ணலா ஞன். எதற்கும் செய்தித் தாளை வாங்கிப் பார்க்கலாம் என்று ஒன்றை வாங்கிஞன். கடைசிப் பக்கத்தில் ஒரு மூலையில், "திருக்களியூர்க் கோயிலில் இலட்சம் ரூபாய் பெறுமான நகைகள் களவு போயின' என்று போட் டிருந்தது அவ்வளவுதான். மாணிக்கம் விழுந்து விழுந்து

சிரிக்கத் தொடங்கினான். அங்கிருந்த ஒருவர், "என்ன அப்பா விசேஷம்? அப்படிச் சிரிக்கிறாயே!" என்று கேட்டார். மாணிக்கம், "ஒன்றுமில்லை" என்று சொல்லிக் கொண்டே, அந்த இடத்தை விட்டு நழுவினான். திரும்பி வரும்போது, 'அட, என்ன பைத்தியக்காரனைப் போல் அங்கே சிரித்தோமே!' என்று அவனுக்கே பட்டது. அதனோடு சிறிது கவலையும் அவன் முகத்தில் தோன்றலாயிற்று. இன்றைக்கு இராவிட்டாலும் இன்னும் இரண்டு நாள் கழித்தாவது கண்டுபிடித்து விடமாட்டார்களா?' என்று எண்ணிய போது அவன் மனத்திலே திகில் புகுந்து வாட்டியது.

வீட்டுக்குள்ளே நுழைந்ததும் அவன் தாய் அவன் முகத்தைக் கவனித்து, "என்னடா மாணிக்கம், உடம்பு சரி இல்லையா?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லையே, அம்மா!"

"சற்று நேரத்துக்கு முன்னே உன் நண்பன் ஒருவன் இங்கே வந்திருந்தான். அறைக்குள்ளே பார்த்தேன்; உன்னைக் காணவில்லை......ஏதோ பொம்மை வாங்கி வந்திருக்கிறாயே, காந்தி பொம்மையைப் போல்; அதை மேசைமேலே பார்த்தேன்."

"ஆமாம், அம்மா......வாங்கவில்லை."

"யார் கொடுத்தார்கள்? உனக்குத்தான் இதில் ஒரு பித்தாயிற்றே!"

"இல்லை, அம்மா......சொல்ல வெட்கமாக இருக்கிறது."

"என்னிடம் என்னடா வெட்கம்?"

"இல்லை......அந்த ஊருக்குப் போயிருந்தேனே...... அப்போது அங்கே ஒரு கோயிலிலே இது இருந்தது. ஜைனச் சாமியின் சிலை!"

"என்ன, என்ன? கோயிலிலிருந்தா?......மாணிக்கம்! ......மாணிக்கம்! என்னடா இது?"

"என்ன, அம்மா, தவறு? அங்கே காற்றிலும் மழையிலும் நனைந்து இது பாழாய்த்தானே போகும்?"

அவன் தாயின் முகத்தில் திகிலும் கலவரமும் குடிகொண்டன. "மாணிக்கம் நீ படித்த பையன். இப்படிச் செய்ய

லாமா ?—அதுவும் கோயிலின் சொத்தை எடுத்து வரலாமா? குலநாசம் என்பார்களே!'' என்று கையைப் பிசைந்து கொண்டாள்.

மாணிக்கத்தின் மனத்திலும் ஒருவிதமான திகில் குடி கொண்டது. இருந்தாலும், ''என்ன, அம்மா, தவறு? அந்தக் கோயிலோ இடிந்து கொண்டே வருகிறது. நம் மிடத்தில் இருந்தாலாவது இது ஒழுங்காக இருக்கும்'' என்றான்.

அவன் தாய் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாவிட்டாலும் அவள் மனத்துக்கு அது ஒப்பவில்லை என்று மாணிக்கம் தெரிந்துகொண்டான். பேசாமல் உணவை உட்கொண்ட பின் அவன் தன் அறையினுள் நுழைந்தான். அங்கே அரிக் கேன் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் ஒளியில் அந்தச் சிலை பளிச்சௌனத் தெரிந்தது. மாணிக்கம் அதை உற்று நோக்கினான். இதென்ன! பால் வடியும் அந்த முகத் தில் துயரம் தோற்றுகிறதே!—மாணிக்கத்துக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. கடைசியில் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான்.

* * *

மாணிக்கம் அந்த ஜினதேவரின் கோயிலின் எதிரே நின்றிருந்தான். அருச்சகர் அந்தப் பக்கமாக வந்தார். ''கதவைத் திறக்கவில்லையா? என்று அவரை விசாரித்தான். ''போம், ஐயா! உம்மைப்போல் ஆசாமிகளை இங்கே யார் வரச் சொல்கிறார்கள்? இப்படி வருகிறதும், ஆள் இல்லாவிட் டால் அதையும் இதையும் திருடிக்கொண்டு போவதுமே உமக் கெல்லாம் வேலை! அதனால் சாமி பூசை வாயில் மண் விழுந் தது. இதோ நாளைக்குத் தீபாவளி. எங்கள் சாமிக்கு முக்கிய மான நாள். தீப அலங்காரம் செய்வோம். இந்தத் திருட் டுக்கு அப்பால் சர்க்கார் வந்து கதவை அடைத்துவிட்டார்கள். இந்தத் தரம் தீபாவளியும் நடக்காது; ஒன்றும் நடக்காது. ஒரே இருட்டாகத்தான் இருக்கப்போகிறது. திருடின பாவி களைச் சாமி சும்மா விடாது'' என்று சாபம் இட்டார்.

மாணிக்கத்தின் மனத்தை ஏதோ ஒன்று உறுத்தியது.

உண்மையைச் சொல்லிவிடலாமா என்று எண்ணினன். அப்போது உடலில் சில்லென்ற ஓர் உணர்ச்சி உண்டாயிற்று.

* * *

மாணிக்கம் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தான். அவன் குளித்துவிட்டு ஈரக் கையோடு அவன் தாய் அவனைத் தொட்டு எழுப்பிக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்து விட்டது.

"மாணிக்கம், நேற்று இரவெல்லாம் எனக்கு தூக்கமே இல்லையடா! இந்தச் சிலையின் முகம்போல் ஒரு குழந்தைக்கு இருந்தது. அந்தக் குழந்தை வந்து, 'என்னை வீட்டுக்குக் கொண்டு விடு' என்று கதறி அழுவதுபோல் இருந்தது...."

மாணிக்கம் "முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு, "என்ன அம்மா, செய்யவேண்டும்?" என்றான்.

"பேசாமல் அதை மறுபடியும் அங்கேயே கொண்டு வைத்துவிடு" என்றாள் அவன் தாய்.

மாணிக்கம் பகுத்தறிவுள்ள வாலிபன்தான். அது வெறுஞ்சிலைதானே என்று முதலில் அவனுக்குட்பட்டது. ஆனால் அந்த எண்ணத்தையும் மீறி ஏதோ ஒன்று அவனை, 'நீ செய்தது தவறு, தவறு!' என்று குத்திக் காட்டிக் கொண்டே யிருந்தது. அதை வனத்திலிருந்து உதறப்பார்த்தான். இருந்தும் பகுத்தறிவுக்கும்' எட்டாத ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டுமென்று நடு நடுவே தோன்றியது. அதிலும், அன்று விடியற்காலை தான் இப்படிக் கனவு கண்டதிலிருந்து அவன் மனத்தில் அமைதியே இல்லை.

மாணிக்கம் படுக்கையைவிட்டு எழுந்தான். "அம்மா! எனக்குக்கூட என்னவோபோல்தான் இருக்கிறது" என்று தான் கண்ட கனவை அவளிடம் சொன்னான்.

தாயின் கட்டளைப்படி அன்று காலை இரயிலுக்கே அந்த ஊருக்குப் புறப்பட்டான். பையில் அந்த வெள்ளைக் கற்சிலை இருந்தது. அந்த ஊர் இரயில் வண்டி நிலையத்தில் வந்து இறங்கினதும் பக்கத்து ஊரில் அன்று மாலை வரையில் தங்கியிருந்தான். அந்தி நேரம் நெருங்கும்போது ஆற்றைக்

கடந்து ஊர் எல்லையை அடைந்தான். மார்பு திக்குத் திக்கென்று அடித்துக்கொண்டது. சுற்றிலும் உள்ள இயற்கைக் காட்சியில் அவன் மனம் சென்ருல்தானே ? கோயிலருகில் வரும்போது அவன் கால் எழவே யில்லை. கோயிற் கதவு திறந்திருந்தது. அப்போதுதான் சந்நிதியில் அருச்சகர் விளக்கேற்றிக்கொண்டிருந்தார். அவர் இவனைக் கவனிக்க வில்லை. மெதுவாக அந்தச் சிலை இருந்த மாடத்தினருகில் வந்தான். சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே அதைப் பழைய இடத்தில் வைத்தான். அப்போதுதான் அவனுக்கு உயிர் திரும்பி வந்ததுபோல் இருந்தது. அமைதியுடன் ஒரு பெரு மூச்சு விட்டான். பிராகாரத்தைச் சுற்றும்போது அருச்சகர் ஒவ்வொரு மாடமாக அகல் விளக்கை வைத்து, திரியும் எண்ணெயும் இட்டு ஏற்றிக்கொண்டே வருவது தெரிந்தது. அவரை நெருங்க அவனுக்குத் திகிலாகத்தான் இருந்தது. அவனைப் பார்த்ததும் சிரித்துக்கொண்டே "என்ன, தீபாவளி தரிசனத்துக்காக வந்தீர்களா ? வாருங்கள் நல்ல நாளிலேதான் வந்தீர்கள். இன்று மகாவீரர் சோதியில் கலந்த நாள். அதற்காகத் தீப அலங்காரமெல்லாம் விசேஷமாக இருக்கும்" என்ருர்.

மாணிக்கத்துக்கு அவர் இப்படிப் பேசியது ஆச்சரியமாக இருந்தது. இருந்தாலும் அவரோடு கூடவே போனுன். வெள்ளைச் சிலை மாடத்தண்டை வரும்போதும் அவர் முன் போலவேதான் அகல் விளக்கை வைத்து ஏற்றினர். "சரி ; சிலை கெட்டுப் போன விவரமே இவருக்குத் தெரியாது போல் இருக்கிறது !" என்று அப்போதுதான் மாணிக்கம் தெளிவாகத் தெரிந்து கொண்டான்.

அகல் விளக்கின் ஒளியில் அந்தச் சலவைக் கற்சிலையின் முகம் நன்ருகத் தெரிந்தது. இப்போது அதில் துயரத்தைக் காணவில்லை ; புன்னகை திகழ்ந்தது. மாணிக்கத்தின் மெய் சிலிர்த்தது. தலைவணங்கி வெகுநேரம் வரை அங்கேயே நின்றிருந்தான். பிறகு மெல்லச் சந்நிதியை நோக்கி நடந்தான். கோயில் முழுவதும் இலட்சக்கணக்கில் அகல் விளக்குகள் ஒளிரும் காட்சி அற்புதமாக இருந்தது. மாணிக்கத்

தின் உள்ளத்திலே இதுவரை இல்லாத ஓர் அமைதியும் இன்பமும் குடிகொண்டன.

வினாக்கள்

1. கோவிலில் மாணிக்கத்தைக் கவர்ந்தது எது? அக்கவர்ச்சியின் விளைவு என்னவாயிற்று?

2. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்—இக்கட்டுரையிலிருந்து உதாரணம் காட்டி இதனை விளக்குக.

3. புயலும் அமைதியும் என்னும் தலைப்பு இப்பாடத்திற்குப் பொருந்துமாற்றை விளக்குக.

கட்டுரைப் பயிற்சி

1. நீங்கள் பார்த்துள்ள ஒரு கோயிலை வருணித்து ஒரு கட்டுரை வரைக.

2. ஏதேனும் ஒரு பொருள் பற்றிச் சொந்தத்தில் ஒரு சிறு கதை வரைக.

மொழிப் பயிற்சி

1. கோயிலைச் சேர்ந்த சில உறுப்புக்களின் பெயர்களைத் தொகுத்து எழுது.

2. ஊரைத் தாண்டும் வரையில் அவனுக்கு வாயிலும் பல்லிலும் ஈரமில்லை—பொருள் தெளிவாகப் புலப்படுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி எழுதுக.

3. மாணிக்கத்துக்குப் பகீர் என்றது—பகீர் போன்ற மூன்று ஒலிக்குறிப்புக்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

10. கிருட்டினன் தூது

(வித்துவான். இ. மு. ஆறுமுக செட்டியார்)

(பாண்டவர், பன்னிரண்டாண்டு காட்டிலும், ஓராண்டு கரந்துறைந்து நாட்டிலும் காலங் கழித்தனர். பின்னர் தமது அரச பாகத்தைப் பெறுதற்கு அரவக்கொடியோனிடம் கண்ணனைத் தூதாக அனுப்பக் கருதினர்.)

கண்ணனைத் தருமன் நோக்கி, "எல்லோர் மனத்தும் எழுந்தருளிய பேரொளியே, செஞ்சொல்லுடைய சஞ்சய முனிவனுக்கு நாம் சொன்ன செய்தியையும், அழகிய சொற்களையுடைய உலூக முனிவர் நமக்காகத் துரியோதனனிடம் தூது சென்றபோது அவன் சொன்ன செய்தியையும் நீ அறிவாயன்றோ? நஞ்சூதனை மிகுதியாகவுண்டு அதனை ஒழிக்க நல்ல மருந்தினையும், மந்திரத்தினையும் தேடாமல் இறந்தவர்களைப்போல், நாம் முயற்சி இன்றி இருப்பது தகுதியோ" என்று வினவினான்.

"கொடும் போர் புரியும்படி துரியோதனாதியர் கூறினர். ஆயினும் அது அறமன்று; நீதியுமன்று" என்று முரசுக் கொடியோனிடம் கண்ணன் கூறினான். பின் அவனுடைய தம்பிமார்களைப் பார்த்து, "கழனிகளில் வரால் மீன்கள் துள்ளுகின்ற அழகிய குருநாட்டைப் பெற எண்ணமோ? மறுபடியும் சென்று துன்புறுபவராய் இருத்தற்கரிய காட்டில் சஞ்சரிக்க எண்ணமோ? சினந்து போர்புரிய எண்ணமோ? ஐந்து அரசர்களாகிய உமது உண்மையான எண்ணம் யாது?" என்று வினவினான் கண்ணபெருமான்.

தருமனுக்குப் போர்புரிய எண்ணமில்லை. அதனால் அவன் கண்ணனை நோக்கி, "எங்கள் ஆருயிரே, பகையாகிய நெருப்பை மிகுதியாக மூட்டி வளர்த்தால், உயர்ந்து வளர்ந்த மூங்கிற்காடு தானே பற்றி எரிந்து அழிவதுபோல், சினந்து போர்புரிந்தால் நாங்களும், துரியோதனாதியரும் மாண்டுபோவோம். ஆம்பலும் தாமரையும் மணங்கமழும் குருநாட்டில் நாங்கள் ஒன்று கூடி வாழும்படி நீ தூது சென்று சொல்லியருள்க" என்றான்.

அதற்கு, " அரவக்கொடியோனிடம் மறுசூதாடி நீங்கள் வெற்றி பெற்றீர். பெற்றும், அப்போது அவன் கட்டளை இட்டதுபோல் நீர் கொடுங்கானஞ் சென்று திரும்பி வந்தீர். அக்கொடியோன் உங்கட்குரிய பாகத்தைக் கொடுக்க மறுக்கிறான். அதனால் அவனைப் போரில் வென்று அரசாளத் துணிவதே கடமையாகும்'' என்று கூறினான் எம்பெருமான்.

போர்புரியத் துணியாத தருமன், " பெரியோரையும் கிளைஞரையும், குலத்துக்குரிய தம்பிமாரையும் வென்று உலகெலாம் ஆளும் ஆட்சியைவிட, வஞ்சகனான திருதராட்டிரன், சஞ்சய முனிவரிடம் கூறியதுபோல், காடுகள்தோறும் சென்று பழங்களையும், கிழங்குகளையும், இலைகளையும் உண்டு வாழ்தல் மிகவும் நன்றேயாம்'' என்று கூறினான்.

அது கண்ணனுக்குப் பொருத்தமென்று தோன்றவில்லை. அதனால், அவன் தருமனை நோக்கி, " நீங்கள் போருக்கிளைத்துக் கடுங்கானடைந்தால் உலகம் உங்களை இகழாதோ ? திரௌபதியைச் துச்சாதனன் மானபப்படுத்திய காலத்தில் நீங்கள் உரைத்த சூளுரை பொய்த்திடாதோ ? போருக்கஞ்சிக் கானகமடைதல் அரசர்க்கு அறமாகுமோ ?'' என்று கண்ணன் கூறலும், அதற்குத் தருமன்,

" நீ தூதுசென்று எமது கருத்தைத் துரியோதனுதியார்க்குச் சொல். அதன்படி குருநாட்டையும், உரிமையையும் கொடுக்க மறுத்தால் காலதூதர் களிப்படையப் போர் செய்தாயினும் நாட்டைப் பெறுவேன். இது வசையுமன்று. உழவர்களின் முற்றங்களில் எல்லாம் சங்குகள் தவழ்ந்து செல்லும் குருநாட்டின் ஒரு பாகத்தைக் கேள். அதற்கவன் உடன்படானாயின் எங்கள் ஐந்து பேருக்கும் ஐந்து ஊர்களைக் கேள். அவன் இல்லை என்றால் ஐந்து வீடுகளைக் கேள். அவற்றையும் கொடுக்க மறுத்தால் போர் செய்யக் கேள்'' என்றான் தருமன்.

இவ்வாறு தருமன் கூறியது வீமனுக்கு வேதனையை உண்டாக்கிற்று. அவன் விரைந்தெழுந்து தருமனை நோக்கி, " துச்சாதனன் திரௌபதியை இழுத்துச் சென்று அரசவையில் அவமானப்படுத்தினான். அவள் வெட்கமுற்று முறை

யிட்டாள். அப்போது, 'நீங்கள் சினங் கொள்ளாதீர்' என்று எம்மிடம் கூறி, நமக்கும் நமது மரபினுக்கும் உலகுள்ளளவும் நீங்காப் பழியையே உண்டாக்கினுய். எரி தவழும் காட்டில் பன்னிரண்டாண்டு அலேந்தோம். ஓராண்டு உருக்கரந்து நாட்டில் வசித்தோம். இன்னமும் கொடிய பகைவர்களான துரியோதனுதியரைக் கொல்லப் பின்னடைகின்ருய். அரவக்கொடியோன் கொடுமையினும், முரசக் கொடியோய் உனதருளுக்கஞ்சினேன். உன்னேக் காளுள அனுப்பிய கண்ணற்று அருளுமற்ற திருதராட்டிரனது அன்புக்குரிய மகனுன துரியோதனன் ஆட்சிபுரியும் நாட்டை எல்லாம் ஒரு குடைக்கீழ் நீயாளத் தருவன். அதுவுமன்றி, நமது உரிமை எல்லாம் கவர்ந்த உனது பெரிய தம்பியான துரியோதனன் உன்னே வெறுக்காதபடி இவ்வுலகினும் மேலான விண்ணுலகை யாளத் தேவேந்திர பதவியையும் அவனுக்குத் தருவேன்'' என்ருன்.

இவ்வாறு வருந்திக் கூறிய வீமனேத் தருமன் கையமர்த்தி, "குற்றம் பார்க்கில் சுற்றமில்லே. ஒரு குடும்பத்திற் பிறந்தவர்கள் ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையைப் போல் நன்மை உண்டோ? இப்பேருலகின் காரணமாகத் துரியோதனுதியரும், நாமும் சமர்புரிந்தால் இருவருக்கும் குற்றமல்லவா ?'' என்று கூறினுன்.

வெகுண்டு கூறிய வீமனுக்குத் தருமனும், கண்ணனும் பல நீதிகளே எடுத்துக் கூறினர். அவை அருச்சுனது இருதயத்தைக் குத்திப் புண்ணுக்கின. அவன் சினந்து, கண்ணனே வணங்கி, "தேவர்களாயினும், பழைய அரக்கர்களாயினும், சொல்கின்ருேர் யாவராயினும் எதிர்த்தவரது உயிரைக் குடிப்பதற்கென்றே என் கையில் அம்புளது. மேகந் தவழும் பாக்குமரங்களின்மேல் வரால் மீன்கள் துள்ளிக் குதிக்கும் கழனிகளேயுடைய குருநாட்டைத் துரியனிடம் ஏன் யாசிக்கவேண்டும்? பொன் மயமான ஆழியையுடைய கண்ணன் தூதாகச் சென்ருலும், பொறுமையுள்ள தருமன் கூறியவற்றைக் கூறினுலும் அவன் கேட்கமாட்டான். ஏனெனில் கெடுமதி கண்ணுக்குத் தோற்ருதல்லவா? எப்

படிப்பட்ட காலத்திலும் உவர் நிலத்தில் நெல் முளைகளை விதைத்தாலும் விளையா. பாம்புக்குப் பால்கொடுத்து வளர்த்தாலும் நஞ்சினைத் தருமேயன்றி நல்ல பயனைத் தராது'' என்று சாற்றினான்.

இவ்வாறு பார்த்தன் கடுஞ்சினத்தால் வீரமும் நீதியும் விரவிய மொழிகளை அடுக்கிக்கொண்டே செல்லக் கண்ணன் ''சினந்தணிக' என்றான். அருச்சுனன் பேசாதிருந்தான். ஆயினும் சினந் தணியவில்லை. அப்போது நகுலன் எழுந்து அன்போடு கண்ணனையும் தருமனையும் வணங்கி,

''திரைகடல் சூழ்ந்த பேருலக முழுவதையும் துரியோதனனிடமிருந்து பாண்டவர் பெறுவர் என்று உலகோர் உரைக்கும் வாய்மையுரை பொய்யுரையாகுமோ? அரச தருமத்தில் ஆண்மைக்கு இடமில்லையோ? அரசவையில் நாமெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கத் திரௌபதியைத் துகிலுரிந்த கொடியோனிடம் இன்னமும் இரந்து அவனது ஆட்சியின் கீழிருந்தால் உலகம் நம்மை என்னதான் சொல்லாது?'' என்றான்.

அப்போது கண்ணன் நகுலனைக் கையமர்த்தி, ''இது நன்றாக இருக்கிறது'' என்று கூறிச் சகதேவனைப் பார்த்து, ''தருமன், வீமன், அருச்சுனன், நகுலன் இவர்கள் கூறிய அனைத்தும் செவிமடுத்தோம். புகழுடையோய், உன் கருத்தைக் கூறுக'' என்றான்.

''நறுமணம் கமழும் துழாய் அலங்கலணிந்த முடியோனே, உன் மாயை இவ்வுலகில் ஒருவருக்கும் தெரியாது. உண்மையாக யானறிவேன். உன் திருவுளக் கருத்தெதுவோ அதுவே என் கருத்தாகும்'' என்றான் சகதேவன்.

இதைக் கேட்ட நெடியோன் நகைத்தருளி, ''மற்றவர்கள் கூறியபடி இச்சகதேவன் கூறவில்லை; தந்திரமாகக் கூறினான்'' என்று கருதினான். கருதிச் சகதேவனைத் தனியாக மணிமண்டபத்திற்கு அழைத்துச் சென்று, ''இப் பாரதப் போர் நடவாதபடியும், ஒருவரும் இறவாமல் பிழைத்து வாழும்படியும் தக்க உபாயம் சொல்லுக'' என்றான். எனலும் சகதேவன் கண்ணனை வணங்கி,

'கன்னன்' அரசாள "பகைமைக் குணமுடைய பார்த்தனைக் காலனுக்கு விருந்தாக்கிப் பஞ்சாலியின் கரு நிறக் கூந்தலைக் களைந்து உனது கால்களிலே விலங்கிட்டுக் கைகளையும் பிணித்து வைப்பேனுயின் பாரதப் போர் நடவாது", என்றான்.

இங்ஙனம் கூறிய சகதேவனை நோக்கி, நீ முன்னே கூறிய செயல்களை நிறைவேற்றினாலும் இறுதியிற் கூறியபடி என்னைக் கட்டமுடியாது. எவ்வகையில் என்னைக் கட்டு வாய் ?'' என்று கண்ணன் வினவினான். அதற்குச் சகதேவன், உனது உண்மை வடிவத்தை நீ காட்டினால் நான் கட்டிடுவேன்'' என்றான்.

கண்ணன் சகதேவனது தூய மனநிலையை அறியும்பொருட்டு, 'என்னைக் கட்டுக என்று கூறி, பதினாருயிரம் திருவுருவங்களாய் (கண்ணனைப் போலவே) காட்சியளித்தான். சகதேவன் அவ்வடிவங்கட்கெல்லாம் முதன்மையான திருவுருவத்தைத் தனது ஞானத்தாலறிந்து, உலகனைத்தும் தாவியளந்த இரண்டு பொன்னடிகளையும் தனது மனக் கயிற்றாற் கட்டினான்.

நிலவுலகில் வாழும் அந்தணரும், கற்பகத்தருவின் கீழ் வைகும் தேவர்களும் தேடிக்காணு மலரடியோனுன கண்ணன், 'நீ கடவுளாவாய்' என்றறிந்து மனக் கயிற்றாற் கட்டிய சகதேவனது கண்களிக்க மற்றத் திருவுருவங்களை மறைத்து அவன் கட்டிய உண்மைத் திருவுருவத்தைக் காட்டினான். பின் சகதேவனைப் பார்த்து, "எனது உண்மை வடிவத்தைத் தத்துவ ஞானத்தாலறிந்து கட்டியது நன்று, இப்போது என்னடிகளை விடுக'' என்றான்.

"திருநெடுமாலே உன்னையடைந்த எங்கள் ஐவரையும் கொடிய பாரதப்போரில் பாதுகாக்க வேண்டும்'' என்று சகதேவன் வேண்டினான். அதற்குக் கண்ணன் உடன்பட்டு 'அப்படியேயாகட்டும். இன்று நாமிருவரும் பேசிக்கொண்டவற்றுள் ஒன்றையும் பிறரறியச் சொல்லாதே' என்று கூறினான்.

அம்மணிமண்டபத்திலிருந்து அறிவினையுடைய அ

விருவரும் பாண்டவரிடம் சென்றனர். நீண்ட கருங் கூந்தல் விரித்துகிடக்க நின்ற பாஞ்சாலியின் முகத்தைச் சகதேவன் பார்த்து, "இப்பொழுது சமாதானமே சாலச் சிறந்தது" என்றான்.

"தருமனுக்கும் இதுவே கருத்தாகும். இளைஞருடன் போர்புரியாமல் ஒற்றுமையுடன் வாழ்வதே எனக்கும் எண்ணம்" என்று கண்ணனும் கூறினான்.

மின்னற் கொடிபோன்ற பாஞ்சாலி, செவ்வரி பரந்த மலர்க்கண்களில், நீரொழுகவும், மலர் முடித்தலை மறந்த குழல் கீழே புரளவும், மணங்கமழும் செந்தாமரை மலர் போன்று சிவந்த கண்ணபிரானுடைய திருவடிகளில் விழுந் தழுதாள்.

நெருப்பினும் கொடிய துரியோதனன் அரசவைக்கு என்னை அழைத்து எனக்குக் குற்றத்தை யுண்டாக்கினான். அக்கொடியோனிடம் சென்று ஆற்றல் மிக்கப் பாண்டவர் ஐந்து ஊர்களைப்பெற்று வாழ்ந்தால், அன்று விரித்த கூந்தலை என்று முடிப்பேன்" என்று திரௌபதி கண்ணீர் தன்னை நனைக்க ஓவென்றழுதாள்.

அதைக்கண்டு உருகிய சாத்தகி என்பவன் அவர் களைப் பார்த்து, "துச்சாதனன் திரௌபதியை அவமானப் படுத்திய காலத்தில் இந்த வீமனது கையில் கதாயுதம் இருந்தது. அந்த அருச்சுனன் கையில் வில்லிருந்தது. வண்டுகள் மொய்க்கும் பூங்குழலையுடைய திரௌபதி தன் மேல் 'குற்றம் நின்றது' என அழுது நின்றாள்" என்று கூறினான்.

சாத்தகி இவ்வாறு கூறச் சடையாகத் திரிந்துகிடந்த கூந்தலையுடைய திரௌபதி புலம்பிக் கதறினாள். அதைக் கண்ணுற்ற கண்ணன் கசிந்துருகி அவளைப் பார்த்து, 'நல்லாய், வன்மையுள்ள பாண்டவர்க்குத் தூதாகச் சென்று உனது விரிந்த கூந்தலை நானே முடிப்பேன். அளவிடற்கரிய அற்பர்களான துரியோதனாதியருடைய அந்தப்புர மாதரின் மலரணிந்த கூந்தல்களே இனி எல்லாரும் காண விரிக்கப் பெறும்" என்று கண்ணன் கூறினான்.

கூறலும் தருமன் அவனை நோக்கி, 'அரசர்க்கரசனுன துரியோதனன்பால் தூதேகென' வேண்டிக்கொண்டான். ஒளியுள்ள சக்கரங்களையுடைய போர் செய்யும் குதிரைகள் பூட்டிய தேரில் கண்ணபிரான் எழுந்தருளி அத்தினபுரியை நோக்கிச் சென்றான்.

வினாக்கள்

1. கிருட்டினன் தூது எந்த நூலில் எந்தப் பருவத்தில் வந்துளது?
2. துரியோதனன், தருமன் இவர்கட்குரிய கொடிகள் யாவை?
3. தூது செல்க என்று கூறிய தருமனுக்குக் கண்ணன் கூறியது யாது?
4. "குற்றம் பார்க்கில் சுற்றமில்லை"—இடஞ் சுட்டிப் பொருளை விளக்குக.
5. திரௌபதி கண்ணீர் விட்டுக் கதறியபோது சாத்தகி என்பான் யாது கூறினான்.
6. "உயர்ந்து வளர்ந்த மூங்கிற்காடு தானே பற்றி எரிந்து அழிவது போல்"—உவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

கட்டுரைப் பயிற்சி

இந்தப் பாடத்தை மாதிரியாக வைத்துக்கொண்டு செய்யுட் பகுதியில் வந்துள்ள குசேலோபாக்கியானத்தின் செய்யுட்களை உரைநடையில் வரைக.

மொழிப் பயிற்சி

1. மூன்றுவது பாராவில் உள்ள நேர் கூற்று மொழிகளை அயல் கூற்று மொழிகளாக்கி மாற்றுக.

2. இவ்வாறு கூறியது வீமனுக்கு வேதனையை உண்டாக்கியது—நான்காம் வேற்றுமையை எழுவாய் ஆக்குக.

11. உபயோகமும் வாழ்க்கை நிலையும்

(வித்துவான். க. சாமிநாதன்.)

தேவைகள் மிகுந்திருப்பதே நாகரிகத்தின் அறிகுறி என்ற கொள்கை: உலகத் தோற்றத்தின்போது மனிதனுக்கு அவசியமான பொருள்கள் மிகக் குறைவாகவே இருந்தன. பழங்கால மனிதன் தனக்குக் கிடைத்ததையுண்டு, குளிருக்கடக்கமாக அகப்பட்டதை உடுத்து, மழை வெயில்களுக்குச் சிறு குடிகளில் ஒண்டிக் காலங் கழித்து வந்தான். தொடக்கத்தில் வேட்டையாடுவதற்கும், காலப் போக்கில் மண்ணைக் கிளறுவதற்கும் ஒருசில அற்ப ஆயுதங்கள் அவனுக்குப் போதியனவாக இருந்தன. இக்காலத்திலோ மனிதனுக்கு மிகவும் அவசியமான பொருள்கள் பலப் பலவாகப் பெருகியிருக்கின்றன. அவற்றுள் ஒன்றில்லையேனும் அவன் துடி துடித்துப் போகிறான்.

"நாகரிக முதிர்ச்சிக்கு அடையாளம் மனிதனுக்கு அவசியமான பொருள்களின் எண்ணிக்கை அதிகமாகி, அவையாவும் அவனால் உபயோகிக்கப் படுவதேயாகும்" என்று பலர் கூறுகிறார்கள். நாகரிகமற்ற சமூகங்களுக்குத் தேவையுள்ளப் பொருள்கள் மிகவும் சிலவாக இருப்பதையும், நாகரிக உச்ச நிலையைப் பெற்றிருக்கும் சமூகங்களுக்கு அவசியமான பொருள்கள் பலவாக இருந்து வருவதையும் அவர்கள் உதாரணமாகக் காட்டுகிறார்கள். வேறு சிலர், "நாகரிக முதிர்ச்சிக்கு அதிகப் பொருளின் பழக்கம் அறிகுறியாகாது" என்று இவர்கள் கொள்கையை மறுத்திருக்கிறார்கள்.

இந்த இரு திறத்தார் கொள்கைகளின் உண்மை அன்மைகள் எப்படி யிருந்தாலும், வாழ்க்கைத் துறையில் முன்னேறுவதற்கு அதிகப் பொருள் பழக்கம் அவசியமென்பது எப்பொழுதும் சரியாகாது. ஏனெனில் வாழ்க்கை வீழ்ச்சிக்கும் அதிகப் பொருள் பழக்கம் காரணமாதல் கூடும்.

வாழ்க்கையின் நோக்கம் ஒரு தனி நபர் மட்டும் முன்னேறுவதன்று; சமூகம் ஒரு மரம்; அந்த மரத்தில் தனி

மனிதன் ஓர் இலை தான்; சமூக மரம் முழுவதும் நல்ல வளர்ச்சியுற்றால் தான் அம்மரத்தில் மலர்களும் காய் கனிகளும் தோன்றுதல் கூடும். எனவே பொருள் பழக்கம் யாவரிடையும் சமமாகப் பரவியிருத்தல் அவசியமாகும். மற்றொரு விஷயம். ஒரு சமூகத்தினிடம் அதிகப் பொருள் பழக்கம் பரவியிருந்தும் அச்சமூகம் உபயோகிக்கும் பொருள்களிற் பெரும்பாலன உள் நாட்டு உற்பத்தியைச் சேராதவை எனில் அத்தகைய அயல் நாட்டுப் பொருள்களின் பழக்கம் நாகரிகத்துறையில் முன்னேற்றத்தின் அறிகுறியென்று கூறுவதெப்படி? அது நாகரிக வீழ்ச்சியின் குறியேயன்றோ!

உபயோகத்தைத் தழுவி எழுந்துள்ள வேண்டாத இயல்புகள் இரண்டு:

உபயோகத்தைத் தழுவி இரண்டுவித இயல்புகள் மக்களிடை இதுகாலைத் தோன்றியுள்ளன. பழங்காலத்திலிருந்தே இவை வளர்ச்சியுற்று வருகின்றன என்னலும் மிகையாது. இவற்றுள் ஒன்று குறைந்த உழைப்பு முறை (Laws of least effort); மற்றொன்று சமூகம் மெச்ச வேண்டுமென்ற விருப்பம் (Desire for social approval).

குறைந்த உழைப்பு முறை:

விசிறியைக் கொண்டு கைகளால் விசிறிக் கொள்வது உழைப்பு யென்று எண்ணி மின்சார விசிறிகளைத் தேடுதல், கைகளால் மாவரைக்கும் உழைப்பை ஒழிக்க இயந்திரத்தின் உதவியை நாடல், கற்சட்டி மட்பாண்டங்கள் இவைகளை உபயோகிப்பதில் ஜாக்கிரதையும் உழைப்பும் அதிகப் வேண்டுமென்று நினைத்து அலுமினியம் பித்தளை முதலிய பாத்திரங்களை உபயோகித்தல் முதலியன குறைந்த உழைப்பு முறைக்குச் சில உதாரணங்களாம். இக்காலத்தில் குறைந்த உழைப்பு முறையை ஒட்டி எத்தனையோ பொருள்கள் தோன்றியுள்ளன. அமெரிக்காவில் பண்டங்களை விற்பனவும், சமையல் செய்வனவும் பிறவும் பொறிகளே. இவ்வித

மாக மனிதர் உழைப்பைக் குறைத்துக் கொள்ள விரும்புவது அந்நாட்டில் வழக்கமாக இருக்கிறது.

சமூகம் மெச்ச வேண்டும் என்ற விருப்பம் :

ஒருவர் வீட்டுக்கு நான் சென்றிருந்தேன். அங்கே கூடத்தில் விசாலமான மேஜையின் மேல் வெள்ளை விரிப்பு ஒன்று இருந்தது. அதன்மேல் புதிய பாத்திரங்களும் தட்டு களும் மேல் நாட்டுப் பொம்மைத் தினுசுகளும் வைக்கப்பட் டிருந்தன. 'இவை எதற்கு?' என்று நான் கேட்டதற்கு வீட்டாரிடமிருந்து 'அழகுக்கு' என்ற மறுமொழி கிடைத் தது. பிறகு அவ்வீட்டார் என்னை அந்த , மாளிகை'யின் பல பாகங்களுக்கு இட்டுச் சென்று அங்கங்கே உள்ள 'அழகு'களை விளக்கினார்கள். வீட்டின் அமைப்புக்கு அவற் றில் பல அவசியமானவையல்ல. அங்ஙனமிருக்க, அந்த வீட்டார் அவைகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதற்காக நாடோறும் அதிகமான முயற்சியை எடுத்துக் கொள்வதற்குக் காரணந்தான் யாது? பிறர் தங்களை மெச்ச வேண்டும் என்ற குணம் மனிதனுக்கு இயல்பாக அமைந்துள்ளது. அதனால்தான் அவன் அவசியமாகாது ஆடம்பரத்துள் அடங் கும் பல செயல்களை மேற்கொள்ளுகிறான்.

நவீன நாகரிக உலகில் இந்த வகையில் (குறைந்த உழைப்பு முறை, பிறர் கண்டு மெச்ச வேண்டு மென்ற விருப் பம் காரணமாக) அநேக பொருள்களின் உபயோகம் தோன்றி யிருக்கிறது.

இந்த இரு முறைகளால் விளையும் தீமைகள் :

இவ்விரு குணங்களும் மக்களுக்கு இயல்பாக இருந்த போதிலும் எல்லோரும் இவற்றைத் தேடிக்கொள்ளத் தக்க வாய்ப்பு வந்தவர்களாக இருக்கமாட்டார்கள். சிலர் செல்வர் களாகவும் பலர் ஏழைகளாகவும் இருப்பதனாலும் இந்த இயல்புகளைப் பெறப் பணம் தேவையாக இருப்பதனாலும் மேற்கூறியவற்றின் தொடர்பாக உபயோகத்துக்குத் தடை களும் வரையறைகளும் (Checks and limitations) ஏற்படு

கின்றன. இவற்றைக் கருதி ஏழை மக்கள் உணவு வகைகளையும் பிற வசதிகளையும் குறைத்துக்கொண்டு இந்த இரண்டு குணங்களைப் பூர்த்திசெய்துகொள்ள முயல்கிறார்கள். முப்பது ரூபாய் மாதச் சம்பளமுள்ள ஒருவரின் மனைவி ரூ. 40 விலையுள்ள புடவையை உடுக்கிறாள். சோப்பு, முகப் பொடி, முகப் பசை முதலியவற்றுக்காக வருவாயில் ஒரு பிரிவை எடுத்துக் கொள்ளுகிறாள். சாப்பாட்டுச் செலவைக் குறைத்துவிட முயல்கிறாள். அவளும், கணவனும் குழந்தைகளும் பலவீனமடைகிறார்கள். முடிவில் அவர்களுடைய வாழ்க்கையானது துன்பமாக முடிகிறது. இத்தகையவர்களுக்காக வைரங்களுக்குப் பதிலாகப் போலி வைரங்களும் தங்க நகைகளுக்குப் பதிலாக 'ரோல்ட் கோல்ட்' (Rold gold) நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களுக்குப் பதிலாகப் போலி வெள்ளிக் கலன்களும் (Ever - Silver) தோன்றியுள்ளன. இவை சில உதாரணங்கள்.

நாகரிகம் என்ற பெயரை வைத்துக்கொண்டு வீண் உபயோகத்தில் சிக்குண்டு வருவாய்க்குமேல் செலவு செய்து குடும்பங்கள் அழிவதுடன், உள்நாட்டுத் தொழில் முறைகள் கெட்டுப்போய் அன்னிய நாட்டுத் தொழில்கள் ஓங்க நம் நாட்டில் இன்று பலர் காரணமாக இருக்கிறார்கள்.

ஆராய்ச்சியற்ற உபயோகம் தகாது என்பதை விளக்கவே இவ்வளவும் கூறப்பட்டது.

வினாக்கள்

1. வாழ்க்கையின் நோக்கம் யாது?
2. குறைந்த உழைப்பு முறையை விளக்குக.
3. எது நாகரிக வீழ்ச்சியின் குறியேயாகும்?
4. சமூகம் மெச்சவேண்டும் என்ற கொள்கையால் ஏழைகள் என்ன செய்கின்றனர்?

கட்டுரைப் பயிற்சி

பணக்காரர்போல் ஏழைகள் ஆடம்பர வாழ்க்கை வாழ எண்ணுவதால் உண்டாகும் தீங்கினைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. துடிதுடித்து, பலப்பல, காலப்போக்கில், உச்சநிலை, பொருட் பழக்கம்—வாக்கியம் அமைக்க.

2. உண்மை அன்மைகள்—இவ்விதம் இரட்டையாக வரும் ஒன்றற் கொன்று எதிர்மொழியாக உள்ள ஐந்து தொடர்களைக் கூறுக.

3. சமூகம் ஒருமரம்; அந்த மரத்தில் தனி மனிதன் ஓர் இலைதான்; சமூகமரம் முழுவதும் நல்ல வளர்ச்சியுற்றால்தான் அம்மரத்தில் மலர்களும் காய்கனிகளும் தோன்றக்கூடும். இவற்றை ஒரு வாக்கியமாகத் தொடர்பு படுத்தி எழுது.

தமிழ்ப் பூந்துணர்

ஐந்தாம் படிவம்—சிறப்புத் தமிழ்

V Form

தொகுப்பாளர்கள் :

வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்
தலைமைத் தமிழாசிரியர்,
ஸர் தியாகராயர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

வித்துவான் க. சாமிநாதன்
தமிழாசிரியர், பி. எஸ். உயர்நிலைப் பள்ளி, சென்னை.

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

 [விலை அணா

முதற் பதிப்பு—நவம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2107)

முகவுரை

தமிழ்ப் பூந்துணர் என்னும் இந்தப் புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக் கென்று 2-7-1952-இல் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப் பெற்றவை. இந்த வரிசையில் இது ஐந்தாம் பாரம்—சிறப்புத் தமிழுக்குரியது. இதனுள் இலக்கியத் துக்கும் பொது அறிவுக்கும் ஏற்ற இடம் தக்காங்கு வழங்கப் பெற்றுள்ளது. செய்யுளடிகளும் உரைநடைப் பகுதியின் பக்கங்களும் துரைத்தனத்தார் வரையறையிட்டுள்ள அளவில் அமைந்துள்ளன.

இதில் சேர்க்கப் பெற்றுள்ள செய்யுட்பகுதி மாணவருக்கு உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தையும் ஊட்டக் கூடியதென்று எண்ணுகிறோம். இப்பகுதியிற் கண்ட குறிப் புரை முதலியன மாணவரின் இலக்கிய அறிவை வளர்க்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன. கட்டுரைகள் யாவும் அன்னூர்க்குத் தமிழில் நல்ல பழக்கம் ஏற்படும் வகையில் தொகுக்கப் பெற்றுள்ளன.

இதனுள் கண்ட கட்டுரைகளை வெளியிட எங்களுக்கு அனுமதியளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பதிப்பாளருக்கும் எங்களுடைய மனமார்ந்த வணக்கத்தை நன்றியுடன் தெரி வித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
தொகுப்பாளர்கள்

பொருள் அடக்கம்

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

தமிழ்ப் பூந்துணர்

ஐந்தாம் படிவம்—சிறப்புத் தமிழ்

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

பொது வணக்கம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. (1)

சிவபெருமான்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் ! எனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ ?
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ ?
எண்டோள் முக்கண் எம்மானே !
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே. (2)

குறிப்புரை

இப்பகுதியிலுள்ள இரண்டு கவிகளும் திருவாசகம் என்ற நூலிலிருந்து எடுத்துக்கொண்டவை. திருவாசகத்தை அருளிச் செய்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்’ என்ற முதுமொழி இந்நூலின் பெருமையைக் காட்டும்.

1. வளி - காற்று. ஒளி - தீ. ஊன் - உடல். கோன் - தலைவன். கூத்தாட்டுவான் - ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே. சிற்றறிவையுடைய எனக்கு உன்னை வாழ்த்துதல் அரிது என்றபடி.

2. அன்றே - என்னை நீ ஆட்கொண்ட அந்நாளே. எண்டோள் - எட்டுத் தோள்கள். நாயகம் - தலைமையையுடையோன்.

II. அறநெறி

புறநானூற்று நீதிகள்

புறப்பொருளைப் பற்றிய நானூறு பாக்களையுடைய நூல் புறநானூறு எனப்படும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது சங்க காலத்து நூல். பலவேறு காலங்களிலிருந்த பல புலவர்கள் பாடியவற்றை எவரோ தொகுத்து வெளியிட்டுள்ளார். தொகுத்தவர் ஒவ்வொரு செய்யு ளுக்கும் திணையும் துறையும் வகுத்து அதன் அதன் ஆசிரியர் பெயரையும் குறித்திருக்கிறார்.

உண்டால் அம்மஇவ் வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர் ; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (1)

—இளம்பெருவழுதி

'யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியர் ?' என வினவுதிர் ஆயின்,
மாண்டஎன் மனைவியோடு மக்களும் நிரம்பினர்,
யான்கண் டனையர்என் இளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் ; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. (2)

—பிசிராந்தையார்

யாதும் ஊரே யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தவிர்தலும் அவற்றோர் அன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே ; முனிவின்
இன்னா தென்றலு மிலமே ; மின்னொடு

வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (3)

—கணியன் பூங்குன்றனார்

குறிப்புரை

1. முதலடியில் ஆல், அம்ம அசைகள். இயைவதாயினும் - கூடுவதாயினும். தமியர் - தனித்து. முனிவிலர் - வெறுப்பிலர். துஞ்சலும் - சோம்பியிருத்தலும். உலகு உடன் பெறினும் - உலக முழுவதும் பெற்றாலும். நோன்றாள் - வலிய முயற்சி. உண்மையான் - உண்டாதலால். பிறர்க்கென முயலுநர் உண்மையான் இவ்வுலகம் உண்டு.

2. யாங்கு ஆகியர் - எப்படி ஆயினீர். மாண்ட - மாட்சிமைப்பட்ட. நிரம்பினர் - அறிவு நிரம்பினர். யான் கண்டனையர் - யான் கருதினவற்றையே கருதுவர். இளையர் - ஏவல் செய்வோர். அதன் தலை - அதற்கு மேலே. ஆன்று அவிந்து அடங்கிய - நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டிய உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலன்களும் அடங்கிய.

3. கேளிர் - உறவினர். தணிதலும் - தீர்தலும். அவற்றோர் அன்ன - அவைகளை ஒப்பத் தாமே வருவன. மகிழ்ந்தன்றும் - உவந்ததும். தலைஇ - பெய்தலான் ; அளபெடை. ஆனாது - அமையாது ; இடைவிடாமல். கல்பொருது இரங்கும் - கல்லை அலைத்து ஒலிக்கும். மல்லல் - வளப்பம். புணை - தெப்பம். முறை - ஊழ். திறவோர் காட்சியின் - நன்மை கூறுபாடுடைய அறிவோர்.

III. வரலாறு

1. கம்பராமாயணம்

இராமனும் கோசலையும்

கம்பர் இயற்றிய இராமாயணம் என்பது இதன் பொருளாகும். கம்பராமாயணம் சிறந்த தமிழ் நூல்களுள் சிறந்த ஒன்ருகப் பாராட்டப் படுகிறது.

கம்பர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் உவச்சர் குலத்திற் பிறந்த வர். திருவெண்ணெய் நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப் பெற்று அவர் இல்லிலேயே வளர்ந்து வந்தார். இவர் மதம் வைணவமென்று தோன்றினும் ஊன்றி நோக்குவார்க்கு இவர் சமரச பாவ முடையவர் என்பது புலனுகும். 'கல்வியிற் பெரியர் கம்பர்', 'கம்பர் வீட் டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பன இவருடைய பெருமையைப் புலப் படுத்தும்.

உங்களுக்குப் பாடமாக வந்துள்ள இந்தப் பகுதி அயோத்தியா காண் டத்துள் உள்ளது.

இராமன் கோசலையை அடைதல்

குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் னிரங்கி யேங்க
மழைக்குன்ற மனையான் மவுலி
கவித்தனன் வருமென் றன்பு
தழைக்கின்ற உள்ளத் தன்னுள்
முன்னெரு தமியன் சென்ருன். (1)

'முடிபுனைதற்கு இடையூறுண்டோ?' என்று கோசலை கேட்டல்

புனைந்திலன் மவுலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொ லென்னும்
ஐயத்தாள் நளின பாதம்

வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற் கென்றாள். (2)

இராமன் 'பரதன் முடிபுனைவான்' என்றல்

மங்கை யம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநுங் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். (3)

கோசலை மகிழ்வுற்று 'அரசினை நீயே பரதனுக்குக் கொடு' என்றல்

முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனேர்
குறைவி லன்னெனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள். (4)
என்று பின்னரும் மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள். (5

'அரசனது கட்டளை ஒன்று உண்டு' என்று இராமன் கூறுதல்

தாயு ரைத்தற்சொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினான்
நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டொர் பணியென் றியம்பினான். (6

கோசலையின் வினாவும் இராமனின் விடையும்

ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டொ ரேழிரே டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றானென்றான். (7

கோசலையின் வருத்தம்

ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்ருெட ராமுனம்
ஏங்கி ளுளிளைத் தாள்திகைத் தாண்மனம்
வீங்கி ளுள்விம்மி ளுள்விழுந் தாளரோ. (8)

வருத்த முற்றவள் செயல்

வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வனே
அஞ்சு மஞ்சுமென் ஞருயி ரஞ்சுமால். (9)

அறமெ னக்கிலை யோவெனு மாவிறைந்
திறவ டுத்ததென் தெய்வவதங் காளெனும்
பிறவி சைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினுள். (10)

கோசலையை இராமன் தேற்றுதல்

இத்தி றத்தி னிடருறு வாள்தனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினேய்
பொய்த்தி றத்தின ஞக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயென. (11)

சிறந்த வெம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில ஞக்கி வனத்திடை
உறைந்து பேரு முறுதிபெற் றேனிதற்
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ ! (12)

விண்ணு மண்ணு மவ்வேலையு மற்றும்வே
றெண்ணும் பூத மெலாமழிந் தேகினும்
அண்ண லேவன் மறுக்க வடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றான். (13)

'என்னையும் அழைத்துச் செல்' என்று கோசலை கேட்டல்

ஆகி லைய வரசன்ற னுணையால்
ஏக லென்பதி யானுமு ரைக்கிலேன்
சாகலா வுயிர் தாங்கவல் லேனையும்
போகி லுன்னொடுங் கொண்டனை போகென்றாள். (14)

கோசலை தசரதனோடு இருத்தலின் அவசியத்தை இராமன் கூறுதல்

என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானம் படரத் துணிவதே
அன்னை நீயறம் பார்க்கிலை யாமென்றான். (15)

வரிவி லெம்பியிம் மண்ணர சாள்வதற்
குரிமை மாநில முற்றபின் கொற்றவன்
திருவி னீங்கித் தவஞ்செயு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமென்றான். (16)

வனம் செல்வதனால் வரும் நன்மைகளை இராமன் கூறுதல்

சித்த நீதிகைக் கின்றதென் தேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண்டுக ளீண்டவை
பத்து நாலும் பகலல வோவென்றான். (17)

முன்னர்க் கோசிக னென்னு முனிவரன்
தன்ன ருட்டலை தாங்கிய விஞ்சையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
இன்ன நன்றவ ரேயது செய்தலே. (18)

மாத வர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றிந் நகர்வரக் காண்டியால். (19)

கோசலையின் எண்ணம்

இத்தி றத்த வெனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா
எத்தி றத்து மிறக்குமிந் நாடெனா
மெய்த்தி றத்து விளங்கிழை யுன்னுவாள். (20)

கோசலை தசரதனிடம் புறப்படல்

அவனி காவல் பரதன தாகுக
இவனிஞ் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகை காப்பென் றகவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினான். (21)

இராமன் சுமித்திரையிடம் செல்லல்

போகின் றாளைத் தொழுது புரவலன்
ஆக மற்றிவ டன்னையு மாற்றியிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் தோய்மணிக் கோயிலை மேவினான். (22)

1. குழைக்கின்ற - வீசுகின்ற. இழைக்கின்ற - நன்மை தீமைகளை விளைக்கின்ற. மவுலி - கிரீடம்.

2. குஞ்சி - ஆண் மக்களின் தலைமயிர். நளினம் - தாமரை.

3. மானவன் - மனுவமிசத்திற் பிறந்த இராமன்.

4. முறைமையன்று என்பது - மூத்தோன் இருக்க இளையோன் முடி சூடுதல் என்பது. மும்மையின் நல்லவன் - மூன்று பங்கு நல்லவன்.

5. மன்னவன் கட்டளையிட்டது நீதியன்று என்று உலகம் சொல்லாமை உனக்கு அறமாகும். ஒன்றி - மனம் ஒத்து.

6. தழைத்தல் - மகிழ்தல். தோமில் - குற்றமற்ற. ஏயது - ஏவியது.

7. உரைத்த - தந்தை கூறிய. மாண்ட - மாட்சிமைப்பட்ட. கோசலை துயர்கொள்ளாதிருக்க 'நன்னெறி உய்ப்பதற்கு' என்றும், 'அகல்கான்' என்றும், 'மாதவத்தோருடன் வைகி' என்றும், 'மீண்டு நீ வரவேண்டும்' என்றும் கூறினார். விஷயத்தைத் திடீரென்று தெரிவித்தால் துயர்மிகுதியால் கோசலை இறந்துபடுவாளோ என்று அஞ்சி இராமன் படிப்படியாக விஷயத்தை அறிவிப்பது ஓர் நயம்.

8. வாசகம் - 'கானிடைவைகி' என்ற சொல். குழை தூங்கு - காதிலணிந்த அணி அசைகின்ற. வீங்குதல் - பொறுமுதல். அரோ : ஈற்றசை.

9. மாநிலம் - பெரிய பூமியிலுள்ள உயிர்கள். தஞ்சமாக - உன் அடைக்கலமாக. அஞ்சும் என்ற அடுக்கு மிகுதிக்கண் வந்தது.

10. தெய்வதங்காள் ஆவி நைந்து இற அடுத்தது என் எனும்; எனும் - என்று சொல்லுவாள்; செய்யுமென்னும் முற்று. பிற இசைப்பது என் - பிறவற்றைக் கூறுவது என்ன? கன்று பிரிந்த பசு வருந்துவது போல் வருந்தினுள்.

11. புகல் - கூறு. கணவனது வாய்மையைக் காப்பது மனைவியின் கடமை என்பது தோன்ற, 'அருங்கற்பினுள்' என்ருர்.

12. திரு - அரசச் செல்வம்; அச்செல்வம் பெறத் தகுந்தவன் பரதன் என்பது தோன்ற, 'சிறந்த தம்பி' என்ருன். பேரும் - பெயரும்—மீண்டு வருகின்ற, பேறு - பாக்கியம்.

13. வேலை - கடல்; இங்கே நீரை உணர்த்தும். வேறு எண்ணும் பூதம் - தீயும் காற்றும். அண்ணல் - தசரதன்.

14. ஐய : விளி. ஏகல் என்பது போகவேண்டாம் என்ற சொல்லை.

15. வற்புறுத்தாது - ஆறுதல் கூருமல். உடன் - என்னெடு. துன்னு - அடர்ந்த. படரத்துணிவதே - செல்லத்துணிவது சரியா? கோசலை இராமனைத் தொடர்வது அன்பு பற்றியது; தசரதனிடமிருந்து அவன் துயரை ஆற்றுவது அறம் பற்றியது.

16. மாநிலம் உறுதலாவது - நிலமுழுவதும் பரதன் ஆதிக்கத்தில் வந்து யாவரும் அவன் வழி ஒழுகுதல். உடன் - தசரதனுடன். நோன்புகள் - வானப்பிரத்தாச்சிரமத்தில் மனைவி கணவனுடன் இருந்து அவனுக்குச் செய்யும் பணிவிடைகள்.

17. சித்தம் திகைத்தல் - வருத்தத்தினுல். ஒத்த - தத்தம் நிலைக்கு ஒத்திருக்கிற. 'பத்துநாள் பகல்' என்று கூறியது கால அளவு குறைந்து தோன்றவேண்டும் என்பது கருதி. பகல் - நாள். பதினுன்கு ஆண்டுகள் தேவருக்குப் பதினுன்கு நாள் ஆதலும் கருதி இங்ஙனம் கூறினுன்.

18. விஞ்சை - பலை, அதிபலை என்னும் மந்திரங்கள்; இவை பசி தாகங்களையும் சிரமத்தையும் போக்குவன. பிறகு பெற்றபேறு - தாடகையை வென்று கோசிகரிடம் அரிய படைக்கலம் பெற்றமையும், சிவன் வில்லை முறித்துச் சீதையை மணந்தமையும், பரசுராமரை வென்று அவரது புகழையும் தவத்தையும் பெற்றமையும். பிழைத்தவோ - தவறினவோ? அவர் ஏயது - அவரைப்போன்ற பெரியவர் ஏவியதை.

19. போதம் - வீடு பயக்கும் ஞானம்.

20. இறக்கும் - விட்டு நீங்குவான்.

21. தவன் - தவம்; போலி. தவன் நில்லாவகைக் காப்பென் - தவத்தில் நில்லாதபடி (நாட்டிலேயே இருக்குமாறு) தடுப்பேன். தகவு - பெருமைக் குணம். முறை தவறி இளையவனுக்கு அரசைக் கொடுத்து இராமனை வனம் அனுப்ப இசைந்ததனுல் தசரதனை 'தகவிலாப் புவனி நாதன்' என்ருள்.

22. தொழுதல் விடைபெற்றுக்கொள்ளும் குறிப்பு. புரவலன் ஆகம் தசரதனது மனத்தையும். இவள் தன்னையும் - கோசலையையும். சோகம் தீர்ப்பவள் சுமித்திரை.

2. நளவெண்பா

நளன் தமயந்தியைப் பிரிதல்

நளனுடைய சரித்திரத்தை வெண்பாக்களிற் கூறும் நூல் நளவெண்பா எனப்படும். இது சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்று பிரிவுகளையுடையது. இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டைமண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரில் வேளாண் மரபிற் பிறந்தவர். வைணவ மதத்தினர். இவரை ஆதரித்தவன் மள்ளுவ நாட்டின் அரசனாகிய சந்திரன்சுவர்க்கி என்பவன். புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் சில இடங்களில் இவனைப் புகழ்ந்துள்ளார். 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் முதுமொழி இந்நூலின் பெருமையை விளக்கும்.

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை,—சோர் கூந்தன்
மாதராய், நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து. (1)

நளனுக்குற்ற சிறுமைக்குத் தமயந்தி வருந்துதல்

வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்வா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. (2)

நளன் தமயந்தியைத் துயிலச் செய்தல்

தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதால் பேர்யாமம் ;—நீயுமினிக்
கண்மேல் துயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேல் திருமேனி வைத்து. (3)

வெறும் தரையில் அவள் தூங்குவதற்கு நளன் வருந்துதல்

புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் துயில்வாளைத் தான்கண்டும்—என்கண்
பொடியாதால், உள்ளாவி போகாதால், நெஞ்சம்
வெடியாதால் என்றான் விழுந்து. (4)

வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் துயின்ருள்மற்
ருரே துயரடையார் ஆங்கு? (5)

நளன் தமயந்தியின் ஆடையில் பாதியைக் கிழித்துக்கொண்டு
அரிதில் புறப்படல்

காரிகைதன் வெந்துயரம் காணுமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கும் ஒருயிர்போல் எய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னுங்கு. (6)

ஒற்றைத் துகிலும் உயிரு மிரண்டாக
முற்றுந்த னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. (7)

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோல வாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (8)

தீக்கா னகத்துறையும், தெய்வங்காள், வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான். (9)

தாருவெனப் பார்மேல் தருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினன்
வெங்கா னகந்தனிலே வேந்து. (10)

நளனைக் காணுது தமயந்தி வருந்துதல்

உடுத்த துகிலரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—அடுத்தடுத்து,
மன்னே, யெனவழைப்பாள் மற்றுமவ னைக்காணு
தென்னே !யிஃ தென்னென் றெழுந்து. (11)

அழல்வெஞ் சிலேவேடன் அம்புருவ ஆற்ருது
உழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்டு
எழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேல் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. (12)

சூரியோதயம்

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலேத்துக் காரிருள்வாய்—வெய்யோனே
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். (13)

குறிப்புரை

1. மூரி இரவு - நெரிவான இரவு. சோர்கூந்தல் மாதராய் - வருந்துகின்ற தமயந்தியே. போதராய் - வருக. புலர்ந்து - வருந்தி.

2. வையம் - பூமி. தோட்ட வார் கோதையாள் - தொடுத்த நீண்ட மாலேயையுடைய தமயந்தி.

3. திசை - திசைகளிலுள்ள உயிர்கள். பேர் யாமம் - நடு இரவு.

4. புண்கண் கூர் - துன்பம் மிகுந்த. பொடியாதால் - அறியாது, ஆல் : அசை.

5. தாமம் - மாலேயை. பாரே அணேயா - பூமியே படுக்கையாக. படைக் கண் - வேல் அல்லது வாள் போன்ற கண் ; படை - ஆயுதம்.

6. காரிகை - பெண். போவான் குறித்து - போக எண்ணி.

7. ஒருயிர்போல் இதுகாறும் இருந்தவர் பிரிவதனுல் இரண்டாக என்ருர்.

8. ஒருகால் - ஒரு சமயம். ஆயர் - இடையர். அடுபால் - காய்ச்சிய பால். தோயல் - தயிர். நளனுடைய வேலுக்கு எமன் உவமை.

9. குறிக்கொண்மின் - காத்துக் கொள்ளுங்கள். ஏதிலன் - அயலான்.

10. தாரு - கற்பகத் தரு ; இது கொடைக்கு உவமை. விரவார் - பகைவர். கால் + நகம்—கானகம்.

11. ஒண் தொடியாள் - பிரகாசமான வளேயல்களே யணிந்தவள். மறுகி - வருந்தி.

12. அழல் - கோபிக்கின்றன. குழல் வண்டு - கூந்தலிலே உள்ள வண்டுகள். குழை - காதணி. 'குழைமேல் கண்ணீர் ஓட' என்றது காதளவு நீண்ட கண்களேயுடையாள் என்பதைக் காட்ட.

13. அலேத்து - அடித்துக்கொண்டு. வெய்யோன் - சூரியன். வாவு பரி - தாவுகின்ற குதிரைகள். இது தற்குறிப்பேற்றவணி.

IV. வருணனை

ஒரு சோலையின் வருணனை

நான்கு இரத்தினங்களை வரிசைப்பட ஒழுங்காகக் கோத்த மாலையைப் போல் வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்ற நான்கு வகைப் பாக்கள் முறையே அமைய நாற்பது கவிகளால் அந்தாதித் தொடையில் தொடுக்கும் நூல் நான்மணிமாலை எனப்படும். அந்தாதித் தொடையாவது, ஒருசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும், அசையேனும், சீரேனும் அடுத்த செய்யுளின் முதலில் வரப் பாடுவது. திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் விஷயமாகப் பாடிய நான்மணி மாலை இது. இதன் ஆசிரியர் குமரகுருபரர்.

ஒண்கதிர் பரப்பும் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பில்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல எடுத்துவாய் மடுப்பது
மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதம்.

குறிப்புரை

புயல் - மேகம். கண்படுக்கும் - தூங்கும்; தங்கும். பாதபம் - மரம். இருவேறு உரு - முகம் ஒரு வடிவம்; உடல் வேறு வடிவம். வருக்கை - பலாப்பழம். எயிறு - பல். வள் உகிர் - கூரிய நகங்கள். தொடுத்த - தோண்டி எடுத்த. மானிட மடங்கல் - நரசிங்க மூர்த்தி. ஆடகப் பெயரின் அவுணன் - பொன்னைக் குறிக்கும் பெயரையுடைய அசுரன்; இரணியன் என்றபடி; ஹிரண்யம் - பொன். இறும்பூது - ஆச்சரியம். பணை - வயல் கள்.

V. சிறு நூல்கள்

1. ஏரெழுபது

ஏரைச் சிறப்பிக்கும் எழுபது பாட்டுக்களால் ஆகிய நூல் இது. இங்கே ஏர் என்பது அதனோடு தொடர்புடைய வேளாண்மைக்கு ஆகுபெயர். இந் நூலை இயற்றியவர் கம்பர் என்று கூறுவார்கள்.

குடையாளும் முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளும் இவைநான்கும் படைத்துடைய ராணுலென்?
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்கலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. (1)

கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சா லியலிசைநா டகநடக்கும்
சீர்நடக்குந் திறநடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே. (2)

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருத்தலினுல்;
தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்து ளிரப்பவரும் தோலாரே. (3)

குறிப்புரை

1. குடை ஆளும் - செங்கோல் ஆட்சியிற் சிறந்த. படை ஆள் - காலாட்படை. மடை - நீர் மடையில். வாளை - மீன் வகையுள் ஒன்று. பொன்னி - காவிரி. கலப்படை வாள் - கலப்பையாகிய வாள் என்றபடி.

2. கார் நடக்கும்படி நடக்கும் காராளர் - மழை ஒழுங்காகப் பெய்யும் படி ஒழுக்க நடையை மேற் கொண்டிருக்கிற வேளாளர். புகழ் சால் - புகழ் மிகுந்த. இயல், இசை, நாடகம் என்றது மூன்று தமிழினை. பார் - பூமி. படை - சேனை. கார் நடக்குமெனில், இயல் இசை நாடக முதலிய நடக்கும் பசி நடக்க மாட்டாது.

3. ஏர் வேந்தர் பெருஞ் செல்வம் - வேளாளரது பெரிய செல்வம். போர்க் களம் - யுத்த களம், நெற் போரையுடைய களம். தோலார் - தோல்வி அடையார்.

2. கலிங்கத்துப் பரணி

பரணி என்பது பெரும்போர் புரிந்து வென்ற வீரன்மேல், அவனுடைய பல சிறப்புக்களை விளக்கிப் புறப்பொருள் அமைதி தோன்றக் கலித்தாழிசையாற் பாடப் பெறும் நூல். கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, கோயிலைப் பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, கூழ் அடுதலும் இடுதலும், களம் காட்டல், வாழ்த்து என்பவை பரணி நூலின் உறுப்புக் களாம். தோற்றோன் பெயரால் பரணிக்குப் பெயர் ஏற்படும்.

கலிங்கத்துப் பரணி என்பது கலிங்க நாட்டை வென்ற முதற் குலோத்துங்க சோழன் வெற்றியை விவரித்துக் கூறும் நூல். இதன் ஆசிரியர் சயம் கொண்டார் என்பவர். இவர் பரணி பாடுவதில் வல்லவர் என்பது, 'பரணிக்கோர் சயங் கொண்டார்' என்பதனால் விளங்கும். தோற்றுப்போன கலிங்கப் படைகளின் அழிவை வருணிக்கும் பகுதியில் வருவது இது.

உடலின்மேற் பலகாயஞ் சொரிந்து பின்கால்
உடன்பதைப்ப உதிரத்தே ஒழுகும் யானை
கடலின்மேற் கலந்தொடரப் பின்னே செல்லும்
கலம்போன்று தோன்றுவன காண்மின் காண்மின். (1)

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரு மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமுந் தாமே யுண்ணப்
பதுமமுக மலர்ந்தாரைப் பார்மின் பார்மின். (2)

சாமளவும் பிறர்க்குதவா தவரை நச்சிச்
சாருநர்போல் வீரருடல் தரிக்குமாவி
போமளவும் அவரருகே இருந்துவிட்டுப்
போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி காண்மின். (3)

பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின். (4)

வேறு

வெயிற்றாரை வேல்சூழ வுந்தைக்க
மண்மேல்வி ழாவீரர் வேழம்பர்தங்
கயிற்றாலி ழுப்புண்டு சாயாது
நிற்குங்க ழாயொத்தல் காண்மின்களோ. (5)

குறிப்புரை

1. கலம் - கப்பல். யானைகள் ஒன்றன்பின் ஒன்றாக இரத்த வெள்ளத்தில் மிதந்து செல்வது கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கடலில் தொடர்ந்து செல்வதை ஒக்கும். காண்மின் காண்மின்: அடுக்குத் தொடர்.

2. பருந்து - கருடன். குற்றுயிராகக் கிடக்கும் வீரன் உடல்களைப் பருந்தும் கழுகும் கொத்தித் தின்ன, அவ்வீரர்கள் தம் உடல் ஒரு வகையில் பயன்படுவது நோக்கி முகமலர்ந்தனர். முன்னே கூறப்பட்ட மேலோர் பதுமமுகம் மலர்ந்தாருக்கு உவமை.

3. நச்சி - பொருள் வேண்டி. சாருநர் - அடைகின்ற யாசகர். புணர்ச்சி - கூட்டத்தை. பார்மின் - காணுங்கள். உலோபிகளுக்கு வீரரும், அந்த உலோபிகளை விரும்பிச் செல்வோர்க்கு நரிகளும் உவமை.

4. பொரு - போர் செய்கின்ற. பரு வயிரத்தோள் - பருத்த வலிமை முற்றிய தோள்கள். பயிரவி - காளி. கேட்பாளை : அங்ஙனம் கேட்பது தான் தன் கணவனுடலோடு போர்க்களத்தில் உயிர் விடுவதற்காக. இறந்து பட்ட வீரரின் உடலை அவர்தம் மனைவியர் தேடிவந்து, அந்த உடல்களோடு தாமும் மாய்தல் வழக்கு என்பதை இந்தத் தாழிசை காட்டும்.

5. வெயில் தாரை வேல் - ஒளி வீசும் கூரிய வேல். வீரரின் உடலில் சூழவும் பல வேல்கள் தைத்திருப்பதனால் இறந்துபட்ட அவர்களுடைய உடல்கள் மண்மேல் விழாமல் நின்ற நிலையில் இருப்பது வேழம்பர் கயிற்றால் நாற்புறமும் பிணித்து நடும் பெரிய மூங்கில்தாணை ஒக்கும்; வேழம்பர் - டொம்பர்கள். கழால் - மூங்கிற்றாண்.

VI. பல்சுவை

சோழநாட்டு வளம்

ஏரியு மேற்றத்தி னுைம் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு. (1)

சொல்நயம்

துயிலேயி லேயிடர் துன்னேயி லேதெவ்வர் சூழையிலே
பயிலேயி லேயிருட் பாதியி லேபசும் பாலனத்தை
அயிலேயி லேவய தாகையி லேநமக் கார்துணேதான்
மயிலேயி லேவளர் சிங்கார வேலர் மயிலேயிலே. (2)

1. ஏரியும் - ஏரிகளாலும். ஏற்றம் - கிணறுகளுக்கு இணேத்துள்ள ஏற்றம். பிறநாட்டு - சோழநாடு அல்லாத வேறுநாடுகளில். வாரி - வெள்ளம். வளன் - வேளாண்மையாற் கிடைக்கும் தானியவளம். தேரின் - ஆராயுமிடத்து. அரிகாலின் கீழ் - நெற்பயிரை அரிவாளால் அரிகின்ற இடத்தில். உகூஉம் - உதிர்ந்து சிந்திப்போகின்ற. சாலும் - போலும். காவிரி சூழ்நாடு - சோழநாடு. சோழநாட்டில் வயல்களில் அறுவடைக் காலத்திற் சிந்திக்கிடக்கும் நெல்லளவே பிறநாட்டு வளங்களாம்.

2. துயிலேயில் - தூங்கும்போது. இடர் துன்னேயில் - துன்பம் நெருங்கியபோது. தெவ்வர் - பகைவர். பயிலேயில் - நடக்கும்போது. அயிலேயில் - உண்ணும்போது. மயிலே - மயிலாப்பூர். மயில் அயிலே - மயிலும் வேலுமே. வேலும் மயிலும் எப்பொழுதும் நமக்குத் துணேயாம் என்றபடி.

உரைநடைப் பகுதி

1. தாமோதரம் பிள்ளை

(வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ.)

புது நூற்றுண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என்றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தந் தமிழுலகம் பெரிதுந் துன்புறத்தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடுநடுங்குகின்றது. அந்தோ! புதுநூற்றுண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமிழுலகிற் செம்மை சான்று விளங்கிய நமது ராவ்பஹறதூர் சி. வை தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான்றிருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!

தமிழ்ப்புலவரில்லங்களிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமிழணங்கு நல்லாடையுடுத்துத் தெலுங்கு, கன்னடமாதிய பாங்கிமாரோடு அச்சுவாகனமேறி நாடெங்கும் உலாவருமாறு செய்தற்கட் பேரூக்கமெடுத்து உழைத்து நின்ற நம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது அவல மெய்ப்பாட்டினை யடக்க வல்லார்? அவ்வாறுக யாம் எமது துன்பத்தை யடக்கப் புகுதலெவன்? மனத்தின்கணுள்ள துக்கம் வாய் விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே. அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

வாழ்க்கை

நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தூர் வைரவநாத பிள்ளையவர்களது குமாரர். இவர் கி. பி. 1832 ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும் சுன்னுகம் முத்துக்குமார

இக்கட்டுரையின் ஆசிரியருடைய புதல்வர் ஸ்ரீ வி. சூ. சுவாமிநாதன் அவர்களின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

சுவாமி பிள்ளையவர்களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852 ஆம் வருடம் அக்கல்லூரியினின்றும் பரீட்சையிற் றேறிப் பட்டம் பெற்று வெளிப்போந்தனர். பின்னர்க் கோப்பாயிலுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய பெர்ஸிவல் துரையவர்களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப் போந்து தினவர்த்தமானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ் நூற்பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்க புகழ் விளைத்தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் அமரும்படி வேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தி வருபவர் 1857 ஆம் வருஷத்து முதன் முதலில் ஏற்பட்ட சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினர். பின்னர் அவ்வாறு தேறி நான்கு திங்கள் கழியுமுன் 1858 ஆம் வருடத்தில் நிகழ்ந்த பி. ஏ. பட்டப் பரீட்சையிலுந் தேறினர். எனவே, நமது தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலாசாலையில் முதலிற் பி. ஏ. பட்டம் பெற்ற இருவருள் ஒருவராவர். பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்கோட்டைக் கல்விச் சாலையில் உதவி உபாத்தியாயராயனுப்பப்பட்டனர். ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தியோகத்திலமர்ந்து பலதுறைகளாலும் தமது வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமை தவறுமை ஆதிய நற்குணங்கள் காரணமாகப் புகழ்பெற்று விளங்கி, 1882-ஆம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையினீங்கினர். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும் போழ்தே 1871 ஆம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர். ஆகவே, தாம் வேலையினீங்கினவுடனே 1884 ஆம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தாவாய் அமர்ந்தனர். அதன்மேற் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியாயிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில்

அவர்க்கு மகப்பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

தமிழ்நூற் பதிப்பு

இது நிற்க, குடந்தையிலிருந்தபொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ் நூல்களைப் பனையோலைச் சுவடி களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர். அவ்வாறு அவர் பதிப்பித்த நூல்களுட் பெரும்பாலான சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாய் விலைப்படா தனவுமாகிய இலக்கண நூல்களாம். தமிழின்மீது ஆர்வம் மிகுந்த இற்றை ஞான்றினும் அவைகள் பெரிதுங் கவனிக்கப் படுகின்றிலவாமாக, அந்நாட்களில் அவை விலைப்பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் தொல்காப்பிய நச்சினர்க்கினியம், தொல் காப்பியச் சேனுவரையம், வீரசோழியம், இறையனுரகப் பொருளுரை, இலக்கண விளக்கவுரை என்பனவாம். சங்க நூல்களில் எட்டுத்தொகையுள் ஒன்ருகிய கலித்தொகையும் இவர் பதிப்பித்ததே. பின்னர், தமிழிலக்கியங்களுட் பெரி தும் திரிசொற்களான் யாக்கப்பட்ட தணிகைப்புராணமும், சிறு காப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் சூளாமணியும் பிள்ளையவர்கள் முயற்சியான் வெளிப்போந்தன. இவை தம் முட் பல பகுதிகள் பிரதம கலா பரீட்சைக்கும் பி.ஏ.,எம்.ஏ., பரீட்சைக்கும் அவ்வக்காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்தப் பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச் செய்யுட் பழக்கத்தினையும், நுணுகி யுணருங் கூரிய மதி யினையும், ஆராய்ச்சி வன்மையினையும் பெரிதும் புலப்படுத்து கின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கறவாராய்ந்து தெள்ளிதிற் றெரித் துளர். இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத் தொகையு ளொன்ருகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர். ஐயகோ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

புலவர் மதிப்பு

இவ்வாறு மிகப் பெருமை வாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப் புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்கு மதிக்கற்பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப்பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினர்.

பரீட்சிக்குந் திறமை

இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங்கண்டு சென்னைச் சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் அங்ஙனம் அத்தொழில் புரியுமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிடத்து இரக்கமுங் காட்டியே வந்தனர். சென்னைச் சர்வ கலாசாலையில் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களாயிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாவாரல்லர். இவர் பரீட்சை வினாக்களெல்லாம் மாணாக்கரது நுட்ப மதியினைப் புலப்படுத்துவனவாம். மாணாக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்தகால வளவறிந்தும் வினாப்பத்திரிகை கொடுக்கும் பரீட்சாதிகாரியை யிழந்த தமிழ் மாணாக்கரின் துரதிர்ஷ்டத்தை யென்னென்பேம்? இத்துணை நலம் வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுள் ஒருவராகவு மிருந்தனர்.

நூலாசிரியத் தன்மை

பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போகத் தாமே புனைந்தியற்றின கட்டளைக் கலித்துறை யென்னுமோர் இலக்கண நூலும், வசன சூளாமணி யென்னுமோர் உரை நடை நூலும் சைவ மகத்துவ போதம் என்னுமொரு சைவ சமய நூலும், ஆறும் வாசக புத்தகம், ஏழாம் வாசக புத்தகம் என்னும் கல்வியறிவிற்றேரும் இளஞ்சிருர்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவுமாம். இவரது உரைநடை செந்தமிழ்த் திரிசொற்கள் மலிந்து சொல்லடுக்கும் பதசாலங்களும்

இயைந்து கட்டுரைச் சுவைநயங் காட்டி இயல்வது. இவ் வியல்புபற்றி யன்றே இவர்தம் வசன சூளாமணி பிரதம கலா பரீட்சைப் பாடமா யேற்பட்டதூஉ மென்க.

ஒழுக்கம்

இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண்ணினோரும் பலதிறத்தினர். தென்னாடெங்கும் இவரை யறியாதார் எவருமில்லை. இவர் உண்மை தோன்ற வாதஞ் செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக விலகிப் பேசியும் ஒழுகுறுமியல்புடைய சில போலி மாக்கள் போலாது எப்பொழுதும் நடுவு நிலைமை குன்றாதவாறு நடந்துவந்த நற்றமிழாளர். தவறுநர் நண்பரே யாயினும் நொதுமலரே யாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான் பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியரவர்களும் நண்பர்களேயாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர் வன்மை கண்டு அழுக்காறடையும் புன்மக்கள்போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னாரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழுகி வந்தவர். அந்தோ ! இத்தகைய அன்புடைய யண்ணலை இழந்த தமிழ்வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்பதொருதலை.

பட்டப் பேறு

நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக்கியதை கண்டுழி யெல்லாம் கவனித்துத் தக்க பட்ட மளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளையவர்கட்கும் ராவ்பகதூர் என்ற பட்டத்தினை 1895-ஆம் வருடத்தில் அளித்தார்கள் ; அஃதன்றியும் தமக்குத் தமிழ்மொழியின்கண் ஐயப்பாடு நேர்ந்துழி யெல்லாம் அவரிடங் கேட்டும் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனர்க்கேயன்றிப் பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். எனவே, இவர் வாய் மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

இறுதிக் காலம்

இவரது தேக சௌக்கியம் 1888 ஆம் வருஷம் நிகழ்ந்த புத்திரசோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறுமாதமாக மார்பு நோய் கண்டு வைத்திய நூல் வல்ல பலர் உதவி செய்துஞ் செவ்வைப் படாது போயிற்று. ஆகவே, நற்குணமும் நேரிய வாழ்க்கையு முடையவரும், செந்தமிழ்ப் புலவரும், பல தமிழ்நூற் பதிப் பாசிரியரும் சென்னைச் சர்வ கலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வ கலாசாலை யவயவிகளு ளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதவராயிருந்தவரும், பாவலர் நண்பரும், எம்மீது ஆர்வமுடையாரும், எம்மைத் திராவிட சாஸ்திரி யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளையவர் கள் இவ்வுலகினின்றும் நீங்கினர். இத்தகைய புலவர் கோமான் இறந்துபட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறு இற்றென எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்து பாடு தமிழுலகஞ் செய்த பாவமோ, தேவர் தந்நயம் பற்றிச் செய்த கொடுமாயமோ ? அறியேம்.

இனி, காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம்பயவாது தாமே யழியும் மலர்கள்போலப் பல தமிழ் வித்துவான்கள் உலகில் வெளிப்போதராது காலஞ் சென்றனர் ; அன்னார் கதி மிகவுமிரங்கத் தக்கதே. இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளையவர்கள் பல நூல்கள் அச்சிட்டும், சில நூல்களியற்றி யும் பலரோடளவளாவியு மிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவருமுணர்ந்ததே

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
னமோது செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்.

வினாக்கள்

1. தாமோதரம் பிள்ளையவர்களின் தமிழ்நூற் பதிப்பைப்பற் எழுதுக.

2. இவரது பரீட்சிக்குந்தன்மை, நூலாசிரியப் பண்பு இவைகளைக் கூறுக.

3. பிள்ளையவர்களின் இயல்பை ஆசிரியர் எங்ஙனம் பாராட்டுகிறார்?

கட்டுரைப் பயிற்சி

இந்தப் பாடத்தை மாதிரியாகக்கொண்டு நீங்கள் அறிந்துள்ள ஒரு புலவரைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. என்னே உலகம்! என்னே வாழ்க்கை!!—இவை என்ன வாக்கியங்கள்? பொருள் கெடாமல் இவற்றைச் செய்தி வாக்கியங்களாக மாற்றுக.

2. இரண்டாம் பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைச் சிறுசிறு வாக்கியங்களாகப் பிரிக்க.

3. பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ்நூற் பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்க புகழ் விளைத்தன!—இந்த வாக்கியத்தின் எழுவாய்களை மூன்ரும் வேற்றுமையாக்கிப் பொருள் கெடாமல் வாக்கியத்தை மாற்றி எழுதுக.

4. இவரது தேகசௌக்கியம் 1888 ஆம் வருஷம் நிகழ்ந்த புத்திர சோகம் காரணமாகக் குறையத் தலைப்பட்டது.—தடித்த எழுத்திலுள்ள வடமொழிகட்குத் தமிழ்மொழி தருக.

2. இலக்குவன் சீற்றம்

(பூ. ஆலால சுந்தரம் செட்டியார், எம். ஏ.)

கம்பர் தாம் பாடிய இராமாயணத்துள் பல திறப்பட்டாரது மனப்பான்மைகளை நாடகவாசிரியர் போல் நன்கு எடுத்துக் காட்டுதலால் கம்பராமாயணத்தினை 'கம்ப நாடகம்' எனக் கூறுதலும் உண்டு. இந்நாடகத்துள் கம்பர் இலக்குவனது பண்புகளை எம்முறையில் விளக்கியுள்ளார் என்பதை ஈண்டு ஆராய்வோம். திருமாலின் பாயலான ஆதி சேடனே இலக்குவனுகத் தோன்றினுன் என்பது "வளையொடு திகிரியும் வடவை தீதர, விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும், இளைஞர்களென, வடிபரவவேகி" என்ற திருவவதாரப் படலச் செய்யுளான் அறியக் கிடக்கின்றது. இலக்குவன் இராமபிரான்மீது மட்டற்ற அன்புடையவன்; இராமனுக்கு ஓர் இடுக்கண் உற்ற காலத்து அவ்விடுக்கண் தனக்கே உற்றதாகக் கருதும் தன்மையன். கைகேயியின் வரத்தால் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்றதைக் கேட்ட போது இலக்குவன் கொண்ட சீற்றத்தினையும் அன்னவன் கூறிய மாற்றத்தினையும் கம்பர் சித்திரித்துக் காட்டுவதைக் காண்போம். அவன் தனது முற்பிறப்பின் இயல்பால் சீற்றங் கொள்ளும் பண்பினன் என்பதனை, "ஆங்காரவார மது கேட்டு அழலுமிழும், பூங்காரரவணையான் பொன்மேனி" என்ற திருமழிசையாழ்வார் அருளிச் செய்த திருவாக்கு வலியுறுத்துகின்றது. சிவபெருமான்போல் சீற்றம் உடையவன் இலக்குவன் என்ற கருத்தில் "முற்றுமதியம் மிலைந்தான் முனிந்தானை யன்னுன்" என்றுர் கம்பர். கூற்றொத்தீயே மாற்றரும் சீற்றம்" (புறம்—56) என்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

கைகேயியின் சூழ்ச்சியால், காகுத்தன் கானகம் செல்ல வேண்டும் என்பதைக் கேட்ட இலக்குவன் சீற்றங் கொண்டு போர்க்கோலம் பூண்டு யான் இராமபிரானுக்குக் கொற்ற மௌலியினை இன்றே சூட்டப் போகின்றேன் அதனைத் தடுக்க வருபவரை இப்புவிப் பாரம் கெடக் கொன்று

அன்னவர் உடலை அண்டம் முற்றக் குவிப்பேன். என்னைத் தடுக்கும் வன்மையுடையோர் தடுப்பாராக'' என வஞ்சினம் கூறுவதனோடு அமையாது, ''விண்ணவர், மண்ணவர், நாகர், மும்மூர்த்திகள் ஆகிய இவர்கள் வந்து எதிர்த்த காலத்தும் கைகேயியின் நோக்கம் நிறைவேறுதற்கு யான் இடங் கொடேன்'' என்றான்.

''விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்று
மெண்ணாட்டவர் யாவரு நிற்கவோர் மூவ ராகி
மண்ணாட்டுநர் காட்டுநர் வீட்டுநர் வந்த போதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப்பே ருலகத்து ளென்னா''

இச்செய்யுளில் வந்துள்ள வல்லோசையினைக் காண்க. கம்பர் இடத்திற்கு ஏற்ற வண்ணம் சொற்களை அமைத்துப் பாடுதற்கு இக்கவியே சான்றாகும். இலக்குவனது வில்லின் நாண் ஒலியைக்கேட்ட இராமன் அங்கே சென்று அவன் சீற்றத்தைத் தணிப்பதற்குச் சில அறிவுரை கூறுகின்றான். ''ஓர் ஆறு நீரில்லாமல் வற்றிப்போவது அவ்வாற்றின் குற்றம் அன்று, மழை பெய்யாத குற்றமே யாகும்; அதுபோல யான் காட்டிற்குச் செல்வது தந்தையின் குற்றமன்று. கைகேயியின் குற்றமும் அன்று; பரதன் குற்றமுமன்று. அதற்குக் காரணம் விதியேயாகும். எனவே, நீ சீற்றம் கொள்வதில் பயனில்லை'' என்றான் இராமன். விதியை மதியால் வெல்லலாம் என்ற கருத்துடன் இலக்குவன் ''விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி'' என்றான்.

இலக்குவன் சினம் தணியாதது கண்டு இராமன் ''துணைத் தம்பியைப் போர் தொலைத்தோ சான்றோர் புகழும் தவத்தாதையை வாகை கொண்டோ, ஈன்றாளை வென்றோ இனி இக் கதம் தீர்வது?'' என்றான். செல்லும் சொல் வல்லானாகிய இராமபிரான் கூறிய மாற்றத்தைக் கேட்ட இளையோன் ''கட்டமைந்த வில்லும் சுமக்கப் பிறந்தேன், வெகுண்டேன்னை!'' எனத் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டான். தன் தம்பியின் சீற்றத்தினை முற்றும் மாற்றும் வண்ணம் இராமபிரான் கூறும் கீழ்க்காணும் செய்யுள் கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும்.

" நன்சொற் கடந்தாண் டெனைநாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தன்ருல்
என்சொற் கடந்தா லுனக்கியா துள தீன மென்ருன்
தென்சொற் கடந்தான் வடசொற்கடற் கெல்லை தேர்ந்தான் "

'இனிய மொழிகளைக் கூறி என்னைப் போற்றி வளர்த்த தந்தையின் சொல்லை மீறி யான் அரசாட்சி புரிதலை மேற்கொள்வது எனக்குத் தக்கதன்று ; ஆனல், என் சொல்லை மீறி நீ நடந்தால் உனக்கு என்ன ஈனம் உள்ளது? எனவே, நீ உன் பிரியப்படி செய்' என்ருன் இராமன். இச்செய்யுளின் மூன்ரும் அடிக்கு 'என் சொல்லைக் கடந்தால் உனக்கு என்ன நன்மை இருக்கிறது? ஒன்றும் இல்லை. உனக்கு அது இழிவையே தரும்' என வேறு விதமாகப் பொருள் கூறுவாரும் உளர். எனினும் முன்னே கூறிய பொருளே சிறப்புடைத்து. அதைக் கேட்ட இலக்குவன் ஒருவாறு சீற்றம் துறந்தானெனினும் அன்றுமுதல் கைகேயியினைத் தனது தாய்மார் மூவருள் ஒருத்தியாகக் கருதவில்லை என்பது பின் வரும் நிகழ்ச்சி களான் அறியக் கிடக்கின்றது.

இராமபிரான் உதவியால் அரசாட்சியினை பெற்ற சுக்ரீவன் கார்காலம் கழிந்த பின்னர்ப் படைகளுடன் வந்து இராமனுக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். கார்காலம் கழிந்த பின்னரும் அவன் வராமையால், அவன் நிலையை அறிந்துவர இராமன் இலக்குவனை அனுப்ப, இலக்குவன் மிகுந்த கோபத்தோடும் வேகத்தோடும் கிட்கிந்தைக்குச் சென்ருன். அதுபோழ்து சுக்ரீவன் கள்ளுண்டு களித்து மயங்கிக் கிடக்க, இலக்குவன் சீற்றத்துடன் வருவதைக் கண்ட அனுமன் 'பெண் என்ருல் பேயும் இரங்கும்' என்ற கருத்தினைக் கொண்டு, வாலியின் மனைவியாகிய தாரையைச் சுக்ரீவனின் அரண்மனை வாயிலின் நிற்கும்படி கூறினன். மிக்க சீற்றத்தோடு வரும் இலக்குவன் அரண்மனை வாயிலில் தாரகை நடுவண் தண்மதிபோலத் தன் தோழிகள் புடைசூழ கைம்பெண் கோலத்தோடு நிற்கும் தாரையைக் கண்டான் அவ்வளவில் அவனது சீற்றம் ஆதவன் முன் தோன்றும் பனி போல் மறைந்தது. மாமியர் குழுவில் வந்து நிற்கும் மரும

னைப்போன்று கூச்சமுடன் நின்ற இலக்குவன் அம்மகளிரைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அச்சம் கொண்டான். அதுபோழ்து இசையினும் இனிய சொல்லாளாகிய தாரை, "ஐய ! நீர் எய்தியது என்னை ?" என்ருள். தாரையின் கைம்பெண் கோலத்தைக் கண்டவுன் இலக்குவனது சீற்றம் மாறியது. அவன் தன் தாயாரை நினைந்து வருந்துவானுயினன். கம்பர் இதனை விளக்கும் முறையைக் கீழ்க்காணும் செய்யுளிற் காண்க.

"ஆர்கொலோ வுரைசெய் தாரென்று
அருள்வரச் சீற்றம் அஃகாப்
பார்குலா முழுவெண் டிங்கள்
பகல்வந்த பசுவம் போலும்
ஏர்குலா முகத்தி னுனை
யிறைமுக மெடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கன் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்"

தாரையின் கைம்பெண் கோலத்தைக் கண்ட வீரன் தனது தாயரும் அத்தகைய ஒளி மழுங்கிய கோலத்துடன் விளங்குவரன்ரே என எண்ணித் தன் தாயரை நினைந்து நைந்தான். தாயர் என்று பொதுப்படக் கம்பர் கூறியதால் இலக்குவன் தனது தாய்மார் மூவரைப் பற்றியும் நினைத்தான் எனக் கூறுதல் கூடாது. ஏனெனில் தன் வரத்திஞல் இராமனைக் காட்டுக்கு அனுப்பிய கைகேயியை, இலக்குவன் அந்நாள் முதல் அவள் தன் தாய்மார் மூவருள் ஒருத்தி அல்லள் என்பதைத் தன்னகத்தே கொண்டனன். இக்கருத்தினையே கம்பர் அடுத்த செய்யுளில் வலியுறுத்துகின்ருர். தன் தாயரைப் பற்றி நினைந்து வருந்திய இலக்குவன் தன் தாய்மார் மூவரைப்பற்றி நினையாது இருவரைப்பற்றியே நினைந்தான் என்பதை "இனையராம் என்னையீன்ற இருவருமென்ன வந்த, நினைவினுன் அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்ருன்" எனக் கவி கூறுவதைக் காண்க.

இலக்குவன் கைகேயியினைத் தன் தாய் அல்லள் என்று விலக்கியதற்கு மற்றுமோர் நிகழ்ச்சியினைக் காண்போம். பதினன்கு ஆண்டுகள் கழிந்தபின் இராமன் தன் மனையாளுடனும், தம்பியுடனும் அயோத்திக்குத் திரும்பி வந்தபோது

தனது தாய்மாருள் முதலில் கைகேயியினை வணங்கிப் பின்னர் மற்ற இரு தாய்மாரையும் வணங்கினான். இதனை,

" கைகயன் றனயை முந்தக் காலுறப் பணிந்து மற்றை
மொய்குழ லிருவர் தாளு முறைமையின் வணங்குஞ் செங்கண்
ஐயனை யவர்க டாமு மன்புறத் தழுவித் தத்தஞ்
செய்யதா மரைக்க ணீரான் மஞ்சனத் தொழிலுஞ் செய்தார் "

எனக் கம்பர் கூறியுள்ளார். அதன் பின்னர், சீதையும் அம்முறையாகவே முன்னர்க் கைகேயியினையும் பின்னர் மற்ற இரு தாய்மார்களையும் வணங்கினாள். ஆனால் இலக்குவன் மட்டும் இம்முறையினைக் கைப்பற்றினான் இல்லை. கைகேயியின் பாதத்தினைத் தனியாக வணங்குதற்கு அவன் உள்ளம் இடம் தரவில்லை. எனவே, அவன் மூன்று தாய்மார்க்கும் பொதுவாக வணங்கினான் எனப்பொருள் கருதும்படியுள்ளது கீழ்காணும் செய்யுள்.

" அன்னமு முன்னர்ச் சொன்ன முறைமையி னடியில் வீழ்ந்தாள்
தன்னிக ரிலாத வென்றித் தம்பியும் தாயர் தங்கள்
பொன்னடித் தலத்தில் வீழத் தாயரும் பொருந்தப் புல்லி
மன்னவற் கிளவ னீயே வாழியென் றுசி சொன்னார் "

எனவே இராமன் மீதுள்ள மட்டற்ற அன்பின் காரணமாக இலக்குவன் கைகேயியினை இறுதி வரையில் தன் தாய்மார்களுள் ஒருத்தியாகக் கருதினானில்லை என்பது மேலே காட்டிய நிகழ்ச்சிகளான் போதரும்.

வினாக்கள்

1. இலக்குவன் ஆதிசேடன் அவதாரம் என்பது எவ்வாறு புலப்படுகிறது?
2. இலக்குவன் சீற்றத்தைத் தணிப்பதற்கு இராமன் கூறிய அற உரைகள் யாவை?
3. இராமன் காட்டிற்குச் செல்லக் காரணமாயிருந்த கைகேயியை இராமன் தன் தாயாகக் கருதவில்லை என்பதற்கு ஒருதாரணம் எழுது.

கட்டுரைப் பயிற்சி

இராமனுக்கும் இலக்குவனுக்கும் நடந்த உரையாடலை ஒரு கட்டுரையாக வரைக.

மொழிப் பயிற்சி

1. "கட்டமைந்த வில்லும் சுமக்கப் பிறந்தேன், வெகுண்டெனனை!" என இலக்குவன் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டான்.—மேற்கோள் குறிகளை நீக்கிவிட்டு இவ்வாக்கியத்தைப் பிறர் கூற்றாக மாற்றி எழுதுக.
2. ஒரு சொல்லாற் கூறுக: தக்கதன்று, வாகை கொள்ளல், கொள்ளை கொள்வதாகும்.

3. பொருளியற் பிரிவுகள்

(ஓ. இரா. கிருட்டினசாமி, எம். ஏ., பி. காம்.)

[பொருளியல் ஓர் அறிவியல்; அறிவியல் மட்டுமன்று, கலையுமாகும். மனிதனின் தேவைக்கும் பொருளுக்குமுள்ள தொடர்பைப்பற்றி முறையாக ஆய்ந்து முடிவுகாண முற்படுதல் என்ற முறையால் பொருளியல் ஓர் அறிவியல்; கண்டறிந்த உண்மைகளை மனித வாழ்வின் பிரச்சினைகளைக் களைவதற்குச் செயலில் பயன்படுதல் என்ற வகையால் அஃது ஒரு கலையாகவும் திகழ்கின்றது.]

பொருளியல் ஐந்து பிரிவுகளையுடையது. அவை உற்பத்தி, நுகர்வு, மாற்று (exchange), விநியோகம், பொதுநிதி (Public finance) என்பனவாம். இந்த ஐந்து பிரிவுகளும் ஒன்றையொன்று ஒன்றித் தொடர்பு கொண்டுள்ளன.

உற்பத்தி (Production)

உலகியல் வழக்கில் உற்பத்தியென்பது உணவு, உடை போன்ற பொருள்களின் உற்பத்தியைக் குறிக்கின்றது. ஆனால் பொருளை (matter)த் தோற்றுவிக்க மனிதனால் இயலாது. அது இயற்கையால் வழங்கப்படுகிறது. நிலம், நீர், காற்று வெட்பதட்ப நிலையென்ற அமைப்பில் பொருள்கள் இயற்கை அன்னையால் அளிக்கப்படுகின்றன. நிலத்தையோ நீரையோ மனிதனால் தோற்றுவிக்க முடியுமா? முடியாது. ஆனால் மனிதனால் ஒன்று செய்ய முடியும். இயற்கையால் அளிக்கப்பட்ட பொருளின் அளவு, அமைப்பு, இருக்கை முதலியவற்றை வேண்டுமானால் மாற்றக்கூடும். இம்மாற்றத்தின் மூலம் ஒரு பொருளின் பயன்படும் சக்தி மிகுமானால், அம்மாற்றம் பற்றிய செயல் "**உற்பத்தி**" எனப்படும். ஓர் எடுத்துக்காட்டு இங்கே கூறுவோம். நிலத்தினுள் மண்டிமங்கிக் கிடக்கும் நிலக்கரியைத் தோண்டி மேலே கொணர்ந்த பின் அது பலவகையாகப் பயன்படுகிறது. இதைத்தான் பொருளியலில் நிலக்கரியின் உற்பத்தி என்கின்றோம். ஆகவே பொருளியலில் உற்பத்தி என்பது இயற்கைப் பொருளைத் தோற்றுவித்தலைக் குறிக்காது; பொருளின் பயன்படும் சக்திப் பெருக்கத்தைக் குறிக்கின்றது.

மனிதன் பொருளைத் தோற்றுவிப்பதில்லை; பொருளை மாற்றுகின்றான், அதன் **பயன்படும் சக்தி** (utility) பெருகும்படியாக நுகர்வதற்கு ஏற்ற நிலையில் பொருள்களை மாற்றுகின்றான். நாற்காலி வேண்டுமென்றால் வெறும் மரக்கட்டை மட்டும் இருந்தால் போதாது. வெறும் மரக்கட்டையும் பயன் உள்ளதுதான். ஆனால் அதன் உருவத்தை மாற்றி நாற்காலியாக மாற்றினால் அதன் பயன் மேலும் பெருகுகின்றது. கடலிலேயுள்ள முத்து நிலத்திற்குக் கொணரப்படின் அதன் மதிப்பு உயருகின்றது. ஈண்டு பொருளின் இடமாற்றத்தால் உற்பத்திச் செயல் நிகழ்த்தப் பட்டது. ஒரு பொருள் மலிவான காலத்தில் விற்பனை செய்யாமல் இருப்பில் வைத்திருந்து விலையுயர்வு ஏற்பட்ட பின் விற்பனை செய்யப்படலாம். ஈண்டுப் பொருளின் கால மாறுபாட்டால் உற்பத்திச் செயல் நிகழ்த்தப்படுகிறது. இவ்வாற்றான் பொருள்களின் **அமைப்பு மாற்றம், இட மாற்றம், காலமாற்றம்** ஆகியவகைகளான் அவைகளின் பயன்படும் சக்தியைப் பெருக்குவதற்கு உற்பத்தி என்று பெயர்.

பொருளியலில் உற்பத்தியென்ற சொல் சிறப்புப் பொருளில் வழங்கப்படுகிறது. நிலத்தை உழுது பயிர் செய்யும் உழவும் உற்பத்தியே; மூலப்பொருளை முடிந்த பொருளாக்கும் ஆலைத் தொழிலும் உற்பத்தியே; பொருள்களை மிகுந்த இடத்திலிருந்து பற்றாக்குறைப் பகுதிக்குக் கொண்டு சேர்க்கும் வாணிபமும் உற்பத்தியே; அறியாமையை அகற்றி அறிவைப் பெருக்கும் நல்லாசிரியனின் செயலும் உற்பத்திச் செயலே; தேமொழியால் செவிக்கு இன்னிசை விருந்தளித்து உள்ளத்தில் உவகையூட்டும் இசையரசின் செயலும் உற்பத்தியே; நோய் நாடி நோய் முதல் நாடி நோய் நீக்கி நலத்தை நல்கும் மருத்துவனின் பணியும் உற்பத்தியே; பொதுவாகக் கூறுமிடத்து ஒன்றின் பயன்படும் சக்தியைப் பெருக்கும் எத்தொழிலும் பணியும் உற்பத்திச் செயலைச் சார்ந்ததாகும்.

உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பலவகை இயற்கைப்

பொருள்களின் கூட்டுறவு வேண்டற்பாலது. அவைகள் **துணைக்கருவிகள்** (Factors of productions) எனப் படும். உற்பத்திக்கு உறுதுணையாகவுள்ள துணைக்கருவிகள் நான்கு வகைப்படும். அவை **இயற்கைவளம்** (Natural resources), **பாடு** (labour), **முதல்** (capital), **அமைப்பு** (organisation) என்பனவாம். இயற்கைவளம் என்பது நிலம், நீர், காற்று முதலியவைகளையும் அவைகளின் சக்தி களையும் குறிப்பிடும். இது இயற்கையன்னையால் அருளப் பட்டதாகும். 'பாடு' மனிதனின் முயற்சியாகும். உடல் முயற்சி, உள்ள முயற்சி எனப்படும் இருவகை முயற்சிகளும் பாடு என்பதைச் சார்ந்தனவாம். 'முதல்' என்பது உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப் படும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருளாகும். நுகருவதற்குரிய பொருளை நுகராமல் சேர்த்து வைப்பதின் மூலம் 'முதல்' முகிழ்க்கின்றது. எடுத்துக்காட்டாக, உணவுப் பொருளை உண்ணுமல் அடுத்த விளைவிற்கு விதை யாகப் பயன்படுத்துவதற்குச் சேர்த்து வைத்திருந்தால் அது 'முதல்' ஆகின்றது. இயற்கை வளத்தில் முதலை ஈடுசெய்து பாடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கின்ருன் மனிதன். இயற்கைவளம், பாடு, முதல் ஆகியவற்றைத் தக்க அளவில் ஒன்று சேர்த்து உற்பத்தியை ஒழுங்குபடுத்து வதற்கு 'அமைப்பு' என்று பெயர். ஒருவகையாக நோக்குமிடத்து 'அமைப்பு' என்பது 'பாட்டின்' ஒரு வகைச் சிறப்பு இயல்பாகும்.

நுகர்வு (Consumption)

பொருளியல் செயலின் இறுதியெல்லை நுகர்வாகும். உற்பத்தி ஒரு கருவிதான், முடிவாகாது. நுகர்வுதான் முடிவு. மனிதனின் தேவையின் நிறைவேற்றமே நுகர் வாகும். ஆனால் நுகர்வு என்பது பொருள்களின் அழிவைக் குறிக்காது. பொருளைத் தோற்றுவிக்க இயலாத மனிதனால் அதை அழிக்கவும் முடியாது. உற்பத்தியால் பொருளுக்குச் சேர்ப்பிக்கப்படும் பயன்படும் சக்தியைத்தான் அழிக்

கின்றன் மனிதன் நுகர்வு எனும் செயலால். உற்பத்தியால் பொருளின் அளவோ அமைப்போ மாற்றப்படுவது போன்று நுகர்வாலும் அதன் அளவும் அமைப்பும் மாற்றப்படுகின்றன.

மாற்று

இப்பிரிவில் பற்றுக்குறையாகவுள்ள பொருள்கள் ஏன் எவ்வாறு மாற்றிக் கொள்ளப்படுகின்றன என்பது கற்கப் படுகின்றது. நாகரிகத்தின் தொடக்க காலத்தில் பண்ட மாற்று முறை பின்பற்றப்பட்டது. பொருளுக்குப் பொருள் நேரடியாக மாற்றப்பட்டது. நிலப்பொருள்களுக்கு நீர்ப் பொருள்களும், வீட்டுப் பொருள்களுக்குக் காட்டுப் பொருள் களும் மாற்றப்பட்டதைப் படிக்கின்றோம். சங்க இலக்கியங் களில் பண்டமாற்று முறையின் குறைகளைக் களையப் பணம் என்ற மாற்றுக் கருவி காணப்பட்டது. பொருள்களின் தராதர மதிப்பு நிர்ணயம் செய்யப்படும் விதிகளும் பண்ட மாற்று நிகழ்வதற்குப் பயன்படும் கருவியும் குறைகளும் ஆராயப்படுகின்றன மாற்று என்ற இப்பிரிவில். பணம், பாங்கிமுறை, வெளிநாட்டு வாணிபம் முதலியனவும் இப்பிரிவில் கற்கப்படுவனவாம்.

விநியோகம்

இப்பகுதி இருமுறைகளால் பயிலப்படுகிறது. முதல் முறையில் இயற்கைவளம், பாடு, முதல், அமைப்பு ஆகிய உற்பத்திக் கருவிகளின் வருமானம் எவ்விதம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது காணப்படுகிறது. நாட்டின் மொத்த உற்பத்தி துணைக்கருவிகளிடையே பாகுபாடு செய்யப்படுவதைப் பற்றியது விநியோகம் என்ற இப்பகுதி. துணைக்கருவிகளின் கூட்டுறவால் பொருள்களும் பணிகளும் அமையப்பெறுகின்றன. அவர்கள் துணைக்கருவிகளிடையே பாகுபாடு செய்யப்படுகின்றன. இயற்கை வளத்தின் பங்கு குத்தகை (rent) எனப்படும். உழைப்பை ஊதியம் (wage) சார்கின்றது. முதலுக்குரிய பங்கு வட்டி (interest) எனப்படும். அமைப்பை இலாபம் அடை கின்றது.

இரண்டாம் முறையில் தனியொருவனின் பாகுபாடு (Personal distribution) பயிலப்படுகிறது. இப்பயிற்சி சிக்கல் நிறைந்தது. இப்பகுதியில் தனி மனிதனின் வருமானம் அளவிடப்படுகிறது. இவ்வருமானம் அவனுல் ஆற்றப்பட்ட பணியையும் சொத்துஉரிமை முறை, அரசியல் அமைப்பு முதலியவைகளையும் பொருத்ததாகும்.

முதலாண்மையில் வருமானப் பாகுபாட்டில் ஏற்றதாழ்வு மிகுந்துள்ளது. நாட்டின் சொத்து முழுமையும் ஒரு சிலர் கையில் அடங்கிவிடுகிறது. பெரும்பான்மையோர் ஏழைகளாக உள்ளனர். வருமான ஏற்றத் தாழ்விற்குக் காரணங்கள் பல உள. திறமை வேறுபாடு, தனிச் சொத்துரிமை, பரம்பரைச் சொத்துரிமை, சூழ்நிலை, வாய்ப்பு முதலியன முக்கியமான காரணங்களாகும். வருமான ஏற்ற தாழ்வு தீங்கு விளைக்கவல்லது. பணமிகுந்தோர் உற்பத்தியை ஆட்சி புரிகின்றனர். பொருள்களின் உற்பத்தி அவர்களின் விருப்பத்தைப் பொருத்ததாகும். உற்பத்திக் கருவிகள் ஆடம்பரப் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. ஏழ்மை பெரும்பான்மையோரின் வாழ்க்கை நிலையைத் தாழ்த்துகின்றது. மக்களின் தரம் குறைகின்றது. அதிருப்தி பெருகி அமைதி குலைகிறது. சமூகத் திறப்பாடு குலைக்கப் படுகிறது. இத்தகைமைத்தாய தீங்கிழைக்கவல்ல வருமான ஏற்றத் தாழ்வு குறைவதற்குப் பல முறைகள் கையாளப் படுகின்றன. பொதுவுடைமை, சமதர்மம் முதலியன தீவிர முறைகள். வரிவிதித்தலில் சீர்திருத்த முறை பின்பற்றுவதின் மூலம் வருமான ஏற்றத் தாழ்வு குறைக்கப்படுகிறது.

பொது நிதி

மாவட்ட மன்றங்கள் (District boards), கிராம ஆட்சி மன்றங்கள், அரசாங்கம் முதலிய பொதுக் கழகங்களின் வருமான செலவுகளைப்பற்றிப் பயிலும் பொருளியல் பகுதிக்குப் பொது நிதி (Public finance) என்று பெயர். அரசாங்கச் செயல்களுக்கு வேண்டிய பணம் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது, எவ்வகையில் பலவகைச்

செலவுகளிடையே பாகுபாடு செய்யப்படுகிறது போன்ற வைகள் பொது நிதி என்ற பகுதியில் கற்கப்படுகின்றன.

'பொது நிதி' நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ள தாகும். அவையாவன: பொதுச் செலவு, பொது வருமானம், பொதுக் கடன், நிதி நிர்வாகம். பண்டைக் காலத்தில் அரசாங்கத்தை நடத்துவதற்கும் போர்களை நடத்துவதற்கும் வேண்டிய பணத்தைச் சேகரிப்பதற்குள்ள ஒரு வழியாகக் கருதப்பட்டது 'பொது நிதி'. ஆனால் இற்றை நாளில் அதன் நோக்கமும் பணியும் உயர்ந்தும் பெருகியுமுள்ளன. சமூக அநீதிகளைத் தடுப்பதற்குக் கருவியாகக் கருதப் படுகிறது பொது நிதி. 'முழுவேலை' (Fullemployment) என்ற நிலை பொது நிதியின் சீரிய அமைப்பின் மூலம் அடையப்பெறுகின்றது. நிதிக் கொள்கை பொருளியல் கொள்கையின் உயிரெனப்படும்.

இற்றை நாளில் பொருளியல் சிறப்புப் பெருமை பெருகின்றது. பொருளியல் கொள்கைகளில் திட்டம் வகுக்கப் பட்டு நிறைவேற்றப்படுகிறது. பொருளியல் சக்திகள் திட்டப்படி செயல்படுத்தப்படுகின்றன. இயற்கை வளத்தை முழுதும் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. உற்பத்தி பெருகினால்மட்டும் போதாது. பெருகிய உற்பத்தி நியாயமான முறையில் மக்களிடையே பாகுபாடு செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் பெரும் பான்மையோரின் மிகுந்த நலனைப் பெறமுடியும். நியாயமான பாகுபாட்டை ஏற்படுத்தும் வண்ணம் பொருளியல் கொள்கை கள் வகுக்கப்படுகின்றன; வரிவிதிகள் அமைக்கப்படுகின்றன. நாளுக்கு நாள் அரசாங்கத்தின் பொருளியற் செயல் வளரு கின்றது. பொருளியற் செயல் பெருக்கத்தின் மூலம் அரசாங்கம் அமைதியை நிலைநாட்டும் நிலையிலிருந்து மேற் சென்று நலன்நாடும் அரசாங்கமாக (Welfare State) மாறு கின்றது.

வினாக்கள்

1. பொருளியல் எத்தனை பிரிவுகளையுடையது? அவை யாவை?
2. உற்பத்தி என்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக.

3. உற்பத்திக்கு உறுதுணையாக உள்ள துணைக்கருவிகள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

4. நுகர்வு, மாற்று என்ற பொருளியற் பிரிவுகளை விளக்கி எழுதுக.

5. விநியோகம் முதல் முறையிலும் இரண்டாம் முறையிலும் எவ்வாறு பயிலப்படுகிறது?

6. பொது நிதி என்றால் என்ன? அப்பகுதியில் கற்கப்படுவன யாவை?

7. பொது நிதியின் பிரிவுகள் யாவை?

கட்டுரைப் பயிற்சி

பொருள்களின் உற்பத்தி என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. கேட்டபடி வாக்கியங்களை மாற்றுக:

(அ) இதைத்தான் உற்பத்தி என்கிறோம்—செயப்படுபொருளை எழுவாயாக்குக.

(ஆ) உற்பத்தி என்ற சொல் சிறப்புப் பொருளில் வழங்கப்படுகிறது—செய்வினை வாக்கியமாக்குக.

2. எதிர்மொழி கூறுக: முயற்சி, தோற்றுவித்தல், துணைக்கருவி, முகிழ்க்கின்றது, முடங்குதல்.

3. பின்வருவனவற்றின் பகுதிகளைக் கூறுக: மாற்று, பணம், இயற்கை.

4. வாலி திரௌபதி மூக்கரிந்தது

(ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.)

இடைக் காலச் சோழரின் ஆட்சி தமிழகத்திற்குச்—சிறப்பாகச் சோழ நாட்டுக்குப் பொற்காலமாகும். கல்வி, கலைகள், வாணிகம், செல்வம் முதலியன அக்காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்தன. முதலாம் குலோத்துங்கன் காலத்துக்குப் பின் போர்கள் குறைந்து நாட்டில் அமைதி குடிபுகுந்தது. ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பர் முதலிய பெரும்புலவர்கள் விளங்கியது இக்காலமே.

முதலாம் குலோத்துங்கனுடைய மகன் விக்கிரம சோழன் கல்வி கேள்விகளில் விருப்பமுடையவன். பல புலவர்கள் அவன் அவையை ஒளிபெறச் செய்து வந்தார்கள். ஒரு நாள் அவன் புலவர் கூட்டம் தன்னைச் சூழவீற்றிருக்கும் போது தன் அவையை அணி செய்யும் புலவரின் புலமைத் திறத்தை ஆராய்வதற்கு அது ஒரு நல்ல சமயமென்று கருதினான். உடனே அவன் புலவர்களை நோக்கி, 'வாலி திரௌபதியின் மூக்கரிந்த தல்லவா மாபாரதம்!' என்றான்.

அரசன் ஒன்றைக் கூறினால், 'அதனை ஏற்றுக்கொள் ளாது மறுப்பது மரியாதைக் குறைவாகும். புலவர்கள் அரசன் கூறியது தவறென்று எங்ஙனம் கூறுவார்கள்! மேலும் விக்கிரமனுடைய குறிப்பு 'ஆம், இது உண்மை தான்! என்று எவரேனும் கூறுக பார்க்கலாம்' என்று கேட்டதுபோல் தோன்றிற்று.

புலவர் தம்முள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். 'வாலியாவது திரௌபதியின் மூக்கை அரிந்ததாவது? இராமாயணக் கதை உறுப்பினருள் ஒருவன் வாலி; திரௌபதி பாரதக் கதாபாத்திரம். அரசன் கூறிய தொடர் ஒருகால் சிலேடைப் பொருளதா? அப்படியும் இல்லையே!' என்று எண்ணினார்கள். 'இதற்கு எவரும் பதில் கூறல் இயலாது; எவரேனும் கூற முன்வருகிறார்களா பார்ப்போம்' என்று ஆவலுடன் புலவர்கள் காத்திருந்தார்கள்.

அந்தப் புலவர் கூட்டத்தில் இருபது ஆண்டும் நிரம்பப் பெருத ஓர் இளைஞர் இருந்தார். மன்னன் இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே அவர் முகத்தில் ஒரு களை தோன்றியது. 'இப்படி ஓர் அரிய பொருளை விக்கிரமன் குறிப்பிடுவதற்கு அவனிடம் எத்துணை அறிவு இருத்தல் வேண்டும்!' என்று மன்னனைத் தம் மனத்துள் வியந்து கொண்டார் அந்த இளைஞர். அவன் விஞவுக்கு ஏற்ற விடை பகரவும் ஆசைகொண்டார். ஆனல் நெடுங்காலமாகப் பேர்பெற்று விளங்கிய முதிய புலவர்கள் இருக்கும்போது நாம் முற்பட்டு எப்படி மறுமொழி கூறுவது! இதுதான் அவருக்கு ஒரு பெரும் சிக்கலாக இருந்தது.

அவையில் அமைதி குடிகொண்டிருந்தது. யாவரும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். என்றும் அத்துணை அமைதி இருந்ததில்லை. அந்த அமைதியை முதலிற் கலைத்தவன் வேந்தனே.

'என்ன! என் கேள்வியைச் சரி என்று கொண்டு பதில் சொல்லுபவர் எவரும் இங்கே இல்லையா?' என்ருன் விக்கிரமன்.

அவன் விஞ எதிர் ஒலித்ததே ஒழிய மறுமொழி இல்லை.

அரசன் கண்கள் தற்செயலாக அங்கே இருந்த முற் கூறிய இளைஞர்மீது சென்றன. அவர் முகத்தில் பொலிவும் கூச்சமும் ஒருங்கே தோன்றித் தோன்றி மறைவதைக் கண்டு கொண்டான் மன்னவன்.

விக்கிரமன் அந்த இளைஞரைப் பார்த்து 'நீங்கள் இதற்கு விடை கூற விரும்புவதுபோல் காணப்படுகிறீரே' என்ருன்.

மற்றப் புலவர்கள் ஏளனமாகத் தம்முள் நகை செய்தனர். இந்தச் சிறுவனை மதித்து அரசன் கேட்பது வீணே என்பது அவர்கள் எண்ணம்.

புலவர்கள் தம்மை ஏளனஞ் செய்து நகையாடுவதை இளைஞர் உணர்ந்துகொண்டார். 'அவர்கள் நகையினுல் நமக்கு நஷ்டமென்ன? அரசன் நம்மைத் தனித்துக் கேட்டது சிறப்பல்லவா?' என்று எண்ணி அஞ்சாது நின்று, "அரசர் பெரும, தாங்கள் கூறியது உண்மையென்பதில் ஐயம் இல்லை;

பெரியாரிடையில் நான் மறுமொழி பகர்வது எங்ஙனமென்று அவையடக்கம் காட்டினேன்; அத்துணையே'' என்று சொல்லிவிட்டு,

* 'புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்,
சுள்ளிருக்கும் கள்ளையுண்டும் சோர்விலேம்—உள்ளபடி,
சொல்லவா வாலி திரௌபதியை மூக்கரிந்த
தல்லவா மாபா ரதம்'.

என்ற வெண்பாவைக் கூறினர்.

இதனைக் கேட்டதும் புலவர்கள் எல்லாம் தம்மை மறந்து, 'நன்று! நன்று! இவரல்லவா சிறந்த புலவர்? புலமைக்கு வயது ஓர் வரம்பாகுமா?' என்றார்கள். மன்னன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'இளைஞரே நீவிர் இப்பொழுதும் அவையடக்கத்தையே காட்டி நிற்கிறீர்' என்று விக்கிரமன் அவரைப் பாராட்டினான். கட் குடியர் கள்ளை நிரம்பக் குடித்துவிட்டுக் குடிமயக்கத்தினால் உண்மை மறந்து வாலி திரௌபதியின் மூக்கை அறிந்தான் என்று கூறியதாக இக் கவி அமைந்துள்ளது. கட் குடியர் இங்ஙனம் தன் மனத்திற் றோன்றுவனவற்றைக் கூறுவதாகச் செய்யப்படும் செய்யுள் களி என்று வழங்கப்படும். களி என்பது கலம்பகம் என்ற நூலின் ஓர் உறுப்பு.

இந்த இளைஞரே ஒட்டக்கூத்தர் என்று தமிழ் நாவலர் சரிதை கூறும். ஒட்டக்கூத்தர் மிகுந்த இளம் வயதில் விக்கிரமன் அரசவைக்கு வந்தார். சில நாளில் அரசவைப் புலவர் ஆனார். விக்கிரமனுக்குப் பின் அவன் மகன் இரண்டாங் குலோத்துங்கனுக்கு ஆசிரியராக விளங்கினார். அவனுக்குப் பிறகு முடி பூண்ட இரண்டாம் ராஜராஜன் காலத்திலும் புலமையரசை நடாத்தி வந்தார்.

புலவர் பெருமானாகிய கூத்தருக்கு அன்று விக்கிரமன் ஆஸ்தானத்தில் கிடைத்த வெற்றியே அவருக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்து அவரை மேன்மைப்படுத்தியது.

---

* புள் - வண்டுகள். தார் - மாலை. பூம்புகார் - அழகிய காவிரிப் பூம்பட்டினம்; இது சோழர் தலைநகர்களுள் ஒன்று. களியேம் - கட் குடியர் ஆவோம். சுள் - உறைப்பு.

வினாக்கள்

1. இடைக்காலச் சோழரின் ஆட்சி தமிழ்நாட்டுக்குப் பொற்காலம் என்பது எவ்வாறு?

2. அரசன் புலவர்களின் புலமைத் திறத்தை ஆராய்வதற்குக் கேட்ட வினா யாது? புலவர்கள் அதனை ஏன் மறுக்கவில்லை?

3. மன்னனின் வினாவுக்கு விடை கூறியவர் யார்? அவர் கூறிய விடை யாது?

4. களி என்பது யாது?

5. 'நீவிர் இப்பொழுதும் அவையடக்கத்தையே காட்டி நிற்கிறீர்!' —சந்தர்ப்பம் கூறி நயத்தை விளக்குக.

கட்டுரைப் பயிற்சி

ஏதேனும் ஒரு தனிப்பாடலை எடுத்துக்கொண்டு இப்பாடத்தைப்போல ஒரு கதை எழுது.

மொழிப் பயிற்சி

1. கீழ்வரும் சொற்களின் பகுதிகளைக் கூறுக: போர், புலவர், கருத்து, பொருளது, சித்திரித்தார், இளைஞர், ஏற்ற.

2. (எவரேனும் விடை) கூறுங்கள்—கூறுக:—இங்கே உள்ள இரண்டு பயனிலைகளில் எது சரி, எது தப்பு? எதனால்?

3. இளைஞர் வியந்தார்—வியந்தார் இளைஞர்—இலக்கணத்துள் இவை தம்முள் வேறுபாடு யாது?

4. சோர்விலேம்—சோர்விலோம்—இந்த இரண்டு உளப்பாட்டுப் பன்மைச் சொற்கள்தம்முள் பேதம் யாது?

5. அரைகுறைப் படம்

(சீதா தேவி)

ராஜா ரவிவர்மா—ஓவிய உலகத்திலே தமது கீர்த்தியை நிலைநாட்டிய பெருங்கலைஞர்—மலை நாட்டை விளக்கவந்தவர். இன்றும் ஒவ்வொரு வீட்டின் சுவர்களிலும் தொங்கும் சித்திரங்களில் கொலு வீற்றிருக்கிறார். புராணங்களிலும் மந்திர சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்ட செய்திகளை அறிந்து அவற்றிற்கு முரண்பாடில்லாமல் தெய்வங்களின் அழகிய திருவுருவங்களைச் சிருஷ்டித்துத் தந்தவர் அவரே. எந்தத் தெய்வத்தைப் பற்றி நினைத்தாலும் ரவியினுடைய படந்தான் நமது அகக் கண் முன்வந்து நிற்கின்றது.

அவருடைய தூரிகை (வர்ணம் தீட்டும்கோல்) எவ்வளவோ தெய்வ உருவங்களை உண்டுபண்ணிய மகிமை உடையது. அதற்கு ஒரு நாயின் உருவத்தை எழுதும் ஆற்றலில்லாமற் போயிற்றென்பதை நம்ப முடியுமா ? உண்மையில் அந்த ஆற்றல் அந்தத் தூரிகைக்கு ஒரு சமயம் அமையவில்லை.

யாரோ ஒரு ஆங்கிலக் கவி தம்முடைய நாயைப் பாராட்டிப் பாடியிருக்கிறாரல்லவா ? ரவி வர்மா தம்முடைய அருமை நாயைச் சித்திரிக்க விரும்பினார். அதன் வளம் செறிந்த உருவத்தை அழகாக எழுதி முடித்தார். அதன் வாயில் நுரை இருப்பதாக அமைக்க வேண்டியதுதான் எஞ்சியிருந்தது.

'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பது ஒரு பழமொழியல்லவா ? அவருடைய ஓவியத்திறமை நாய் வாய் நுரையை எழுதுவதிற் பலிக்கவில்லை. பலமுறை எழுதி எழுதி அழித்தார். வர்ணந் தீற்றித் தீற்றிக் கலைத்தார். ஒரு முறையாவது அவருடைய கண்களுக்கு அந்தச் சித்திரம் பூர்த்தியடைந்ததென்ற திருப்தியுண்டாகவில்லை.

மேஜையின்மீது நாயின் படம் கிடந்தது. கடைசி முறையாக வர்ணந்தீற்றிப் பார்த்த ரவிக்கு மனம் சலிப்படைந்துவிட்டது. வாய் நுரையைத் தம்மால் எழுத முடியாததற்காக வருந்தினார். எந்த எந்த வர்ணங்களைக் கல

கலாமென்று யோசித்தார். ஒன்றும் தெரியவில்லை. சாய்வு நாற்காலியில் வந்து படுத்துக்கொண்டார்.

அவருக்கு யோசிக்க யோசிக்க கோபந்தான் உண்டாயிற்று. பக்கத்தில் ஒரு பலகையில் கடற்பஞ்சும் அதனருகில் தூய நீரும் இருந்தன. சித்திரங்களில் வர்ணங்களை அழிப்பதற்குப் பயன்படுபவை அவை.

'இனி இந்த முயற்சியில் பயனில்லை. இது ஒழிந்து போகட்டும்' என்று பல்லைக் கடித்துக் கொண்டார். ஈரமாக இருந்த கடற்பஞ்சை எடுத்துக் கோபத்தோடு மேஜையின் மீதிருந்த படத்தின்மேல் எறிந்துவிட்டுத் தொப்பென்று சாய்வு நாற்காலியில் விழுந்து கண்ணை மூடிக்கொண்டார். மிகவும் கஷ்டத்துடன் வீடு வாசல்களைத் தியாகம் பண்ணி விட்ட துறவியின் மனத்தைப்போல அவர் மனம் இருந்தது.

பத்து நிமிஷங்கள் செயலற்றுக் கிடந்தார் ரவி. அவருடைய உணர்ச்சி கொஞ்சம் சாந்தமாயிற்று. "என்ன காரியம் செய்துவிட்டோம்! பொறுமையை இழந்து ஒரு அன்புருவான காரியத்தை உருக்குலைத்து விட்டோமே! மயிர் படியவில்லையென்று கழுத்தையே வெட்டிவிட்டோமே!" என்று இரங்கினர். பலநாளாக யோசித்து அன்பினால் செய்த ஒரு காரியம் பொறுமை இல்லாமல் வீணுக்கப்படலாமா?

தட்டித்தள்ளாடி எழுந்தார் ரவி. தடுமாற்றத்தோடு தமது கோபத்துக்கு இலக்கான படத்தருகில் மெல்ல வந்தார். நெடுநாளாக அன்புடன் வளர்த்துவந்த ஒரு குழந்தையின் பிணத்துக்கருகில் செல்லும் ஒருவனைப்போல் அவர் காணப்பட்டார். அவர் கண்கள் இதயத்தையே இழந்துவிட்ட ஒருவனுடைய நோக்கத்தோடு காணப்பட்டன. அவருடைய உழைப்பை அவரல்லவா அறிவார்!

மேஜைக்கருகில் வந்தார். தாம் எறிந்த கடற்பஞ்சை மெல்ல எடுத்துக் கீழே எறிந்தார். ஆ! என்ன ஆச்சரியம்! இது கனவா; அல்லது நனவுதானு! அவர் தம் கண்களையே நம்பவில்லை. என்ன செய்தி? அந்தப் படத்தின் வாயில் யாராலும் அமைப்பதற்கரிய நுரையின் வடிவம் மிகவும் அழகாக அமைந்திருந்தது. இது உண்மைதானு? முற்றிலும்

உண்மை. ரவி எறிந்த கடற்பஞ்சு நேராகப் படத்தில் நாயின் வாயிருந்த இடத்தில் வந்து விழுந்தது. அதில் அளவாக இருந்த ஈரம் அந்தப் பத்து நிமிஷங்களில் நுரைபோல ஓர் உருவத்தை அமைத்து விட்டது.

ரவியின் நாய்ப் படம் கடற்பஞ்சால் முற்றுப்பெற்றது. அவருடைய மனம் மகிழ்ச்சியுற்றது.

வினக்கள்

1. ரவி வர்மாவினுடைய ஓவியத்திறமை சிறந்ததென்பது எவ்வாறு?

2. ரவி வர்மா நாயின் படத்தைச் சித்திரிக்கக் காரணம் என்ன? அது முற்றுப் பெற்றது எவ்வாறு?

கட்டுரைப் பயிற்சி

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. வாக்கியம் அமைக்க: அரைகுறை, கொலுவீற்றிருத்தல், அகக்கண்.

2. ஆற்றல்—என்ன பெயர்? பகுதி விகுதி கூறுக. இரு பொருள் தருக.

3. ஆனைக்கும் அடி சறுக்கும் அல்லவா—இந்தக் கருத்தை மூன்று வாக்கியங்களில் விவரிக்க.

சிறப்புத்

6. பாரத நூல்கள்

(வித்துவான் க. சாமிநாதன்)

உலகத்திலுள்ள சிறந்த காவியங்களின் வரிசையில் வைத்து எனப்படும் பெருமை வாய்ந்தவை இராமாயணமும் மகா பாரதமும். இவை இரண்டும் முதன் முதலில் வடமொழி யில் எழுதப் பெற்றன. இப்பொழுது உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் இந்த இரண்டு காவியங்களும் வழங்கு கின்றன. கதை அமைப்பிலும், நீதி விவேகம் ஞானம் முதலியவற்றைத் தெரிவிப்பதிலும் இராமாயணத்தைவிட மகா பாரதமே சிறந்தது. அதனுல் இதனை **ஐந்தாம் வேதம்** என் பார்கள்.

> ‘ நீடாழி உலகத்து மறைநாலொடைந் தென்று நிலைநிற்கவே
> வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள் ”

என்று **வில்லிபுத்தூரார்** கூறுவர். இத்தகைய பெருமை வாய்ந்த பாரதக் கதை தமிழில் சங்ககாலந் தொட்டு வழங்கி வருகிறது.

சங்க பாரதம்

சங்க காலத்தில் **பெருந்தேவனுர்** என்பவர் தமிழில் பாரதத்தை இயற்றினுர். அது வெண்பாவாலும் ஆசிரியப் பாவாலும் ஆனது. பிற்காலத்தில் அந்த நூல் அழிந்து விட்டது. **புறத்திரட்டு** என்ற நூலைத் தொகுத்தவர் அந்தப் பாரதத்திலிருந்து சில செய்யுட்களைத் தம் நூலுள் சேர்த்துக் கொண்டிருக்கிறுர். யாப்பருங்கலம், தொல்காப்பியம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியவர்கள் சங்க பாரதத்திலிருந்து சில செய்யுட்களைத் தம் உரைகளில் உதாரணமாக எடுத்தாண் டுள்ளார்கள். புறத்திரட்டும் உரையாசிரியர்கள் எழுதிய உரை நூல்களும் இன்று அழியாமலிருப்பதனுல் சங்க பாரதத்தின் சில செய்யுட்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றைத் தவிர நாம் இழந்துவிட்ட அச்செல்வத்தைப் பற்றி வேறென் றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

பாரதக் கதையைப் பற்றிய தமிழ் வழக்கு

சங்க காலத்திலேயே வேறு சில புலவர்கள் பாரதக் கதையைத் தம் செய்யுட்களில் உண்மையாகவோ உதாரணமாகவோ எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பாரதத்தைப் பற்றித் தமிழருடைய வரலாறாக வழங்கும் கதைகள் சில உள்ளன. இவை வடமொழியில் வியாசனார் எழுதிய ஆதி பாரதத்தில் இல்லை. தமிழர் கூறும் செய்திகளாக உள்ளனவற்றுள் ஒன்று ஒரு சேரன் பாரதப் போரில் பாண்டவர் கௌரவர் என்ற இருதிறத்தினரின் படைகளுக்கும் சோறு கொடுத்த வரலாறாகும். இம்மன்னவன் பெருஞ் சோற்றுதியன் எனப்படுவான். ஜைனமத சம்பிரதாயமாக வழங்கும் பாரதக் கதைகளும் பல உண்டு.

பாரத வெண்பா

சங்க பாரதம் அழிந்து போய்விட்டபடியால் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஒரு புலவர் தெள்ளாற்றில் போர் வென்ற **மூன்றாம் நந்திவர்மன்** காலத்தில் பெரும்பாலும் வெண்பாக்களில் பாரதக் கதையைத் தமிழில் எழுதினார். அதன் இடையிடையே ஆசிரியப்பாவும், சில சில விருத்தங்களும் வசனமும் கலந்திருக்கும். இந்த நூலைப் **பாரத வெண்பா** என்பார்கள். இப்புலவர் பெயர் என்னவோ தெரியவில்லை. இப்பொழுது இவர் பெயர் பெருந்தேவனார் என்றும், இவர் எழுதிய பாரத வெண்பா பெருந்தேவனார் பாரதம் என்றும் வழங்கப்படுகின்றன. சங்க காலப் பெருந்தேவனார் வேறு, இவர் வேறு என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்நூலும் இப்பொழுது முற்றிலும் கிடைக்கவில்லை. உத்தியோக பருவம் முதல் துரோண பருவம் வரையில் உள்ள கதைப் பகுதிக்கு உரிய சுமார் 800 செய்யுட்களே கிடைத்துள்ளன.

வில்லி பாரதம்

அடுத்த படியாகத் தமிழிலே தோன்றிய பாரதம் வில்லிபுத்தூரார் என்பவர் இயற்றியது. இது **வில்லி பாரதம்** என்று

வழங்கும். இது விருத்தத்தால் ஆனது. இதன் ஆசிரியர் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இரட்டையர், காளமேகம், அருணகிரிநாதர் முதலிய புலவர் காலத்தே வாழ்ந்தவர். இப்பொழுது தமிழில் உள்ள பாரத நூல்களில் மிகச் சிறந்தது இதுவே.

வில்லி பாரதம் பாரதக் கதையை முழுவதும் கூறுவது அன்று. சந்திர வமிசத்தைப் பற்றிச் சில வரிகளில் கூறி விட்டு சந்தனுமகாராஜன் கதையிலிருந்து பாண்டவர் வெற்றி பெற்று முடிசூடிக்கொண்டவரையில் சுருக்கமாகப் பத்துப் பருவங்களில் கதையை அழகாக விளங்கவைக்கிறது. எஞ்சிய எட்டுப் பருவங்களின் கதையை வில்லியார் எழுதாமல் விட்டு விட்டார்.

"வில்லியார் பாரதநூலை முற்றும் ஏன் எழுதவில்லை ?" என்பது ஒரு வினா. இதற்குப் பலர் பலவாறு விடை கூறுவர். "பத்துப் பருவங்களுக்குமேல் கதையை ஓட்டினால் கிருஷ்ண பகவான் பாண்டவர் முதலியோரரின் மரணத்தை எழுத வேண்டிவருமே என்றெண்ணி வில்லிபுத்தூரர் தம் கதையைப் பாண்டவர் பட்டம் தரித்துக்கொண்டதோடு நிறுத்திக் கொண்டார்" என்பர் சிலர். வில்லியார் வியாச பாரதத்தைப் பார்த்துக் கதையைத் தமிழில் எழுதவில்லை. அகஸ்திய பட்டர் என்பவர் ஆரியமொழியில் எழுதியிருக்கிற பால பாரதம் என்ற நூலை அப்படியே மொழிபெயர்த்து எழுதி யிருக்கிறார். பால பாரதம் பத்துப் பருவங்களைக் கொண்டது. அதனால் வில்லியாரும் பத்துப் பருவம் முடியவுள்ள கதையையே எழுதியுள்ளார். இது சிலர் கருத்து.

அரங்கநாத கவியின் பாரதம்

வில்லிபுத்தூரார் எழுதியதற்குமேல் எஞ்சியிருந்த எட்டுப் பருவங்களையும் 150 வருடங்களுக்கு முன்னர் அரங்கநாத கவி என்பவர் விருத்தப் பாவில் பாடி முடித்தார். அவர் வில்லிபுத்தூராரின் பாரதத்தைப் பாராட்டி அதன் தொடர்ச்சியைத் தாம் எழுதுவதைப் பாயிரத்துள் தெரிவித்திருக்கிறார். இதுவும் இக்காலத்தில் கிடைக்கின்றது.

நல்லாப்பிள்ளை பாரதம்

வில்லிபுத்தூரார் கதையைச் சுருக்கமாக எழுதியிருப்பதை வடமொழியில் உள்ளதுபோல் "மகா பாரத"மாகப் பெரிய அளவில் எழுத நல்லாப்பிள்ளை என்பவர் 150 வருஷங்களுக்கு முன் விரும்பினர். இவர் வில்லிபுத்தூரார் எழுதிய கவிகளை அப்படியே வைத்துக்கொண்டு இடையிடையே கதையையும், வர்ணனைகளையும் வளர்க்கப் பல கவிகளைச் சேர்த்தும் தொடக்கத்தில் வில்லிபுத்தூரார் ஒவ்வொரு கவியில் சுருக்கிக் கூறிய வரலாறுகளை விரிவாகப் பெருக்கியும் வில்லி பாரதத்தையே வித்தரித்திருக்கிறர். இது **நல்லாப்பிள்ளை பாரதம்** எனப்படும். இவரும் வில்லியைப் பலவாறு புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

அரங்கநாத கவி, நல்லாப்பிள்ளை இவ்விருவரின் நூல்கள் வில்லி பாரதத்தையே சிறப்பிக்கத் தோன்றியுள்ளன. வில்லி பாரதப் பெருமை இதனுல் விளங்கும். வாழ்க வில்லி; அவர் பாரதம் நீடு வாழ்க!

மாவிந்தமும் மறைந்த நூலும்

வழக்குத் தமிழில் விருத்தப் பாவில் **மாவிந்தம்** என்று ஒரு பாரதம் ஏட்டுச் சுவடியாகவே இன்று உளது. பழைய காஞ்சிப் புராணத்தைச் செய்த ஆசிரியர் ஒரு பாரதத்தையும் எழுதியுள்ளதாக அந்நூலின் சிறப்புப் பாயிரம் கூறும். அந்தப் பாரதம் இந்நாளில் இருக்கும் இடமும் தெரியவில்லை.

அம்மானை நூல்கள்

பாரதக் கதை நாட்டுப் பாடலாக (Folk songs) அமைக்கப்பட்ட நூல்கள் சில இருக்கின்றன. இவற்றுள் **பாண்டவர் வனவாசம்** நிரம்ப அழகானது. **அல்லியரசாணி மாலை** என்பது அருச்சுனன் பாண்டிய நாட்டிற்றங்கி அல்லி ராணியை மணந்த செய்தியைத் தெரிவிப்பது இந்த மாதிரியில் திரௌபதியம்மன் குறம், ஏணி யேற்றப் முதலிய நாட்டுப் பாடல்களும் வழங்குகின்றன. இவற்றிச

காணப்படும் கதைகள் பெரும்பாலும் தமிழ் வழக்காக உள்ளனவே. வடமொழிப் பாரதக் கதையுடன் இவை மிகுதியும் மாறுபடுவனவாகும்.

இவற்றைத் தவிர இந்த நூற்றுண்டில் சுப்பிரமணிய பாரதியார் செய்த **பாஞ்சாலி சபதம்** வில்லி பாரதத்துள் சூது போர்ச் சருக்கத்தைத் தழுவிப் பாரதியாரின் காலத்து இந்தியாவின் நிலையை விளக்க எழுந்ததாகும்.

தமிழ்ப் பாரத நூல்கள் எல்லாவற்றிலும் எல்லோராலும் பயிலப்படுவதும் கதைப் போக்கோ, பாத்திரங்களின் குணுதிசயமோ படம்பிடித்துக் காட்டியதுபோல் அமைந்துள்ளதும், சந்தச் செறிவு முதலிய நயங்கள் வாய்ந்ததும் வில்லி பாரதமே ஆகும்.

வினுக்கள்

1. சங்ககாலத்தில் தமிழ்மொழியில் ஒரு பாரதநூல் இருந்தமைக்குச் சான்று யாது? அந்நூலின் போக்கு எத்தகையது?

2. இப்பொழுது பெருந்தேவனுர் பாரதம் என்று நாம் வழங்கும் நூல் எது?

3. வில்லிபுத்தூரார் பத்துப் பருவங்களிலேயே தம் நூலைச் செய்துள்ளார். மேற்கொண்ட பருவங்களை அவர் செய்யாமைக்குக் காரணம் யாது?

4. தமிழ் வழக்காக வழங்கும் சில பாரத நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

கட்டுரைப் பயிற்சி

ஏதேனும் ஒரு நூலின் வரலாற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. எதிர்மொழி தருக: விவேகம், என்பார்கள், சிறப்பு, சொல்நயம், உலக வழக்கு, மாறுபடும்.

2. இரு பொருள் கூறுக: வழங்குவது, கதை, விருத்தம்.

3. மற்றெல்லாப் பாரதங்களிலும் வில்லி பாரதமே சிறந்தது.— 'வேறெந்தப் பாரதமும்' என்பதை எழுவாயாக்கிப் பொருள்கெடாமல் வாக்கியத்தை மாற்றுக.

தமிழ்ப் பூந்துணர்

ஐந்தாம் படிவம்—பொதுத் தமிழ்

தொகுப்பாளர்கள் :
வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்
தலைமைத் தமிழாசிரியர்,
ஸர் தியாகராயர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
வித்துவான் க. சாமிநாதன்
தமிழாசிரியர், பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, சென்னை.

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

 [விலை ரூபாய் 2

முதற் பதிப்பு—நவம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2108)

முகவுரை

தமிழ்ப் பூந்துணர் என்னும் இந்தப் புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக்கென்று 2-7-1952-இல் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப் பெற்றவை. இந்த வரிசையில் இது ஐந்தாம் பாரம்—பொதுத் தமிழுக்குரியது. இதனுள் இலக்கியத்துக்கும் பொது அறிவுக்கும் ஏற்ற இடம் தக்காங்கு வழங்கப் பெற்றுள்ளது. செய்யுளடிகளும் உரைநடைப் பகுதியின் பக்கங்களும் துரைத்தனத்தார் வரையறை யிட்டுள்ள அளவில் அமைந்துள்ளன.

இதில் சேர்க்கப்பெற்றுள்ள செய்யுட்பகுதி மாணவருக்கு உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தையும் ஊட்டக்கூடியதென்று எண்ணுகிறோம். இப்பகுதியிற் கண்ட குறிப்புரை முதலியன மாணவரின் இலக்கிய அறிவை வளர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. கட்டுரைகள் யாவும் அன்னார்க்குத் தமிழில் நல்ல பழக்கம் ஏற்படும் வகையில் தொகுக்கப்பெற்றுள்ளன.

இதனுள் கண்ட கட்டுரைகளை வெளியிட எங்களுக்கு அனுமதியளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பதிப்பாளருக்கும் எங்களுடைய மனமார்ந்த வணக்கத்தை நன்றியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
தொகுப்பாளர்கள்

பொருள் அடக்கம்

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

தமிழ்ப் பூந்துணர்

ஐந்தாம் படிவம்—பொதுத் தமிழ்

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

அருட்பா

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்
கூடுவிட்டுப் போயினபின் னெதுபுரிவீ ரெங்கே
குடியிருப்பீ ரையோநீர் குறித்தறியீ ரிங்கே
பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதுமிது பரமர்வரு தருணம்
ஈடுகட்டி வருவீரே லின்பமிகப் பெறுவீர்
எண்மையுரைத் தேனலன்நான் உண்மையுரைத் தனனே.
உழக்கறியீ ரளப்பதற்கோ ருளவறியீ ருலகீர்
ஊரறியீர் பேரறியீ ருண்மையொன்று மறியீர்
கிழக்கறியீர் மேற்கறியீர் ரம்பலத்தே மாயைக்
கேதமற நடிக்கின்ற பாதமறி வீரோ
வழக்கறிவீர் சண்டையிட்டே வம்பளக்க வறிவீர்
வடிக்குமுன்னே சோறெடுத்து வயிற்றடைக்க வறிவீர்
குழைக்கறியே பழக்கறியே கூட்டுவர்க்கக் கறியே
குழம்பேசா றேயெனவும் கூறிவறி வீரே.

இந்தக் கவிகளின் ஆசிரியர் வடலூர் இராமலிங்க சுவாமிகள். இவர் கி. பி. 19–ஆம் நூற்ருண்டினர். சமரச சன்மார்க்க நெறியையும் ஜோதி வழிபாட்டையும் இவர் கவிகளில் காணலாம். இவர் எழுதிய அருட்பா ஆன்ருேர் அருளிச் செய்த தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் போல் சிறந்து விளங்குகின்றது.

1. 'காடு வெட்டி.........எருவும் போட்டு' – 'பெறுதற்கரிய மனிதப் பிறவி பெற்றும்' என்றபடி. கடு விரைத்து – விடத்தை நட்டு; கரும்பு அறத்துக்கும் கடு பாவச் செயலுக்கும். ஈடு – வலிமை. எண்மை – எளிய வற்றை; ஆகுபெயர். மனிதப் பிறவியையும் அப்பிறவியைப் பெற்ற பலர் வீணே காலங் கழிப்பதையும் உபயோகமற்ற முறையிற் செய்யும் வேளாண்மையாக உருவகப்படுத்தியுள்ளார்.

2. நன்மை தீமைகளை 'ஆராய்ந்து அறியும் அறிவை உழக்காகக் கூறிஞர். 'கிழக்கறியீர் மேற்கறியீர்' என்றது 'மயங்கிக் கிடக்கின்றீர்' என்றபடி. ஏதம் அற – குற்றம் நீங்க. அம்பலம் – கனகசபை. குழைக் கறி – கீரைக்கறி. குழை – தளிர்.

II. அறநெறி

1. திருக்குறள்

திருவள்ளுவ நாயனுர் அருளிச் செய்த நீதிநூல் திருக்குறள். இது குறள் வெண்பாக்களால் ஆனது ; 1330 குறட்பாக்களையும் 133 அதிகாரங் களையும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளையும் கொண்டுள்ளது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சங்க காலத்தது. இதற்கு முன் காலத்தும் இக்காலத்துமாகப் பலர் பலவகைகளில் உரைகள் எழுதியுள்ளார்கள். பலவேறு உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் இது. திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் பல பெயர்கள் வழங்குகின்றன.

சொல்வண்மை

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில். (1)

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. (2)

வினைத் தூய்மை

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (3)

அழக்கொண்ட வெல்லாம் அழப்போம் ; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. (4)

நாடு

தள்ளா வினையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (5)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (6)

பொருள் செயல் வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (7)

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தம்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. (8)

நட்பு

நகுதற் பொருட்டன்று நட்டல் ; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (9)
அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு. (10)

உட்பகை

வாள்போல் பகைவரை அஞ்சற்க ; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (11)
உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. (12)

குடிமை

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (13)
நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை யென்ப வாய்மைக் குடிக்கு. (14)

மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. (15)
ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. (16)

பெருமை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (17)
பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (18)

சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். (19)
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ! (20)

குறிப்புரை

சொல் வன்மை—தான் எண்ணிய செயல் முடியும் விதத்தில் பேசுதற்கேற்ற சொற்களைச் சொல்ல வல்லவனுதல்.

1. திறன் - தம்முடையனவும் கேட்பாருடையனவுமாகிய திறமைகள். அதனின் ஊஉங்கு - அதனைவிடச் சிறந்தது; ஊஉங்கு : செய்யுளிசை யளபெடை.

2. வல்லன் - வல்லவனுய், சோர்விலனுய். அஞ்சான் - அவைக்கு அஞ்சாதவன். இகல் - மாறுபாடு; பகை.

வினைத் தூய்மை—செய்யப்படும் வினைகள் அறம் பொருள் புகழ்களை அளித்து நல்லன ஆதல்.

3. புகழொடு நன்றி பயவா - இம்மைக்கண் புகழையும் மறுமைக்கண் நன்மையையும் அளிக்காத. ஒருவுதல் - ஒழிதல்.

4. அழக்கொண்ட எல்லாம் - பிறர் அழும்படி தீய வினைகள் செய்து வௌவிய பொருள் எல்லாம். அழ - அவன்தான் இரங்க. நற்பாலவை இழப்பினும் பின்பயக்கும் - தூய வினையால் வந்த பொருள்கள் முன் இழந்தான் ஆயினும் அவனுக்குப் பிறகு வந்து பயன்தரும்.

5. தள்ளாவிளையுள் - குறையாத விளைவைச் செய்வோர்; வேளாண ருக்கு ஆகுபெயர்.

6. ஓவா - நீங்காத. செறுபகை - புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகை. இயல்வது - இனிது நடப்பது.

பொருள் செயல் வகை - செல்வத்தை உண்டாக்கும் திறம்.

7. பொருள் அல்லவரை - பொருளாக மதிக்கப்படாதாரை.

8. குன்று - பெருமலை. தம் கைத்து - தம் கையதாகிய செல்வம். உவமையணி.

9. நகுதற் பொருட்டு - மகிழ்ந்து உறவாடலின் பொருட்டு. நட்டல் - நள் + தல் - நட்புச் செய்தல். மிகுதி - வேண்டாத செய்கை. இடித்தல் - கண்டித்தல்.

10. அழிவின் அவை - அழிவான காரியங்களை. ஆறு உய்த்து - நன்னெறியில் செலுத்தி.

உட்பகை - மனத்துக்குள் அடக்கி வைத்திருக்கும் பகை.

11. வாள் போல் பகைவர் - வெளிப்பட்டு நிற்கும் விரோதிகள். கேள் போல் பகைவர் - வெளிக்காட்டாது மறைத்துவைத்த பகையை யுடையவர்; கேள் - உறவினர். தொடர்பு - நட்பு.

12. உடம்பாடு - மனப் பொருத்தம். குடங்கர் - குடில்.

குடிமை - உயர்ந்த குடியிற் பிறந்தாரது தன்மை.

13. இழுக்கார் - வழுவார். ஒழுக்கம் முதலிய மூன்றும் முறையே மெய், சொல், மனங்களுக் குரியன.

14. வாய்மைக் குடி - எக்காலத்தும் மாறுபடாத குடியிற் பிறந்தவர்; ஆகு பெயர். வகை - உரிய கூறு.

மானம் - எந்நாளும் தன் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்தபோது உயிர் வாழாமையுமாம்.

15. பெருக்கத்து - நிறைந்த செல்வம் வாய்ந்திருக்கும்போது. சுருக்கம் - வறுமை. உயர்வு - பணியாமை.

16. ஒட்டார் - தம்மை இகழ்கிறவர்.

17. சிறப்பு - பெருமை சிறுமை என்னும் சிறப்பியல்புகள்.

18. பெருமை - பெருமையுடையார்: சிறுமை என்றும் தன்னை வியந்து அணியும் - சிறுமையுடையார் பெருமையிலராயினும் தம்மை வியந்து புகழா நிற்பர். சிறுமை, பெருமை: பண்பாகு பெயர்.

சான்ருண்மை - பல குணங்களால் நிறைந்து அவைகளை ஆளும் தன்மை.

19. ஒப்புரவு - உபகாரம். கண்ணேட்டம் - பழகினவர்மீது அருள். சால்பு ஊன்றிய - சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய. சால்பு - நற் குணங்களின் தொகுதி.

20. இன்ன - தீயவை. பயத்தது - பயனையுடையது.

2. பழமொழி நானூறு

ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு பழமொழி அமையுமாறு இயற்றப்பட்ட நானூறு வெண்பாக்களாலாகிய நூல் பழமொழி நானூறு எனப்படும். திருக்குறளைப்போல் இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் முன்றுறை அரையனார் என்பவர். இவர் பாண்டிய னுடைய ஆணைக்கு உட்பட்ட ஓர் சிற்றரசர்; ஜைன மதத்தினர்.

குணத்தையே பாராட்டல் வேண்டும்

பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைத்தலு மாமோ—நிரந்தெழுந்த
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கு
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில். (1)

சேமிப்பு இன்ன தென்பது

வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி அறஞ்செய்க அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது. (2)

உறவினரின் கடமை

அல்லல் ஒருவற் கடைந்தக்கால் மற்றவற்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்க அதுவே
மனைமர மாய மருந்து. (3)

எளிய முயற்சியின் மேன்மை

எனைப்பலவே யாயினும் சேய்த்தாப் பெறலில்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே
இனக்கலை தேன்கிழிக்கும் எற்கல்சூழ் வெற்ப
பனைபதித் துண்ணார் பழம். (4)

அன்பினாற் கொள்ளல்

அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானாய்
அம்புவிட் டாக்கறக்கும் மாறு. (5)

அற்பரை வருத்தாமை

காழார மார்ப கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த பிழைப்பினை—மேலாயோர்
உள்ளத்துட் கொண்டுநொந் தூக்கல் குறுநரிக்கு
நல்லநா ராயங் கொளல். (6)

புரந்தார்க்குக் கேடு சூழாமை

நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல். (7)

குறிப்புரை

1. பாசி மேலிட்டு - பாசிபோலிருக்கும் சில சொற்களையும் செயல்களையும் இட்டு. நிரந்து எழுந்தவேய் - வரிசைப்பட எழுந்த மூங்கில்.

2. வைப்பு - செல்வம். துய்த்து வழங்கி - உண்டு ஒழுகி. இருபாலும் அத்தக - இருமைக்கும் அழகிய. தக்குழி - தகுந்த இடம். எய்ப்பினில் வைப்பு - தாம் தளர்ந்த காலத்தினில் தமக்கு உதவும் சேமநிதி.

3. கிளைகள் - சுற்றத்தார். வினைமரபின் - செய்கை முறையால். மனைமரம் ஆயமருந்து - வீட்டுக் கொல்லையில் பயிர் செய்த மருந்துச் செடிகளைப் போன்றது.

4. எனைப்பலவே ஆயினும் - எத்துணைப் பலவாக இருப்பினும். சேய்த்தாப் பெறலிற் - காலம் கடந்துபெறும் அதனைவிட. அணிக்கோடல் - விரைவில் சமீப காலத்தில் அதனைப் பெற்றுத் தாம் கொள்ளுதல். கலை - ஆண் குரங்குகள். எற்கல் - விளங்கிய கற்கள். பனைபதைத்து உண்ணார் பழம் - பனங்கொட்டையை நட்டு அது வளர்ந்து பழங் கொடுத்து அப் பழத்தை உண்ணமாட்டார். பலன்தர நீண்டகாலம் வேண்டுமென்றபடி.

5. வழிபட்டு - ஒருவன் விரும்பியவாறு ஒழுகி. நின்றபொழுது - தான் நினைத்த பொழுதே. அம்பு - வில்லம்பு.

6. காழாரம் - முத்துமாலை. கைகாவா - ஒழுக்கத்தைப் பாது காவாத. பிழைப்பு - தவறு. ஊக்கல் - ஊக்கம் கொள்ளுதல். நாராயம் - நாராயணாஸ்திரம்.

7. நமர் - நம்மவர். புரந்தார் - காப்பாற்றினவரை. சூழ்தல் - வஞ்சனையாக எண்ணுதல். கல்வெற்ப - குறிஞ்சி நிலத்தலைவனே. கோடு - மரக் கொம்பு.

III. வரலாறு

1. சிலப்பதிகாரம்

காட்சிக் காதை

சிலம்பின் காரணமாகத் தோன்றிய கதையினைக் கூறும் நூல். இது கோவலன் கண்ணகி என்பவர்களின் வரலாற்றைக் கூறுவது. இது கடைச் சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய காப்பியம். ஐம்பெரும் காப்பியங் களுள் ஒன்று. இதனை இயற்றியவர் சேரமன்னர் பரம்பரையைச் சார்ந்த இளங்கோவடிகள் என்பவர். இவர் இளமையில் துறவுபூண்ட முனிவர்.

காட்சிக் காதை என்பது கண்ணகிக்குச் சிலை ஏற்படுத்துவதற்குரிய கல்லைக் காணுதலைப் பற்றிய பாட்டு. 'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்' என்று கூறும் தொல்காப்பிய அடிகளால் விளங்கும். வேடர்கள் செங்குட்டுவனை வந்து காணுதலைக் காட்சிக் காதை என்பாரும் உளர்.

சேரமன்னன் தேவியோடு மலைவளம் காணச் செல்லல்

மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விலங்கில வந்தி வெள்ளி மாடத்
திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளித்
துஞ்சா முழவி னருவி யொலிக்கு
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
பைந்தொடி யாயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விளங்கிய பேரியாற் றடைகரை
யிடுமணை லெக்க ரியைந்தொருங் கிருப்ப

வேடர் மன்னனை வந்து காணுதல்

அளந்துகடை யறியா அருங்கலம் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றத்
திறைமகன் செவ்வி யாங்கணும் பெறாது
திறைசுமந்து நிற்கும் தெவ்வர் போல

யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மான்மதக் குடங்களுஞ்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறு
மாளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமுங்
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
மலைமிசை மாக்க டலைமிசைக் கொண்டாங்

வேடர் மன்னனிடம் கூறியவை

கேழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றங்
கான வேங்கைக் கீழோர் காரிகை
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்க ணினைப்பினு மறியேம்
பன்னூ றாயிரத் தாண்டுவா ழியரென

சாத்தனார் கூறிய வரலாறு

மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
தீவினைச் சிலம்பு காரண மாக
வாய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்குஞ்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி
யஞ்சி லோதி யறிகெனப் பெயர்ந்து
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய மமளிமிசை யிருந்த

திருவீழ் மார்பிற் தென்னவர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொருஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொருஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோற் றன்மை
யிற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
றன்னுட் டாங்கட் டனிமையிற் செல்லாள்
நின்னுட் டகவயி னடைந்தன ணங்கையென்
றெழிவின் றுரைத்தீண் டூழி யூழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்

செங்குட்டுவன் கூற்றும் தேவியின் மறுமொழியும்

தென்னர் கோமான் தீத்திறம் கேட்ட
மன்னர் கோமான் வருந்தின னுரைப்போன்
எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்ப்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பம் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்
குயிருடன் சென்ற ஒருமக டன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினு
நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென

மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
" காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திற நிற்கநம் மகனு டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரவுதும்" என்றனள்.

குறிப்புரை

1. மாநீர்வேலி - இருண்டநீரை வேலியாகவுடைய. கடம்பு எறிந்து - பகையரசரது காவல் மரமாகிய கடம்பினை வெட்டி.

2. மலைவில் - போர் செய்தற்குரிய வில் ; இது சேரர் இலச்சினை.

3. வானவர் தோன்றல் - சேரருள் சிறந்தோனாகிய செங்குட்டுவன். வாய் வாள் - தப்பாத வாள். கோதை - செங்குட்டுவன்.

4. இலவந்தி - இயந்திர வாவியையுடைய.

5. இளங்கோ வேண்மாள் - சேரனுடைய மனைவி.

6. அருவியின் ஒலிக்கு மத்தள ஓசை உவமை.

7. மஞ்சு - மேகம்.

8. பைந்தொடிஆயம் - பெண்கள் கூட்டம் ; தொடி - வளையல்.

9. வஞ்சி - சேரர் தலைநகர்.

10. நெடியோன் - திருமால். திருமாலுக்கு மலை உவமை.

11. பேரியாறு - பெரியாறு.

12. எக்கர் - மணல்மேடு.

14. தலை மயங்கிய - தம்முள் கலந்துள்ள.

15. செவ்வி - காண்பதற்குரிய தருணம்.

16. திறை - கப்பப் பொருள்கள்.

17-23. இங்கே கூறப்படுவன குறிஞ்சி நிலப் பொருள்கள். மான் மதம் - கத்தூரி. குறை - கட்டை. சிந்துரம் - குங்குமம். அணங்கு - குட்டி. வாழ்வரிப் பறழ் - புலிக்குட்டி. களபம் - யானைக் கன்று. குடாவடி உளியம் - கரடியின் குட்டி.

26. வேங்கை - ஒரு மரம்.

27. மன் - தன்கணவன்.

31. வாழியர் - நீ வாழ்க ; வியங்கோள் வினை.

35. மாதர் - கண்ணகி.

38. வாய்தொடி - வாய்த்த வளையல்களை அணிந்த ; வினைத்தொகை; 'ஆய்தொடி' என்று பிரித்தலுமாம்.

39. மன்னன் - பாண்டியன்.

43. அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடையாள்.

44. சுட்டதும் என்பதன் பின் 'சொல்லி என்ற ஒரு சொல் சேர்க்க.

45. அரிமான் - சிங்கம்.

46. திருவீழ் - திருமகள் தங்கப் பெற்ற.

47. தயங்கு இணர்க்கோதை - விளங்கும் பூங்கொத்தை அணிந்த கூந்தலையுடைய அல்லது மாலையையுடைய கண்ணகி.

49. தலைத்தாள் நெடுமொழி - கண்ணகி கூறிய வீரமொழி.

53. பெருங்கோப்பெண்டு - பாண்டிமாதேவி.

55. இறைக்கு - இறைவனுகிய உனக்கு.

63. செம்மையின் இகழ்ந்த - நல்ல தன்மையினின்று நீங்கிய.

64. உயிர் பதிப் பெயர்ந்தமை - உயிரை நீங்கினமை ; பதி - உடல்.

69. புரவு - பாதுகாப்பு.

71. தொழுதகவு - பாராட்டத்தக்க மேன்மை ; வினைத்தொகை.

76. நன்னுதல் - சேரனுடைய மனைவி.

79. மாதர் - பாண்டிமாதேவி. பெருந் திரு - விண்ணிலுள்ள பேரின்பம்.

81. பரவுதும் - வழிபடுவோம்.

2. பெரிய புராணம்
மெய்ப்பொருள் நாயனர் புராணம்

சைவ சமயத்தைச் சார்ந்த அறுபத்து மூன்று தனியடியார், ஒன்பது தொகையடியார் ஆகிய இவர்களைப் பற்றிக் கூறும் சரித்திரம் திருத் தொண்டர் புராணம் அல்லது பெரிய புராணம் எனப்படும். இது சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாவது.

இதனை அருளிச் செய்தவர் சேக்கிழார் என்பவர். இவர் தொண்டை மண்டலத்தில் குன்றத்தூர் என்ற ஊரினர். இவர் அனபாயன் என்ற சோழனுக்கு மந்திரியாக இருந்து இறுதியில் அப்பதவியை நீத்துச் சோழ மன்னனது வேண்டுகோளின்படி இந்நூலை அருளிச்செய்தார். பெரிய புராணம் பக்திச் சுவை நிரம்பியது.

மெய்ப்பொருள் நாயனர் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். சிவனடியார் வேடத்திற்குரிய திருநீறு, கண்டிகை முதலியவே உண்மைப் பொருள்கள் என்று எண்ணியதால் இவர் மெய்ப்பொருள் நாயனர் என்ற பெயர் பெற்றார். புராணம் என்பது பழைய வரலாறு.

நாயனரின் இயல்புகள்

சேதிநன் னாட்டு நீடு
திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசற் கன்பர்
கருத்தறிந் தேவல் செய்வார். (1)

அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையா னன்பர்
வேடமே சிந்தை செய்வார். (2)

முத்திநாதன் பலமுறை தோற்ரேடினமை

இன்னவா றெழுகும் நாளில்
இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையா லமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனன். (3)

அவனது சூழ்ச்சி

இப்படி இழந்த மாற்ருன்
இகலினல் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடம் கொண்டே
அற்றத்தில் வெல்வா னைகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான். (4)

பொய் வேடம்

மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே அன்ன
மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்தி நாதன். (5)

அவன் நாயனுரை அடைதல்

கடையுடைக் காவ லாளர்
கைதொழு தேற நின்றே
உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந் தருளு மென்னத்

தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டும்
துயில்கொளு மிறைவ னென்றான். (6)

என்றவன் கூறக் கேட்டே
யானதற் குறுதி கூற
நின்றிடு நீயு மென்றே
அவனையு நீக்கிப் புக்குப்
பொன்றிகழ் பள்ளிக் கட்டில்
புரவலன் துயில மாடு
மன்றலங் குழல்மென் சாயல்
மாதேவி யிருப்பக் கண்டான். (7)

சூழ்ச்சியின் விளைவு

கண்டுசென் றணையும் போது
கதுமென இழிந்து தேவி
வண்டலர் மாலை யானை
எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்டர்
ஆமெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று. (8)

மங்கலம் பெறுக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற
தென்கொலோ வென்று கூற
உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்தவா கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தேன் இயம்ப வென்றான். (9)

பேறெனக் கிதன்மே லுண்டோ
பிரானருள் செய்த விந்த
மாறிலா கமத்தை வாசித்
தருள்செய்ய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாது
தவிரவே நானு நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்
என்றவன் விளம்ப வேந்தன். (10)

திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி
இனியருள் செய்யு மென்றார். (11)

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளியை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைத்தவப் பரிசே செய்ய
மெய்த்தவ வேடமேமெய்ப்
பொருளெனத் தொழுது வென்றார். (12)

தத்தனது செயலும் மெய்ப்பொருளாரின் கட்டளையும்

மறைத்தவன் புகுந்த போதே
மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி
வாளினு லெறிய லுற்றான்

நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்ருர் நீண்ட கையால்
தறைப்படு மளவில் தத்தா
நமரெனத் தடுத்து வீழ்ந்தார். (13)

வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும்
தலையினுல் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன
எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுமி னென்ருர். (14)

தத்தன் முத்திநாதனைக் கொண்டு விட்டபின் மீண்டுவரல்

அத்திற மறிந்தா ரெல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்
எனப்புடை சூழ்ந்த போது
தத்தனு மவரை யெல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற
திறைவன தாணை யென்ருன். (15)

அவ்வழி யவர்க ளெல்லாம்
அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியிற் றத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவா ளேந்தி
ஆளுருக் கானம் சேர
வெவ்வினைக் கொடியோன் றன்னை
விட்டபின் மீண்டு போந்தான். (16)

மெய்ப்பொருளாரின் மகிழ்ச்சியுரை

சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்த
தியார்செய்ய வல்லா ரென்று
றின்றவன் றன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார். (17)

நாயனாரின் இறுதி ஏற்பாடு

அரசியல் ஆயத் தார்க்கும்
அறிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை
விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலர் மன்று ளாடும்
பூங்கழல் சிந்தை செய்தார். (18)

குறிப்புரை

1. மன்னி - நிலைபெற்றிருந்து. மலையமாநாடு=மலாடு; மரூஉ.

2. மாற்றலர் - பகைவர். முனைகள் - போர்முனைகளை. திரை செய்நீர் - கங்கை; திரை - அலைகள்.

3. இகல்திறம் - பகைமை. ஓடை - யானையின் நெற்றிப் பட்டம். மற்றும் - தேர் முதலியனவும். பரிபவம் - துன்பம்.

4. மாற்றான் - பகைவன். இகல் - போர். அற்றத்தில் - இரகசியமான சூழ்ச்சியினால். செப்பரும் நிலைமை எண்ணி - வாய்விட்டுச் சொல்ல முடியாத கொடிய நிலைமையை நினைத்து; என்றது மெய்ப்பொருளாரை வஞ்சித்துக்கொல்லும் நிலைமையை எண்ணி என்றபடி. பெரியோருக்கு வரும் தீங்கினை வாய்விட்டுச்சொல்லுதலும் குற்றமாதலால் 'செப்பரும் நிலைமை எண்ணி' என்றார். பின் 12-ஆம் கவியிலும், 'நினைத்த அப் பரிசே செய்ய' என்பர்.

5. திருநீற்றை அணியும் அங்கங்களை அறியாதவன் ஆதல்பற்றி, 'மெய்யெலாம் நீறுபூசி' என்றார். வேணிகள் - சடைகள். படைகரந்த - ஆயுதம் மறைந்துள்ள. புத்தகக்கவளி - ஏட்டுச்சுவடியை வைக்கும் உறை. மைபொதி விளக்கு - தன்னிடம் இருளையும் வெளிப்புறம் ஒளியையுமுடைய

விளக்கு ; வெளி வேடத்தில் பொலிவும் மனத்துள் வஞ்சகமும் இருத்தல் பற்றி முத்திநாதனுக்கு மைபொதிவிளக்கு உவமை.

6. ஏற - தம்மை அறியாது கைகள் தாமாகத் தலைமேற்குவிய. உடையவர் - ஆண்டானாகிய சிவபெருமான். இடைதெரிந்து அருள வேண்டும் - பார்க்கிற வேளையை முன்னதாக அறிந்துகொண்டு சென்றருளுதல் வேண்டும்.

7. உறுதி - இகத்துக்கும் பரத்துக்கும் உறுதிதரும் உபதேசத்தை. மாடு - அருகில். மன்றல் அம்குழல் - நறுமணமுள்ள அழகிய கூந்தலையும்.

8. கதுமென - விரைவாக. தொழுதவண்ணம் எழுந்தார் என்க. கொள்கையின் - வணங்கவேண்டிய முறைப்படி.

9. அணைந்தது - நெருங்கிற்று ; அவிந்துபோயிற்று என்பது அவர் அறியாமற் கூறிய சொல் ; தொனி எனப்படும். எங்கும் இல்லாதது - வேறு உலகத்திலிருந்து வந்தது என்றபடி ; உண்மையை மறைபொருளிற் கூறினான் என்றலும் ஆம்.

10. பிரான் - சிவபெருமான். தவிர - இவ்விடம் விட்டு நீங்க.

11. பரிவுடன் - விருப்புடன். விரைய - விரைவாக.

12. பத்திரம் - வாள். அப்பரிசே - அந்தவிதமே. வென்றார் : மெய்ப்பொருள் நாயனார் வென்றார் என்றது, தவவேடத்தில் தாம் வைத்திருந்த மதிப்பை உயிர்விடும் சமயத்திலும் நீக்காமல் பகைவன் வாளுக்கு இடங் கொடுத்ததனால்.

13. மறைத்து - உண்மை வடிவை மறைத்து. அவன் - முத்திநாதன். இறைப்பொழுதின்கண் - ஒருகணத்தில். எறியலுற்றான் - முத்திநாதனை வெட்டத்தொடங்கினான். நீண்டகை - அரசருக்குக் கைகள் நீண்டிருத்தல் நல்ல லட்சணங்களுள் ஒன்று ! முத்திநாதனது உயிரைக் காக்கத் தத்தனைத் தடுக்கவந்தமையின் நீண்டகை என்றார், என்று கூறுவதும் பொருந்தும்.

14. தாதன் - அடிமை. தாங்கி - மெயப்பொருளாரின் உடலைத் தாங்கி நின்று 'யாதுநான் செய்கேன்' என்பது திகைப்பினால் வந்த சொல்; 'இனி நான் செய்யத்தக்கது யாது ?' என்றலுமாம். மீது இடைவிலக்கா வண்ணம் - நம்மவர் இவர்மீது பாய்ந்து நடுவில் தடைசெய்யாதவிதம். விடுமின் என்று தத்தனைப் பன்மைப்பொருளிற் சொல்லியது அவனை உள்ளிட்டவரையும் சேர்த்து.

15. அத்திறம் - மெய்ப்பொருளார் வஞ்சகமாகக் கொலையுண்ட செய்தியை. ஆணை - கட்டளையால்.

16. வடி - கூர்மை. ஆள் உருக்கானம் - மனிதரின் நடமாட்டம் இல்லாத காடு. கொடியன் தன்னை - கொடிய முத்திநாதனை ; தன்னை அக்கொடியான், 'இனி நீ செல்க, எனக்கு அச்சமில்லை' என்று கூறிவிட்ட பிறகு.

17. செய்தது + யார் = செய்ததியார் : குற்றியலிகரம். கூர்ந்தார் - மிகுந்தார்.

18. ஆயத்தார் - கூட்டத்தார். அழிவுறும் - அழுகின்ற. உய்ப்பீர் - அரசினை நல்லவழியிற் செலுத்துவீர். பூங்கழல் - இறைவனது திருவடிகளை. சிந்தைசெய்தார் என்பது இந்த உலகை நீத்தார் என்பதைக் காட்டும்.

3. மனோன்மணீயம்

மனோன்மணி என்ற பெண்ணைக் கதாநாயகியாகக் கொண்ட நாடக நூல் மனோன்மணீயம் எனப்படும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் செய்த நாடகங்கள்போல் தமிழில் இந்நூல் சிறந்துள்ளது. இதனைச் செய்தவர் பேராசிரியர் பி. சுந்தரம்பிள்ளை என்பவர்.

மதுரையின் அரசன் ஜீவகன் என்பான் குடிலன் என்ற நயவஞ்சகனை மந்திரியாகக் கொண்டு அவன் சூழ்ச்சிகளை அறியாமல் மயங்கிக்கிடந்தான். அதனால் சேரவரசனாகிய புருஷோத்தமனுடன் போரிட நேர்ந்தது. குடிலன் சூழ்ச்சியினால் சேரன் வெற்றிபெறும் நிலை ஏற்பட்டது. அதன்பின் குடிலன் தன் மகனுக்கு மனோன்மணியை விவாகம் செய்துதர ஏற்பாடு செய்துவிட்டு, சீவகனைப் புருஷோத்தமனிடம் ஒப்புவிக்க மேலும் ஒரு சூழ்ச்சியை ஆராயும் பகுதி இங்கே பாடமாக வந்துள்ளது.

அங்கம் V : களம் I

குடிலன் தனிமொழி

திருமணம் கெடினும் தீங்கில்லை யீங்கினி
இருசர மின்றி யெப்போ ரிடையும்
ஏகார் மதியோர் இதில்வரு கேடென்?
ஆகா வழியும் அன்றிது சேரனை
அணைந்தவன் மனக்கோ ளுணர்ந்ததன் பின்னர்
சுருங்கையின் தன்மை சொல்லுவது மொருங்கே
இசைவனேற் காட்டுதும் இன்றேல் மீள்குதும்
பசையிலா மனத்தன்! பணிதலே விரும்புவன்
பாண்டிநா டாளவோ படையெடுத் தானிவன்!
தூண்டிடு சினத்தன்! தொழுதிடின் மீள்வன்
வேண்டிய நீரும் விழைந்ததோர் தாரும்
பாண்டில் பாண்டிலா யாண்டுகள் தோறும்
அனுப்புதும் குறைவென் னதனில்? இதுவே
மனக்குறை நீக்கு மார்க்கம்—வதுவை
போயினென்? ஆயினென்? பேயன் நம்மகன்
எடுத்தெறிந் திடுவனிப் போதே நம்மொழி
அடுத்தநம் படைஞரோ பணிவர் : அவர்நமைக்
கெடுத்தநா ரணற்கே கேளொடு இளைஞர்
ஆதலி லஃதே தீதறு முறுதி :—
என்னைநம் ஊகம்! என்னைநம் ஊக்கம்!
முன்னர்நாம் அறியா இன்னநற் சுருங்கையில்

துன்னிருள் வழிதனி தொடர்ந்திவண் சேர்ந்தோம்
ஊக்கமே பாக்கியம் உணர்விலார் வேறு
பாக்கிய மூழென பகர்வதெல் லாம்பாழ்
சத்தியம் வேறென் ? சாத்தியா சாத்தியம்
அறிகுறி பலவா லாய்ந்தறிந் தாற்றும்
திறமுள ஊகமே யோகம் அன்றி
வான்கா டதனில் வறிதே சுழலும்
மீன்காள் ! வேறு முளதோ விளம்பீர் ?
மதியிலா மாக்கள் விதியென நும்மேற்
சுமத்தும் சுமையும் தூற்றும் சும்மையும்
உமக்கிடு பெயரு முருவமுந் தொழிலும்
அமைக்குங் குணனும் அதில்வரு வாதமும்
யுக்தியு மூகமும் பக்தியும் பகைமையும்
ஒன்றையும் நீவிருணரீர் !—அஃதென் ?
வென்றவர் பாசறை விளக்குவ தஃதோ !
இங்குமற் றுலாவுவன் யாவன் ? பொங்குகால்
வருந்தொறுஞ் சிலமொழி வருவ, அஃதோ
திரும்பினன் ! ஒதுங்குவம் தெரிந்துமேற் செல்குவம்.

குறிப்புரை

2. இருசரம் - பெரிய அம்புகள்.

4. இது ஆகா வழியும். அன்று - முடிகிற வழியே இது.

6. சுருங்கை - சீவகனுடைய கோட்டைக்குள் நுழையக்கூடிய கள்ள வழி.

8. பசை இலா மனத்தான் - பாண்டிய ராச்சியத்தில் ஆசை இல்லாத மனத்தவனான புருஷோத்தமன். பணிதலே - பகைவர் தன்னை வணங்கு வதையே.

11. தார் - வேப்பமாலை. தோல்வியை ஒப்புக்கொள்வதற்காகப் பாண்டியன் தன்னாட்டிலிருந்து ஒரு குட நீரையும் தன் அடையாளப் பூவாகிய வேப்ப மாலையையும் சேரனுக்கு அனுப்பவேண்டும் என்று முன்னாள் சேரன் கூறியிருந்தான்.

12. பாண்டில் - வண்டி.

14. வதுவை - மனோன்மணியைத் தன் மகனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கும் திருமணம்.

19. இறுதி - முடிவு.

24. ஊழ் - விதி.

29. மீன்காள் - நட்சத்திரங்களே.

31. சும்மை - பழிச்சொற்களின் ஓசை.

37. கால் - காற்று.

38. காற்றின் வழியாக வருவன.

IV. வருணனை

காவியங்களில் பருவங்களின் வருணனை இடம்பெற வேண்டும் என்று ஆன்றோர் கூறுவர். கார்ப்பருவத்தின் வருணனை இங்கே தரப்படுகிறது. இது கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்துள் கார்காலப் படலத்தில் உள்ளது.

1. கார்கால வருணனை

நஞ்சினில் நளிர்நெடுங் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினின் இருண்டது நீல வானமே. (1)

தீர்த்தனும் கவிகளும் செறிந்து நம்பகை
பேர்த்தனர் இனிஎனப் பேசி வானவர்
ஆர்த்தென ஆர்த்தென மேகம் ஆய்மலர்
தூர்த்தென ஒத்தன துள்ளி வெள்ளமே. (2)

வண்ணவிற் கரதலத் தரக்கன் வாளினன்
விண்ணிடைக் கடிதுகொண் டேகும் வேலையில்
பெண்ணினுக் கருங்கலம் அனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தது கால மாரியே. (3)

குறிப்புரை

1. நளிர்நெடுங் கடலின் - குளிர்ச்சி பொருந்திய பரந்த கடலைப் போல். நயனத்தின் - கண்களைப்போல். அரக்கருடைய வடிவைப்போல் செய்கையைப்போல் மனத்தைப்போல்.

2. தீர்த்தன் - பரிசுத்தமானவன் ; இராமன். கவிகள் - குரங்குகள். ஆர்த்தென - ஆரவாரித்தாற்போல். மேகங்கள் வானவர் ஆர்த்தென ஒத்தன. துள்ளி - துளிகள். துள்ளி வெள்ளம் ஆய்மலர் தூர்த்தென ஒத்தன.

3. வண்ணவில் - அழகியவில். அரக்கன் - இராவணன். பெண்களுக்கு அருமையான அணியைப் போன்றவள் சீதை. பெய்வளை அணிந்த வளையல்களையுடையவள். இராவணனுக்கு மேகமும் அவன் வில்வாள்களுக்கு முறையே இந்திர வில்லும் மின்னலும் சீதையின் கண்ணீருக்கு மழைத் துளிகளும் உவமை.

2. நிலாவின் வருணனை

இதுவும் கம்பராமாயணத்தில் உள்ளது. அநுமன் சீதையைத் தேட இலங்கை சென்றான். இராக்காலத்தில் நிலவு வெளிப்பட்டது. அந்த நிலவு இவ்விதமெல்லாம் தோன்றியது என்று கம்பர் பல கவிகளால் வருணிக்கிறார். அவற்றுள் மூன்று கவிகள் பின் வருவன :

கற்றைவெண் கவரிபோற் கடலின் வெண்டிரை
சுற்றிநின் றலமரப் பொலிந்து தோன்றிற்றால்
இற்றதென் பகையென எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடையெனக் குளிர்வெண் திங்களே. (1)

வீசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
ஆசுற எங்கணும் துளைந்த ளாயது
காசுறு கடிமதில் இலங்கைக் காவலூர்த்
தூசுறை யிட்டது போன்று தோன்றிற்றே. (2)

இகழ்வரும் பெருங்குணத் திராமன் எய்ததோர்
பகழியின் செலவென அநுமன் பற்றினல்
அகழ்புகுந் தரண்புகுந் திலங்கை யன்னவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே. (3)

குறிப்புரை

1. இற்றது என் பகை என எழுந்த இந்திரன் விரித்துப் பிடித்த குடைபோலச் சந்திரன் பொலிந்து தோன்றினன் ; கவரிபோல் பொலிந்து தோன்றினன். கடலின் திரைகள் அலமரப் பொலிந்து தோன்றினன் ; 'தண்ணென் கதிர் வரலாற் பொங்கும் கடல்.'

2. பசுங்கதிர்-இளமையான கிரணங்கள் ; முன்னிரவின் கிரணங்கள். ஆசுஉற - குற்றம் அமைய. அளாயது - கலந்ததானது ; எழுவாய். காசுஉறு - பொன் முதலியவற்றைப் பதித்த. கடி - காவல். தூசு உறை - ஆடையாகிய மேற்போர்வை. இலங்கைக்கு வெள்ளிய மேற்போர்வை போர்த்தாற்போல் தோன்றிற்று.

3. இகழ்வு அரும் - பழிப்பற்ற. பகழி - அம்பு. இராமனது அம்புக்கு அநுமன் உவமை. அன்னவன் - இராமனுடைய. இராமனது புகழ் பரந்ததுக்கு நிலா பரந்தது உவமை.

V. சிறு நூல்கள்

ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடுத்த செய்யுளின் முதலில் (ஆதியில்) வருவது அந்தாதி எனப்படும். அபிராமியின் விஷயமாகப் பாடிய அந்தாதி அபிராமி அந்தாதி எனப்படும். அபிராமி என்பது திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள தேவியின் பெயர். இந்நூலை இயற்றியவர் அபிராம பட்டர் என்பவர். இவர் 250 ஆண்டுகட்கு முன்னிருந்தவர்.

1. அபிராமி அந்தாதி

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
கரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் ருலபி ராமி சமயநன்றே. (1)

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாழகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. (2)

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. (3)

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. (4)

குறிப்புரை

1. புளகம் - மயிர் பொடிப்பு. அபிராமியை நினைக்குங்கால் அடியவர் அன்பினுல் பித்தராவர்.

2. பரம் - பாரம். கோமளமே - மெல்லியளே.

3. அல்லி - அக இதழ்கள். யாமள வல்லி - யாமள ஆகமம் என்ற நூலினுல் புகழப்பட்ட கொடி. ஏதம் - குற்றம். சாமளம் - நீலநிறம். ஆதி பர் = அதிபர் : நீட்டல் விகாரம்.

4. அங்கி - அக்கினி. புராரி - புரங்களை அழித்த சிவபெருமான் : அரி - பகைவன். முராரி - முரன் என்னும் அசுரனுக்குப் பகைவன் : திருமால். காதி - கொன்று.

2. மதுரைக் கலம்பகம்

பலவகைக் கருத்துக்கள், பலவகைக் கவிகள் கதம்பமாக விரவிவரக் கடவுளர் பேரிலும், பெரியோர் பேரிலும், அரசர் பேரிலும் அந்தாதித் தொடையமையப் பாடும் நூல் கலம்பகம் எனப்படும். கலம்பகத்தில் கார், தவம், புயவகுப்பு, அம்மானை, ஊசல், சித்து, சம்பிரதம் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் பயின்றுவரும் என்பர் பெரியோர். மதுரைக் கலம்பகம் என்ற இந்நூல் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் விஷயமாகப் பாடப்பெற்றது. இதனை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள்.

அம்மானை

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனுர்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
ஆனாலுங் காயமிலை யையரவர்க் கம்மானை. (1)

மறம்

கருமுகத்து நிமிர்குடுமி மாடமலி கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரினிடை யாற்ரு
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மறக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தையது சொன்னுய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்தும்
தேர்ந்தறிக் கொண்டுவா சிகையினுெடுஞ் சென்றே. (2)

சம்பிரதம்

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
றைத்துடன்வி டுத்தி டுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவன்
இத்தனையும் வித்தை யலவாற்

றுட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குண மெட்டி ளெடுமா
சிட்டர்கடு தித்திடும கத்துவம னைத்துமொரு
செப்பினுள டக்கி டுவனே. (3)

குறிப்புரை

1. மூன்று பெண்கள் அம்மானை என்னும் விளையாட்டை ஆடும்போது ஒருத்தி ஒரு செய்தியைச் சொல்லுவாள்; இரண்டாமவள் அச்செய்தி ஐயம் தரக்கூடியதாக இருக்கிறதே என்று கொண்டு ஒரு வினுப் போடுவாள்; மூன்றுமவள் அந்த வினுவுக்குச் சமத்காரமாகப் பதில் கூறுவாள் ஒவ்வொருவரின் கூற்றின் முடிவிலும் அம்மானை என்ற சொல் பயின்றுவரும். இங்ஙனம் எழுதப் பெறும் செய்யுள் அம்மானை எனப்படும்.

இருவர் - திருமாலும் பிரமனும். விருதுகட்டி - வெற்றிவீரர் தாம் என்பதற்காக முன்பு தமக்குக் கிடைத்த விருதுகளைக் கட்டி. அங்கம் வெட்டி - தன்னை எதிர்த்தானது உடலை வெட்டி. இரு கூறு என்றது, உமையவள் பாதியையும் தாம் பாதியுமாக இருப்பதை. காயம் இலை - காயங்கள் இல்லை; உடல் இல்லை; உருவமற்றவர்.

2. அரசன் ஒருவன் மறவர் குடியிற்பிறந்த பெண்ணைத் தனக்கு மணம் பேசி வருமாறு அனுப்பிய தூதுவனிடம் அந்த மறக்குடியிற் பிறந்தவர் அவனுடைய அரசனைப் பழித்தல் மறம் எனப்படும்.

தருமுகத்து - கற்பகத் தருவினிடம். குடுமி - சிகரங்கள். கூடல் - மதுரை. மருமுகத்த - வாசனையைத் தன்னிடம் கொண்ட. நெறிக்குழல் - நெறிந்த கூந்தலையுடைய. மறக்கொடி - மறவரின் பெண். திருமுகம் - ஓலை; முகம். திருமுடியில் எழுத்து - தலையெழுத்து. உன் மன்னனுக்குத் தலையெழுத்துச் சரியில்லை போலும்' என்பது கருத்து.

3. இந்திர மகேந்திர ஜாலம் வல்லவர் அந்த வித்தையைக் கூறுவது போல் சிலேடைப் பொருளில் செய்யும் கவி சம்பிரதம் எனப்படும்.

மட்டு அறு - அளவற்ற. எட்டுவரை - எட்டு மலைகளை; எள்ளையும் துவரையையும். கடலை - சமுத்திரத்தை; கடலை என்னும் தானியத்தை. குணம் எட்டு - தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல் முதலியன. செப்பு - ஒரு பாத்திரம்; சொல்.

3. தென்றல் விடு தூது

பத்மகிரி என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை மணக்க விரும்பிய ஒரு மாது அவரிடம் தென்றற்காற்றைத் தூதாக அனுப்பும் செய்தியை விவரிக்கும் நூல் பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது எனப்படும். இதன் ஆசிரியர் பல பட்டடைச் சொக்கநாதப் புலவர். தமிழிலுள்ள பலவகைச் சிறு நூல்களுள் தூதும் ஒன்று. தூதாக அனுப்பப்படும் தென்றலின் புகழ்ச்சி பின் வருவது.

தென்றல் உலாவரும் சிறப்பு

1. பூங்கொத்து மேய்ந்த புதிய மணவறையில்
ஆங்கொத்து நீவாழ் அரண்மனையை—நீங்கித்தான்
2. பந்தியம் போது பசுந்தேனுன் மேலிறைக்க
அந்தியப் போதுவிளை யாடுவாய்—சந்தனத்தின்
3. மட்டுலாம் சோலைதனில் மாலையெனும் மேகவன்னப்
பட்டுமேல் கட்டி பலதூங்கக்—கட்டவிழும்
4. அம்பரு வாவி அலர்த்தூளெல் லாமடங்கக்
கொம்பிருல் சிந்திக் குளிர்விக்கப்—பம்பு
5. மயிலினங்கள் கைகட்டி வாய்பொத்தி நிற்கக்
குயிலினங்கள் கட்டியங்கள் கூறப்—பயிலும்
6. பழுதிலளி சங்கீதம் பாடயிள வேனில்
பொழுது மெலநடந்து போவாய்.

குறிப்புரை

1. பூம் கொத்து மேய்ந்த - பூங்கொத்துகளைக் கூரையாக வேயப்பட்ட. அரண்மனை - பூப்பந்தல். ஆங்கு ; அசை. ஒத்து - மனமுவந்து.

2. பந்தி அப்போது - வரிசையான மலர்களில்.

3. மட்டு - நறுமணம். மேகவன்னப்பட்டு - மேகங்களாகிய அழகிய பட்டாடை. தூங்க - தொங்க.

3-4. கட்டு அவிழும் அம்பு - அரும்புகள் விரிகின்ற மலர்கள். மலர்கள் மன்மதனுக்குப் பாணங்களாக இருப்பதனால் அம்பு என்றார். அரு - நீங்காத. வாவிகள் மன்மதனுடைய அம்புகளை வைக்கும் தூணி. கொம்பிருல் - மரக்கொம்புகளிலுள்ள தேன். பம்பு - எழுகின்ற.

5. இளவேனிற்காலமாதல் பற்றி மயில்கள் வாளாவிருந்தன. கட்டியங்கள் கூற - தென்றலின் புகழை எடுத்துக் கூற. பயிலும் - சோலையில் நடமாடும்.

6. அளி - வண்டுகள்.

4. விக்கிரமசோழ னுலா

ஒரு தலைவன் வீதியிற் பவனி வருவதைக் கண்டு ஏழு பருவத்து மங்கையர் தனித்தனியே அவனைக் கண்ணுற்றுத் தம் மனக்கோளைக் கூறுவது போல் செய்யும் சிறுநூல் உலா எனப்படும். கடவுளர் பேரிலும், அரசர், பிரபுக்கள் பேரிலும் உலாப் பிரபந்தங்கள் பல உள்ளன.

விக்கிரம சோழன்மீது புலவர் பெருமானுகிய ஒட்டக்கூத்தர் பாடியது இது.

விக்கிரமன் கோலங் கொள்ளல்

—பொய்யாத

1. பொன்னிப் புதுமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து—முன்னை

2. மறைக் கொழுந்தை வெள்ளி மலைக் கொழுந்தை மௌலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக்களத்துச்

3. செக்கர் பனிவிசும்பைத் தெய்வத் தனிச் சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த

4. தானத்தொழில் முடித்துச் சாத்தும் தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்

5. சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழும் மகரக் குழைதயங்க—வாழும்

6. தடமலைப் பார்மடந்தை தன்னுடனே தோளில்
சுடர்மணிக் கேயூரம் சூழப்—படரும்

7. தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகம் கையில் வயங்கப்—பிணிப்பின்

8. அருங்கொற்ற மாக்கு மணங்கி னுடனே
மருங்கில் திருவுடைவாள் வாய்ப்பப்—பொருந்திய

9. அண்ணற் படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைந்து.

குறிப்புரை

1. பொய்யாத பொன்னி - வெள்ளப் பெருக்குத் தவருத காவிரி நதி. பூசுரர்—அந்தணர். கன்னி - இளமை. அறுகு - அறுகம் புல். காப்பு - இரட்சையை. முன்னே - பழமையான.

2. மறைக்கொழுந்து - வேதங்களுக்குக் கொழுந்து போன்ற சிவ பெருமான். மௌலி - முடியில். பிறைக் கொழுந்து - இளம்பிறையை. கறைக்களம் - நஞ்சின் கறை படர்ந்த கழுத்து.

3. செக்கர் பனி விசும்பு - செவ்வானம்; சிவபெருமான் மேனிக்கு உருவகம்.

4. தானத் தொழில் - பலருக்குத் தானங்கள் வழங்கும் தொழிலை. சாத்தும் - அணியும். மானக்கலன்கள் - பெருமை பொருந்திய அணிகள். தேன் - வண்டுகள்.

5. சொல்மாமகள் - கலைமகள். தாழும் - தொங்குகின்ற. குழை - காதணி. விக்கிரமன் முகத்தில் கலைமகளின் தேசு அமைந்துள்ளது; அதனுடன் குழையும் விளங்க.

6. தோளில் புவிமடந்தையை அவன் தாங்கி நிற்கிருன். கேயூரம்- தோளில் அணியும் அணி விசேடம்.

7. தணிப்பில் - குறைவற்ற. கீர்த்தித்தையல் - புகழ்மாது. மணிக் கடகம் - மணிகள் இழைத்த கங்கணம் என்ற அணி. வயங்க - விளங்க. பிணிப்பின் - ஆசையினுல்.

8. கொற்றமாக்கும் அணங்கு - வெற்றிக்குரிய தெய்வம். மருங்கில் - இடையில்.

9. அண்ணல் படிவத்து - சிறந்த தன் உடலில். பேரணி - பெரிய ஆபரணங்களை. அளவில் வண்ணத்து வனப்பு - அளவற்ற நிறங்களொடு கூடிய அழகுகளை.

VI. பல் சுவை

1. தமிழரின் வீரம்

புறப் பொருளைப் பற்றிக் கூறும் வெண்பாக்களின் வரிசை என்பது புறப்பொருள் வெண்பா மாலை என்பதன் பொருளாகும். இது பழங்காலப் போர் முறை முதலியவற்றை அழகாக வருணிக்கும் இலக்கண நூல். உதாரணமாகக் காட்டப்படும் வெண்பாக்கள் மிகச் சுவையுடையன. இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார் என்பவர். இவர் சேரர் குடியிற் பிறந்தவர். இங்கே பழந்தமிழரின் வீரத்தைப் புலப்படுத்தும் மூன்று வெண்பாக்கள் தரப்படுகின்றன.

வஞ்சினம்

இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை
வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின்—என்றும்
அரணவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்
முரணவிய முன்முன் மொழிந்து. (1)

அஞ்சாச் செயல்

கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கட் பிணத்திடை நின்றான்—நடுங்கமருள்
ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
வாள்வெள்ளம் தன்மேல் வர. (2)

வீரத்தாய்

கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு. (3)

குறிப்புரை

1. பகலோன் இறவாமுன் - சூரியன் மறைவதற்கு முன். ஒன்னாரை - பகைவரை. வென்றவர் போர்க்களத்தைத் தம்முடையதாகப் பற்றிக் கொள்வது பழங்கால வழக்கு. அரண் அவிய - பாதுகாவல் சிதைய. முரண் அவிய - என் வலிமை கெட. முன்முன் மொழிந்து - அந்தப் பகைவரைத் துதித்து.

2. கனல் விழியா - நெருப்புப் பொறிகளைத் தோற்றச் செய்து. சீறி - கோபித்து நடுங்கு அமருள். ஆள்வெள்ளம் - படையாட்களின் கூட்டம். போகவும் - களத்தைவிட்டு நீங்கவும்.

3. கல் நின்ருன் - இறந்துபட்டு இப்பொழுது வீரக் கல்லாக இருக்கின்ருன். போரில் வீரங்காட்டி இறந்துபோன சிறந்த வீரருக்குக் கல்லே நட்டு அதை வழிபடுதல் பண்டைக்கால மரபு. களப்பட்டான் - போர்க் களத்தில் இறந்து போனுன். என்னையர் - என் தமையன்மார். முன் நின்று - பகைவர்களின் முன்னே அஞ்சாது நின்று. மொய் - வலிமை. கணை உதைப்ப - அம்புகள் உடலின் நாற்புறமும் தைக்க. காவலன் - அரசன். எய் - முள்ளம்பன்றி. உடல் முழுவதும் அம்புகள் தைத்த வீர மகனுக்கு முள்ளம்பன்றி உவமை.

2. புதுமைப் பெண்

சி. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றியும் அவருடைய கவிகளைப் பற்றியும் முன் வகுப்புக்களில் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இங்கே அவர் புதுமைப் பெண் இந்நாளில் எங்ஙனம் வாழவேண்டும் என்பதை விவரிக்கிருர்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
    ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
    யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
    தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
    வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம். (1)

சாத்தி ரங்கள் பலபல கற்பாம்
    சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் ஒழிப்பராம்
    மூடக் கட்டுகள் யாவும் தவிர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
    கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி யாண்மக்கள் போற்றிட வாழ்வராம்
    இளைய நங்கையி னெண்ணங்கள் கேட்டிரோ. (2)

குறிப்புரை

1. இலகு சீர் - விளங்குகின்ற பெருமை.

2. மூத்த - பழங்கால. காத்து - பாதுகாத்து. செய்கை அனைத்தையும் காத்து.

உரைநடைப் பகுதி

1. பண்டைக் காலத்துப் பள்ளிக்கூடங்கள்

(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

குருகுலங்கள்

இக்காலத்தில் பள்ளிக்கூடங்களைப் பற்றியும், பாடம் சொல்லும் முறைகளைப் பற்றியும் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் ஆங்கிலம் முதலிய மொழிகளில் இருக்கின்றன. கால நிலை மாறுபாடு அடைய அடைய ஜனங்களுடைய பழக்கங்களும் மாறுதலடைகின்றன. இக்காலத்துப் பள்ளிக்கூடங்களில் இக்கால வாழ்க்கைக் கேற்ற முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன. பழைய காலத்துப் பாடசாலைகளில் வழங்கி வந்த முறைகளோ வேறுவகை. அக்காலத்திலிருந்த பள்ளிக்கூடங்களின் அமைப்பும் ஆசிரியர்களின் நிலைமையும் மாணாக்கர்களின் இயல்பும் வேறு. எனக்குத் தெரிந்த வரையில் அவற்றைப் பற்றிச் சொல்லுகிறேன்.

நம்முடைய நாட்டில் மிகவும் பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள். குரு எழுந்தருளியுள்ள கோயில் என்பது அதன் பொருள். இப்படியே தெய்வம் எழுந்தருளிய கோயிலுக்கு, ‘ தேவகுலம் ’ என்னும் பெயர் வழங்குகின்றது;

“ ஊரானோர் தேவகுலம் ”

என்பது ஒரு பழைய வாக்கியம். ஊருக்கு ஊர் கோயிலும் இருந்தது.

“ கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் ” என்றும்,

“ திருக்கோயிலில்லாத திருவில் ஊரும் ”

என்றும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். எங்ஙனம் தேவகுலம் இல்லாத ஊர் வாழ்வதற்கு ஏற்றதன்றென்று கருதப்பட்டதோ, அங்ஙனமே குருகுலமில்லாத ஊரும் நன்மையில்லாததென்று கருதப்பட்டது.

நல்லுரைக்கோவை முதற்பாகத்திலிருந்து உரியவரின் அநுமதியுடன் கொள்ளப்பெற்றது.

" கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல "

என்று திரிகடுகம் கூறுகின்றது. இதில் கணக்காயர் இல்லாத ஊர் நன்மை பயவாதென்பது காணப்படும்.

கணக்காயர்

கணக்காயரென்பது உபாத்தியாயருக்கு ஒரு பெயர். கணக்கு என்பது நூலின் பெயர். கணக்காய ரென்றால் பல நூற்றெகுதியை யுடையவரென்பது பொருள். அவர்கள் பல நூல்களைத் தொகுத்துப் பெட்டிகளிற் சேமித்து வைப்பார்கள் அல்லர்; பல நூல்களையும் கற்று ஆய்ந்து தம் மனத்துள்ளே தொகுத்து வைப்பவர்கள். அவர்களிடம் பாடங் கேட்பவர்கள் புதிய செய்திகளை அறிந்தறிந்து, " இவர்களுக்குத் தெரிந்த விஷயங்களுக்கு ஒரு வரம்பில்லை போலும்!" என்று வியப்பார்கள். அதனாலேதான் உத்தம ஆசிரியர்களுக்கு மலையை உவமை கூறி அம்மலை இன்ன தன்மையினால் ஆசிரியர்களுக்கு உவமையாவதென்பதை விரித்துக் கூறும் பொழுது, " அளக்கலாகா அளவும் பொருளும் " உடையதென்பது பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். யார் யாருக்கு எந்த எந்த விஷயம் தெரிய வேண்டுமோ, அவ்வவர்களுக்கு அவ்வவ் விஷயங்களைச் செவ்விபெறக் கற்பிக்கும் திறமை அவர்களுக்கு இருந்தது. ஆதலின் அவர்கள் ஊரில் இல்லையெனின் ஊருக்கு மங்கலமேஇல்லை யென்பது நம் முன்னோர்களுடைய கொள்கை. " மங்கலமாகி யின்றியமையாது, யாவரும் மகிழ்ந்து மேற்கொள " விளங்கும் மலரை அத்தகைய ஆசிரியர்களுக்கு உவமை கூறியிருக்கிறார்கள். அவர்களை மாணாக்கர்கள் தெய்வமாகவே எண்ணி வழிபட்டார்கள்.

" எழுத்தறிவித்தவன் இறைவனாகும் "

என்று வெற்றி வேற்கை கூறுகின்றது. அருச்சுனன் தன் ஆசிரியராகிய துரோணரை,

" யாதுமொன் றறியா என்னை இவனலா திலையென் றிந்த
மேதினி மதிக்கு மாறு வின்முதற் படைகள் யாவும்
தீதறத் தந்த உண்மைத் தெய்வம் நீ "

என்று வாயார வாழ்த்துகின்றான்.

தமிழ்ச் சுவடிகளை எழுதும் பிள்ளைகள் " நன்றாக, குரு வாழ்க, குருவே துணை " என்று எழுதுவது பழைய வழக்கம். இதனால் ஆசிரியர்களிடத்து அக்காலத்தினருக்கு இருந்த மதிப்பு விளங்கும்.

தமிழ் நாட்டில் இருந்த பழைய ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி மிக உடையவர்கள். வடமொழி, தெலுங்கு முதலிய வேறு பாஷைகளிலும் அவர்களுக்கு ஓரளவு பயிற்சி இருந்தது. கணக்கு, சோதிடம், வைத்தியம், சங்கீதம் முதலியவற்றிலும் பழக்கம் இருக்கும். இவ்வளவு துறைகளிலும் பரந்த அறிவு வாய்ந்த அவர்களிடம் படிக்கும் பிள்ளைகளும் அப்படியே பல வழியிலும் நல்ஞானத்தை அடைவார்களென்பதில் என்ன தடை! பல இடங்களில் உபாத்தியாயரே வைத்தியராகவும் சோதிடராகவும் இருப்பதுண்டு.

தம்முடைய வாழ்வு முழுவதும் பிறர் நன்மைக்கு உழைக்கும் இயல்புடையவர்களாக அவ்வாசிரியர்கள் இருந்தார்கள். சங்க காலத்துப் புலவர்களில் பலர் உபாத்தியாயர்களாக இருந்து ஜீவனம் செய்தனர். மிக்க புகழ்பெற்ற புலவராகிய நக்கீரருடைய தந்தையார் ஒரு கணக்காயரே. அவருடைய பெயரைக் கூட ஏனையோர் கூறுவதில்லை. அவ்வளவு மதிப்பு அவருக்கு இருந்தது. இப்பொழுதும் அவர் பெயர் " மதுரைக் கணக்காயர் " என்று நமக்குத் தெரியவருகிறதே யல்லாமல் அவரது இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை. கணக்காயன் தத்தன் என்ற சங்கப் புலவர் ஒருவர் இருந்தார். அவரும் பள்ளிக்கூட உபாத்தியாயரே.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள்

கிராமந்தோறும் இருந்த பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களென்று நாம் சொல்லுகிறோம். தெற்றிப் பாட

சாலைகளென்றும் சொல்லுவதுண்டு. ஊர் தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியே மேடை யொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதனை மன்றம் என்றும், அம்பலமென்றும் கூறுவர். ஊருக்குப் பொதுவான விஷயங்கள் அந்த இடங்களில் கூடி யோசிக்கப்படும். சங்கீத வித்வான்கள் முதலியவர்கள் வந்தால் அங்கே தங்கியிருப்பார்கள். அங்கே வெயிலுக்கும் மழைக்கும் தங்குவதற்கேற்ற இடங்களும் இருக்கும். அவ்வம்பலத்திலுள்ள தெற்றிகளிலே மரநிழலில் முற்காலத்துப் பள்ளிக்கூடங்கள் நடை பெற்றிருக்கலாம் என எண்ணுகிறேன்.

மன்றங்கள்

குறுந்தொகை என்னும் பழைய சங்கநூலில்,

"அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ"

என்பது காணப்படுகின்றது. ஒரு பாணனைப் பார்த்து ஒரு பெண் சொல்வது இது. பாணனென்பவன் சங்கீதத்தால் ஜீவனம் செய்பவன். அவனை நோக்கி அம்மங்கை, "இவன் ஓர் இளைய மாணாக்கன். தன் ஊரிலுள்ள மன்றத்தில் எப்படியிருப்பானோ?" என்று கூறுகின்றாள். இதனால் மாணாக்கனாகிய அவன் மன்றில் பயில்வது ஒருவாறு பெறப்படும். மன்றென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே; அதுவே பிறகு திண்ணைப்பள்ளிக்கூடமாக மாறியது என்று தோற்றுகிறது.

இயற்கையாக உள்ள மரத்தடியிலும், வனங்களிலும் பழைய காலத்து மாணாக்கர்கள் கல்விகற்றனர். இப்பொழுது பள்ளிக்கூடம் இருக்குமிடத்தில் செடிகொடிகளை வருவித்து வனம் உண்டாக்குகிறோம். நாடகத்தில் வனங்களைத் திரையில் எழுதித் தொங்கவிடுவதுபோலப் பள்ளிக்கூடங்களில் சட்டியிலும் வாயில்களிலும் செடிகொடிகளை வளர்க்கிறோம்.

பள்ளிகள்

மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களிற் பாட சாலைகள் உண்டாயின. பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர்.

"அந்தணர் பள்ளியும் அறவோர் சாலையும்"

என்று பொதுவாகத் தவம்புரிவோர் இடங்களுக்குப் பள்ளி யென்னும் பெயர் வழங்கியதும் உண்டு. அங்கே நூல்களைப் படிப்பதும், படிப்பிப்பதுமாகிய செயல்கள் மிகுதியாக நடந் தன. பாடசாலைகளும் மடங்களும் வேறுபாடின்றி ஒன் ருகவே கருதப்பட்டமையின், பள்ளியென்னும் பெயர் இரண் டிற்கும் பொதுவாக வழங்கியதென்று தோன்றுகின்றது. பழைய சிலாசாசனங்களைப் பார்க்கும்போது மடங்களில் இன்ன இன்ன நூல்களைப் படிக்கும்பொருட்டு மாணுக்கர் இருந்தார்களென்ற செய்தி தெரியவருகிறது. இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் ரூபாவதாரம் என்ற வியாகர ணத்தைத் திருவாவடுதுறையிலிருந்த பழைய மடமொன்றில் மாணுக்கர்கள் படித்துவந்தார்களென்றும், அதற்காகத் தனி நிலங்கள் விடப்பட்டிருந்தனவென்றும் ஒரு சாசனத்தினுல் தெரிகிறது. இப்படியே வேத பாடசாலைகளும் ஆகம பாட சாலைகளும் பல மடங்களில் இருந்தன. தொண்டை நாட்டில் திருமுக்கூடல் என்னும் இடத்தில் வைத்திய நூல்களைக் கற்பிக்கும் பள்ளிக்கூடம் ஒன்று இருந்ததென்பதும், அங்கே பல மாணுக்கர்கள் இருந்து படித்துவந்தார்கள் என்பதும் சிலாசாசன வாயிலாக வெளியாகின்றன.

தமிழ்ப் பள்ளிக்கூடங்கள்

தமிழ்ப் பள்ளிக்கூடங்களைப்பற்றி அதிகமாகச் சாச னங்கள் கூருவிட்டாலும் பரம்பரையாகவந்த வழக்கத்தைக் கொண்டு ஆராய்ந்தால் ஊர்தோறும் அவை யிருந்தன் என்பது தெரியவரும். ஒருவரிடத்தில் பல மாணுக்கர்கள் சேர்ந்து பாடம் கேட்கும் வழக்கம் தொன்றுதொட்டே இந் நாட்டில் இருந்து வந்தது. அகத்தியருடைய மாணுக்கர்கள்

பன்னிருவரென்று நாமறிகிறோம். அவர்கள் பன்னிருவரும் ஒருசாலை மாணக்கர்கள். சாலை என்பது பள்ளிக்கூடம். அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் ஓர் உபாத்தியாயரிடத்தில் படித்தவர்கள். அகத்தியரிடத்தில் இந்த பன்னிருவரே படித்தார்கள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. நூற்றுக்கணக்கானவர்கள் படித்து இருப்பார்கள்; அவர்களுள் பெரும்புகழ் பெற்றவர்கள் பன்னிருவரென்றுதான் கொள்ள வேண்டும். துரோணரிடம் நூற்றைவர் கற்றுக்கொள்ள வில்லையா?

ஆசிரியர்களின் தொகுதி

உபாத்தியாயர்கள், பிள்ளைகளின் வாழ்க்கைக்கு அடிப்படையான விஷயங்களை நன்கு போதிக்கும் கடமையை மேற்கொண்டிருந்தார்கள். வெறும் படிப்போடுமட்டும் அவர்கள் நின்று விடவில்லை; மாணக்கர்களுடைய ஒழுக்கத்தையும் அவர்கள் வரம்புசெய்து திருத்தி வந்தார்கள். அதற்கேற்ற தகுதியும் அவர்களுக்கு இருந்தது. எல்லாரும் உபாத்தியாயராக இருந்துவிட முடியாது. பழம்பிறப்பிலே செய்த புண்ணியவசத்தால் பேரறிவும் நல்லொழுக்கமும் தெய்விக அருளும் வாய்ந்தவர்களே ஆசிரியர்களாக இருக்கத் தகுதியுடையவர்கள். அவர்களே உலகத்தைத் திருத்த முடியும். அரசர்களெல்லாரும் அவர்களுக்கு அஞ்சி ஒழுகினர்கள்.

செல்வத்துக்கு உலகில் பெருமதிப்பு உண்டென்பது உண்மை; ஆயினும் கல்விச் செல்வத்தை உலகுக்கு வழங்கி வரும் ஆசிரியர்கள் முன்னிலையில் அந்த செல்வத்துக்கு மதிப்பேயில்லை. ஆசிரியனுக்கு முன்பு பணியாதது ஒன்றும் இல்லை. அவர்கள் செல்வத்தைப் பணியச் செய்வார்கள்; வீரத்தையும் தாழச் செய்வார்கள்.

சீவகன்

சீவகன் கல்வி கற்றதைக் கூறவந்த திருத்தக்கதேவர், 'பூமகள் புலம்பி வைக'' அவன் கற்றான் என்கின்றார். அங்கே நச்சினார்க்கினியர், 'செல்வச் செருக்கின்றிக் கற்

ருன்' என்று உரை எழுதுகின்ருர். கல்வி கற்கும்போது செல்வம் பணிந்து நிற்கின்றது.

தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்த காலத்தில் அதே கணத்தில் பகைவனைக் கொன்று வெற்றிபெற வேண்டுமென்று சீவகன் வீர உணர்ச்சி கொள்ளுகிருன். அவனுடைய ஆசிரியர், "இன்னும் ஒரு வருஷம் பொறு" என்று கூறுகின்ருர். அவ்வளவு வீரமும் ஆசிரியருக்கு முன் அடங்கி ஏவல் கேட்கின்றது.

அருச்சுனன்

மகா வீரனுகிய அருச்சுனன் விராட நகரத்தில் பசுக்களை மீட்கப் போர்முனையில் நிற்கிருன். எதிரே துரோணர் வந்து நிற்கிருர். தன்னுடைய பகைவரோடு பகைவராக வந்து நின்ற அவரை நோக்கவே அருச்சுனனுடைய கைகள் வில்லையும் அம்பையும் நழுவவிட்டுக் குவிகின்றன.

"அந்தணர் அரசே! உம்முடைய அருளால் நாங்கள் வனவாசம் செய்து முடித்து வந்தோம்; சௌகரியமாக இருக்கிருேம்; நீர் அருள் கூர்ந்து கற்பித்தமையால் நான் பெரிய வில் வீரனுனேன். நீரே எனக்குக் கண்கண்ட தெய்வம். உம்மை எதிர்ப்பது மகா பாதகம்" என்று அவன் பணிந்து கூறுகின்ருன். அவனுடைய வீரம் ஆசிரியரின் கண் முன்பு அடங்கி ஒடுங்கிப் பணிகிறது. "இல்லை அப்பா! நிவாத கவச காலகேயர்களை நீ கொன்று வென்றதாக நான் கேள்வியுற்றேன். உன்னுடைய வீரத்தை நான் நேரிலே கண்டு களிக்கவேண்டும். செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கும்பொருட்டே இங்கு நிற்கின்றேன். நீ அஞ்சாமற் போர் புரிவாயாக" என்று ஆசிரியர் கட்டளையிட்ட பிறகே அவன் வில்லை எடுக்கின்ருன்.

இவ்வாறு உலகத்தில் எல்லாவிதமான ஆற்றல்களும் அடங்கி வழிபாடு புரியும் உயர்வு ஆசிரியர்களுக்கு இருந்ததென்ருல், அவர்களுடைய தகுதி எவ்வளவு சிறப்பாக இருக்க வேண்டும்!

ஒருசாலை மாணுக்கர்கள்

குரு குலத்தில் பிள்ளைகள் தங்கள் உயர் நிலையை மறந்து பழகி வந்தார்கள். சக்கரவர்த்தியும் பிக்ஷுகளும் சமமாக இருந்தனர். அவர்களுக்குள் வேறுபாடுகள் உண்டாகவில்லை. பெரிய அரச குமாரனுகிய துருபதனும் ஏழைப் பிராமண ராகிய துரோணரும் பாடசாலையில் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகினுர்கள் என்பது பாரதத்திற் கண்ட கதை. அங்ஙனம் பழகிய பழக்கம் வாழ்நாள் முழுவதும் மாருமல் இருக்கவேண்டும் ; துருபதன் அங்ஙனம் இராமையால் அதற் கேற்ற துன்பத்தை அனுபவித்தான்.

பெரிய அரசனுகிய கண்ணபிரானும் வறிய அந்தண ராகிய குசேலரும் ஒருசாலை மாணுக்கர்கள். பாடசாலைப் பழக்கம் பின்னர் வாழ்நாள் முழுவதும் அவர்களிடம் இருந் ததைக் குசேலோபாக்கியானம் அறிவிக்கின்றது.

என்னுடைய தமிழாசிரியரும் மகா வித்துவானுமாகிய ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இளம்பிராயத்தில் படித்துவருகையில் அவர்களோடு ஒருவர் படித்துவந்தார். அவர் பிள்ளையவர்கள் படித்துவந்த ஒவ்வொரு நூலையும் தவருமல் வாங்கிச் சென்று படிப்பார். ஆனுல் மறுகணமே அவற்றை மறந்துவிடுவார். நெடுங்காலத்துக்குப் பிறகு பிள்ளையவர்கள் திருவாவடுதுறை யாதீன வித்துவானுக இருந்து தமிழ்நாடெங்கும் கவிஞர் தலைவரென்று பெயர் பெற்று விளங்கிய காலத்தில், ஒருநாள் மாணுக்கர்களுடன் ஒரு சாலையில் நடந்து சென்ருர்கள். அக்கூட்டத்தில் நானும் இருந்தேன். அப்பொழுது முற்கூறிய மனிதர் எதிரில் அந்த வழியே வந்தார். அவருடைய தோற்றம் சர்வ சாதா ரணமாக இருந்தது. அவர் பிள்ளையவர்களைக் கண்டவுடன் “ மீனுக்ஷி சுந்தரம் ! சௌக்கியமா யிருக்கிருயா ? என்ருர். பிள்ளையவர்களை அவ்வாறு ஒருமையில் ஒருவர் அழைத்ததை அதுவரையில் நாங்கள் கேட்டறியாமையால் திடுக்கிட்டோம். அவ்விருவரும் ஒருவரையொருவர் மிக்க அன்போடு க்ஷேம சமாசாரங்களை விசாரித்துப் பேசிவிட்டுப் பிரிந்தார்கள். பிரிந்தபின் எங்களுடைய பார்வையினுல் நாங்கள் அவரைப்

பற்றி அறியும் விருப்பமுடையோமென்பதை அறிந்த பிள்ளையவர்கள் எங்களிடம் அவர் தம்முடன் இளமையில் படித்தவரென்று கூறினர்கள். அவ்விருவருக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமையிருந்தும் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்த பழக்கமிகுதியே மாரு அன்பை உண்டாக்கியதென்பதை உணர்ந்தோம்.

வினக்கள்

1. நல்லாசிரியர்களுக்கு மலையை உவமை கூறி இருப்பது எவ்வாறு பொருந்தும்?
2. தமிழ்ச் சுவடிகளை எழுதும் பிள்ளைகள் முதலில் என்னவென்று எழுதுவது வழக்கம்?
3. ஒரு பெண்ணைப் பார்த்து ஒரு மங்கை யாது கூறினுள்?
4. அகத்தியருடைய மாணுக்கர்களைப் பற்றிக் குறிப்பிடுக.
5. கல்வி கற்கும்போது பணிந்து நிற்கிறது என்பது எங்ஙனம்?
6. நம் நாட்டில் பள்ளிக்கூடங்கள் எங்ஙனம் வளர்ச்சியுற்றன?

கட்டுரைப் பயிற்சி

இக்காலத்துப் பள்ளிக்கூடங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. வாக்கியம் அமைக்க: அடைய அடைய, அடிப்படையான.
2. பழைய ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி மிகவுடையவர்கள். செயப்படுபொருளை எழுவாயாக்கி வாக்கியத்தை மாற்றுக.
3. அவர்களே உலகத்தைத் திருத்தமுடியும்.—திருத்தும் என்பதைப் பயனிலையாக்குக.
4. கணக்காயரில்லாத ஊர் நன்மை பயவாது.—உடன்பாட்டு வாக்கிய மாக்குக.

2. காந்தியடிகளின் தொண்டு

(டாக்டர் மு. வரதராசனுர், எம். ஏ., எம். ஓ. எல்.)

தேவையைக் குறைத்தல்

'யான்' என்னும் செருக்கை அறுத்தவர்களுக்கு 'எனது' என்னும் செருக்குத் தானே ஒழியும். உடம்பையே இறைவன் அருளிய கருவி என்று எண்ணும் மனம், உடைமையைப் பற்றி என்ன எண்ணும்? வீடும் வாசலும் நிலமும் புலமுமாக உள்ள சொத்தே ஆனாலும் காசும் நகையுமாக உள்ள செல்வமே ஆனாலும் எல்லாம் இறைவனுக்குரிய பொருள், உலகத்தார் எல்லார்க்கும் உரிய பொதுப் பொருள் என்ற எண்ணமே அந்த மனத்திற்குத் தோன்றும். காந்தியடிகள் அவ்வாறு கருத்தளவில் கருதியதோடு நிற்காமல், செயலளவிலே செய்து காட்டினர். தம் உடம்பை மக்களுக்குத் தொண்டு செய்யும் கருவி ஆக்கிக் காட்டினர்; தம்மிடம் உள்ளதை மக்களுக்கு நன்மை செய்யும் துறையில் செலவு செய்து விட்டுக் கையில் காசு அற்றவராய்த் திரிந்தார். மக்களிடமிருந்து பொதுத் தொண்டுக்காகத் திரட்டும் பொருளேயும் அவ்வப்போதே உரிய தொண்டர்களிடம் சேர்த்து விட்டார். மற்றச் செல்வர்களுக்கு வழி காட்ட நேர்ந்த போதும், "இந்தச் சொத்து உங்கள் தனி உரிமை என்று எண்ணுவது பாவம்; நீங்கள் இதை நல்வழியில் செலவு செய்யும் உரிமையை மட்டும் பெற்றிருக்கின்றீர்கள். ஆகையால், இது உங்களிடம் இருக்கும் வரையில் அறக்காப்பாளர் (தர்மகர்த்தா) என்று எண்ணி வாழவேண்டும். அதுவே கடமை" என்று அறிவுறுத்தினர். இந்த அறிவுரையை ஏற்று நடப்பவர் இல்லாமல் இருக்கலாம். அடிகளேப்போல் பண்பட்ட நெஞ்சம் உடையவர்கள் செல்வர்களாக வாழ்ந்தால் அப்படி வாழ முடியும். ஆனல், அவர்கள் செல்வர்களாக வாழ்வதே அருமை. ஆகையால், அவர் அறிவுறுத்தியதை உலகம் கேட்கவில்

காந்தி யண்ணல் என்ற நூலிலிருந்து ஆசிரியர் அநுமதியுடன் கொள்ளப்பெற்றது.

லேயே என்றால், உலகம் பணவேட்டைக்கு இறுதியாகியுள்ளது என்பதே அதிலிருந்து கற்கவேண்டிய உண்மை.

தேவையைக் குறைத்துக் கொள்வது மற்றொரு வழி யாகும். டால்ஸ்டாய் என்னும் சான்றோர் அறிவுறுத்திய அரிய பாடம் இது. "வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை" என்று திருவள்ளுவர் கூறியதும் இதனை உறுதிப் படுத்தும். காந்தியடிகள் தேவையைக் குறைத்துக் கொண்டு மனத்தைப் பண்படுத்தியவர். தேவையைப் பெருக்குவது மாயை என்பது அவர் கருத்து. 'எனது' என்று எண்ணத் தக்க பொருள்களாகச் சிலவற்றையே அவர் வைத்துக்கொண்டு வாழ்ந்தார். அவையும் நிலையாமை உடையவை, சில காலம் பயன்பட்டுப் பிரியக் கூடியவை, இறைவன் தந்தவை என்று தெளிந்திருந்தார்.

ஒப்புரவு

வங்காளத்தில் இந்து முஸ்லீம் கலகம் நடைபெற்றபோது, நவகாளிப் பகுதியில் சிறு சிறு கிராமங்களின் மூலை முடுக்கு களில் ஒரு மெல்லிய உருவம் ஓயாமல் திரிந்து தொண்டு ஆற் றியது. எண்பது ஆண்டுகளை நெருங்கும் முதுமையில் தனியே வாழ்வது - அதிலும் கலகம் நடைபெறும் பகுதிகளில் தன்னந் தனியாகத் திரிவது - உதவிக்கும் துணைக்கும் ஒரு வரும் இல்லாமல் திக்கற்றவராகத் தனியே கொம்பு ஊன்றிக் கொண்டு நடமாடுவது - மதவெறிக்கு இரையாகி அமைதி இழந்து கொதிக்கும் மக்களிடையே சமரச சன்மார்க்கத்தைப் பேசிக்கொண்டு அன்பைப் பரப்பவேண்டுமென்று தனியே இருப்பது கூடாது கூடாது என்று பலரும் எண்ணினார்கள். ஆனால் அந்த மெல்லிய உருவம் இத்தனைத் தடைகளையும் பொருட்படுத்தாமல், எள்ளளவும் அஞ்சுதல் கொள்ளாமல், கொம்பை ஊன்றிக்கொண்டு முன் பின் நடந்தறியாத மூலை முடுக்குகளில் நடமாடியது. இது உலக வரலாற்றில் கண் டறியாத புதுமையாகவே விளங்குகின்றது. இத்தகைய அஞ் சாமையும் உறுதியும் அண்ணலிடத்தில் காணப்பட்டதற்குக் காரணம் என்ன?

பிறர்க்கு உதவியாகும் முறையில் வாழும் ஒப்புரவு மிக உயர்ந்த பண்பாகும். அதைப்பற்றித் திருவள்ளுவர் கூறும் போது, ஒப்புரவால் வாழ்க்கையே கெடுமானாலும் அந்தக் கேட்டை அடைவதற்காக வாழ்க்கையையே விற்றுவிடலாம் என்கிறார்.

ஒப்புரவினால் வரும் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

ஒப்புரவு, வாழ்க்கையை விடச் சிறந்தது. அதனால் வாழ்க்கையில் எவ்வளவு அழிவு வந்தாலும் ஒப்புரவு காரணமாக ஏற்றுக்கொள்ளலாம் என்பதே அவர் கருத்து. நவகாளிப் பகுதியில் கிராமம் கிராமமாக, தெருத் தெருவாக, வீடுவீடாக, தடியை ஊன்றித் தனியே நடந்து சென்ற அண்ணலைப் பற்றி எல்லோரும் பெருங்கவலை கொண்டார்கள். மதவெறி கொண்டவர்கள் எந்த நேரத்திலேனும் தாக்கினால் தடுப்பவர் யார் என்று கவலைப்பட்டார்கள். போலீஸ் முதலிய காவல்களையோ, தற்காப்பு முறைகளையோ அவர் வெறுத்தார்; தடுத்தார்; புறக்கணித்தார். ஆனால் அவருடைய அரிய வாழ்க்கை எந்த நொடியில் என்ன ஆகுமோ என்று எல்லோரும் அஞ்சினார்கள். ஆயினும், தம் உயிரைப் பணயமாக வைத்தே அவர் அந்த ஒப்பற்ற தொண்டை மேற்கொண்டார். தெருவெல்லாம் உயிரை விலைகூறி விற்று அமைதியை வாங்க முனைந்த துணிவுதான் அவரிடம் அப்போது காணப்பட்டது.

அஞ்சாமை

தம் வாழ்வைப் பற்றி எள்ளளவும் பொருட்படுத்தாத பெருமை அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. 1930-ம் ஆண்டில் எரவாடா சிறையிலிருந்த போது, ஆசிரமத்தார்க்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்: " நாம் இந்த உடலோடு வாழும் காலம் மிகக் குறைந்த காலமே ஆகும். காலம் என்பதோ எல்லையற்று விரிந்து நிற்கும் ஒன்று. அதில் நம் ஆயுளாகிய நூறு ஆண்டுகள் எவ்வளவு சிறு பகுதி? நான் என்ற செருக்கை விட்டு, சமுதாயம்

என்னும் (மக்களாகிய) கடலில் கரைந்து விடுவோமானல், அதன் பெருமையில் நாமும் கலந்து விடுகின்றேம். நம்மை ஒரு பொருளாக மதித்து வாழ்வோமானல், அது கடவுளுக்கும் நமக்கும் இடையே ஒரு தடையாய் நிற்கின்றது. நம்மைப் பொருட்படுத்துவதை விடும்போது, நாம் கடவுளுடன் கலந்து நிற்கின்றேம். கடலில் கலந்த ஒரு துளித் தண்ணீருக்குக் கடலின் பெருமையும் கிட்டுகின்றது. ஆனல் தனித்து நிற்கும் நீர்த்துளி விரைவில் காய்ந்து விடுகின்றது" என்ற சொற்களில் அவர் உணர்ந்த உண்மை யுணர்வு தெளிவாகின்றது. மக்கள் கடலில் ஒரு துளி என்று உணர்ந்த உணர்வில் தன்னலம் தலைகாட்டுவதற்கு இடம் ஏது? தன் வாழ்வு, ஆயுள் இவற்றைப் பொருளாக மதிக்கும் மனம் ஏது?" கடவுளைக் காண்பதற்கு ஒரே வழி உள்ளது. அவரை அவருடைய படைப்பில் காண்பதே வழி. மக்கள் எல்லோருக்கும் சேவை செய்வதே கடவுளை அடையும் வழி. இமயமலைக் குகைகளில் கடவுளைக் கண்டு பிடிக்கலாம் என்று மனம் நம்புமானல், நான் உடனே அங்கும் புறப்படுவேன் என்று அவர் கூறியுளார். ஆகையால் அந்த வங்காளப் பகுதியில் வாழும் மக்களைக் கடவுளின் கோயில்கள் என்றும், அவர்களுக்குத் தொண்டு செய்வதே கடவுள் வழிபாடு என்றும், அதனல் வரும் இடையூறுகளுக்கு உயிரையே பலியாக வைப்பது கடமை என்றும் துணிந்த ஒருவரை உலகத்தில் தடுக்கக் கூடியவர் யார்? அச்சுறுத்தக் கூடியது எது? பொருள் வேட்கை மிகுந்தவர்கள் பழி புகழ் துன்பம் இன்பம் எதையும் பொருட்படுத்தாமல் இரவும் பகலும் அலைந்து வாழ்வையும் கெடுத்துக் கொள்வதைக் காணவில்லையா? பொருள் வேட்கையே மனத்தை இவ்வாறு தூண்டும் ஆற்றல் பெற்றிருந்தால், அறநெறியில் நின்று உண்மை உணர்ந்த ஒரு தூய வாழ்க்கையில் தொண்டு வேட்கை எவ்வளவு ஆற்றல் பெற்றதாக இருக்கும்? பொருள் மற்றென்றிற்குப் பயன்படும் கருவி. தொண்டு தானே பயனய் நின்று வாழ்க்கையில் இன்பம் பயக்க வல்லது' ஆகையால் மக்கள் தொண்டே கடவுள் வழிபாடு என்று தெளிந்துதுணிந்தவர்க்குள்ள அஞ்சாமை வேறு

எவரிடமும் காணமுடியாது. வீடு பேறு பற்றியும் கவலையில்லை; தொண்டே குறிக்கோள் என்று கொண்ட வாழ்க்கையில் காணும் வெற்றிக்கு நிகரான பெருமிதமும் வேறு எவரிடமும் காணமுடியாது. அண்ணலின் வாழ்க்கையில் வீரமும் அஞ்சாமையும் நிகரற்றுச் சிறந்து விளங்கியதால்தான் பகையும் குழப்பமும் கொலையும் மலிந்த கிராமங்களில் மூலை முடுக்குகளில் தனியே திரிந்துதொண்டு ஆற்றிய புதுமை அவரிடம் காணப்பட்டது. வரலாற்றிலே பல புதுமைகள் உண்டு. ஆயினும், இந்தப் புதுமைக்கு ஈடும் இல்லை; எடுப்பும் இல்லை.

துணிந்த தியாகம்

ஒருவர் ஒரு நாளில் ஒரு நாழிகை நேரம் தற்கொலைக்குத் துணிந்திருக்கலாம்; ஒரு நாள் முழுவதும் அந்த மனநிலை நீடிக்க முடியாது; பல நாள் நீடித்திருத்தலும் முடியாது. அது போலவே, ஒருவர் ஒருநாளில் ஒரு நாழிகை நேரம் உயிர்த் தியாகம் செய்யத் துணியலாம்; திடீரென்று அந்தத் துணிவு தோன்றி அரிய பெரிய செயல்களைச் செய்யுமாறு தூண்டிவிடலாம். ஆனால் எண்ணிப் பார்க்க நேரம் இருப்பின், அந்தத் துணிவு உடனே மாறிவிடும்; ஒரு செயலும் செய்யமுடியாத தயக்கம் அதனை அடுத்துப் பிறக்கும். ஆனால், பல நாள் எண்ணிப் பார்த்தபின், ஒரு துணிவுடன் உயிர்த்தியாகம் செய்ய முன் வருவதும், முன் வந்தபடியே கொள்கையையும், நோக்கத்தையும் மாற்றாமல் பல நாள் வரையில் அந்த நெறியில் துணிவோடு தொண்டாற்றி உயிரைப் பணயமாக வைத்து நாட்களைக் கழிப்பதும் மிக மிக அரியவை ஆகும். காந்தியடிகளின் வாழ்க்கையில் காணும் உயிர்த்தியாகம் அப்படிப்பட்ட பெருஞ்சிறப்பு உடையது. பல முறை உண்ணா நோன்பு கொண்டபோதெல்லாம் இந்த உயிர்த்தியாகம் இமயம்போல் ஓங்கி நின்றதைக் கண்டோம். ஆயினும், வங்காளக் கலகத்தில் குதித்துத் தனியே உலவி அந்த மெல்லிய தளர்ந்த உடலைத் தளராத தொண்டுக்குப் பயன்படுத்திய அஞ்சாமையில்தான் உலகம் அளந்து காணமுடியாத இமயத்தைக்

காண்கின்றோம்; வரலாறு கண்டறியாத பெருந்தியாகத்தைக் காண்கின்றோம்.

உணர்ச்சி வயப்பட்டபோது கோழையினிடமும் வீரம் பிறக்கும். ஆனால் உணர்ச்சி குறைந்து மறைந்த பின் அறிவோடு எண்ணும்போது வீரனிடமும் தயக்கம் தலைகாட்டும். தற்கொலை முயற்சியைப் பெரும்பாலும் கோழையினிடம் காண்கின்றோம். ஆனால் தமிழரின் உயிர்த்தியாக முறையாகிய வடக்கிருத்தலை ஒரு சில வீரரிடம் காண்பதும் அரிதாகவே உள்ளது. கோப்பெருஞ் சோழன் சேரமான் பெருஞ்சேரலாதன் போன்ற மிகச் சிலரே நாழிகை தோறும் உடல் வருந்தி வருந்தித் தேயத் தேய உண்ணு நோன்பு கிடந்து உயிரை விடமுடியும். கவலை மிகுந்த ஒருவனுடைய தற்கொலைக்கும் வீரனின் வடக்கிருத்தலுக்கும் எவ்வளவு வேறுபாடு உள்ளது! திடீரென்று ஒரு புரட்சி செய்து சிறைவாயிலில் புகும் நாட்டுத் தொண்டர் ஒருவருடைய செயலுக்கும் நெடுநாள் எண்ணி எண்ணி உண்மையை நாடி அன்பைப் போற்றி இடரெல்லாம் ஏற்றுத் தொண்டு செய்த காந்தியடிகளின் தியாகச் செயலுக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு உள்ளது!

தொண்டில் ஆர்வம்

காந்தியடிகளுக்குத் தொண்டிலே இருந்த ஆர்வம் அளவற்றது. ஒருமுறை இந்த நாட்டு உழவர்களின் குறைகளைப் பற்றி ஒரு கூட்டத்தில் பேசியபோது மூர்ச்சையானார்; நாக்குழறினார்; அங்கிருந்தவர் கண்ணீர் விடும் நிலைமை நேர்ந்தது. இங்கிலாந்தில் லங்காஷயரில் தொழுகை நடந்த கூட்டத்தில் அவர் பேசியபோது, "இந்திய ஏழைமக்களிடம் கடவுளைப் பற்றிப்பேச எனக்கு அஞ்சாமை இல்லை. அவர்களுக்குக் கஞ்சியே கடவுளாக இருக்கின்றது. அவர்களுக்கு வயிற்றுணவு தேடிக் கொடுக்காமல் கடவுளைப் பற்றி உபதேசம் செய்ய முடியவில்லை" என்று வறுமையில் வாடும் மக்களை நினைந்து உருக்கமாகப் பேசினார். எளிய வாழ்க்கையை நினைவூட்டித் தம் செயலாளர் பியாரிலாலுக்கு ஒரு

முறை அறிவுறை கூற நேர்ந்த போது, ஒரிஸா மாகாணத்தில் கண்ட மக்களின் வறுமையையும் அவர்களுடைய எலும்புரு வங்களையும் நினைந்து உருகினர். அந்த வறுமைக் காட்சி தம் நினைவை விட்டு நீங்கவில்லை என்றும், விழிப்பிலும் உறக்கத்திலும் தம்மை வருத்துவதாகவும், கடவுளின் நல்லரு ளில் உள்ள தம் நம்பிக்கை ஒன்றே இந்த துயரத்திற்கு இடையே தாம் சாகாமல் இருப்பதற்குக் காரணம் என்றும் மனம் கசிந்தார். அவ்வாறு உணர்த்தியபோது, அவருடைய குரல் கம்மியதாகவும் கண்களில் நீர் அரும்பியதாகவும் அந்தச் செயலாளர் எழுதியுள்ளார். இந்த அருளுணர்வே அவருக்குத் தொண்டு நெறியில் ஆர்வத்தைப் பெருக்கி வந்தது.

மற்ருேர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் உணர்வதே அறிவினல் ஆகும் பயன் என்று திருவள்ளுவர் தெளிவாக்கியுள்ளார்.

அறிவினன் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய் போல் போற்ருக் கடை.

இவ்வாறு பண்பட்ட சிறப்பு அடிகளிடம் இருந்த காரணத் தால், மற்றவர்களின் துன்பம் கண்டு கசிந்துருகும் நெஞ்சம் பெற்றிருந்தார். அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும், அதற்காக இடைவிடாமல் தொண்டு செய்யவேண்டும் என்ற ஆர்வமும் பெருகியிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். ஒரு நாள் காலையில் காந்தியடிகளும் இன்னும் சிலரும் புத்தகங்களுக்குத் துணி உறை போடுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். உறையின் மேல் எழுத்துக்களை அமைப்பது பற்றியும் பேச்சு வளர்ந்தது. கால் மணி நேரம் கழிந்த பிறகு, அரிய காலை நேரத்தை வீணக்கியது அடிகளுக்கு நினைவு வந்ததும் அவருடைய உள்ளம் வருந்தியது. அதைப்பற்றி அவரே எழுதும்போது, சத்தியத்தை ஆராயாமல் காலத்தை வீணக் கியது, அஹிம்சையைப் போற்ருமல் காலத்தை வீணக்கியது மற்றவர்களுடைய துன்பங்களை உணர்ந்து அவற்றைத் தீர்க்கத் தொண்டு செய்வதை மறந்து காலத்தை வீணக்கியது

என்ற மூவகை குற்றமும் உணர்ந்து வருந்தி எழுதியுள்ளார். ஒரு நாழிகையும் வீணுக்காமல் உண்மை நோக்கத்தோடு அன்பு நெறியில் தொண்டு செய்யவேண்டும் என்று அவர் வாழ்ந்த வாழ்க்கையை இந்தச் சிறு நிகழ்ச்சியாலும் அறியலாம். ராட்டையால் நூல் நூற்கும் கொள்கை அவர் கொண்ட தொண்டு வாழ்க்கைக்கு அறிகுறியே ஆகும். இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது ஒரு நாள் பல கடமைகளையும் முடிக்க நேரமாகி இரவு 2-30 மணிக்குத் தான் திரும்பி வந்தாராம். அவ்வளவு நேரமாகி யிருந்தும், அவர் வந்தவுடன் படுக்கைக்குச் செல்லவில்லை. வழக்கம்போல் அரை மணி நேரம் உட்கார்ந்து அன்று நூற்க வேண்டிய அளவு நூலையும் நூற்று முடித்துதான் படுத்தார். ஆயினும் வழக்கம் போல் வைகறை நான்கு மணிக்குத் துயில் எழுந்தார். வாழ்க்கையில் உணவு உண்பதை மறக்காமல் போற்றிக் கொண்டிருப்பது போல் உழைப்பதையும் மறக்காமல் போற்ற வேண்டும் என்பது அவர் கருத்து. தொண்டு நெறியில் உழைக்கவேண்டு மென்று அவர் கொண்டிருந்த உறுதிக்கு மற்ருெரு சான்றும் இருக்கின்றது. தம் முடிவைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபோது ஒரு முறை, "ராட்டினத்தைச் சுற்றிக் கொண்டே நான் சாகவேண்டுமென்று விழைகின்றேன். கடவுளை அடைய அப்படிப்பட்டத் தொண்டே வழி" என்று கூறினுர். அவர் தம் ஆசிரமத்தார்க்கு எழுதிய கடிதத்தில் நூல் நூற்றல் அன்ருட வேள்வி என்று குறிப்பிட்டு, "பிறருடைய நன்மையைக் கருதிக் கைம்மாறு எதிர்பாராமல் செய்யப்படும் தொண்டே வேள்வி (யக்ஞம்)" என்று எழுதியுள்ளார்.

பகவத்கீதைக்கு அவர் எழுதிய விளக்கம் அனுசக்தி யோகம் (பற்றின்றி வாழ்தல்) என்னும் பெயருடைய நூலாகும். அந்த நூலில் யக்ஞம் (வேள்வி) என்னுஞ் சொல்லை விளக்கும்போது, "யக்ஞம் என்பது பிறர்க்கு உதவியாகவும் கடவுளுக்காகவும் செய்யப்படும் தொண்டு" என்று குறிப்பிட்டு, கடவுளின் படைப்பாக உள்ள உயிர்களுக்குத் தொண்டு செய்வதே கடவுள் தொண்டு என்றும்

அதுவே வேள்வி என்றும் எழுதியிருக்கின்றார். அவர் பேசிய தொழுகைப் பேச்சுக்களுள் டில்லியில் இறுதியாகப் பேசிய (1948 ஜனவரி 29) பேச்சிலும் இதை விளக்கமாகக் கூறினார். "'உண்டும் குடித்தும் களித்தும் வாழ்வதற்காகக் கடவுள் மக்களைப் படைக்கவில்லை. ஒவ்வொருவரும் யக்ஞம் செய்ய வேண்டும் என்றும், அந்த உழைப்பால் வரும் பயனையே உண்ண வேண்டும் என்றும் கீதை கற்பிக்கின்றது. உழைக்காமல் உண்கின்ற பெருஞ் செல்வர்கள் அட்டைகளே. அவர்களும் வியர்வை சிந்தி உழைத்தே உண்ண வேண்டும்; இல்லையேல் உணவு பெறுவதற்கு உரிமையில்லை. உழைக்கும் வலிமை இல்லாதவர்களுக்கு மட்டுமே சமூகத்தில் விதிவிலக்கு இருக்க முடியும்" என்று கூறினார். இந்த உடம்பு இருக்கும் வரையில் மற்றவர்களுக்காகத் தொண்டு செய்ய வேண்டும் என்பதும், சோற்றுக் கவலையை மறந்து தொண்டைத் தேடி அலைய வேண்டும் என்பதும், உண்பதும் பருகுவதும் உறங்குவதும் விழிப்பதும் ஆகிய எல்லாம் பிறர்க்குத் தொண்டு செய்யவே என்பதும், இத்தகைய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்பதும் அவருடைய கொள்கைகளாகும்.

வினாக்கள்

1. இது உலக வரலாற்றில் கண்டறியாத புதுமையாகவே இருக்கிறது"—எது?
2. கடவுளைக் காண்பதைப் பற்றி காந்தியடிகள் யாது கூறுகின்றார்?
3. தமிழரின் உயிர்த்தியாக முறை எத்தகைத்து?
4. காலத்தை வீணாக்காதவர் காந்திமகான் என்பதை ஓர் உதாரணத்தால் காட்டுக.

கட்டுரைப் பயிற்சி

சமூக சீர்திருத்தம் அல்லது சமய சீர்திருத்தங்கட்குத் தொண்டாற்றிய சான்றோர் ஒருவரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

மொழிப்பயிற்சி

1. எதிர்மொழி தருக: அஞ்சுதல், புறக்கணித்தல், மேற்கொண்டார், கருத்தளவில், தன்னலம்.
2. மதவெறி கொண்டவர்கள் தாக்கினால் தடுப்பவர் யார்? இதனை எதிர்மறை வாக்கியமாக்குக.
3. 'இமயமலைக் குகைகளிற் கடவுளைக் கண்டு பிடிக்கலாம் என்று மனம் நம்புமானால் நான் உடனே அங்கே புறப்படுவேன்' என்று அவர் கூறியுள்ளார்—இதனை அயற்கூற்று வாக்கிய மாக்குக.

3. சிந்தாமணி தோன்றிய வரலாறு

(வித்துவான் க. சாமிநாதன்)

காப்பியம் அல்லது தொடர்நிலைச் செய்யுள் என்பது நூல்வகைகளுள் ஒன்று. தனக்கு இணையில்லாத ஒரு தலைவனைக் கதாநாயகனாகக் கொண்டு அவன் பெருமை தோன்றப் பாடப் பெறுவது அது. காப்பியத்துள் கிளைக் கதைகள் பல விரவி வரும். சிறந்த காப்பியங்களில் முக்கியமாக மலை, கடல், நாடு, நகரம், ஆறு பருவங்கள், ஒரு நாளின் ஆறு பிரிவுகள், சந்திரன், சூரியன் என்ற இவற்றின் தோற்றமும் மறைவும் ஆகிய பதினெட்டுப் பொருள்களையும் திறம்பட வருணித்தல் வேண்டும். இந்த இலக்கணத்தைப் பெற்ற காப்பியம் பெருங்காப்பியம் எனப்படும். இவையாவும் அமையத் தமிழில் முதன்முதல் தோன்றிய நூல் சிந்தாமணி என்பதாம். சிந்தாமணியோடு சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் நான்கு நூல்களும் சேர்ந்து எண்ணப்படுமாயினும் காப்பிய லட்சணங்கள் முறையே அமைந்த நூல் சிந்தாமணியே என்பர். சேக்கிழார் என்பவர் சிந்தாமணியின் போக்கை நோக்கியே பெரியபுராணத்தை அருளிச் செய்தார். கம்பராமாயணமும் சிந்தாமணியின் போக்கிலேயே காப்பிய இலக்கணங்களை அமைத்துக்கொண்டு விளங்குகிறது. ஆகவே தமிழிலுள்ள காப்பியங்களுக்குச் சிந்தாமணியைத் தந்தை என்பது மிகையாகாது.

சீவகன் என்பவன் சிந்தாமணியின் காப்பியத் தலைவன். அவனுடைய தந்தையின் பெயர் சச்சந்தன். சச்சந்தன் தன் அரசைக் கட்டியங்காரன் என்ற மந்திரியிடம் ஒப்படைத்து விட்டுச் சிலநாள் ஓய்வு பெற்றுக்கொண்டான். அந்தச் சமயம்பார்த்துக் கட்டியங்காரன் சேனைகளைத் தன் வசப் படுத்திக்கொண்டு சச்சந்தனைக் கொன்று அரசினைத் தன்வசமாக்கிக்கொண்டான். சச்சந்தனுடைய மனைவி விசையை என்பவள் ஒரு மயிற்பொறியில் ஏறித் தப்பிப் பிழைத்துச் சென்று ஒரு குழந்தையைச் சுடுகாடு ஒன்றில் ஈன்றாள்.

கந்துக்கடன் என்பவன் அந்தக் குழந்தையை எடுத்துப் போய்ச் சீவகன் என்று பெயரிட்டு வளர்த்தான். சீவகன் கல்வி கேள்விகளிலும் போர் முறைகளிலும் விரைவில் தேர்ச்சிபெற்று அரசர்க்கு அமையவேண்டிய அருங்குணங் கள் யாவும் வாய்க்கப் பெற்றுப் புகழுடன் விளங்கினான். பிறகு சீவகன் தன் திறமையைக் காட்டி எட்டுப் பெண்களை வெவ்வேறு சமயங்களில் மணந்து இறுதியில் வஞ்சகனாகிய கட்டியங்காரனை வென்று தன் தந்தையிழந்த அரசைக் கைப் பற்றிக் கொண்டான். அவன் பலநாள் சிறப்பாக ஆண்டு இறுதியில் துறவு பூண்டு முக்தி பெற்றான். சிந்தாமணி கூறும் கதையின் சுருக்கம் இது.

இத்தகைய அரிய நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர். இவர் சமண சமயத்தினர். இளமையிலேயே துறவுபூண்டவர். உத்தேசமாகக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சோழ மன்னர் பரம்பரையினர் என்று இவரைச் சிலர் கூறுவர்.

சமணர்கள் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டு பெரிதும் போற்றத் தக்கது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் பல சமணர் செய்தவை. எட்டுத்தொகை நூல்களிலும் சமணர் செய்த பாக்கள் பல காணப்படுகின்றன. தமிழ் மொழியி லுள்ள பெரும்பாலான இலக்கணங்கள் சமணர்களாலேயே இயற்றப்பட்டன. பெருங்கதை, சிந்தாமணி சூளாமணி போன்ற காவியங்களுக்கு அவர்களே ஆசிரியராவார்கள். தமிழ்மொழியை நினைக்கும்போது நாம் சமணர்களையும் உடன் சேர்த்து நினைக்கவேண்டும். நிற்க, திருத்தக்கதேவர் காலத்துக்குமுன் சமணர்கள் அரிய நீதிநூல்களைத் தவிர வேறொன்றும் சாதித்துவிடவில்லை. அவர்கள் இல்லறத்தை விடத் துறவறத்தையே சிறந்ததாகக் கொண்டு உலக இன்பங் களை வெறுத்துவரலாயினர். அவர்களுடைய நீதி நூல்களுள் இச்செய்தி புலனாகும்.

ஒருநாள் எவரோ திருத்தக்க தேவரை நோக்கி, "ஐயா சமணர்களுக்கு இந்த உலகைக் கண்டாலேயே வெறுப் பாயிற்றே ; வெற்றுத் துறவற வாழ்க்கை ஒன்றைத்தானே

அவர்கள் பாராட்டிப் பாடியிருக்கின்றனர்; உலக இன்பங் களைச் சுவைபட வருணித்துப் பாடும் திறம் சமணர்களிடம் காணப்படவில்லையே!" என்று கூறினர். திருத்தக்கதேவர் அவரை நோக்கி, "உம் கூற்று வலியற்றது; உலக இன்பங் களை வருணிக்கும் ஆற்றல் சமணருக்கு இல்லாமற் போக வில்லை; ஆனல் சில்நாள் பல்பிணிச் சிற்றறிவமைந்த வாழ்க் கையை வீணுக்காமல் மக்கள் அதனை துறவறத்தின் வழியே பயன்படுத்தி இன்பப் பேற்றைப் பெறுவதற்காகவே சமணர் கள் துறவறத்தைப் பாராட்டி நூல்கள் செய்துள்ளார்கள்; உலக இன்பங்களை வருணித்து யாம் ஒரு காவியத்தைப் புதிதாகச் செய்வேம்; இதனை நீர் காண்க" என்று பெரு மிதங்கொண்டு மறுமொழி பகர்ந்தார்.

அதன்பின் திருத்தக்க தேவர் தம் ஆசிரியரை அணுகி உலக இன்பங்களை அமைத்து ஒரு சீரிய காவியம் பாடத் தமக்கு அனுமதி யளிக்குமாறு வேண்டினர். அதற்கு அவ் வாசிரியர், "ஐயனே, நீ சாலவும் இளைஞனயிற்றே! மேலும் துறவு பூண்டுள்ளாய். உலக இன்பங்கள் அமையு மாறு நீ எங்ஙனம் ஒரு காவியம் செய்தல் கூடும்" என்று கூறிவிட்டனர். உலக இன்பங்களைப் புகுத்தி ஒரு காவியத் தைச் சமணத் துறவி ஒருவர் இயற்றக்கூடாது என்ற காரணத்திஞலோ இல்லையேல் திருத்தக்கதேவரிடம் அத் தகைய ஆற்றல் இல்லை என்ற காரணத்தாலோதான் ஆசிரியர் அங்ஙனம் எதிர்மறையில் விடை பகர்ந்திருத்தல் வேண்டும்.

ஆனல் திருத்தக்கதேவர் சும்மா இருக்கவில்லை. காவியம் எழுதுவதில் தமக்கிருக்கும் ஆர்வ மிகுதியைக் காட்டி ஆசிரி யரின் பாதங்களைப் பணிந்து பன்முறை வேண்டினர்.

அதன்பின் ஆசிரியர், "அன்பனே, அதோபார் ஒரு நரி புதருக்குள் நுழைகிறது. அந்த நரியைக் கதாபாத்திரமாகக் கொண்டு காவியப் போக்கில் விருத்தப் பாவில் நீ ஒரு கதையை எழுதுவாயானல் அதனைக் கண்ணுற்றபின் யாம் உனக்கு அனுமதியளிப்பேம்" என்றனர். அதனைக் கேட்ட திருத்தக்கதேவர் இரண்டொரு பகலில் நரிவிருத்தம் என்ற நூலை இயற்றித் தம் ஆசிரியருக்குக் காட்டினர்.

நரிவிருத்தம் பழங்கதை ஒன்றை அழகாக வருணிக்கும் நூல். கதை பின்வருமாறு :

ஒரு காட்டில் வேடன் ஒருவன் வேட்டையாடச் சென்றான். அவன் அங்கே ஒரு யானையைக் கண்ணுற்று அதனை அம்பெய்து வீழ்த்தினான். அச்சமயம் தன்னை அறியாது அவன் ஒரு பாம்புப் புற்றை மிதித்துவிட்டான். புற்றினுள் இருந்த கருநாகம் ஒன்று அவனைக் கடித்துவிட்டது. கடியுண்ட வேடன் நாகத்தைக் கொன்று, விரைவில் விஷம் தலைக்கேறத் தானும் மாண்டொழிந்தான். பின்னர் அங்கே ஒரு நரி வந்தது. இறந்துகிடந்த அந்த மூன்று உடலங்களையும் நரி பார்த்து, "இந்த யானை நமக்கு ஆறுமாதம் வரையில் இரையாகும்; வேடன் மூன்றுநாள் இரை; நாகம் இரண்டு நாளுக்கு வரும்; இன்று நமக்கு விரதநாள்; ஒன்றையும் தின்னலாகாது; 'பல்லசைத்தால் பசியாறும்!' என்பார்கள் அன்றோ! இன்று இந்த வேடனுடைய வில்லின் நாணைக் கடித்துப் பசியாறுவோம்" என்று எண்ணி இறுகக் கட்டியிருந்த வில்லின் கயிற்றைக் கடித்தது. உடனே நாண் அறுந்து வில் விசையில் நிமிர்ந்ததால் அந்த வேகத்தில் அது நரியின் தலையை அறுத்துச் சென்றது. நரியின் மனோராச்சியம் இங்ஙனம் பாழாகி அதுவும் உயிர் துறந்தது. பிற்காலத்துப் புலவர் ஒருவர் இந்தக்கதையின் வாயிலாக ஒரு நீதியைப் புலப்படுத்த,

> 'கரியொரு திங்க ளாறும் கானவன் மூன்று நாளும்
> இரிதலைப் புற்று நாகம் இரண்டுநாள் இரையா மென்றே
> விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக் கவ்வி
> நரியனார் பட்ட பாடு நாளைநாம் படவே நிற்போம்'

என்று பாடியுள்ளார். திருத்தக்க தேவரின் நரிவிருத்தம் இக்கதையினையே வருணிக்கின்றது.

நிற்க, திருத்தக்கதேவரின் ஆசிரியர் நரி விருத்தத்தைக் கண்ணுற்றுத் தேவரை மிகவும் வியந்து ஒரு காவியம் செய்யும்தகுதி அவர்பால் அமைந்திருத்தலைக் கண்டுகொண்டு அவருக்கு அனுமதி கொடுத்தார். ஆசிரியரின் ஆசிகளைப் பெற்றுத் திருத்தக்க தேவர் பாடிய நூல்தான் சிந்தாமணி.

சிந்தாமணியைப்பாடி முடித்தபின்தேவர் தம்ஆசிரியரை

அணுகி, "ஐயா, நூலை யான் இயற்றியபோதிலும் இதன் முதற்கண் சேர்க்கத்தக்க முதற்பாடலாகிய சித்தசரணத்தைத் தாங்கள் அருளிச்செய்து கொடுங்கள்" என்று வேண்டினுர். நூலின் தொடக்கத்தில் சமணர்கள் சித்த சரணம், அருக சரணம், சாது சரணம், தர்ம சரணம் என்பவற்றை முறையே கூறுவர்.

ஆசிரியர் தேவரின் வேண்டுகோள்படி, சித்த சரணத்தை எழுதிக் கொடுத்தபின் தேவர் எழுதிய ஏனைய சரணங்களைக் கண்ணுற்ருர். கண்ணுற்றவர் தேவரின் அருக சரணம் மிகவும் அழகியதாக அமைந்திருப்பது நோக்கி, "என் ஐயனே, இப்பாட்டு மிகவும் சுவையுடைத்தாய்ச் சீரிதாக உள்ளது; ஆகையால் இதனை முதற்கண் வைத்து யான் பாடிய சித்த சரணத்தை இரண்டாவதாக அமைக்க" என்று கட்டளையிட்டார். வழிவழியாக வந்த மரபுக்கு இந்த முறை வைப்பு அதாவது அருக சரணத்தை முதலிற் கூறும் செயல் ஒவ்வாதாயினும், அது தம் ஆசிரியரின் கட்டளையாதலால் திருத்தக்கதேவர் அங்ஙனமே அருக சரணத்தை முதலில் வைத்திருக்கிருர். அவருடைய குரு பக்திக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

வினக்கள்

1. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
2. திருத்தக்கதேவரை நோக்கி ஒருவர் யாது வினவினுர்?
3. காப்பியத்தின் இலக்கணம் யாது?
4. நூலின் தொடக்கத்தில் சமணர்கள் எவற்றைக் கூறுவர்?

கட்டுரைப் பயிற்சி

உமக்குத் தெரிந்த ஏதேனும் ஒரு நூலின் வரலாற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. தமிழில் முதன் முதல் தோன்றிய காவியம் சிந்தாமணி—பெயரெச்சத்தை வினைமுற்ருக்கி வாக்கியத்தை மாற்றுக.

2. ஒரு சொல்லாற் கூறுக. மிகையாகாது, வசமாக்கிக் கொண்டான், சமண சமயத்தினர்.

3. 'ஒரு காட்டில் வேடன் ஒருவன்' என்று தொடங்கும் பாராவில் உள்ள முதல் நான்கு வாக்கியங்களைக் கலவை வாக்கியமாக மாற்றுக.

4. மரம் நடுதல்

(ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.)

பழைய காலத்தில் இந்துக்கள் இயற்கை விருப்பினராக இருந்தார்கள். மலைகள், ஆறுகள், காடுகள் முதலிய இயற்கைக் காட்சிகளுக்கு இடையே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பெரிய நகரங்கள் எல்லாம் இயற்கையோடு பொருந்த வேண்டும் என்று கருதி அவைகளை ஆற்றோரங்களில் அமைத்தார்கள். பழங்கால நகரங்கள் எவை என்று ஆராய்வாருக்கு இது புலனுகும். நகரங்களை அழகுபடுத்த அவற்றின் நடுவில் பல சிங்காரத் தோட்டங்களை அமைத்திருந்தார்கள். காவிரிக் கரையில் ஒருகாலத்தில் இருந்து இப்பொழுது அழிந்துபோன சோழ நாட்டின் தலைநகராகிய **காவிரிப்பூம் பட்டினம்** என்ற நகரில் ஐந்து பூங்காவனங்கள் இருந்தன வென்று **மணிமேகலை, சிலப்பதிகாரம்** முதலிய தமிழ்க் காவியங்களால் தெரிகிறது. காசி நகரில் **மான்காடு** (மிருக தாவம்) முதலிய உபவனங்கள் இருந்தன.

தமிழ்நாட்டில் முற்காலத்தில் கோவில்கள் பல காடுகளுக்கு நடுவில் இருந்தன. மதுரைக்குக் கடம்பவனம் என்று பெயர். திருவாலங்காடு, திருப்பாதிரிப்புலியூர் என்னும் ஸ்தலங்கள் முறையே ஆலங்காடாகவும் பாடலி வனமாகவும் இருந்தன. திருவிடைமருதூர் முற்காலத்தில் மருதவனமாக இருந்தது. இவை எல்லாம் சில உதாரணங்களே.

மரங்கள் சூழ்ந்துள்ள இடங்களே கல்விக்கும் உபதேசத்துக்கும் ஏற்ற நிலையங்களாக இருந்தன. குருகுலங்களுக்குத் தாயகம் காடுகளே என்பதை நாம் அறிவோம். "கௌதம புத்தர் நெடுங்காலம் ஒரு மாந்தோப்பில் இருந்துகொண்டு தம் உபதேசங்களைப் பரப்பி வந்தார்" என்று கேள்விப்படுகிறோம். வேதங்கள், உபநிஷத்துகள், இராமாயணம் முதலிய காவியங்கள் வனங்களிலேயே தோன்றின.

மரம் நடுதலைப் பற்றிய செய்திகள் மனுதரும சாத்திரம், அக்கினி புராணம், சுக்கிர நீதி, சாமந்தக நீதி, சாரங்கதர

பத்ததி முதலிய வடமொழி நூல்களில் விரிவாகக் காணப்படு கின்றன. பழங்களேயும், மலர்களேயும் தரும் மரங்களே வைப் பது புண்ணியச் செயல் என்று இந்த நூல்கள் கூறுகின்றன. " இன்ன மரத்தை நடுபவன் இன்ன பலத்தை அடைகிறுன் " என்று சில நூல்கள் கூறுகின்றன. குழந்தைகளேப் பெறு தல், நூல் இயற்றுதல், கோவில் கட்டுதல், குளம் வெட்டுதல், ஊர்களே ஏற்படுத்துதல், பூங்கா வைத்தல் முதலியவை ஏழ் பெரும் செல்வங்கள் (சப்த சந்தானங்கள்) எனப்படும். நந்தவனப் பிரதிஷ்டைக்கு எத்துணே இன்றியமையாமையை வழங்கியிருக்கிருர்கள் என்பது இதனுல் தெரிகிறதல்லவா !

பொதுவிடங்களில் மரங்களே நட்டுப் பயிர் செய்து அவைகளே அரசாங்கத்தின் உடைமையாக விட்டுவைக்க முற்காலத்தில் சாத்திரங்களில் விதிகள் இருந்தன. பலர் அவ்வாறு செய்து வந்ததையும் நூல்கள் மூலமும் கல்வெட்டுக் கள் மூலமும் நாம் அறிகிருேம். முற்காலத்தில் நிழலுக்காக வும், மலர்கள், பழங்கள் முதலியவைகளுக்காகவும் எல்லோரும் பொதுமரங்களேப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏழைமக் கள் மரங்களில் காய்ந்துபோய்த் தாமாகக் கீழே விழுந்து விட்ட குச்சிகளே விறகுக்காகப் பொறுக்கிச் செல்ல தடைகள் இருக்கவில்லே. இவை எல்லாம் குற்றமாகமாட்டா. ஆனுல் மரங்களேயோ அவற்றின் பாகங்களேயோ சேதப்படுத்துவது அரசியல் குற்றம் என்றும், அக்குற்றங்களுக்காக அபராதம் விதிக்கப்படும் என்றும் மனு நூல் முதலியன கூறுகின்றன. மரங்களே அழித்தல் சிறு பாவத்துள் அடங்கும். அதற்கு ஏற்ற கழுவாயும் இருந்தது.

மனிதருடைய உடல் நலத்தின் பொருட்டு மருந்துச் செடிகளாக உள்ளவற்றைச் சிதைத்தலேயும் நம்மவர் பாவச் செயலாகவே கருதினுர்கள். ஆகவே அவற்றைப் பறிக்கும் போது அவற்றின் நன்மைக்காகச் சில மந்திரங்களே ஓதுவ துண்டு. பிரச்சோதனன் என்னும் சக்கரவர்த்தி உதயணன் என்ற அரசனேச் சிறைப்படுத்தித் தன் மக்களுக்குப் படைக் கலப் பயிற்சி செய்விக்கும்படி ஏற்பாடு செய்தான். தன் மக்கள் படைக்கலப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றதைக் கண்டு

அவன் உதயணனை நோக்கித் தான் செய்த கொடுமைக்கு மரத்தின் வேர் சாயும்படி மருந்து கொள்ளும் கொடுமையை உவமை கூறுகிறான். அது,

‘ மரமுதல் சாய மருந்துகொண் டாஅங்கு
நங்குடி வலித்தல் வேண்டி நம்பி
தன்குடி கெடுத்த தகவி லாளனேன் ’

என்பதாகும்.

அரசாங்கத்தாரே வழி ஓரங்களில் வழிப்போக்கர் நன்மைக்காக நிழல் தரும் மரங்களை வைத்துப் பயிர் செய்தார்கள் என்பது அசோக மன்னரின் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது.

இதுபோன்ற செய்திகள் தென்னிந்திய கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

மரங்களை வைத்துப் பாதுகாப்பதில் முக்கியமாகக் கவனம் செலுத்தி வந்தவர்கள் முனிவர்களே. மரவிஷயமாக விஞ்ஞான ஆராய்ச்சி செய்து நூல்களை எழுதியவர்களும் இம் முனிவர்களே. வடமொழிக் காப்பியங்களைப் படிப்பவருக்கு இது எளிதிற் புலனாகும்.

வரதந்து என்ற முனிவரின் சீடன் கௌத்ஸன் என்பவன் இரகு மன்னனைக் காண வருகிறான். ரகுமன்னன் அவனுடைய நலத்தை உசாவுகையில், ‘வருகின்றவர்களின் துன்பத்தைப் போக்குகின்ற ஆச்சிரமத்தின் மரங்கள் பற்றுக்கோடு முதலிய முயற்சிகளால் நீங்கள் குழந்தைகளைப்போல் பாதுகாத்து வருபவை காற்று முதலியவற்றால் தீதின்றி இருக்கின்றனவா ? ’ என்று வினவுகிறான்.

சீதை கற்பிணியாக இருக்கையில் வால்மீகி முனிவரின் ஆச்சிரமத்தருகில் தனியே விடப்பட்டபின் அவளுக்குத் துக்கம் அதிகமாயிற்று. அச்சமயம் முனிவர் அவளைக்கண்டு தம் ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்று, “ நீ உன் சக்திக்கு ஏற்றவாறு இந்த இளஞ் செடிகொடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தால், குழந்தையைப் பெற்றபின் எந்த விதமான மகிழ்ச்சியை அடைவாயோ, அவ்வித மகிழ்ச்சியைப் பெறாத முன்பே அடைதல் கூடும் ” என்கிறார்.

கண்ணுவர் சகுந்தலையைத் துஷ்யந்தனிடம் அனுப்பும்

போது மரங்களைப் பார்த்து, 'எவள் உங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சாத முன்பு அதனைச் சாப்பிட மாட்டாளோ, எவளுக்கு ஆபரணங்களின்மேல் ஆசை இருந்தும் அணிவதற்காகத் தளிர்களைக் கிள்ளமாட்டாளோ எவள் உங்களிடம் புஷ்பங்கள் மலர்வது கண்டு பெரு மகிழ்ச்சி அடைவாளோ அத்தகைய சகுந்தலை தன் கணவன் வீட்டுக்குச் செல்வதற்கு நீங்கள் அனுமதி கொடுங்கள், என்று வேண்டுவதாகச் சாகுந்தலம் கூறுகிறது.

ஜீமுதவாகனன், விதூஷகனோடு ஒரு காட்டை அடைந்து அங்கே இருந்த சில மரங்களைப் பார்த்தான். அவற்றின் பட்டைகள் அதிகமாகவும், விசாலமாகவும் உரிக்கப்படாமலிருந்ததை அறிந்து, 'முனிவர்கள் மரங்கள் மீது வைத்துள்ள அன்பினால் தங்கள் மரவுரிக்காக அவற்றின் பட்டையை மேலாகச் சிறிதளவே உரித்திருக்க வேண்டும்; ஆதலால் இங்கே முனிவர் ஆச்சிரமம் இருக்கும் என்பதில் ஐயமில்லை' என்று கூறினான். இவற்றால் முனிவருக்கும் மரங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு புலனாகும்.

இந்துக்கள் மரங்களைத் தெய்வங்களாக வணங்கி வந்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. அவர்கள் அரசமரத்தை மரங்களுக்கெல்லாம் அரசனாகக் கொண்டுள்ளார்கள். அதன் அருகில் வேப்பமரத்தை நட்டு இரண்டுக்கும் மணம் செய்து திங்கட்கிழமைகளில் அமாவாசை வரும்போது அவற்றை 108 முறை வலம் வந்து பூசிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது. புத்தர் அரசமரத்தின் அடியில்தான் ஞானோதயத்தை அடைந்தார். அதனால் அதனைப் பௌத்தர்கள் மகாபோதி என்று சொல்லி வணங்கி வருகிறார்கள்.

ஆவணி புரட்டாசி மாதம் நமக்கு மழைக் காலம். இக்காலத்துக்குப் பின் ஐப்பசி மாதத்தில் மரங்கள் எல்லாம் செழிப்புற்றிருக்கும், வனங்களில் புத்துயிர் தாண்டவமாடும். இக்காலத்தில் மக்கள் வனங்களுக்குச் சென்று வனதேவதைகளை நாட்டின் நலத்தின் பொருட்டு வழிபட்டுப் பெருவிருந்து செய்து எல்லாரும் அவ்வனத்திலேயே உண்டு களிப்பதுண்டு. இச்செயல் வனபோஜனம் எனப்படும்.

அந்தணரிற் சிலர் திருமணம், உபநயனம் முதலிய காரியங்களை நடத்தும்போது சில சில மரங்களைத் தத்தம் குல தேவதைகளாகப் போற்றுவது வழக்கமாக உள்ளது.

பண்டைக் காலத் தமிழ் மன்னர் முதலியோர் ஒவ்வொரு மரத்தைத் தம் குலத்தைக் காக்கும் தெய்வமாகப் போற்றி வந்தார்கள். இந்த மரங்கள் காவல் மரம் எனப்படும்.

பல ஆண்டுகளாக நாம் மரம் வைத்து வளர்த்தலைக் கைநழுவ விட்டோம். அதன் மீது பற்றும் குறைந்து விட்டது. காடுகள் எல்லாம் மெல்ல மெல்ல அழிந்து வரலாயின. அதனால் மழை குறைந்து விட்டது. முன்பெல்லாம் வெள்ளப் பெருக்கால் ஓடிக்கொண்டிருந்த ஆறுகள் எல்லாம் இன்று வெறும் மணல் வெளிகளாக உள்ளன. ஏரிகள் நீரில்லாமல் தூர்ந்து வருகின்றன. மரங்கள் குறைந்து விடவே நிலங்களுக்குப் பசுந்தழை உரம் குறைந்து போய் நிலவளம் குன்றி விட்டது. ஆடுமாடுகளுக்குத் தீவனம் இல்லாமல் அவை மட்டமாகிவிட்டன. இந்த நிலை நீடித்து வந்தால் நம் நாட்டுப் பயிர்த் தொழில் வளர்ச்சியுறுவது எப்படி? இதற்காகவே நம் இந்திய அரசாங்கத்தார் மரம் நடுதலை ஒரு விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மரம் நடுதலின் நன்மைகளை அறிந்து நாமும் இந்தத் தேசோபகாரமான சேவையில் பங்கெடுத்துக் கொள்ளுவோமாக.

வினாக்கள்

1. முன்காலத்தில் கோவில்கள் பல காடுகளுக்கு நடுவில் இருந்தன என்பதற்கு நான்கு உதாரணங்களைக் குறிப்பிடுக.

2. மரங்களைப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றியும் அழிப்பதைப் பற்றியம் மனுமுதலான நூல்கள் கூறுவது யாது?

3. மருந்துச் செடிகளைப் பறிக்கும்போது ஏன் சில மந்திரங்களைச் சொல்லவேண்டும்?

4. வடமொழிக் காப்பியங்களைப் படிப்பவர்க்கு எது புலனாகும்?

5. சீதைக்கு வான்மீகி முனிவர் யாது கூறினார்?

6. 'இங்கே முனிவர் ஆச்சிரமம் இருக்குமென்பதில் ஐயம் இல்லை' என்று ஜீமூதவாகனன் கூறக் காரணம் யாது?

கட்டுரைப் பயிற்சி

நம் நாட்டில் கொண்டாடும் மரநடு விழாவைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

மொழிப்பயிற்சி

1. பின்வருவனவற்றின் தமிழ்வடிவங்கள் எவை?
   உதயமாயின, நந்தவனம், பிரியர், முக்கியஸ்தானம் உபபாதகம்.

2. கீழே வரும் சொற்களின் வடமொழி உருவங்கள் எவை?
   பயன், கழுவாய், நலம், அழித்தல்.

3. மரம் நடுதலைப் பற்றிய செய்திகள்......................காணப்படுகின்றன. இஃது என்ன வாக்கியம்? செய்வினை வாக்கியமாக இதனை மாற்றுக. (தமிழ் மொழிக்குச் செய்வினை வாக்கியங்களே சிறப்புடையன.)

4. கோடிட்ட இடத்தில் எவரும் எல்லோரும் என்பவற்றுள் ஏற்ற ஒன்றை அமைக்க:

   (அ) நிழலுக்காகவும் பழங்களுக்காகவும் மரங்களை———பயன்படுத்திக் கொண்டார்கள்.

   (ஆ) மரங்களை———அழித்தலாகாது.

5. மணிமேகலை மலர்வனம் புகுதல்

(டாக்டர். மா. இராசமாணிக்கம், எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்)

புகார் நகரில் மலர் வனங்கள்

கோவலன் மதுரையிற் கொல்லப்பட்டதும் கண்ணகி மதுரையை அழித்து மண்ணகம் நீத்த செய்தியும் கேள்வி யுற்ற மாதவி தன் ஆடல்-பாடல்களை ஒழித்துப் பௌத்த பிக்ஷுணி ஆயினள். மணப்பருவத்தை அடைந்த அவள் மகளான மணிமேகலையும் தாயைப் பின் தொடர்ந்தாள்...... ஒரு நாள் மாதவி மணிமேகலையை மலர்வனம் சென்று மாலை தொடுத்தற்கு மலர்களைப் பறித்து வருமாறு ஏவினள்.

அப்பொழுது சுதமதி என்ற பார்ப்பனத் தோழி மாதவி யை நோக்கி, "உற்ற வயதடைந்த பெண்களைத் தனியே செல்லவிடுதல் நன்றன்று. இக்காவிரிப்பூம் பட்டினத்தில் மலர்வனங்கள் பல இருக்கின்றன. இலவந்திகைச் சோலைக்கு செல்லின், அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கு இருப்பர். உய்யானவனத்தில் தேவர்களால் அன்றி மனிதரால் விரும்பப் படாதனவும் வண்டுகள் மொய்க்காதனவும் ஆகிய மலர்களை யுடைய மரங்கள் எல்லாம் வாடாத பூமாலைகளைத் தாங்கி யிருத்தலால், 'இவ்வனம் பாசக்கயிற்றையுடைய பூதங்களாற் காக்கப்படுவது' என்று எண்ணி அறிவுடையோர் அங்குச் செல்லார். கதிரவன் சுடுகிரணங்களால் சிறையிழந்த சம் பாதி வனமும், காவிரியின் தந்தையாகிய கவேரன் தவம் செய்துவந்த கவேரவனமும் மிக்க முதுமை உடையனவும் தீண்டி வருத்துவனவும் ஆகிய தெய்வங்களாற் காக்கப் படுவன; ஆதலின் அறிவுடையோர் அவ்வனங்களில் மலர் பறிக்கச் செல்லார்.

உவவனச்சிறப்பு

"அருளே உருவான புத்தபகவானது ஆணையால் பல மரங்களும் நிரம்பப் பூக்கும் உவவனம் அழகு மிக்கது. அவ் வனத்தில் பளிங்கினால் ஆகிய மண்டபம் ஒன்று இருக்கிறது.

அது தன்னகத்துள்ளோரது ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்தம் உருவங்களை மட்டும் வெளிப்படுத்தவல்லது. அதனுள் மாணிக்கச் சோதி பரந்த பதுமபீடம் ஒன்று இருக்கின்றது.

"அப்பீடத்தில் இடப்பெறின் அரும்புகள் மலரும். பல ஆண்டுகள் ஆயினும் அப்பீடத்தில் இடப்பெற்ற மலர்கள் வாடா. அம்மலர்களில் வண்டுகள் மொய்யா. ஒரு தெய்வத்தை நினைந்தோர் அத்தெய்வத்தின் அடிகளைத் தொழுது மலர்களை அப்பீடத்தில் சேர்ப்பின், அம்மலர்கள் அப்பீடத்திலிருந்து நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிடம் செல்லும்; ஒரு நினைப்பும் இன்றி அம்மலர்களை அப்பீடத்திற் சேர்ப்பின், அவை அதனை விட்டு நீங்கா. இந்நிலைக்குக் காரணம் என்ன? 'செய்யும் செயல்கள் மனத்தோடு கூடாதவிடத்தும் பலிக்கும் என்னும் விரதிகள் துன்பமுறவும் மனத்தோடு கூடாத வழிச்செயல்கள் பலியா' என்போர்க்கு எடுத்துக் காட்டாகவும் மலரை இட்டுக் காட்ட மயன் என்னும் தெய்வத் தச்சனால் அப்பீடம் அமைக்கப்பட்டதாகும். உன் மகளான மணிமேகலை அவ்வனத்திலன்றி வேறு வனங்களிற் செல்லுதற்கு உரியவள் அல்லள். அவளுக்குத் துணையாக நானும் மலர்வனம் செல்வேன்," என்று கூறினாள். பின்னர் மணிமேகலையும் சுதமதியும் உவவனம் நோக்கிச் சென்றனர்.

வழியிடைக் காட்சிகள்

* * *

ஒருவன் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் அலரிப்பூ நெருக்கமாகக் கட்டப்பட்ட மாலையை உடையவன்; எருக்கமாலையை அணிந்தவன்; கட்டிய கந்தலில் சுள்ளிகளை ஒடித்துக் கட்டிக்கொண்டவன்; வெண்ணீறும் சந்தனமும் உடல் முழுவதும் பூசிக்கொண்டவன்; பயனற்ற சொற்களைப் பலரோடும் கூறினான்; அழுதான்; விழுந்தான்; அரற்றினான்; கூவினான்; தொழுதான்; எழுந்தான்; சுற்றிவந்தான்; ஓடினான்; ஒருபக்கம் ஒதுங்கினான்; நெடிது நின்றான்; தன் நிழலுடன் பகைமை கொண்டு நின்றான்; பித்துற்ற

அவனுடைய செயல்களைக் கண்டு மக்கள் இரக்கம்கொண்டு அவனைச் சூழ்ந்து நின்றனர்.

மேற்சொல்லப்பட்ட வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டே சுதமதியும் மணிமேகலையும் வழி நடந்தனர். மற்றொரு தெருவில் சுருண்ட தாடியும், இருண்ட அழகிய கூந்தலும், பவளம் போன்ற சிவந்தவாயும், வெண்மை ஒளி வீசும் பற்களும், ஒளி பொருந்திய செவ்வரி படர்ந்த கண் களும், வெள்ளைச் சங்கினாற் செய்த காதணிகளும், பிறை போன்ற நெற்றியும், காந்தள் மலர் போன்ற சிவந்த கையும், அழகிய நுண்ணிய இடையும், முழந்தாள் அளவு உடுக்கப் பட்ட உடையும் உடைய பேடி வேடத்தில் ஒருவன் தோன்றினான். அவன், வாணன் என்ற அசுரனது 'சோ' நகரத்தின் தெருவில் நின்று திருமாலின் மகனான் காமன் முன்னொரு காலத்தில் ஆடிய 'பேடு' என்னும் கூத்தை ஆடிக்கொண்டிருந்தான். திரளான மக்கள் அக்கூத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர். மணிமேகலையும் சுதமதியும் அத்தெருவினைக் கடந்து அடுத்த தெருவிற் புகுந்தனர்.

அத்தெருவில் இருந்த செங்கற் கட்டடங்கள் வானளாவி இருந்தன. அக்கட்டடங்கள் செங்கற்களால் ஆனவை. அவற் றின் மாடங்களில் தேவர் முதலிய எல்லாவகை உயிர்களும் சுதையினால் அழகுறச் சமைக்கப்பட்டிருந்தன. அவை சோணாட்டுக் கைதேர்ந்த ஓவியரால் செய்யப்பட்டவை ஆத லின், பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. பூம் புகார் நகரம் சிறந்த வாணிகத் தலமாதலின் நாடோறும் புதிய வர் பலர் நகரத்திற்கு வந்தவண்ணம் இருந்தனர். அவர்கட்கு மேற்சொன்ன சுதைவுருவங்கள் வியப்பை அளித்தன. அதனால் அவர்கள் அவற்றை பார்த்தவண்ணம் கூட்டங் கூட்டமாகத் தெருவில் நின்றிருந்தனர். மாதவியும் சுதமதி யும் அச்சுதை உருவங்களையும் மக்களையும் பார்த்துக் கொண்டே அடுத்த தெருவிற்குச் சென்றனர்.

அத்தெருவில் அண்மையில் திருவிழா நடைபெற்றது. அத்தெருவில் தளர்நடைப் புதல்வர் பலர் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனர். பொன்னாலாகிய கயிற்றிற்

கோத்த நன்மணிக் கோவையாகிய, வெண்சிறு கடுகினை அப்பிய நெய்யணிந்த உச்சியில் மயிர்ப்புறத்திற் சுற்றப்பட்ட கொக்கினையுடைய மூன்று சரங்கள் அப்புதல்வர் சென்னியில் அழகு பெறத்தொடங்கின. திருமாலின் ஐம்படைகளைப் போலப் பொன்னாற் செய்த பொருள்கள் கயிற்றிற் கோத்து அப் புதல்வர் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பெற்றிருந்தன. புதல்வரது வடிவு திருந்தாத மழலைச் சொல்லையுடைய சிவந்த வாயினின்றும் சிந்தியநீர் ஐம்படைத்தாலியை நனைத்தது. அழகிய ஆடை அவர்தம் இடையிற் சுற்றப்பட்டிருந்தது. வளையலையணிந்த மகளிர் சிலர் அப்புதல்வர்களைப் பொன் தேரில் கட்டப்பெற்ற யானைகள்மீது ஏற்றி, "ஆலின்கீழ் அமர்ந்த சிவபெருமானுக்கு மகனான முருகவேளின் விழாத் தொடங்குதலைக் காணுங்கள்," என்று கூறி மகிழ்ந்தனர். இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு பலர் கூட்டமாக நின்றனர். மணிமேகலையும் சுதமதியும் அக்காட்சியைக் கண்குளிரக் கண்டு சென்றனர்.

மணிமேகலையைக் கண்ட மக்கள் கூற்று

மணிமேகலை மேற் சொல்லப்பட்ட பலவகைக் காட்சிகளைக் கண்டுகொண்டே வழிநடக்கையில், நகர மக்கள் அவளை நன்கறிந்தவராதலின், விராட நகரில் அருச்சுனனாகிய பேடியைக் காணச் சூழ்ந்த மக்களைப் போல வந்து மணிமேகலையைச் சுற்றிலும் சூழ்ந்து, "இப் பேரழகுடைய மகளைத் தவநெறிப் படுத்திய தாய் கொடியவள். இம் மணிமேகலை சிறந்த மலர் கொய்தற்குப் பூம்பொழிலில் நுழையின், அங்குள்ள நல்ல இளைய அன்னப்பறவைகள் நாணமல் இவள் நடைபோல் நடக்கவல்லனவோ? அங்குள்ள அழகிய மயில்கள் இந் நங்கையின் எதிரில் வந்து நின்று இவளது சாயலைக் கற்குமோ? அங்கிருக்கும் பசிய கிளிகள் இம் மங்கையின் மொழிகட்குத் தோற்பன அல்லவோ? இவையாவும் ஒப்பன அல்ல," என்று கூறி மனம் வருந்தி நின்றனர்.

உவவனச் சிறப்பு

இங்ஙனம் மக்கள் வருந்திக் கூறுதலைக் கேட்டுக் கொண்டே மணிமேகலை உவவனம் நோக்கி நடந்தாள். உவவனம் குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும் மஞ்சாடியும் மகிழும் வெட்சியும் நாரத்தையும் சுரபுன்னையும் பரந்து மலர்கின்ற புன்னையும் பிடவமும் தளவமும் தாழையும் வெட்பாலையும் மூங்கிலும் பருத்த அடியினையுடைய அசோகமும் செருந்தியும் வேங்கையும் பெரிய சண்பகமும் நெருப்பைப்போற் சிவந்த பூக்களையுடைய இலவமும் ஆகிய மரங்கள் மலர்களைப் பரப்ப, கைத்தொழிலில் மேம்பட்ட வித்தகரால் இயற்றப்பட்ட சித்திரத் தொழில் அமைந்த துகில் போர்த்தது போலத் தோன்றியது.

சுதமதி அவ்வுவனத்தைத் தொழுது மணிமேகலைக்குக் காட்டினாள். மணிமேகலை சிவந்த தளிர்போன்ற தன் சிவந்த அடிகளால் நிலத்தில் வடுவுண்டாகாமல் நடந்து சென்று உவவனத்துள் நுழைந்தாள்.

வினாக்கள்

1. மணிமேகலையும் சுதமதியும் வழியிற்கண்ட காட்சிகள் எவை?
2. பேடிக் கூத்தினை விளக்குக.
3. பண்டைக்காலத்தில் கட்டடங்கள் எங்ஙனம் இருந்தன?
4. உவவனச் சிறப்பு எத்தகையது?

கட்டுரைப் பயிற்சி

இந்தப் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு 'முன்காலக் காவிரிப்பூம் பட்டினம்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. மணிமேகலை தனியே செல்வது நன்றன்று. என்ன வாக்கியம் இது? நன்றன்று என்பதற்குப் பதிலாக வேறு சொல்லைப் பெய்து வாக்கியத்தை மாற்றுக.

2. பித்தன் செயல் என்ற தலைப்பின் கீழுள்ள தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாகவும் கலவை வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக.

6. புழு பூச்சிகள்

(எஸ். முத்துவையங்கார், பி.ஏ., (ஆனர்ஸ்) எல்.டி.)

புழுக்களும் பூச்சிகளும் மிகவும் அற்பமானவை என்றும் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி வீண்காலப் போக்கே யென்றும் நம்மில் பலர் எண்ணுகின்றனர். படித்தவர்களிற் சிலரே இப்படி இருக்கும்பொழுது படிக்காதவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நம்மைச் சுற்றி வீட்டிலும் வெளியிலும் பலவகைப் புழுக்களும் பூச்சிகளும் இருக்கின்றன. இவற்றை நன்கு கவனித்து இவற்றின் தன்மைகளையும் குணவிசேஷங்களையும் தெரிந்துகொள்ள நமது பெரியோர் நம்மை விடுவதில்லை. சிறுவர்களாயிருக்கும் பொழுது பூச்சிகளைக் கவனித்து இவற்றுடன் விளையாட நமக்கு விருப்பமிருந்தது. ஆனால் நம் வீட்டில் பெரியோர்கள் அவ்வாறு செய்வதைத் தடுத்திருக்கின்றனர். அதனால் இப்பிராணிகள் அற்பமானவை என்ற எண்ணமே நம் மனத்தில் ஊறியிருக்கிறது.

இப்பிராணிகளுக்கு முதுகெலும்பு இல்லை. இவற்றில் எத்துணையோ வகையுள்ளன. ஒவ்வொரு வகையிலும் கோடானுகோடி உயிரினங்கள் இருக்கின்றன. பூச்சிகளே உலகத்துப் பிராணிவர்க்கங்களில் அதிகமானவை. நமது வீடுகளில் சாரை சாரையாக எறும்புகள் கிளம்புகின்றன; கூட்டங்கூட்டமாகக் கொசுக்களும் புறப்படுகின்றன; வீட்டை அசுத்தமாக வைத்திருந்தால் ஈக்கள் மொய்க்கின்றன; வீட்டைக் கவனியாமலே விட்டால் நூல் நூற்கத் தெரிந்த பூச்சிகள் தமது வேலையை தொடங்குகின்றன; அப்பொழுது ஒட்டடைகளும் சிலந்திக் கூடுகளும் மலியும்; ஆகவே நாம் கவனிக்காத வீடுகளைப் புழுபூச்சிகள் கவனிக்கத் தொடங்கிவிடுகின்றன என்பது ஏற்படுகிறது; அவைகளே வீட்டுக்கு உடைமையாளிகளாகின்றன!

இச்சிறு பிராணிகளின் உணவு பல வகைப்படும். பல நிறங்களைப் பெற்ற அழகிய வண்ணாத்திப் பூச்சி சலபப்பூச்சிகளும், தேனீயும் வேறுசில வண்டுகளும் மலர்களில் உண்டாகும் தேனையே ஆகாரமாகக் கொள்ளும். இப்பிராணி

களால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. செடிகொடிகள் காய்பிடிப்பதற்கு ஒரு மலரிலிருக்கும் மகரந்தப்பொடி மற்ரெரு மலருக்குக் கொண்டுபோகப் படவேண்டும். இவ்வாறு மகரந்தம் கொண்டுபோகப்படுவது பெரும்பாலும் வண்டினங் களாலேயே நடைபெறுகிறது. தேனீக்கள் கட்டும் கூடுகளி லிருந்து நாம் தேனைப் பெறுகிறோம். நீர்ப்பொருள் உணவையே தேடும் வேறு சில பூச்சிகள் உள்ளன ; கொசு, மூட்டைப் பூச்சி, தெள்ளுப் பூச்சி, பேன் முதலியன பிராணி களின் இரத்தத்தை விரும்புகின்றன. ஈயோ அசுத்தங்களில் உட்கார்ந்து அதிலுள்ள நீர்ப் பொருளைத் தன் வாயிலுள்ள குழாய் மூலமாக இழுத்துக் கொள்ளும். தத்துக்கிளி கம்பளிப் புழு முதலியன இலைகளை உணவாகக் கொள்ளும்.

புழுபூச்சிகளில் நமக்குத் தீமை விளைக்கின்றவை சில உள்ளன. இவற்றை ஒழிப்பதற்காகவாவது இவற்றின் பண்புகளை நன்கு அறிவது அவசியமாகும்; ஈயால் பல நோய்க் கிருமிகள் பரவுகின்றன. அசுத்தமே இது வளருவ தற்குக் காரணமாதலின் அசுத்தத்தை உடனுடன் அப்புறப் படுத்தி வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கொசுவால் மலேரியா என்ற விஷக்காய்ச்சல் பரவுகின்றது. கொசுக்களில் இரண்டுவகை ; ஒன்று அனோபிலிஸ். மற்ரொன்று கூலக்ஸ். இவற்றில் முதல் வகைப் பெண் கொசுக்களே மலேரியா கிருமிகளை ஒரு மனிதனிடமிருந்து மற்ரொருவனுக்குக் கொண்டு செல்லுகின்றனவாம். எலிகளை வாகனமாகக்கொண்ட தெள்ளுப் பூச்சி பிளேக் என்ற கொடிய தொத்து வியாதியைப் பரப்புகிறது. பிளேக் நோயை உண்டாக்கும் பல கிருமிகள் தெள்ளுப்பூச்சியால் சுமந்து செல்லப்படுகின்றன. தெள்ளுப் பூச்சியைப்போல் நோயைப் பரப்பும் பூச்சிகள் இன்னும் பலவாகும். தொத்து நோய் களைக் குறைப்பதற்கும் நாம் கையாளும் ஒரு வழி இப்பூச்சி வகைகளை ஒழிப்பதே.

சிற்சில புழு பூச்சிகளால் விபரீதமான தீமையில்லா விடினும் முற்றிலும் தொந்தரவு இல்லாமற் போகவில்லை. சிலந்திகள் கூடுகட்டி வீட்டை அசுத்தமாக்கும். பாச்சை

இரவில் பாடிக் காதைத்துளைப்பதுடன் நமது புத்தகங்கள் ஆடைகள் இவைகளிலும் சிறிய துளைகளையும் செய்யும்; நமது விரல்களைச் சில விடங்களில் கடித்துவிடுவதும் உண்டு. குளவிகளும் பெரிய கருவண்டுகளும் நம்மைக் கொட்டிக் கொட்டிய பாகத்தைச் சிறிது நேரம் பிசைந்து கொண்டிருக்கப் பண்ணும். பூரான், செவியான், தேள் முதலியன அதிகமான தொந்தரவைக் கொடுக்கக்கூடியன. இவற்றைக் கண்டாலே பலருக்கு அதிக பயமுண்டு. எறும்புகள் நமது ஆகாரப் பொருள்களைப் பங்கு கொள்ளாமல் அவற்றை விலக்குவது நமக்குப் பெருந்துன்பமாயிருக்கிறது. சர்க்கரை, சர்க்கரை சேர்ந்த உணவுப் பொருள்கள் விஷயத்தில் நமக்கும் எறும்புகளுக்கும் யாதோர் கருத்து வேற்றுமையும் இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது! எறும்பின் ஒரு வகையான கரையான் மரங்களையும் புத்தகங்களையும் செறிக்கத்தக்க குடலைப் பெற்றிருக்கின்றது. மாணவர்களால் ஜீரணிக்க முடியாத புத்தகங்களையும் கரையான் ஒரு கை பார்த்துவிடும்!

மனிதர்களுக்கு நன்மையே செய்யும் பல புழு பூச்சிகளும் இருக்கின்றன. தேனீயின் உதவி முன்பே கூறப்பட்டது. மண்புழுவோ தோட்டக்காரர்களுக்கு நண்பனாகும்; மண்ணைத் துளைத்துச் செல்லும் குணமுடையதால் ஆயிரக்கணக்கான புழுக்களுள்ள ஒரு தோட்டம் இவற்றால் நன்றாய் உழப்படுவது போலாகிறது. வண்ணாத்திப் பூச்சி தேனீ முதலியவற்றால் தாவரங்கள் காய் பிடிப்பது குறிப்பிட்டாயிற்று. சலபப் பூச்சியின் ஒரு வகையே பட்டுப் பூச்சி; இதன் புழுக்கள் முருங்கை இலையைத் தின்று வளர்ந்து பிறகு கூட்டுப் புழுவாகின்றன. இவை ஆக்கும் கூட்டு நூலே பட்டாகிறது. எறும்பு முதலிய சிலவற்றால் துன்பமிருப்பினும் நன்மையுமுண்டு; நாம் ஒதுக்கும் சில பொருள்களை இவை எடுத்துச் செல்வதால் வீடுகளைச் சுத்தமாய் வைக்கின்றன.

புழு பூச்சிகள் நமக்கு நன்மை கொடுப்பினும் தீமை விளைப்பினும், பொதுவாக இவற்றின் வாழ்க்கை கவனிப்போருக்குப் பெரிதும் இன்பத்தைத் தரும் பொழுது போக்கு

யுள்ளது. எத்தனையோ மனிதர்கள் அவ்வாறு கவனித்திருக்கின்றனர். எக்காலத்தும் கவிகள் வண்டுகள் முதலியவற்றைப் பற்றிப் பாடியிருக்கின்றனர்.

பூச்சிகளின் வாழ்க்கையில் மிகவும் ஈடுபட்ட மேனாட்டு விஞ்ஞானி ஜீன் ஹென்றி வாப்ரே நத்தை, தவளை தத்துக்கிளி, வண்டு, முதலிய பிராணிகளின்மேல் சிறுவயதிலேயே மோகங் கொண்டார். எளிய குடியில் பிறந்து மிகவும் கஷ்டப்பட்டாராயினும் இச்சிறு பிராணிகளைப் பற்றி அறிவதை அவர் எக்காலத்தும் கைவிடவில்லை. தக்க வயது வந்தபோது அவர் ஊருக்கு வெளியே ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார்; குடும்பத்தாரும் அவருக்கு மிகவும் உதவியாயிருந்தனர். அவருடைய தோட்டத்தில் பலவித புழு பூச்சிகள் வளர்க்கப்பட்டு வந்தன. அவரும் குடும்பத்தோரும் அவற்றைத் தினம் கவனித்துக் குறிப்புக்கள் எடுப்பதுண்டு. ஒரு கண்ணாடிக் கூண்டில் பத்துப் பன்னிரண்டு தேள்கள் விட்டிருந்தார்; வாப்ரேயும் அவர் மனைவி மக்களும் பலநாள் வரையில் இரவில் உண்டபின் அக்கூண்டைச் சூழ்ந்து அமர்ந்து கவனித்து வந்தனர். தேள்களுடைய கூட்டுறவும் வாழ்க்கையும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும் பிற செய்திகளும் கவனிக்கப்பட்டு வந்தன. இப்படியாகச் சிறு பிராணிகள் உயிருடன் வாழும்பொழுதே கண்டறியப்பட்ட விஷயங்களையெல்லாம் அவர் பெரியதொரு நூலாக்கி நமக்கு உதவியிருக்கிறார்.

வாப்ரே போன்ற பல விஞ்ஞானிகளின் அபாரமான ஆராய்ச்சிப் பலனால் இச்சிறிய பிராணிகளைப் பற்றிப் பல அதிசயங்களை நாம் எளிதில் அறிந்துகொள்ளுகிறோம்.

பல பூச்சிகள் முட்டையினின்று வெளிவரும்பொழுது பெற்றோரைப்போலிருப்பதில்லை. வண்ணாத்திப் பூச்சி பட்டுப்பூச்சி இவை முட்டையினின்று வெளிவரும்பொழுது புழுக்களை யொத்திருக்கின்றன. இப்புழுக்களும் கண்ணைக் கவரும் இறக்கைகளையுடைய வளர்ந்த பூச்சிகளுக்கும் யாதொரு ஒற்றுமையும் காணப்படுகிறதில்லை. புழுக்களே இலைகளைத் தின்று வளர்ந்து கூட்டுப்புழுவாக அசைவற்றுக்

கிடந்து, பிறகு முற்றும் வளர்ந்த பூச்சிகளாக மாறிக் கூட்டைப் பிய்த்துக்கொண்டு வருகின்றன. தேனீ, எறும்பு, கொசு, ஈ முதலியவற்றின் வளர்ச்சியும் பொதுவாக இவ்வாறே உள்ளது. கொசுவின் வாழ்க்கைத் தேங்கிக் கிடக்கும் நீரில் தொடங்குகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் 'கொசுக் குழந்தைகள்' நீரில் நீந்தி நெளிகின்றன. இவையே நாளடைவில் கொசுக்களாகி நீர்வாழ்க்கையை விட்டுப் பிராணிகளின் இரத்தத்தில் வாழத் தொடங்குகின்றன. கொசுப் புழுக்கள் நீரில் வாழும்பொழுது அவை அடிக்கடி நீர் மட்டத்திற்கு வந்து ஒரு சிறு குழாயை வெளியே நீட்டி மூச்சுவிடுகின்றன என்று தெரிகிறது. இதனால் கொசுக்களை அழிப்பதற்கு நீர்நிலைகளில் சிறிது எண்ணெயை கொட்டினால் போதும் என்று கண்டுபிடித்துள்ளனர்; ஏனெனில் எண்ணெய் படர்ந்த நீரின் வழியே அது நிலைத்து நின்று சுவாசிக்க முடியாது போகிறது!

மனித சமூகத்தைத் திருத்தியமைக்க வேண்டுமாயின் தேனீக்களிடமும் எறும்புகளிடமும் சென்று நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். என்ன கட்டுப்பாடு! இவை இரண்டும் தொழிலாளர்களின் சமூகம் என்று சொல்லலாம். சமூகத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவோ உபயோகமின்றியோ இருக்கும் தேனீக்களும் எறும்புகளும் இச்சமூகத்தாரால் அறவே ஒழிக்கப்படும். தேனீயின் கூட்டில் இராணி ஈ கருக்கொண்டு முட்டையிடத் தொடங்கிய பின் சோம்பேறிகளாகிய ஆண் ஈக்களை யெல்லாம் வேலைக்கார ஈக்கள் அழித்துவிடுமாம். இரண்டு இராணி ஈக்கள் ஒரு கூட்டிலிரா. இவ்வேலைக்கார ஈக்கள் கூட்டிற்கு அனுகூலமான வேலைகளைத் தம்முள் பகுத்துக்கொண்டு சரிவரச் செய்து வருகின்றனவாம். தனக்கென்று ஓர் ஈயும் தேன் திரட்டுவதில்லை. எல்லாம் சமூக நன்மைக்கே. அநேகமாக இவ்வாறே எறும்புகளின் சமூகம் வாழுகிறது.

சில புழுக்கள் தம்மைக் காத்துக்கொள்வது மிகவும் வியப்பைக் கொடுக்கின்றது. இலைப்பூச்சி அது வசிக்கும் இலை மேல் அமர்ந்தால் அதனுடைய விரோதிகள் அதைக் கண்டு

பிடிப்பது மிகவும் அரிது. தத்துக்கிளி புல்வெளியில் கிடக்கும்போது அதைக் காணமுடிகிறதில்லை. குச்சிபோலவே நிறமும் உடலும் படைத்த ஒரு பூச்சியும் இருக்கிறது. இது உலர்ந்த குச்சியைப் பற்றிக்கொண்டு நின்ருல் இதை அக்குச்சியினின்றும் பிரித்தரிவது அரிதாகும். ஆப்பிரிக்காவில் விளக்கு ஈ என்றொரு பூச்சி உள்ளது; இதன் தலைமட்டும் மிகச் சிறியதாயிருந்தாலும். உருவத்தில் முதலையின் தலையைப்போல் இருக்கிறதாம். இதன் காரணத்தை ஆராய்ந்ததில் இப்பூச்சிகளை ஆகாரமாகக் கொள்ளும் குரங்குகளைப் பயமுறுத்தவே இத்தலைகளைக் கொண்டிருக்கின்றன என்று தெரிகின்றது. குரங்குகளுக்கு முதலைகளைக் கண்டால் பயம். இப்படிப் பலவகைகளில் பூச்சிகள் தற்பாதுகாப்பைச் செய்துகொள்கின்றன. பூச்சிகளின் வகைகளையும் அவற்றின் வாழ்க்கை விநோதங்களையும் பார்க்கப் பார்க்க இப்படைப்பின் பெருமையை அறிகிறோம். பூச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சி வீண்காலப் போக்கே என்று சொல்வது பொருந்துமா என்று இப்பொழுது யோசித்துப் பாருங்கள்.

வினாக்கள்

1. தேனீக்களால் உண்டாகும் நன்மை யாது?
2. மண்புழு தோட்டக்காரனுக்கு எவ்வாறு நண்பனாகும்?
3. வாப்ரே என்பார் நடத்திய ஆராய்சிகளை எடுத்துக் காட்டுக.
4. விளக்கு ஈ முதலையின் தலையைப்போல் இருக்கக் காரணம் யாது?

கட்டுரைப் பயிற்சி

புழு பூச்சிகளால் உண்டாகும் தீங்கினைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. பின்வருவனவற்றை வாக்கியங்களில் அமைக்க: காலப்போக்கு, கோடானு கோடி.

2. பின்வரும் வடமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக்குக: பிராணிவர்க்கம், ஜீவராசி, திரவப்பொருள், குணாதிசயம், வியாதி, அபிப்பிராயபேதம், ஜீரணித்தல்.

3. புழு பூச்சிகளால் தொந்திரவு இல்லாமற் போகவில்லை—இதனை மாதிரியாக வைத்துக்கொண்டு, 'அவன் வந்தே தீருவான்'—என்பதை எதிர்மறையிற் கூறுக.

4. அவர் வீட்டில் பல பூச்சிகள் வளர்க்கப்பட்டு வந்தன—செய்வினை வாக்கியம் ஆக்குக.

7. நானிலப் பாகுபாடு

(எஸ். வி. வரதராஜ அய்யங்கார், எம். ஏ., எம். ஓ. எல்.)

தமிழர் தரைநூலறிவு

தரை நூல் வல்லாரும் புதை பொருளாராய்ச்சியாளரும் தமது ஆராய்ச்சியின் வாயிலாக உலகில் முதன் முதலாக மாந்தர் தோன்றிய இடம் தமிழகமே என்று உணர்த்தி யுள்ளனர். 'தமிழகம்' என்னும் நிலத்தின் பெயரும் 'தமிழர்' என்னும் மக்கள் பெயரும் மிகத் தொன்மை வாய்ந்தவை; தமிழ் என்னும் மொழியினடியாக உண்டா னவை. தமிழர் பண்டைக் காலத்தில் பூமிக்கு வழங்கிய பெயர் 'நானிலம்' என்பது. இப்பெயரினின்றே தமிழர் தரை நூலுணர்ச்சி உடையராயிருந்தனர் என்பது புலனுகும். நிலத்தின் இயற்கையமைப்பு, விளைபொருள்கள், மக்களின் தொழில், பழக்க வழக்கங்கள், ஒழுக்க முறை, வாழ்க்கை, வழிபாட்டு முறைகள் போன்றவையாவும் இலக்கண வாயி லாகக் கூறப்படுவதினின்றும் அவர்களது தரை நூலறிவு புலனுகும்.

நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும் ஆகிய எல்லையிடப்பட்ட நிலம் 'தமிழகம்' எனப்படும். இந்த எல்லைக்குள் அமைந்து கிடந்த நிலத்தை இயற்கை யமைப்பினை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பிரித்து ஒவ்வொன்றைப் பற்றியும் பலவகைச் செய்திகளையும் முறைப்படுத்தி வகுத் துரைப்பாராயினர் ஆன்றோர்.

தொல்காப்பினர்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்"

என்று இந்த நானிலப் பாகுபாட்டை அந்தந்த நிலத்திற்குரிய தெய்வத்தோடு உரைத்தல் காணலாம்.

செந்தமிழின்பம் என்ற நூலிலிருந்து ஆசிரியரின் அநுமதியுடன் கொள்ளப் பெற்றது.

மிகத் தொன்மையான ஒரு காலத்தில் தென் குமரிக்கும் தெற்கே வெகுதூரம் அமைந்திருந்த பெருநிலப் பரப்பிலும் தமிழர் வாழ்ந்திருந்தனர் என்றும், கடல் கோளினுல் அந்நிலப்பகுதியழிந்துவிட, தமிழர் வாழிடம் குமரியையே தன் தென்னெல்லையாகக் கொள்ள நேர்ந்தது என்றும் கூறுவதுண்டு. இக்கொள்கையை மேனுட்டு அறிஞர் சிலரும் ஏற்றுக்கொள்கின்றனர். கால்டுவெல் துரை மகஞர் கொள்கை 'தமிழ் மக்கள் இமயமலைக்கு வடக்கிலுள்ள குளிர்ந்த நாடுகளிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறியவர்' என்பதாம். இக்கொள்கையை ஆதரிப்பவரும் உளர். "தமிழர் தமிழ் நாட்டுற்குப் புதியவரல்லர். அங்கேயே தோன்றி வாழ்ந்தவரே யாவர்" என்பதுதான் பெரும்பான்மையான தமிழறிஞரின் துணிபாகும்.

இத்தகைய தொன்மையுடைய தமிழர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமக்கென்று படைத்துக்கொண்ட வாழ்க்கை முறை ஒன்று உண்டு. நிலப் பாகுபாட்டை அடிப்படையாகக்கொண்டெழுந்த இந்த வாழ்க்கை முறையை மிக அழகாக எடுத்துரைப்பது தொல்காப்பியம். அதிலுள்ள செய்திகளை நோக்குமிடத்து, தமிழர் அகப்புற ஒழுக்கங்களாகப் படைத்திருந்த தனி நாகரிகம் நனி சிறந்தது என்பதும், வேறெந்த நாட்டினரின் நாகரிகத்துக்கும் அது பின்னடையாதது, பிற்பட்டதுமாகாதது என்பதும் நன்கு விளங்கும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலப்பாகுபாடுபற்றி இனிச்சில கூறுவோம். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சி என்னும் மரம் இந்நிலத்திற்குச் சிறந்ததாதலால் இப்பெயர் வந்தது என்பர். காடுகளும் அவற்றைச் சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். இந்நிலத்தில் சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டது முல்லைக்கொடியாதலால் இப்பெயர் வழங்கலாயிற்று என்பர். வயலும் வயலைச் சார்ந்த வெளிகளும் மருதம் எனப்பட்டது. மருதமாம் இந்நிலத்திற்குச் சிறந்ததாதலால் இப்பெயர் வழங்கலாயிற்று. கடலும் கடற்சார்பான

இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல் என்ற தாவர விசேடத்தால் இப்பெயர் அமைந்தது. இத்தகைய பாகு பாட்டை ஆதாரமாகக் கொண்டு மக்கள் வாழ்க்கைத் திறங்கள் இலக்கணவாயிலாக நன்கு வரையறுக்கப் படுகின்றன.

குறிஞ்சி :

இந்நிலப்பகுதி இயற்கை எழில் மிக்கது. இங்கு வாழ்ந்த பழந்தமிழ்க் குடிமக்களில் ஆடவர் குன்றவர், குறவர் எனப் பெயர் பெற்றனர். மகளிர் குறத்தியர் ஆவர். மலைச் சார்பான இடங்களில் விளையத்தக்க மலை நெல், தினை ஆகியவற்றைப் பயிர் செய்தும், தேனெடுத்தும் கிழங் கெடுத்தும் வேட்டையாடியும் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த மலை நிலத்திலே, அகில், தேக்கு, வேங்கை முதலான மரங்கள் வானளாவி வளர்ந்து நிற்கும். கரடி, புலி, சிங்கம், யானை போன்ற விலங்குகளும், மயில், கிளி, ஆகிய பறவை களும் இங்கு வாழ்வனவாம். காந்தள், வேங்கை சுனைக் குவளை முதலிய மலர்கள் இந்நிலமெங்கும் பூத்துக் காட்சி யளிக்கும். மலைவீழ் அருவிகளும் சுனைநீரும் இந்நிலத்திற்கு நீரை அளிப்பன. மலைச்சாரலில் மாண்புடன் விளங்கிய சிறுகுடியில் இந்நிலமக்கள் இல்லம் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். குறிஞ்சி நிலத் தலைவனுக்குச் சிலம்பன், வெற்பன், பொருப்பன் என்னும் பெயர்கள் வழங்கின. இந்நிலத்திற்கு உரிய தெய்வம் முருகன் ஆவான். ‘முருகு’ என்னும் பெயர் அழகு என்னும் பொருளது. இயற்கையழகு குடி கொண்ட இந்நிலத்தில் வாழ்ந்தோர் அழகனை முருகனை வழிபட்டு வந்தனர். தொண்டகம் என்னும் சிறுபறையும், வெறியாட்டு அயர்தலாகிய விழாவும் இந்நிலத்திற்கு உரியவை. இந்நிலத்திலே தாம்கண்ட இன்பக் காட்சிகளைப் புலவர்கள் விவரிக்கும் திறம் சங்க நூல்களிலே காணத்தக்கது.

முல்லை :

வளமான காடுகள் பசுமைக் காட்சி வழங்கும் முல்லை நிலத்திலே வாழ்ந்த பழந்தமிழ்க் குடிகள் ஆயர் எனப்படுவர். குறும்பொறை நாடன் இந்நிலத்துத் தலைவன் ஆவான். ஆயர், இடையர் என ஆடவரும், ஆய்ச்சியர், இடைச்சியர் என மகளிரும் அழைக்கப் பெற்றனர். இவர்கள் இந்நிலத்தில் வரகு, சாமை முதலிய பயிர்களை விளைத்து வந்தனர். கொன்றை, காயா, குருந்தம் முதலியன இந்நிலத்தில் வளமுற வளரும் மரங்களாம். முல்லைப் பூவும் தோன்றி மலரும் இந்நிலத்தே நறுமணம் வீசும். கானக் கோழியும் மானினங் களும் முயல்களும் இந்நிலத்தில் களித்துத் திரியும் உயிரினங் களாம். பொங்குபுனலுடன் ஓடும் கான்யாறுகள் இந்நிலத் திற்கு நீர்வளம் உதவும். "கான்யாற்று அடைகரை ஊர் இனிது" அன்றோ? பாடி, சேரி எனப் பெயர்கொண்ட வாழிடங்களில் இந்நிலத்தவர் வீடுகளமைத்துச் சீருடன் வாழ்ந்தனர். ஆநிரைகளை ஓம்புதல் இவர்களது சிறந்த தொழிலாகும். 'ஏறுதழுவுதல்' என்பது இவர்கள் மேற் கொண்டிருந்த விளையாட்டு என்பர். குழலூதியும் முல்லை யாழில் சாதாரிப் பண்ணை இசைத்துப்பாடியும் இவர்கள் இன்புறுவர். மாயோனை கண்ணனை இவர்கள் வழிபட்டு வந்தனர். 'செங்கண்மால்' எனப் பரிபாடலும்,

> " அங்கண் முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்
> செங்கண் மால் "

என்று திருத்தொண்டர் புராணமும் கூறுதல் காண்க. ஆயர் பாடியில் வளர்ந்த கண்ணபிரான் அந்நில மக்களிடையே வாழ்ந்து தம் குழலிசையால் அவர்களை வசமாக்கிய சரிதங்கள் தமிழ் இலக்கியங்களில் பெருவழக்குடையன.

> " சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
> செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
> குறுவெயர்ப் புருவங் கூடலிப்பக்
> கோவிந்தன் குழல் கொடு ஊதினபோது

பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே."
"கருங்கண் தோகை மயிற் பீலியணிந்து
கட்டிநன் குடுத்த பீதகவாடை
அருங்கல வுருவினாயர் பெருமான்
அவனொரு வன்குழலூதின போது
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்
இறங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கநோக்கி அவை செய்யும் குணமே;"

என்று முல்லை நிலத்திலே கண்ணன் குழலூதி நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்கள் அனைத்தையும் ஈடுபடுத்தியதைப் பெரியாழ்வார் பெருமிதந் தோன்றப் பாடியுள்ளார்.

"ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றுமிளங் கன்றினமும்
தானுணர்வு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய."
"ஆடுமயில் இனங்களுமங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும் குறைவினையின் துறைநின்றார்."

என்று சேக்கிழார் பெருமானும் முல்லை நிலத்தின் இயற்கை வளத்தைப் பாடுதல் அறிந்து இன்புறத் தக்கது.

மருதம் :

வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருதநிலம் உழுது ஆருயிர் மருந்தாகிய நெற்பயிரை விளைத்தற்கு ஏற்ற தாகும். கிணறுகளும் பொய்கைகளும் யாறுகளும் இந் நிலத்தை வளம்படுத்தும். இத்தொழில் புரிவோர் பெரும் பான்மையோராக இந்நிலத்தில் வாழ்ந்தமை பற்றி உழவர், கடையர் என்று பெயர் பெற்றனர். கடைசியர், உழத்தியர் என்னும் பெயர்கள் மகளிர்க்கு வழங்கின. பசுமைக் காட்சி வழங்கும் பயிர் நிலங்களையடுத்துக் காஞ்சி மருத மரங்கள்

காணப்படும்; வஞ்சிக்கொடி வளமுற்றிருக்கும். தாமரையும் செங்கழுநீரும் குவளையுமாகிய நீர்ப்பூக்கள் இந்நிலத்திற்கு உரியவை. கழனிகளில் செந்நெல்லும் வெண்ணெல்லும் விளைக்கும் இந்நிலவாசிகள், அக்கழனிகளுக்கு இடையே அமைந்திருக்கும் மூதூர், பேரூர் என்று பெயர் பெற்ற ஊர்களிலே வாழ்ந்து வளங்கொழிப்பர். எருமை, நீர்நாய் போன்றனவும் நாரை, அன்னம், குருகு முதலான பறவைகளும் இந்நிலத்தைத் தம் வாழிடமாக உடையன. ஊரன், மகிழ்நன் எனப் பெறுவர் இந்நிலத் தலைவர். இந்திரன் இந்நிலத்திற்குரிய தெய்வமாவான். இங்கு வாழ்வோர் மருதயாழ் பயில்வதும், மருதப்பண் பாடுவதும் மரபு. விழாக்களும் நோன்புகளும் இந்நிலத்தவரால் ஏற்றபெற்றியில் கைக்கொள்ளப் பெற்றிருந்தன.

நெய்தல் :

கடலும் கடற்சார்பான இடமுமாகிய இந்நிலத்தில் வாழும் ஆடவர் பரதவர், நுளையர் எனவும், பெண்பாலர் பரத்தியர் நுளைச்சியர் எனவும் அழைக்கப்படுவர். இவர்கள் கடற்கரையை அடுத்துள்ள பட்டினம், பாக்கம் எனப் பெயரிய குடியிருப்புகளில் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வாழ்வர்; உப்பும் மீனும் விற்றுப் பண்டமாற்றாக உணவுப் பொருள்களைப் பிற நிலத்தவரிடமிருந்து பெறுவர். இந்த நிலத்தில் புன்னைமரமும் தாழைச் செடிகளும் சிறப்பாகக் காணப்படும். தாழையும் நெய்தலும் இந்நிலத்திற்குரிய மலர்களாகும். கடலில் முதலையும் சுறா மீனும், கரைகளில் கடற்காகம், அன்றில், அன்னம் முதலான பறவைகளும் மிகுதியாக வாழும். மணற்கேணிகளும் உவர்க்கழிகளும் இங்குள்ள நீர்நிலைகளாகும். இந்நிலத்துத் தலைமகனுக்குத் துறைவன், கொண்கன், சேர்ப்பன் என்னும் பெயர்கள் வழங்கின. நீருக்குக் கடவுளாகிய வருணனை இவர்கள் வழிபட்டு வந்தனர். நெய்தற் பறையும், விளரி யாழும் செவ்வழிப் பண்ணும் இந்நிலத்திற்கு உரியவை.

இந்நானில மக்களும் தத்தம் நிலங்களிலே நிலைத்து

வாழ்ந்து வந்த போதிலும், தங்கள் நிலத்து விளைபொருள் களைப் பிறநிலத்தவர்க்குக் கொடுத்தும், அந்நிலப் பொருள் களுள் தமக்கு வேண்டுவனவற்றைக் கொண்டும் பண்ட மாற்றுல் வாணிகம் பெருக்கி வாழலாயினர். இயற்கையாக அமைந்த இந்நாளில் மாந்தரும் தத்தம் நிலங்களிலே இயற்கை இன்பம் நுகர்ந்து நன்னெறியைக் கடைப்பிடித்து, "தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐம்புலத் தாரையும் ஓம்பி வாழ்ந்த செய்திகளைத் தமிழிலக்கியங்களில் பரக்கக் காணலாம்.

பாலை :

மேற்கூறிய நான்கு நிலங்களுள் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை நிலமாதல் உண்டு.

> " முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும் "

எனவரும் சிலப்பதிகார அடிகள் காண்க. குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையில் இயல்பாகவன்றிச் செயற்கையால் பாழ்படுவதால் தோன்றும் பாலையைத் தொல்காப்பியர் நடுவு நிலைத்திணை என்பர். பிற்காலத்தவர் இதனை ஒரு தனி நில மாகவே கொள்வர். முற்கூறிய நானிலங்களுமே தம் இயற்கை வளமிழந்து பாழ்பட்டுப் பாலையாகும் என்று கூறு வதும் உண்டு.

> " நானிலம் வாய்க்கொண்டு நன்னீர றமென்று கோதுகொண்ட
> மேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை. "

என்று நம்மாழ்வார் வாக்கால் இதனை அறியலாம். இங்கு வாழ்வாருள் ஆடவர்க்கு எயினர், மறவர் என்று பெயர். பெண்பாலர் எயிற்றியர், மறத்தியர் எனப்படுவர். இன்னோர் பயிர்த்தொழில் புரிவதற்கு ஏற்ற நிலவாய்ப்பு இன்மையால் வழிப்பறி செய்தும் கொள்ளையிட்டும் வாழ்க்கை நடத்த லாயினர். உழிஞை, பாலை, இருப்பை என்னும் மரங்கள் பாலைக்கு உரியவை. குரா, மரா என்ற மரப்பூக்கள் இந்

நிலத்தில் உண்டு. இங்கே சிறப்பான நீர்நிலைகள் கிடையா; நீர் வற்றிய பள்ளங்களும் பாழ்ங்கிணறுகளுமே காணப் படும். பாலை நிலத்தார் வாழும் ஊருக்குக் குறும்பு என்று பெயர். விடலை, காளை என்பவை இந்நிலத்துத் தலைமகனுக்கு வழங்கிய பெயர்கள்.

இவ்வாறு இயற்கையாக அமைந்த நிலங்களைப் பாகுபாடு செய்து, அந்தந்த நிலத்தைப் பற்றிய செய்திகளையெல்லாம் இலக்கண வாயிலாகத் துறைப்படுத்தினர்கள் ஆன்றோர். அவ்விலக்கண அமைதியை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்களால் இலக்கியங்கள் எழுதப்பெற்றன. அவற்றைக் கற்குந்தோறும் தமிழ் இன்பம் நம்முள்ளத்தில் தழைக்கும் என்பதில் தடையில்லை.

இதுவரை கூறியவற்றுல் பண்டைத் தமிழரது தரை நூலறிவும் அதை நுனித்துணர்ந்து இலக்கண இலக்கியங்கள் இயற்றிய அவர்களது திறனும் நன்கு புலனுகும்.

வினுக்கள்

1. தமிழர் தென்னுட்டில் குடியேறியவரா? ஆராய்க.
2. குறிஞ்சி நில மக்களின் தொழில்கள் யாவை?
3. முல்லை நிலத்தைப்பற்றிப் பத்துவரிகள் எழுதுக.
4. பாலை நிலத்தை ஏன் நடுவு நிலைத்திணை என்பர்?

கட்டுரைப் பயிற்சி

பழந்தமிழரின் தரைநூலறிவு என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப்பயிற்சி

1. எதிர்மொழி கூறுக: நிலைத்திணை, பெரும்பான்மை, மூதூர், சிற்றூர், பெருமிதம்.

2. விழா—நோன்பு வேறுபாடு யாது?

3. கீழ்வரும் பகுதிகளையுடைய தொழிற் பெயர்களைக் குறிப்பிடுக: கொள், என், மிகு, பகு, வரையறு.

4. வாக்கியங்களில் அமைக்க: பாகுபாடு, பொருளது, வழக்கின.

8. ஏழையின் செல்வம்

(கா. ஸ்ரீ. ஸ்ரீ.)

"நாராயண விலாஸ்" என்ற பெயரிலிருந்தே அந்தப் பங்களாவின் உருவத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். 'நாராயணன் கோவிலுக்கு நாலு பக்கமும் வாசற்படி' என்று சொல்வார்களே, அதுபோல நாலு புறமும் மேலே கமான் வளைத்த மண்டபங்களோடு நாலு வாசல்கள். இவற்றில் ஏதாவது இரண்டில் எப்போதும் கார்கள் நின்றிருக்கும். வாசலைத் தாண்டி உள்ளே போனதும், நாலு புறமும் நான்கு பெரிய கூடங்கள். மேல்நாட்டு முறையில் அலங்கரித்தது ஒன்று; இந்து அரசர்களின் சபா மண்டபத்தைப் போலத் தோன்றியது இன்னொன்று; முகலாயப் பாணியில் காட்சியளித்தது மற்றொரு கூடம்; பெண்களுக்காக விடப்பட்டது மற்றொன்று; அங்கே எப்போதும் அல்லி ராஜ்யமாக இருக்கும். மனிதனுக்கு மிகவும் அவசியமான வயிற்றுப் பாட்டுக்கு உரிய வசதிகளெல்லாம் பின் கட்டிலே இடம் பெற்றன. இரண்டாம் கட்டிலில் இம்மாதிரியே நான்கு சாப்பாட்டுக் கூடங்கள்.

இப்படிக் கீழ்க்கட்டிடத்தைப் பொதுஜன உபயோகத்துக்கு விட்டுவிட்டு, மேல்மாடியை மட்டும் நாராயணன் தம் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொண்டார். மேல்மாடியில் ஒரு பெரிய கூடத்தைத் தவிர்த்து, மற்றவை தனித்தனி அறைகள். இவற்றில் ஒரு புறத்து அறைகளைச் சந்தர்ப்பம் நேரும்போது கூடமாக மாற்றிக்கொள்ளலாம். இரும்புப் பேழைகளும், புத்தக அலமாரிகளும், கொலுச்சாமான்கள் நிறைந்த அறைகளும், குளிக்கும் அறைகளும், உடைகளை மாற்றிக்கொள்ள அறைகளுமாக—அந்தக் கட்டிடம் இன்பங்களுக்கெல்லாம் உறைவிடமாக இருந்தது.

முன்வாசலில் ஆரம்பித்த தோட்டம் இருபுறங்களிலும் வளைந்து பின்கட்டில் ஒரு பெரிய தோப்பாக உருவெடுத்

அன்னபூரணி என்ற நூலிலிருந்து ஆசிரியரின் அநுமதியுடன் கொள்ளப்பெற்றது.

திருந்தது. மதில் புறமாக ஒரு நடைபாதை. அதனருகே ஒரு பூந்தோட்டம். இப்படியாக 'நாராயண விலாஸ்' நாராயணனுடைய வைபவ விலாசத்தை வெளிப்படுத்தியது.

பூந்தோட்டத்தின் பக்கத்தில் மணல்வெளியில் ஐந்தாறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. பெண்களின் கூட்டத்திலிருந்து மூன்று பெண்மணிகள் வெளியே வந்தார்கள்.

"சந்திரன் எங்கே? நேரமாச்சு; அவர் வந்து விடுவார்" என்றாள் பத்மா.

"போகலாமே மாமி, என்ன அவசரம்?—சந்திரன் அதோ விளையாடிக் கொண்டிருக்கிறான். அவன் இங்கேதான் இருக்கட்டுமே!" என்றாள் சரோஜா. அவளுக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். அவள் எப்போதும் பெரியவர்களோடுதான் பழகிப் பேசுவாள்.

எதிரே நின்றிருந்த பெண்மணிக்கு முப்பத்தைந்து வயதுக்குக் குறைவு இராது. ஆனால் பார்வைக்கு ஐந்து வயது குறைந்தவளாகத் தோற்றினாள். காதில் வைரத் தோடுகளைப் போலவே அவள் முகமும் பளபளத்தது. ஊட்டமாக வளர்ந்த தேகமாதலால், அவள் ஆரோக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கினாள். அவளுடைய வளைக்கரங்களில் செம்மையான ரேகைகள் தளதளவென்று மின்னின. தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவள், பத்மாவின் பக்கமாகத் திரும்பி, "விளையாடும் குழந்தையை இப்போது நீங்கள் அழைத்துப் போகாவிட்டால் என்ன? நாங்கள் காலையில் வீட்டுக்குக் கொண்டுவிடுகிறோமே" என்றாள்.

"சரி, அப்படியே செய்யுங்கள்" என்று கூறிவிட்டுப் பத்மா வீட்டுக்குப் புறப்பட்டாள். அவளுக்காக எந்தக் காரும் காத்திருக்கவில்லை. அவள் வேகமாக நடந்து சென்றாள்.

"அவ்வளவு செல்வம் இருக்கிறதே. கமலாவுக்குத் துளிக் கர்வம் உண்டா? என்னோடு உடன்பிறந்தவள் மாதிரி பழகுகிறாள். 'காலையில் கொண்டு விடுகிறோமே?' எவ்வளவு அடக்கமான பேச்சு! இன்னொருத்தியாக இருந்தால், காலையில் டிரைவரைக் கொண்டுவிடச் சொல்லுகிறேன்'

என்று ஜம்பமாய்ப் பேசுவாள் அல்லவா ? இவ்வளவு செல்வமும் அவளுடைய அந்த அடக்கத்திலே அடங்கியிருக்கிறது' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

* * *

ஆபீசிலிருந்து வீடு திரும்பிய வேங்கடேசன் காபி அருந்தியதும், " குழந்தை எங்கேடீ ?" என்று கேட்டான்.

" நான் வரும்போது கமலம்மாளின் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தான். அவர்கள், " இங்கேதான் இருக்கட்டுமே. காலையில் கொண்டு விடுகிறோம் " என்றார்கள். சரி என்று விட்டு வந்திருக்கிறேன் " என்றாள் பத்மா.

வெங்கடேசனுக்கு அவள் பேச்சுப் பிடிக்கவில்லை. " குழந்தையைக் கூடவே அழைத்து வருவதற்கென்ன ?" என்று மெல்லிய குரலில் கேட்டுவிட்டு வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். எதிரே ஒரு பணக்காரரின் பங்களா. அவர்கள் வீட்டு மயில், மாலைவேளையில் மதில்மேல் வந்து உட்காரும். வாசலில் வந்து ஆடும். அன்றும் அந்த மயில் வந்தது.

வேங்கடேசனுக்குப் பொழுது போகவில்லை. அவன் தினமும் ஐந்து வயதுள்ள தன் குழந்தை சந்திரனுடன் அங்கே விளையாடுவான். குழந்தையோடு மயிலைப் பார்க்க அவனுக்கு ஆனந்தமாக இருக்கும். ' இன்று இந்த மயில் ஏன் வந்தது ?" என்று அவனுக்குத் தோன்றிற்று. குழந்தையோடு பொழுது போக்குவதிலே இருந்த இனிமை இப்போது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. ' நான் போய்க் குழந்தையை அழைத்து வரலாமா ?' என்று அவன் யோசித்தான். அவனுக்கு வருமானவரி இலாக்காவில் வேலை. ' நாராயணனிடம் ஏதாவது ஒரு விஷயத்தைப் பேசிவிட்டுச் சந்திரனை அழைத்து வந்துவிடலாம் ' என்று கருதினான். தன் செல்வம் முழுவதும் அந்தப் பங்களாவுக்குப் போய்விட்டதுபோல, அவன் உணர்ந்தான். ஆயினும் மற்றோர் எண்ணம் எழுந்தது ; ' அவர்கள் என்ன நினைத்துக்கொள்ள மாட்டார்கள் ! " அடே, இவனுக்குத்தான் குழந்தையா ? நாம் குழந்தைகளைப் பெறவில்லையா ? ஒரு ராத்திரி, குழந்தைகளோடு

குழந்தையாக அவன் இருக்க இவனுக்குப் பொறுக்க வில்லையே!'' என்றுதான் சொல்லிக்கொள்வார்கள்? எதற் கும் பொழுது விடியட்டும். நாராயணனும் இப்போது வீட் டில் இருக்கமாட்டார். ஒன்பது மணிக்குத்தான் அவர் வரு வது வழக்கம்!'

இதே எண்ணம் அவனுக்குச் சிறிது ஆறுதலை அளித் தது. 'காலையில் போகலாம்' என்று தீர்மானித்துச் சாப் பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான்.

* * *

விளையாட்டு முடிந்ததும், சந்திரன் மற்றக் குழந்தைக ளோடு பங்களாவுக்குள் நுழைந்தான். இவ்வளவு நேரம் சிரிப்பும் கொம்மாளமுமாக இருந்த அவனுக்குத் தாயின் நினைவு வந்தது. "வாடா கண்ணு!'' என்று கமலா அவனை வரவேற்று அணைத்து முத்தமிட்டாள். அவனுக்கு அந்த முத்தம் பிடிக்கவில்லை. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனிடம் ஓர் ஏக்கம் குடிகொண்டது. "அம்மா எங்கே?'' என்று அவன் மெதுவாகக் கேட்டான். கண்கள் நீரில் நனைந்தன.

அதற்குள் அங்கே சரோஜா வந்தாள். "என்னோடு வா, பாப்பா!'' என்று அவனை மேல்மாடிக்கு அழைத்துக்கொண்டு போனாள். இரண்டு மூன்று அறைகளைத் திறந்து ஏராளமான பொம்மைகளைக் காட்டினாள். கருங்கல்லிலும் தந்தத்திலும் தேவதாரு மரத்திலும் சலவைக் கல்லிலும் செய்த விலை யுயர்ந்த பொம்மைகள். அவற்றைப் பார்த்து அவன் பிரமித் துப் போனான். இதற்குள் சரோஜா அவனிடம் ஒரு பொட் டலத்தைக் கொடுத்தாள். நிறைய மிட்டாய்கள்! இம்மாதிரி யான பொம்மைகளையும் மிட்டாய்களையும் அவன் பார்த்ததே இல்லை. அங்கே வந்த கமலா, "குழந்தை சமத்தா இருக் கிறானே! இந்தா சந்திரா, இதை உனக்கே வைத்துக் கொள்!'' என்று ஒரு தேவதாரு யானையை அவன் கையில் கொடுத்தாள்.

எல்லாக் குழந்தைகளோடும் சாப்பிட உட்கார்ந்த பொழுது, அவனுக்கு மறுபடியும் அம்மாவின் ஞாபகம்

வந்தது. 'அப்பாவோடு இன்று நாம் விளையாடவில்லையே!' என்ற நினைவு வந்தது. திடீரென்று, "நான் அப்பா போகணும்" என்று அழத் தொடங்கினான். கமலா அவனைச் சமாதானப் படுத்தினாள். "நீ சாப்பிடு; உடனே உன்னைக் கொண்டுபோய் விடுகிறோம்" என்றாள். அவன் சாப்பிட்டான்.

அவனுக்கு யாவும் புதியனவாக இருந்தன. அவன் வீட்டிலே இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரையில் அவனுக்கு எல்லாம் தெரியும். இங்கே ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்குப் போகும் வழிகூட அவனுக்குத் தெரியவில்லை. 'நம் வீடும் இவ்வளவு பெரிதாக இருந்து, நமக்கும் இத்தனை பொம்மைகள் இருந்தால் எப்படி இருக்கும்!' என்று அவன் எண்ணலானான். கமலாவினிடம் அவனுக்குச் சிறிது பற்று உண்டாயிற்று. 'அவளும் அம்மாவைப் போலத்தான் இருக்கிறாள்' என்று நினைக்கலானான்.

சாப்பாடு ஆனதும், கமலா அவனை மொட்டைமாடிக்கு அழைத்துப்போய் ஒரு கதை சொன்னாள். "உன் பெயர் சந்திரன் அல்லவா? அதோ தெரிகிறானே சந்திரன், அவனும் உன்னைப்போல ஒரு காலத்தில் குழந்தையாக இருந்தான். அவனுடைய அம்மா பொல்லாதவள். அவனை எப்போதும் விளையாட விடமாட்டாள். ஒரு சிறு அறையிலே அடைத்து வைப்பாள். எங்கே போனாலும் அவனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போவாள்; திரும்பி வந்ததும் அந்த அறையில் அடைத்துவிடுவாள். அவன் ஏதாவது மிட்டாய் கேட்டால், 'சோறுதான் கொட்டிக் கொள்கிறாயே; அது போதாதா உனக்கு?' என்று மிரட்டுவாள். அந்த அறையிலேயே அடைந்து கிடந்த சந்திரன் இந்த உலகத்தைப் பார்க்கவில்லை; இவ்வளவு பெரிய தோட்டத்தைப் பார்க்கவில்லை; இத்தனைப் பெரிய பங்களாவைப் பார்க்கவில்லை. ஒருநாள், அவன் அம்மாவோடு வெளியே வந்தபோது, "அதோ அந்த பங்களாவுக்குப் போய்ப் பார்க்கிறேன், அம்மா!' என்றான்; அவன் அந்த பங்களாவை நோக்கி ஓடினான். 'வேறொருவர் வீட்டுக்கு நாம் போகக்கூடாது' என்று தாய் அவனை மிரட்டி

ளுள். அவன் அவள் கையிலிருந்து திமிறிக்கொண்டு ஓடி ஞன். அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. அவனைப் பிடித்து முதுகில் ஓர் அறை ஓங்கி அறைந்தாள். அவனுக் குக் கோபம் வந்துவிட்டது. ஆகாயத்தில் போய் உட்கார்ந்து விட்டான். இப்போது அவன் உலகம் முழுவதையும் ஆசை தீரப் பார்க்கிறுன் '' என்று சொன்ஞள்.

அந்தக் கதை அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆகாயத்துக்குப் போய் அந்தச் சந்திரனேடு பேசலாமா என்று எண்ணிஞன். அவனுக்குத் தூக்கம் வந்தது.

கமலா அவனைப் பஞ்சணை மெத்தையில் படுக்க விட் டாள். மின்சார விசிறிகள் அந்தக் குழந்தையைச் சுற்றிச் சுழன்றன.

காலையில் எழுந்ததும் வேங்கடேசன், ''குழந்தையைப் போய் அழைத்து வரட்டுமா?'' என்று பத்மாவைக் கேட் டான்.

''உங்களுக்கு என்ன அவ்வளவு ஆத்திரம்! அவர்களே கொண்டு விடுவார்கள் '' என்று அவள் சொன்ஞள்.

''பார்த்துக் கொண்டே யிருக்கையில் எனக்கு ஆபீசுக்கு நேரமாகி விடும். சாயங்காலந்தான் குழந்தையைப் பார்க்க வேண்டும்!'' என்று அவன் அலுத்துக் கொண்டான். ''குழந்தை அழாமல் அங்கே எப்படி இருக்கிறுன்!'' என்று ஆச்சரியப்பட்டான்.

அவன் ஆபீசுக்குப் புறப்பட்டான். அது வரையில் சந்திரன் வரவில்லை. ''சரி, நீ போய்க் குழந்தையை அழைத்து வந்துவிடு '' என்று பத்மாவிடம் சொல்லிவிட்டுப் போஞன்.

காலையில் எழுந்த சந்திரனுக்கு அது புது உலகமாக இருந்தது. சரோஜா அவனை படுக்கையிலிருந்து ஸ்நான அறைக்கு அழைத்துப் போய்ப் பல் துலக்கியதும் கமலா வந்தாள். அவள் அவனைக் குளிப்பாட்டிஞள். ''தந்த விக்கிரகம் போல் எவ்வளவு அழகாக இருக்கிறுன் குழந்தை!'' என்ருள். ''எனக்கு இப்படி ஒரு தம்பி இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! என்று சரோஜா அங்கலாய்த்துக் கொண்

டாள். அவர்கள் ஏன் இப்படி செய்கிருர்கள் என்பது சந்திர னுக்குப் புரியவில்லை. மற்றக் குழந்தைகள் எல்லாம், நாரா யணனுடைய உறவினரின் குழந்தைகள் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

எதனுலோ, அவனை அறியாமலே கமலாவிடமும் சரோஜா விடமும் அவனுக்கு அன்பு ஏற்பட்டது. 'அப்பாவும் அம்மா வும் இங்கு வந்துவிட்டால், எல்லாருமாக எவ்வளவு சுகமாக இருக்கலாம்! அந்தச் சின்ன வீட்டைவிட இது எவ்வளவு நன்ருக இருக்கிறது!'—இப்படியெல்லாம் அவன் நினைவு ஓடியது.

காலைச் சாப்பாடு ஆனதும், "அந்தப் பொம்மைகளைப் பார்க்கலாமா?" என்று அவன் சரோஜாவைக் கேட்டான்.

பகலில் அவன் தாய் வந்தாள். அவன் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டு அதிசயித்தாள். "அம்மா, நீயும் இங்கே வந்துவிடு" என்று அவன் தாயிடம் சொன்னுன்.

அவள் அவனை வீட்டுக்கு அழைத்துப் போகப் புறப்பட்ட போது அவன் மனம் என்னமோ குறையுற்றது. அவனுக்குப் போக விருப்பம் இல்லை. அதைத் தெரிந்து கொண்ட கமலா, "அவன் இரண்டு நாளைக்கு இங்கே இருக்கட்டுமே. நாங் களே கொண்டு விடுகிருேம்" என்ருள். வீட்டில் கறந்த பாலை ஒரு கிண்ணத்தில் கொட்டிப் பத்மாவிடம் கொடுத்தாள். பத்மா, 'குழந்தை இங்கேதான் இருக்கட்டும்' என்று எண்ணிப் புறப்பட்டாள்.

மாலையில் வேங்கடேசன் வந்ததும், குழந்தை வராத தைக் கண்டான். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. காபியை அரைகுறையாகக் குடித்துவிட்டு, "நாராயண விலா"சுக்கு வந்தான். கமலாவும் சரோஜாவும் சந்திரனை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போயிருந்தார்கள். கார் திரும்பிவரும் வரையில் வேங்கடேசன் காத்திருந்தான். காரில் அவர்கள் வந்து இறங்கியதும் சந்திரன் துள்ளியோடித் தந்தையிடம் வந்தான்.

"அப்பா, நீயும் அம்மாவும் இங்கேயே வந்து விடுங் கள்" என்று அவன் கொஞ்சினுன்.

" இங்கே என்ன வேலை ? நீ வா, நம் வீட்டுக்குப் போகலாம். "

" அம்மா வரவில்லையா உன்னோடு ? என்று குழந்தை கேட்டான்.

" அவள் உனக்காக வீட்டில் காத்திருக்கிருள். அந்த மயில் வந்திருக்கிறது, உன்னைப் பார்க்க நம் வீட்டு வாசலில் காத்திருக்கிறது."

" மயிலா ? அந்த மயில் இங்கு வராதா ?"

" வராது. இங்கே நமக்கு என்ன வேலை ? இது நம் வீடு அன்று ".

" ஏன் அப்பா, நாம் இந்த வீட்டிலேயே இருக்கலாமே ! இங்கே சரோஜா இருக்கிருள் ; கமலா மாமி இருக்கிருள் ".

" உனக்கு உலகம் தெரியாது, குழந்தாய் ! அவர்கள் பணக்காரர்கள், நாம் ஏழைகள். அவர்களுடைய மாளிகையில் அவர்கள் இருப்பார்கள் ; நம்முடைய சின்ன வீட்டில் நாம் இருப்போம்."

முதல் நாள் இரவு கமலா சொன்னதை அந்த ஐந்து வயதுச் சிறுவன் நினைத்துப் பார்த்தான். அந்தக் கதையில் சந்திரனுடைய தாய் அவனை உலகத்தைப் பார்க்கவிடாமல் அறையில் அடைத்து வைத்தாளே ; அப்படித்தான் இந்த பங்களாவும் இருக்குமோ என்று நினைத்தான். பணக்காரர்கள், ஏழைகள்—இந்தச் சொற்கள் அவனுக்குப் புரியாதவை. ஆனல் உலகத்துக்கும் அந்தச் சொற்களுக்கும் ஏதோ தொடர்பு உண்டு என்பதை அவன் அறிந்து கொண்டான்.

அப்படியானல் அவன் வேறு இனம், அவர்கள் வேறு இனம் ! அவர்களோடு இவன் எப்படி அவ்வளவு நெருங்கிப் பழகினன் ? அப்படியே பழகியிருந்தால் பிறகு என்ன நேர்ந்திருக்குமோ ?—இதை எண்ணியதும் அவன் மனத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

" சரி, வா அப்பா போகலாம். மயிலைப் பார்த்து விளையாடலாம் " என்று கூறி, அவன் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டான்.

வேங்கடேசன் உள்ளே சென்று, " நான் குழந்தையை

அழைத்துப் போகிறேன், அம்மா!'' என்று கமலாவிடம் விடை பெற்றுக் கொண்டான்.

கமலாவுக்கும் சரோஜாவுக்கும் சந்திரன் வீட்டுக்குப் போவதைக் கண்டு மனம் கலங்கியது. அவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அந்தப் பங்களா முழுவதும் அவர்கள் கண்ணுக்கு வெறிச் சென்று இருந்தது.

வினாக்கள்

1. 'நாராயண விலாச'த்தின் சிறப்பைப் புலப்படுத்துக.

2. கமலாவின் செல்வ மாளிகையில் குழந்தை சந்திரன் காலம் கழித்ததெப்படி?

3. சந்திரன் தன் வீட்டுக்குத் திரும்பக் காரணம் என்ன?

4. ஏழையின் செல்வம் என்ற பெயர் இப்பாடத்துக்குப் பொருந்து மாற்றை விளக்குக.

கட்டுரைப் பயிற்சி

ஏழையின் கண்ணீர் என்ற தலைப்பிட்டு அதற்குப் பொருந்த ஒரு சிறு கதை எழுதுக.

மொழிப் பயிற்சி

1. வாக்கியத்தில் அமைக்க: கொம்மாளம், பாணியில், உரு வெடுத்தாற்போல், இப்படியாக.

2. வேறொன்று, பிறிதொன்று, மற்றொன்று, பின்னொன்று—இவை தொடர்ச்சியாகத் தனித்தனி வாக்கியங்களில் அமையுமாறு சில வாக்கியங் களை எழுதுக.

3. வீட்டின் பகுதிகளாக இந்தப் பாடத்தில் வந்துள்ள சொற்களைத் தொகுத்துக் கூறுக. உ-ம். கூடம், கட்டு, மாடி—இந்த முறையில் கோவில் சம்பந்தமான சொற்கள் சிலவற்றை எழுதுக.

9. அறப்போர்

(கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.)

உலகில் தோன்றிய உயிர்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாகச் சில தொழில்கள் இருக்கின்றன. உண்பது, உறங்குவது, சந்ததியை உண்டுபண்ணுவது ஆகிய செயல்கள் பறவை, விலங்கு, மக்கள் என்ற எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. உடம்போடு கூடிய உயிர்களாகிய இவற்றிற்கு உடம்பின் தொடர்புடைய செயல்களில் பல பொதுவாக இருப்பது இயல்பு.

ஆயினும் இந்தப் பொதுவான செயல்களில் ஆறு அறிவுடைய மனிதன் தன்னறிவைப் பயன்படுத்திக் கொள்கிருன். கீரைப் பாத்தியில் கீரை நன்ருக வளர்ந்திருக்கிறது. அந்தக் கீரையை மாடும் உண்ணும்; மனிதனும் உண்ணுவான். மாடு தன் நாக்கை வளைத்துச் சுருட்டிப் பாத்தியில் இருந்தபடியே கீரையை உண்டு விடும். மனிதன் அப்படிச் செய்வதில்லை. கீரையைப் பக்குவமறிந்து பறித்துத் தண்டைக் குழம்புக்கும் கீரையை மசியலுக்கும் உபயோகப்படுத்துகிருன். கீரையை கீரை வடைக்கும் பயன்படுத்துகிருன். அவனுக்குள்ள அறிவை உணவு விஷயத்தில் செலுத்திச் செயல் செய்வதால் இந்த நாகரிகம் அமைகிறது. இப்படியே களைத்தபோது கிடைத்த இடத்தில் உறங்குவது விலங்கு. மனிதனே கட்டில் தேடி, மெத்தையும் தலையணையும் தேடி உறங்குகிருன், உணவை உண்டு பசி தீர்வதும் உடம்பை மறந்துறங்கி இளைப்புத் தீர்வதும் விலங்குக்கும் மனிதனுக்கும் பொதுவாக இருந்தாலும், உண்ணுதற்கமைந்த உணவுப் பொருளையும், உறக்கத்துக்குத் துணையான பொருள்களையும் அழகழகாக இனிமையாகக் கலைத்திறம் படைத்தனவாக அமைத்துக் கொள்ளும் அறிவு மனிதனிடம் இருக்கிறது.

மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அவனுடைய அறிவு விளங்குகிறது. அவன் செய்யும் காதலில் அன்புடன்

அறப்போர் என்னும் புத்தகத்தினின்று ஆசிரியரின் அநுமதியுடன் கொள்ளப் பெற்றது.

அறிவும் இருக்கிறது. அவன் மக்களை வளர்க்கும் முறையிலும் அன்போடு அறிவு விளங்குகிறது. பசுவானது தன் கன்றுக்குப் பாலூட்டுவதும் தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டுவதும் பொதுவான செய்கையே. ஆனால் தாய் அறிவுடையவளாதலின் அவள் செய்கை நாகரிகமாக இருக்கிறது.

கோபம் வந்தால் விலங்கினங்கள் தம்முள்ளே போரிடும் ; ஒன்றை ஒன்று கொன்றுவிடும். சில சமயங்களில் ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தை எதிர்த்துப் போரிடுவதும், ஒரு விலங்கே வேறு விலங்குக் கூட்டத்தை எதிர்த்துக் குலைப்பதும் காட்டு வாழ்க்கையில் நிகழ்கின்றன. மனிதனுக்கும், கோபம், பகை எல்லாம் உண்டு. அவற்றோடு அவனுக்கு அறிவும் இருப்பதால் அந்தத் தீய குணத்தை அடக்கப் பார்க்கிறான். அறிவிலே பழுத்தவர்கள் கோபமே இல்லாமல் வாழ்கிறார்கள். எல்லோருமே அப்படி இருந்துவிட முடியுமா ?

கோபத்தை வராமலே அடக்குவது பேரறிவு. கோபம் வரும்போதும், வந்த பின்னும் அடக்குவது அதைவிடக் குறைந்த அறிவு. வந்தபின் வார்த்தையளவிலே அந்த சினத்தைக் காட்டி அமைவது அதைவிடக் குறைவான அறிவு. ஆனால் வார்த்தைகளுக்கும் அப்பால் சினம் செல்வதுண்டு, பிறரை அடித்தலும், கொலை செய்தலும் ஆகிய செயல்களாக அந்தக் கோபம் விளைவதும் உண்டு. அப்போதுகூட மனிதனுக்கு அறிவு இருப்பதனால் தந்திரமாகவும், கருவிகளைக் கொண்டும் அந்தக் காரியங்களைச் செய்கிறான்.

ஒரு சமுதாயமே மற்றொரு சமுதாயத்தை எதிர்ப்பதும் உண்டு. அதைப் போர் என்று சொல்வார்கள். இந்தப் போருக்கு மூலகாரணம் தனிமனிதனுடைய விருப்பு வெறுப்பு அன்று ; ஒரு சமுதாயத்தினரின் நன்மை தீமைகளை எண்ணியே போர் நிகழ்கிறது. உலகத்தில் எந்த நாடும் போர் செய்யாமல் இருந்ததில்லை. தனி மனிதனுடைய வாழ்க்கை வரலாற்றுக்கும் ஒரு நாட்டின் சரித்திரத்துக்கும் அடிப்படையான வேறுபாடு இது. மனிதன் தன்னுடைய ஆற்றலால் கல்வி செல்வம் ஆகியவற்றை ஈட்டி

உயர்கிருன். அவனுடைய ஜீவிய சரித்திரத்தில் அவன் செய்த ஆக்க வேலைகளே பெரும்பாலும் இடம் பெறுகின்றன. ஆனல் தனி மனிதர் பலர் சமுதாயமாக வாழும் நாட்டினது சரித்திரத்தைப் பார்த்தாலோ போர்ச் செயல்களே சிறப்பான பகுதிகளாக இருக்கின்றன. சரித்திரம் என்பதே போர் நிகழ்ச்சிகளின் கோவை என்றுகூட மாணுக்கர்கள் நினைத்துப் படிக்கும் அளவுக்குச் சில நாட்டு வரலாறுகள் அமைந்திருக்கின்றன.

போரில் ஈடுபடுபவனும் மனிதன்தான். ஆகவே அதிலும் அவன் தன் அறிவைப் பயன்படுத்திக் கொள்கிருன். பகைவர்களை எளிதிலே மாய்க்கும் படைகளைக் கண்டு பிடிக்கிருன். அவனுடைய கல்வி, செல்வம் மனித சக்தி எல்லாம் போரில் ஈடுபடுகின்றன. இதனுல் போர் செய்தலையும் ஒரு கலைபோல எண்ணி அதற்குரிய கருவிகளையும் முறைகளையும் பெருக்கி வருகிருன்.

மனிதனுடைய அறிவு பகைவனை அழிக்கும் திறத்தில் ஈடுபடுகிறது; அதனுல் மனித சமுதாயத்தின் போரில் சில நாகரிக முறைகள் அமைகின்றன. மனிதர்களுக்குள் கோபமே வராமல் அடக்கும் சான்ருேர்களும், வந்த பிறகும் செயற்படாமல் அமையும் நல்லவர்களும் இருக்கிருர்கள். அவர்களுடைய அறிவு மனித சமுதாயம் ஒன்றனை ஒன்று அழித்துக்கொள்ளும் போரில் ஈடுபடுவதற்கு உடம்படுவதில்லை. இந்த வெறியை எப்படி அடக்கலாம் என்று எண்ணி அதற்குரிய வழி துறைகளை வகுக்கப் புகுகிருர்கள். ஒரு பால் போரைத் திறம்பட நடத்திப் பகைவரை அழிக்கும் கலை வளர்ந்து வந்தாலும் ஒரு பால் போரே நிகழாமல் அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற கருணையும் படர்ந்து வருகிறது. உலகில் எந்தச் சமுதாயத்திலும் கருணையுடைய சான்ருேர் மிகச் சிலரே இருக்கக்கூடும். ஆதலின் போர் நிகழ்வது அதிகமாகவும், நிகழாமல் அமைவது குறைவாகவும் இருக்கின்றன. ஆயினும் அந்த நல்லோர்களுடைய அறிவும் கருணையும் போரை அறவே தடுத்து நிறுத்தாவிட்டாலும் போரிலும் சில வரையறைகளைக் கடைப்பிடிக்கும்படி

செய்தன. வீட்டில் அழுக்குப்படாமல் இருப்பது நல்லது. ஆனாலும் மனிதன் அழுக்குச் செய்கிறான். வீடு முழுவதும் அழுக்கடையும்போது அதை அலம்புகிறோம். கழுவிய நீரைப் பல இடங்களிலும் பரவவிடாமல் ஓரிடத்தில் விட்டு அதற்கு எல்லை கோலிச் சாக்கடை ஆக்குகிறோம். மனித சமுதாயத் திலும் அழுக்கு முழுவதையும் தடுக்க வகையில்லாவிட்டாலும் பலவகை அழுக்குகளை வரையறைக்கு உட்படுத்தி வெளிப் படுத்தும் சாக்கடைகளை பெரியவர்கள் வகுத்திருக்கிறார்கள்.

இதனால்தான் போரிடுபவர்களிடையிலும் சில விதிகள் இருக்கின்றன. போர் செய்வதற்கும் சில சட்டங்கள் உலகத்து நாடுகள் பலவற்றுக்கும் பொதுவாக இருக்கின்றன. தனி மனிதன் தனி மனிதனைக் கொலை செய்யும் திறத்தில் ஒரு வரையறையும் இல்லை. அதை அறவே விலக்க வேண்டும் என்று எல்லோருமே ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆகவே கொலை செய்வது குற்றமாகி விட்டது. ஆனால் தொகுதியாகச் சேர்ந்து கொலை செய்யும் போர் குற்றமாகவில்லை. ஞானி களுக்கும் மனிதப் பண்பை வளர்ப்பவர்களுக்கும் அது குற்ற மாகவே தோன்றும். முன்னே சொன்னபடி அப்படி நினைப்பவர்கள் சிலரேயாதலால் போர் குற்றமாக வில்லை. ஆனால் போர் செய்யும்போது சிலவரையறைகளை அமைத் திருப்பதால், சில முறைகள் குற்றமாக எல்லா வகையின ராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

புலால் உண்பதே தவறுதான். ஆனாலும் எல்லோருமே புலால் உண்ணாமலே இருப்பது என்பது இன்றைய உலகில் நடக்கக் கூடியதாக இல்லை. அதனால் நல்லவர்கள் புலால் உண்பவர்களுக்கும் ஒரு தர்மத்தைச் சொல்லி வைத்தார்கள். 'நீ பசுவின் புலாலை உண்ணாதே; அமாவாசையில் புலாலை உண்ணாதே!' என்று வரையறை செய்தார்கள், புலாலே உண்ணாமல் இருப்பதைவிட இந்த வரையறையின்படி நடப்பது எளிதாக இருக்கிறது. ஆதலின் இந்த நாட்டில் புலால் உண்ணுதலாகிய அதர்மம் செய்பவர்களிடத்திலும் ஒரு தர்மம், ஒரு வரையறை இருக்கிறது.

போரில் உள்ள தருமங்கள் அல்லது வரையறைகளும்

இத்தகையனவே. போரை அறவே ஒழிக்க இயலாத நிலையில், எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் எந்த முறையிலும் போரிட்டு உலகை நாசமாக்காமல் இருப்பதற்குரிய வழி துறைகளை ஆன்ருேர்கள் வகுத்தார்கள். ஆதலின் போரிலும் அறப்போர் என்ற வகை உண்டாயிற்று.

மகாத்மா காந்தியடிகள் நடத்திய அறப்போர்தான் இது காறும் உலகம் கண்டறியாத சிறப்புடையது. அவர் செய்த போர், அழிவை எவ்வளவு குறைவாக்கலாமோ அப்படி ஆக்கிற்று. போரில் எதிர் நின்ற இரண்டு கட்சிகளில் ஒன்று உண்மையில் போரிடவே இல்லை. அந்தக் கட்சியினரின் செயலால் எதிர்க் கட்சியாகிய ஆங்கில அரசாங்கத்தாருக்கு உயிரழிவு இல்லை. அவர்கள் தேசியக் கட்சியினருக்குச் சிறை விதித்தார்கள். இந்த அறப்போரில் எதிர்க் கட்சியினருக்குக் கூட மனிதரை மாய்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை! போர் நிகழ்ந்தது, ஆனால் உயிரழிவு இல்லை என்ருல் உலகத்தில் எந்த நாட்டுச் சரித்திரத்திலும் இந்த அற்புதத்தைக் காண முடியாது. இந்த அஹிம்சா யுத்தமாகிய அறப்போரை வகுத்த சான்ருேர் மகாத்மா காந்தியடிகள். அவருடைய செயல் செயற்கரியது.

பாரத தேசத்தில் பழங்காலம் முதற்கொண்டே போர் நடந்துவந்ததுண்டு. ஆனால் அந்தப் போர்களில் சில வரையறை இருந்தன. இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்ன முறையில் போர் செய்யவேண்டும் என்ற திட்டம் இருந்தது. இராமாயணப் போரில் இராமன் வெறுங்கையுடன் நின்ற இராவணனைக் கொல்லாது 'நாளை வா' என்று கூறி அனுப்பியது அறச்செயல். இத்தகைய பல அறச்செயல்கள் போரிடையிலும் நிகழ்வதால் அது போரேயானாலும் அறப் போராக இருந்தது.

தமிழ் நாட்டில் நிகழ்ந்த போர்களும் அறப்போர்களே. அவற்றிற்குரிய வரையறைகளைப் புலவர்கள் பாடமாட்டார் கள். அவர்களுடைய பழி பரவி மற்றவர்களை அஞ்சச் செய்யும். சில இடங்களில் சில கொடுஞ்செயல்கள் நிகழ்ந்த துண்டு. ஆயினும் பெரும்பாலும் அறப்போர்களே நிகழ்ந்து

வந்தன. போர் செய்யும்போது படை இல்லாதவனையும், ஒத்த படை கொள்ளாதவனையும், புறமுதுகு காட்டினவனையும், சோர்வுடையவனையும் எதிர்த்துப் பொருவது அறமன்று என்ற வரையறை இருந்தது. 'சிறப்புடை அரசியலாவன; மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறுதோனையும், மயிர் குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், படையிழந்தோனையும் ஒத்தபடை எடாதோனையும் பிறவும் இத்தன்மை யுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலியனவாம்' (தொல்காப்பியம் புறத்திணையியல் 10) என்று நச்சினர்க்கினியர் எழுதுகிருர். போர் தொடங்கியது முதல் முடிவுவரையில் இத்தகைய அறச் செயல்கள் பல போர்களத்தில் நிகழ்வதைத் தொல்காப்பியத்திலும், புறப்பொருள் இலக்கணங்களை வகுக்கும் பிற நூல்களிலும் உள்ள செய்திகளால் அறியலாம்; புறநானூறு முதலியவற்றில் போரிடையே இத்தகைய அறச் செயல்களைச் செய்த வீரப் பெருமக்களின் வரலாற்றைக் குறிப்பிடும் செய்யுட்கள் பல உண்டு.

போர் தொடங்கப் போகிறது. ஒரு நாட்டின் அரசன் தான் பகைவனை எதிர்த்துப் போர் செய்யப்போவதைத் தன் வீரர்களுக்கு அறிவிக்கிருன். முரசறைந்து அறிவிக்கிருன். அது கேட்டு வீரர்களுடைய தினவெடுத்த தோள்களெல்லாம் பூரிக்கின்றன. போர் என்ற சொல்லைக் கேட்டாலே அவர்களுக்கு அத்தனை மகிழ்ச்சி.

பகைவர் நாட்டில் உள்ள மக்கள் யாவரையும் அழிக்க வேண்டுமென்பது அரசனது நோக்கம் அன்று. பிறருக்குத் தீங்கு செய்யாதவர்களையும், தமக்குப் பின் குடிகாத்து ஓம்பும் மக்களைப்பெருதவர்களையும் கொல்வது தீது. ஆதலின் பகையரசனுடைய நாட்டில் உள்ள அந்த வகையினரைப் பாதுகாக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பசுக்களைக் காக்கவேண்டும். இதற்காகப் பகை நாட்டார் தெரிந்து கொள்ளும் வண்ணம் தாம் போர் செய்யப்போவதை வெளிப்படையாகத் தெரிவித்து விடுவார்கள்.

'பசுக்களும், பசுவையொத்த அந்தணர்களும் பெண்

களும், நோயாளிகளும், பிதுர்கர்மங்களைச் செய்தற்குரிய மக்களைப் பெருதவர்களையும் தங்களுக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடி அடைந்துவிடுங்கள் நாம் போரிடப் போகிறோம் என்று முரசு அறையச் செய்வார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவர்கள் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வார்கள், இதை உணர்ந்து தமக்குரிய பாதுகாப்பைச் செய்வதற்குரிய அறிவில்லாத பசுமாடுகள் இருக்கின்றனவே, போரிடத் துணிந்த அரசன் அவற்றை வழிமடக்கித் தன் ஊருக்குக் கொண்டுவந்து பாதுகாப்பான். இது போர் முழக்கம் செய்யும்போதே நிகழும் நிகழ்ச்சி. இப்படி பகைவருடைய ஆநிரையைக் கொண்டுவருவது வெட்சித்திணையென்பதன்பாற்படும். புறப் பொருளில் முதல் திணை இது. வெட்சித்திணையே போர் செய்தாலும் அதிலும் அன்பும் அறமும் இடம்பெறும் என்பதைக் காட்டுவதற்கு அறிகுறியாக நிற்கிறது. உலகியலில் நிகழ்ந்தாலும் நிகழாவிட்டாலும் அதுவே எம்முடைய குறிக்கோள் என்று, அதை மக்கள் மறவாதவண்ணம் இலக்கணநூல் வற்புறுத்துகிறது. நூல்களில் இந்த வரையறையைக் கடைப்பிடித்துப் புலவர்கள் இலக்கிய உலகில் இதை நிகழ்த்தட்டும் என்று இலக்கண நூலார் இத்தகைய பேரறங்களை யுத்த தர்மங்களைச் சொல்லி வைத்தார்கள்:

'இருபெரு வேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர் நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்கு செய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருக எனப்புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினுல் தாமே கொண்டு வந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமேயாம்' என்றும் 'மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தற்கு மறத்துறையினும் அறமே நிகழும்' என்றும் நச்சினுர்க்கினியர் (தொல் புறத்திணை, 2 உரை) எழுதுகிருர். திருவள்ளுவர் மறத் துறையிலும் இத்தகைய அன்புச் செயல்கள் இருத்தலை எண்ணியே,

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

என்று கூறினர்.

பகைகொண்ட அரசனிடத்தும் அவனைச் சார்ந்து போர் செய்யும் வீரர்களிடத்தும் சினத்தைக் காட்டும் மன்னன் மற்றவர்களிடம் அன்பு காட்டுவது மறத்திடையே தோற்றிய அறம். ஆநிரைகளைப் பகைவர் நாட்டினின்றும் மீட்டுவரும் மரபு தமிழ் நாட்டில் இலக்கிய இலக்கணங்களால் வெளியாகிறது. "சண்டைக்கு எடுபிடி மாடுபிடி" என்ற பழமொழிகூட இந்த அறத்தைச் சுட்டிக் காட்டுகிறது. பழமொழியாக வழங்குமளவுக்கு இந்தச் செயல் தமிழ் நாட்டில் ஊன்றியிருக்கிறது. பாரதத்தில் விராடபர்வத்தில் துரியோதனுதியர் விராடதேசத்து மாடுகளைக் கவர்ந்து வர அவரெதிர் சென்று அருச்சுனன் அவற்றை மீட்டான் என்ற வரலாறு வருகிறது. தமிழ் இலக்கணத்தில் மிகப் பழமையானது தொல்காப்பியம். அதில் ஆநிரைகவரும் வெட்சிக்கு இலக்கணம் இருக்கிறது. அந்த இலக்கணம் தொல்காப்பியர் புதியதாகப் படைத்தது அன்று. அதற்கும் முன்பே இருந்த நூல்களில் உள்ளவற்றை அடியொற்றியே அந்த இலக்கணத்தை அவர் வகுத்தார். ஆகவே, பழங்காலத்திலேயே ஆநிரை கொள்வது தமிழ் நாட்டில் மரபாக இருக்கிறதென்று கொள்ளலாம். இந்த மரபை உணர்ந்த மன்னர்கள், பாரதப் போர் தொடங்கும் முன்னர், இந்தத் தமிழ் நாட்டு மரபு நல்லதென எண்ணித் தாமும் மேற்கொண்டார்கள் என்றே தோன்றுகிறது.

வினாக்கள்

1. எது பேரறிவு? அதைவிட எது குறைந்த அறிவாகும்?
2. மனிதன் எவ்வாறு போரில் ஈடுபடுகிறுன்?
3. காந்தியடிகளின் அறப்போர் எத்தகைத்து?
4. பாரதநாட்டில் பழங்கால முதலே அறப்போர் நடந்தது என்பதற்கு ஒருதாரணம் காட்டுக.
5. அறியார் கூறுவது யாது? அதை வள்ளுவர் எவ்வாறு மறுக்கிறுர்?

கட்டுரைப் பயிற்சி

இக்காலப் போர் முறையைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

மொழிப் பயிற்சி

1. பகுதிகளைக் கூறுக: பகை, முடியும், வேறுபாடு, ஆக்கம், கோபம்.
2. திருத்துக: கோர்வை, நஞ்சைநிலம், திரேகம், உத்திரவு, முயற்சித்தான், அருகாமையில்.
3. எதிர்மொழி தருக: எல்லாவற்றுக்கும், பொதுவாக, அறிவு, கோபம், உடன்படல்.
4. அன்புடன் அறிவும் இருக்கிறது—இதனை உணர்ச்சி வாக்கிய மாக்குக.
